முத்துலட்சுமி ராகவன்



ஏழு ஸ்வரங்கள்...

முன்றாம் ஸ்வரம்...

கடல் கடந்த வணிகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்... பாகம் – 3

உரிமை : ஆசிரியருக்கு

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	ஏப்ரல் 2015
வெளியீடு	:	**லட்சுமி பாலாஜி பதிப்பகம்** . 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	400

விலை : ₹ 190/-

அட்டை வடிவமைப்பு : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

Printed at: **Bharathi Printers**, Chennai - 5.

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய



ஏழு
ஸ்வரக்கில்...

முன்றாம் ஸ்வரம்

‘கடல் கடந்த வணிகம்...’

உடன் பயணிப்பது...

ஏழாவது ஸ்வரத்தின்

‘நிழல் ஆட்ட யுத்தம்...’

ஆசிரியர் கடிதம்...

ஸ்வரம் மூன்று...

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

மூன்றாவது ஸ்வரம் 'கடல் கடந்த வணிகம்..' இசைக்க வருகிறது.. பண்டைய தமிழகத்தில் வணிகம் செழிப்புற்று இருந்தது.. மன்னருக்கு அடுத்தபடியாக செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர்கள் வணிகர்களே.. உள்நாட்டு வணிகம், தேசம் விட்டு தேசம் செல்லும் வணிகம் என்று வணிகம் கொடி கட்டிப் பறந்த காலகட்டத்தில் 'கடல் கடந்த' வணிகம்' செய்ததில் முதலிடம் வகித்தது பாண்டிய தேசம்தான்.. கொற்கையின் முத்தும்.. பவளமும்.. மிளகும் மேனாடுகளுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.. குதிரைகளும், மதுவகைகளும் கண்ணாடிப் பொருள்களும் கொற்கைத் துறைமுகத்தில் வந்து இறங்கியிருக்கின்றன.. சுங்க வரியினால் ஆண்டு தோறும் அரசுக்கு அதிக அளவில் வருவாய் கிட்டியிருக்கிறது..

காஞ்சியை கதைத் தளமாக்கி ஏழு ஸ்வரங்களையும் இசைக்க முற்பட்டபோது.. ஏழு காலகட்டத்தில் நடக்கும் கதைகளை கோர்த்துக் கொடுக்க முடிவெடுத்தேன்..

அந்த ஏழு கால கட்ட கதைகளும் காஞ்சியை கதைக் களமாக கொண்டிருக்க வேண்டுமெனில்.. காஞ்சியை ஆட்சி புரிந்தவர்களின் பட்டியல் எனக்கு வேண்டும்..

இதை ஆராய அதிக நாள்கள் தேவைப்பட்டது.. ஏழு காலகட்டங்கள் என்று கூறினால் மட்டும் போதாது.. அந்தந்த கால கட்டத்துக்கான ஆண்டுக் கணக்கு வரிசைக் கிரமமாக தெளிவாக இருக்க வேண்டும்..

அதன்படி நான் கண்டறிந்ததுதான் இந்த ஏழுஸ்வரங்களின் கால கட்டங்கள்..

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது ஓர் உண்மையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.. நாடாளும் மன்னர்கள் இருந்த காலத்தில்.. கைக்கு கை மாறியது பணம் மட்டுமல்ல.. நாடும்தான் என்பது..

காஞ்சி மாநகரை எடுத்துக் கொள்வோம்..

இது பல்லவர்களின் தலைநகரம்.. பின்னாளில் இது பல்லவர்களிடமிருந்து சோழர்களின் கைகளுக்கு மாறியது.. இந்த மூன்றாவது ஸ்வரத்தில் பாண்டியர்களின் கைகளுக்குள் வந்திருக்கிறது..

மற்ற அரசர்களைவிட.. பாண்டியர்களைப் பற்றி எனக்கு அதிகமான செய்திகள் கிடைத்தன..

குமரிக்கண்டத்தில் தோன்றிய மனித சந்ததியினரே பாண்டியராக உருப் பெற்றிருக்கலாம் என்பது பொதுவான கருத்து.. குமரிக் கண்டத்தில் மூழ்கி விட்ட 72 நாடுகளுக்கும் தென்மதுரையே தலைநகரமாக விளங்கியிருக்கிறது.. இரண்டாம் கடற்கோளில் அது அழிவுற்றபின் தற்போதைய மதுரை பாண்டியர்களின் தலைநகரமானது..

புராணங்களில் பாண்டியர்கள் போற்றிப் புகழப் படுகின்றார்கள்.. இந்து மதப் புராணங்களும், தமிழ் இலக்கியங்களும், நாட்டுப் புறக்கதைகளும் பல பாண்டிய மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன..

திருவிளையாடல் புராணம் மதுரையை ஆண்டது இறைவனும், இறைவியும்தான் என்று கூறுகிறது.. இப்புராணத்தில் 70-க்கும் மேற்பட்ட பாண்டிய மன்னர்களைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது.. நற்குடி வேளாளர் வரலாற்றில் 201 பாண்டிய மன்னர்களைப் பற்றியும், இறையனார் அகப் பொருள் உரையில் 197 பாண்டியர்களும் குறிப்பிடப் படுகின்றனர்.

இப்புராணங்களின்படி மலையத்துவப் பாண்டியனின் புதல்வி மீனாட்சி என்று சொல்லப் படுகிறது..

மீன் + அஷி (கண்) = மீனாட்சி

மீன் போன்ற கண்களை உடையவள் என்பது இதன் பொருளாகும்.. மீனாட்சி அம்மன் ஆண்ட மதுரை என்றே புரணாங்கள் மதுரையை அடையாளம் காட்டுகின்றன.. மீனாட்சி அம்மனின் திருமணம் பரமசிவனுடன் நடந்ததாக புராணம் கூறுகிறது..

சோமசுந்தரப் பெருமாளாக மதுரையின் தமிழ் சங்கத்தில் பரமசிவன் தமிழ் வளர்த்தார்.. மதுரை மீனாட்சி பெரும்படையோடு இமயம்வரை சென்றாள் என்றும் புராணம் சொல்கிறது..

பாண்டிய மன்னர்களின் இடைக்கால தலைநகரமான 'கபாடபுரம்' பொன் முத்துக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது என்றும்.. முத்து, பொன் அலங்காரங்களுடன் கூடிய கோட்டைவாசல் இருந்தது என்றும் ராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது..

திருச்செங்குன்றில் 'பாண்டவர் படுக்கை' உண்டு.. திருப்பாண்டி கொடுமுடிதான் 'விராடநாடு..' பாண்டவர்கள், கொடுமுடியின் புறநகரில் இருந்த வன்னி மரத்தில்தான் அவர்களுடைய ஆடைகளையும், ஆயுதங்களையும் மறைத்து வைத்தனர் என்றும், அர்ச்சுனன் பாண்டிய மன்னன் மகளை மணந்திருந்தான் என்றும் மகாபாரதத்தில் கூறப் பட்டிருக்கிறது..

மாறன், வழுதி, சடையவர்மன், மாறவர்மன், செழியன் என்ற [illegible] தங்களின் பெயர்களோடு பாண்டிய மன்னர்கள் இணைத்துக் கொண்டார்கள்..

குலப் பெயர் – பாண்டியர்

குலம் – சந்திரகுலம், தென்னர் குலம், கவுரியர் குலம், பஞ்சவர் குலம்

மதுரை, கொற்கை நகரங்களில் ரோமாபுரி நாணயங்கள் கிடைத்தன.. கடல் கடந்த வணிகம் சிறப்புற்று இருந்த காலம் பாண்டியர்களின் காலமேயாகும்.. உள்நாட்டில் பண்டங்களை

எடுத்துச் செல்ல பெருவழித்தடங்கள் இருந்தன.. வணிகர்கள் கூட்டமாகச் செல்வதை 'வணிகக் கொத்து..' என அழைத்தனர். வணிகர்களில் சிறந்தவர் 'எட்டி..' என்று அழைக்கப் பட்டார்.. பாண்டியர்களுக்கும் ஏமன் நாட்டுக்கும் சிறந்த குதிரை வர்த்தகம் நடைபெற்றது.. இலங்கை மன்னன் விஜயன் பாண்டிய மன்னனின் மகளை மணந்திருந்தான்.. வருடந்தோறும் பரிசுகளை பாண்டிய நாட்டுக்கு அனுப்பியும் வைத்தான்..

பாண்டியர்களின் ஆட்சிமுறை அருமையானது.

அரையர் – உள்நாட்டு பணிபுரியும் நாட்டதிகாரிகள்.. நாட்டைச் சுற்றி.வந்து குடிமக்கள் குறை கேட்டு நீதி வழங்குவார்கள்... (நடமாடும் நீதி மன்றம்.)

நாடுவகை செய்வோர் – ஊரில் உள்ள நிலங்களை அளந்து பயிரிடுவோர்..

வரியிலார் – நம்ம நாட்டு வட்டாட்சியர் இவர்தாங்க.. அனைத்து வகையான வரிகளை வசூலித்து கணக்கில் வைப்பார்கள்.

இந்த முன்னுரையில் நான் தீட்டுகிற தீட்டலைப் படித்து விட்டு.. பாண்டியர்களைப் பற்றிய பாடத்தை எடுக்கப் போகிறேன் என்று பயந்துவிட வேண்டாம் மக்களே..!

நம்ம பாதையே வேறு.. இப்பேற்பட்ட கடல் கடந்த வணிகம் கொண்ட நாட்டை சோழர்களிடமிருந்து மீட்கப் போராடுகிறான் ஒரு பாண்டிய மன்னன்.. அந்தப் போராட்டத்தின் இடையில் பாலைவனச்சோலையாக ஒரு யுவதியை சந்திக்கிறான்..

அவனுக்கும், அவளுக்கும் இடையில் நிகழும் மெல்லிய நூலிலை போன்ற காதலைத்தான் இந்த ஸ்வரம் இசைக்கப் போகிறது..

முதல் இரண்டு ஸ்வரங்களைப் போல ஏற்கனவே வெளிவந்த கதைகளை என் பார்வையில் படைக்காமல்.. புதிதாக

ஒரு கதையை என் கற்பனையில் உருவாக்கி 'கடல் கடந்த வணிகம்' என உங்கள் கைகளில் தவழச் செய்யப் போகிறேன்..

இனிவரும் ஐந்து ஸ்வரங்களும் எனது சொந்தக் கற்பனையை மட்டுமே இசைத்து வரும்.

கதையினுள்ளே உங்களுக்காக சாகசங்கள் புரியும் கதாநாயகன் புரவியில் ஏறி விரைந்தோடி வரப் போகிறான்.

ஓர் புன்னகையில் அவனைக் கட்டிப் போட்டுக் காவலில் வைக்கும் யௌவன மங்கையாக கதாநாயாகியும் வரப் போகிறாள்..

சரித்திரக் கதையில் விளையாடும் எனது எழுத்தும் வரப்போகிறது.

இந்த ஸ்வரம்.. வரலாற்று புதினத்தை உங்கள் அருகினில் அழைத்து வரும்.

படிக்க ஆரம்பியுங்கள்.. பின்னுரையில் சந்திக்கிறேன்..

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
படிக்க : www.muthulakshmiraghavan.com
www.muthumaalai.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்...

மூன்றாம் ஸ்வரம்

'கடல் கடந்த வணிகம்...'



1

சங்கத் தமிழ் வளர்த்த நாடு..
எங்கள் சொந்தமல்லவோ..!

காத்திருந்தது காஞ்சி..!

அதனை உச்சத்திலே வீற்றிருக்க வைத்த பல்லவர்களின் பொற்காலம் சென்று சோழர்களின் கரங்களுக்கு சொந்தமான நகரம், அடுத்து தன்னை சொந்தம் கொள்ள வருகை புரிபவர் எவர் என்பதை அறிந்தும் அறியாததைப் போல அமைதிப் பதுமையாக காத்திருந்தது..

பல்லவர்களின் காலத்திலே கோவில் மாநகரமாகப் திகழ்ந்த அந்தப் புண்ணியஸ்தலம்.. அடுத்த எவர் வருகை தரப் போகிறார் என்ற உண்மையை தன்னுள் உறைய வைத்துக் காத்திருந்தது..

எழில்மிகு தலைநகராய் பல்லவர்களின் காலத்திலே பட்டொளி வீசிப் பறந்த காலங்களின் நினைவுப்

பெருமூச்சுடன்.. அடுத்து வருபவரின் ஆட்சிக்காக காத்திருந்தது..

பொன் மாளிகை கட்டி காஞ்சியிலே உறைந்த ஆதித்த கரிகாலனின் அநியாய மரணத்திலே உறைந்து போன உள்மன ரணத்தோடு குலோத்துங்க சோழனின் ஆளுகைக்கு உட்பட்டதாய்.. மாற்றமில்லா மாற்றத்திற்காக காத்திருந்தது..

பரந்து விரிந்திருந்த சோழ சாம்ராஜ்யத்தின் காஞ்சியை நோக்கிச் சென்ற ராஜபாட்டையில் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது வெண்மை நிறமுடைய ஒரு புரவி..!

அதன் தோற்றம் அதன் உயர்ந்த தரத்தை அறிவுறுத்தியது.. அரேபிய புரவிக்கான அத்துணை அங்க லாவண்யங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த அந்தப் புரவியில் வீற்றிருந்தவன் நெடிய உயரத்துடன் காணப்பட்டான்..

அகன்ற அவனது மார்பில் புரண்டு கொண்டிருந்த சொர்ண ஆபரணம் அவன் சாதாரணக் குடிமகனல்ல என்பதை எடுத்துச் சொன்னது.. திரண்ட புஜங்களும்.. தேக்குமரம் போன்ற உடலும் கன்னிகையரின் மனதை கொள்ளையடிப்பனவாய் இருந்தன.. நீண்ட கரங்களும், கால்களும்.. வஞ்சியரின் மனதை வட்டமிட வைப்பனவாய் அழகுறத் திகழ்ந்தன.. கற்பாறையைப் போன்ற கடினம் விரவிக் கிடந்த அவன் வதனத்தில் எல்லையற்ற கவர்ச்சி குடி கொண்டிருந்ததை அவ்வாலிபன் பொருட்படுத்து வதில்லை என்பதை அலட்சியம் நிறைந்த அவன் வதனமே கட்டியங் கூறி அறிவித்தது.. கரம் தேர்ந்த

சிற்பியொருவனால் செதுக்கப்பட்டதைப் போன்ற தீர்க்கமான நாசியும்.. எழிலான வதனமும் கொண்டிருந்த அந்த வாலிபன் தீட்சண்யம் நிறைந்த பார்வையோடு புரவியை விரட்டிக் கொண்டிருந்தான்..

அவன் மனம். அலைகடலாக கொந்தளித்துக் கொண்டிருந்தது.. வழியில் தெரிந்த மல்லையின் கடற்கரையில் இளைப்பாற புரவியை நிறுத்தியவன்.. குதித்து இறங்கி.. புரவியுடன் கடற்கரை மணலில் கால்கள் புதைய நடந்தான்.. கட்டுமானக் கோவில்களுக்கு அருகில் வந்தவன் அங்கிருந்த மண்டபத்தின் தூணில் புரவியை கட்டி விட்டு ஓய்வாக நின்றான்.. கண்முன் தெரிந்த கட்டுமானக் கோவில்களின் மீது அவன் பார்வை படிந்தது..

பாறையைக் குடையாமல் பல்வேறு கற்களை வெட்டி எடுத்து ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிச் செய்யப் பட்டவையே 'கட்டுமானக் கோவில்கள்..'

அங்கிருந்த முகுந்த நாயனார் கோவிலும், உழக்கெண்ணை ஈசுவரர் கோவிலும் பல்லவர்களின் கட்டிடக் கலைத்திறனுக்கு கண்கண்ட சாட்சியாக நின்றன.. கரங்களை குவித்து வேண்டிக் கொண்ட அந்த வாலிபனின் அலையடித்த மனது கூட சமனப் படுவதைப் போல சற்று அமைதியைக் கொண்டது..

அவன் கடற்கரைக் கோவில்களை வேடிக்கை பார்த்தபடி நடந்தான்.. 'இதைக் கட்டிய ராஜசிம்ம பல்லவன் அறிவானா.. பிற்காலத்தில் இவற்றை சொந்தம் கொண்டாட சோழர்கள் வருகை தருவார்கள் என்று..?' என்று அவன் மனம் எணணிக் கொண்டது,.

எண்ணியவனின் விழிகள் சிவந்தன.. ஆற்ற மாட்டாத சினத்துடன் அவன் வானத்தை நோக்கினான்.. கூட்டமாக பறவைகள் கூட்டம் பறந்து வந்து கடற்கரைக் கோவில்களில் இறங்குவதைக் கண்டவனின் சினம் சற்றுத் தணிந்தது.. கோவிலுக்குள் சென்றான்.. திரும்பிப் பாராமல் சிந்தனையுடன் சென்றவனின் மனதில் ஒருகோடி உணர்வலைகள் இருந்தன..

திருமால் படுத்துறங்கும் தோற்றத்தில் இருந்த கோவிலில் நின்று வணங்கினான்.. அக்கோவிலின் இருபக்கமும் கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் கட்டப்பட்டிருந்த சிவன் கோவில்களை வணங்கியவன்..

'பல்லவர்கள் சைவத்தையும், வைணவத்தையும் இருவிழிகளாக பாவித்திருக்கிறார்கள்..' என்று எண்ணிக் கொண்டான்..

ஏனோ இவ்வெண்ணம் அவன் மனதில் எழுந்த போது அவன்மனம் குலுங்கியது.. எதைக் குறித்து அவ்வதிர்வு அவனுக்குள் உண்டானது என்று அவனது அறிவுக்குப் புலப்படவில்லை.. கிளர்ந்து எழுந்த மனதின் அதிர்வுகளை அவன் முன் நின்ற கடமைகள் துரத்தியடித்தன..

கிழக்கு நோக்கிய சிவன் கோவில் உயரமானதாக.. ஐந்து அடுக்குகள் கொண்ட கோபுரத்தை உடையதாக இருந்தது... மேற்கு நோக்கிய சிவன் கோவில் சிறிதாக மூன்று அடுக்குகளைக் கொண்ட கோபுரத்துடன் இருந்தது.. கருவறையின் பின்புறச் சுவர்களில் சிவன், உமையவள், குழந்தை வடிவ குமரன் சேர்ந்த சோமாங்கந்தர் சிற்பங்கள் காணப்பட்டன.. பல்லவர்களின் கலைத்திறனை அவை புலப்படுத்தின..

சிற்பங்களையும், கோவில்களின் வடிவமைப்பையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தவனின் செவிகளில் விழுந்தது குதிரைகளின் குளம்படிச் சப்தம்..

சடுதியில் கோவிலின் உள் பிரகாரத் தூண்களில் ஒன்றின் பின்னால் மறைந்து நின்ற வாலிபன்.. மெதுவாக சிரம் நீட்டி செல்பவர் எவர் என்று கண்காணித்தான்..

சோழர்களின் படைவீரர்கள் என்பதை புலிச்சின்னம் பறித்த கொடிகள் புலப்படுத்தியதில் அவனது கரங்களின் முஷ்டிகள் மடங்கின..

'ஆணவம் கொண்டவர்கள்..'

பந்தாட ஒருவன் மறைந்திருப்பதை உணராத வீரர்கள் தங்களுக்குள் நகைத்து உரையாடிபடி அவ்விடத்தை கடக்க யத்தனித்தார்கள்..

அவர்களின் பார்வையில் ஒற்றையாக கட்டப் பட்டிருந்த புரவி தென்பட்டு விட்டது..

"ஏதடா இது..? கடல் மல்லையில் ஓர் புரவி தனித்து நிற்கிறதா..?" ஆச்சரியத்துடன் உரைத்தான் ஒருவன்..

"அப்புரவியைக் கண்டாயா..? உயர்ந்த வகை அரேபியக் குதிரையைப் போலத் தென்படவில்லை..?" அடுத்தவன் வினவினான்..

"ஆம் அப்படனே..! அவ்வாறுதான் தோன்றுகிறது.." மற்றொருவன் புரவியை விட்டுக் குதித்தான்..

"இப்புரவியின் காவலன் சாமானியனாக இருக்க மாட்டான் தோழனே..! அரச குலத்தவரைத் தவிர

வேறு எவரிடமும் இப்புரவியிருக்க வாய்ப்பில்லை..” வேறொருவனும் புரவியை விட்டுக் குதித்தான்..

அவர்கள் புரவியை அணுகினார்கள்.. அதன் கடிவாளத்தை தொட முயன்றபோது புரவி முன்னங் கால்களைத் தூக்கிக் எகிறி...

“ம்ஹா...” என்று பயங்கரமாக கனைத்தபடி அவர்களை உதைத்து கடற்கரை மணலில் தள்ளிவிட்டது.

“இப்புரவியின் சேஷ்டையைக் கண்டாயா...?” இன்னொருவனும் தரையில் குதித்தான்..

மணலில் விழுந்தவர்கள் புரண்டு எழுந்து.. உடைகளிலும், அங்கங்களிலும் படிந்திருந்த மணற்து களைகளை தட்டி விட்டனர்..

“யாது அப்பனே..! புரவியின் மீதுள்ள கரை கடந்த இச்சையினால் அதை ஸ்பரிசிக்க முனைந்து இவ்வாறு மணலைக் கவ்வி விட்டாயே..”

பரிதாபம் மேலிட்டவனைப் போல கேலி பேசிய வனை மணலைக்கவ்விய வீரர்கள் இருவரும் முறைத்துப் பாாத்தனா..

“என்மீது எதன்பொருட்டு சினம் கொள்கிறாய் அப்பனே..? யாம் மெய் விளம்பி..!”

“அவ்வாறா..? இந்த மெய்யுரைத்தலை உனது காதலியின் தோழி வடிவாம்பிகையிடமும் சென்று உரைப்பாயா..?”

"எந்த மெய்யை உரைக்கச் சொல்கிறாய் அப்பனே..? நீ மணல் கவ்விய மெய்யை உரைக்கவா..? ஹா.. ஹா.."

"போதும் தோழனே..! தமது பற்கள் சுளுக்கிக் கொள்ளப் போகின்றன.. பின்னர் சுளுக்கெடுக்க உன் காதலி தேன்மொழி வருவதா அல்லது அவளது தோழி வடிவாம்பிகை வருவதா என்ற வழக்கு எழுந்து நியாய சபையை அணுகிவிடப் போகிறது.."

"அதற்கு எதற்காக நியாய சபையின் பொன்னான மணித்துளிகளை வீணடிக்க வேண்டும் அப்பனே..?"

"அடேங்கப்பா.. என்னே உனது அக்கறை..! நியாய சபையின் பொன்னான மணித்துளிகளை பேணிப் பாதுகாக்க வருகை தந்திருக்கும் நியாயக்காவலர் தாங்கள்தானே..?"

"அவ்வாறே எடுத்துக் கொள்ளேன்.. அடியேனுக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை.. எமது பற்களை சுளுக்கெடுக்க தேன்மொழியும் வடிவாம்பிகையும் எதற்காக பழக்காட வேண்டும்..?"

"பின்னர் எவ்விதம் அவர்கள் சுளுக்கெடுப்பார்கள் தோழனே..? அவ்விதத்தையும் அடியேனின் செவிகளில் ஓதிவிடு.."

"அப்பனே..!"

"சொல் சுப்பனே..!"

"மேல்வரிசைப் பற்கள் தேன்மொழிக்கு.."

"பாரடா.. வடிவாம்பிகைக்கு எந்த வரிசைப் பற்களைப் பட்டாப் போட்டுக் கொடுப்பதாக இருக்கிறாய்..?"

"அவளுக்கு கீழ்வரிசைப் பற்கள்.."

"பலே..! பலே..! இரட்டைக் குதிரை சவாரிக்கு ஆயத்தமாகத்தான் உள்ளாய்..?"

"அவ்வாறே.."

"இவ்விவரத்தை அந்த இரட்டைக் குதிரைகளின் செவிகளில் ஒப்பித்து விட்டாயா..?"

"எவ்விவரத்தை அப்பனே..?"

"அதுதான் தோழனே.. தேன்மொழியை காதலிக்கும் விவரத்தை வடிவாம்பிகையிடமும்.. வடிவாம்பிகையிடம் 'ஜொள்ளு' விடும் விவரத்தை தேன்மொழியிடமும் உரைத்து விட்டாயா..?"

"கெடுத்தாயே காரியத்தை.. எந்த அறிவிலியாவது இது போன்ற விவரத்தை தனது திருவாயால் உரைப்பானா..?"

"தாம்தான் மெய் விளம்பியாயிற்றே.."

"அதற்கு..?"

"தேன்மொழியிடமும், வடிவாம்பிகையிடமும் எதற்காக பொய்யுரைக்கிறாய் தோழனே..? அங்கும் மெய்யை உரைக்க வேண்டியதுதானே..?"

"ஏனப்பா இக்கொலைவெறி..? இரண்டில் ஒன்றாவது கிட்டட்டுமே என்று நான் இரண்டு மங்கையர்களுக்கு பாதையிட்டால் நீ இரண்டில் ஒன்றைக்கூட கிட்ட விடாமல் இருவரையும் ஓட்டி விடுவாய் போல உள்ளதே.."

"புரிகிறதல்லவா..?"

"புரிகிறது.. யாம் யாது செய்ய வேண்டும்..?"

"தமது திருவாயை மூடிக்கொள்ள வேண்டும்.."

"உத்தரவு.."

"அம்ஃது..! அடங்கு.."

தோழனின் வாயை மூடச்சொல்லி ஆக்ஞை பிறப்பித்து விட்டு அவர்களை கீழே தள்ளி கடல்மல்லையின் மணற்துகள்களை கவ்வவைத்த புரவியினை சினத்துடன் பார்த்தான் அந்த படைவீரன்..!

"இப்புரவிக்குத்தான் எத்துனை திமிர்..!"

அருகிலிருந்தவனிடம் உரைத்தான்.. அவனும் மணலைக் கவ்வியவன் என்பதினால்.. படு உக்கிரமாக..

"மிகச்சரியாக உரைத்தாய்.." என்று கூட்டுச் சேர்ந்தான்..

"இப்புரவியை இழுத்துச் செல்வோம்.."

"ஆஹா..! அற்புதம்..! அருமையான யோசனை..! இதனை கொண்டு சென்று என் இல்லக் கட்டுத்தறியில் கட்டி சரியான பாடம் புகட்டப் போகிறேன்.. நம்மை மணலில் தள்ளிய இதன் முன்னங்கால்களுக்கு கசையடிகளை வழங்கப் போகிறேன்.. இதன் திமிரை அடக்க நானாயிற்று.."

"ஏன்..? அத்திமிரை யாம் அடக்க மாட்டோமா..? எமது இல்லத்தில் கட்டுத்தறிதான் இல்லையா..? அல்லது.. எம் கரங்களுக்குத்தான் கசையடிகளை வழங்குத் தெரியாதா..?"

"அது.. அது.."

"கெட்டிக்காரன் அப்பனே நீ.. எத்துணை இலகுவாக இப்புரவியை தட்டிச் செல்லப் பார்க்கிறாய்..? இப்புரவியினை இட்டுச் செல்ல வேண்டும் என்ற யோசனை

எமது மூளையில்தான் அரும்பியது என்பதை அறிந்து கொள்.. யாம் யோசனை சொல்வோமாம்.. இவர் அதன்படி புரவியை இட்டுச் செல்வாராம்... என்னையென்ன அறிவிலியென்று எண்ணி விட்டாயா...?"

"அனைவரும் கண்ட புரவியினை நீ ஒருவன் மட்டுமே அபகரிக்கும் யோசனை கொண்ட உன்னைப் போய் அறிவிலியென எவரும் உரைப்பாரா..? யார் நீ..!"

"உன்னை விட வல்லவன்..!"

"நீ வல்லவனென்றால் நானென்ன விரல் சுவைப்பவனா..?"

"அதைப் பற்றிய ஞானம் எமக்கில்லை.. இப்புரவி எம்முடையது என்ற ஞானம் மட்டுமே எம்மிடம் உள்ளது.."

"அல்ல தோழனே..! இப்புரவி எம்முடையதாகும்.."

"எதை வைத்து இத்துணை திடமாக உரிமை கொண்டாடுகிறாய்..?"

"இப்புரவி எட்டி உதைத்தவுடன் முதலில் விழுந்து மணலைக் கவ்வியது யாம்தான் என்ற உரிமையுடன் இதை உரைத்தேன்.."

"அடடா..! எப்பேற்பட்ட உரிமை.. உனதுரிமை..! மெச்சிப் போனோம்.. உம்தோழன் என்பதில் பெருமிதம் கொண்டோம்.."

"தோழமை உறவெல்லாம் புரவி விவரத்தில் செல்லுபடியாகாது.. முதலில் புரவி எமதானது.. அடுத்து தோழமை நமதானது.."

"என்ன ஒரு தோழமை..! புரவியென்றாலும் சரி.. அது உதைத்து மணலைக் கவ்வுவதாக இருந்தாலும் சரி.. தமது முன்னுரிமை எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.."

"நீ வியந்து கொண்டே இரு.. நான் புரவியுடன் செல்கிறேன்.."

"புரவியை அணுகாதே.."

"நீ அணுகாதே.."

அவர்கள் இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்க.. மற்றவர்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க.. ஒரு கூரிய கத்தியொன்று கோவிலின் உள் பிரகாரத்தி லிருந்து பறந்து வந்து வழக்கடித்த இரு சோழ வீரர்களின் மத்தியில் மணலில் பாய்ந்து நின்றது..

அவர்கள் இருவரையும் உராய்ந்து மின்னல் வேகத்தில் மணலில் பாய்ந்த கத்தியைக் கண்ட .அவ்வீரர்களின் விழிகள் அகன்றன..

"கண்டாயா..?"

"கண்டேன்.."

."மீன் லச்சினை.."

"ஆம் நண்பனே..! அனைவரும் தயாராகுங்கள்.. நிங்கே பாண்டிய வீரனொருவன் மறைந்திருக்கிறான்.."

கணப்பொழுதில் புரவியை அபகரிப்பதைப் பற்றிய டைமைச் சண்டையை மறந்து அவர்களை ஒன்றுபட வைத்த அந்தக் கத்தியின் கைபிடியில் பொறிக்கப் ட்டிருந்த 'மீன்' முத்திரை கண்சிமிட்டி நகைத்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



1

பிறவிகள் தோறும் உனைத்தேடி
பிச்சியென்ற பெயர் கொண்டேன்..

யாமினி கையிலிருந்த கொரியர் கவரை யோசனையுடன் பார்த்தாள்..

'யார் அனுப்பியிருக்காங்க..?'

கவரின் ஃபிரம் அட்ரஸைப் பார்த்தவளின் விழிகள் இடுங்கின..

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியா..? இவங்களோட இண்டர்வியூதான் நட்டுக்கிச்சே.. அதுக்கு மேலேயும் எதுக்காக கவரை அனுப்பித் தொலைக்கிறாங்க..? இனிமே எங்க கம்பெனியோட வான்டடு அட்வெர்டைஸ்மென்ட்ஸ் வந்தா அப்ளை பண்ணாதேன்னு ஸ்ட்ரிக்டா சொல்றானுகளோ..?'

அவளுக்கு சித்தார்த்தனின் நினைவு வந்தது.. அவளை இண்டர்வியுவில் கண்டதும் அவன் விழிகளில் தெறித்த மின்னலை நினைத்துப் பார்த்தவளுக்குள்..

'உனக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்..?' என்ற கேள்வி எழுந்தது..

அவள் கவரை ஆட்டியபடி தோட்டத்துப் பக்கம் போனாள்.. அங்கிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்தவள்

கையிலிருந்த கவரை பக்கத்தில் போட்டுவிட்டு சிந்தனையுடன் காலை விந்தி ஊஞ்சலை ஆட்டினாள்.. லேசாக ஆடிய ஊஞ்சலுடன் அவள் மனமும் சேர்ந்து ஆடியது..

'அவன் எதுக்காக என்னைக் கண்டாலே ஜெர்க் ஆகிறான்..?'

அவன் மட்டுமல்ல.. அவளும் அவனைக் கண்டதும் ஜெர்க் ஆகி வைக்கிறாள் என்பதை அவளது உள்மனம் உணர்த்தியது..

"என்னவோ போடி யாமினி..! எதுவும் விளங்கல.." யாய் விட்டுச் சொல்லியவளை..

"என்னம்மா விளங்கல..?" என்ற கேள்வி திரும்பிப் பார்க்க வைத்தது..

அங்கே பிரதாப் நின்றிருந்தார்.. யாமினி அவசரமாக ஊஞ்சலை விட்டு எழுந்தாள்..

அதற்குள் மதிய உணவுக்காக பிரதாப் வீடு திரும்பி விட்டாரா..? அவள் மதிய உணவை சமைக்கவில்லை என்ற விவரம் அவளது நெஞ்சில் உறைத்தது..

"என்னப்பா.. எதையும் மறந்துட்டுப் போயிட்டிங்களா..?"

மதிய உணவுக்கான நேரம் நெருங்கவில்லை என்பதனை உறுதிபடுத்திக் கொள்ள அவள் முனைந்தாள்.

"இல்லையேம்மா.. எதையும் மறந்துட்டுப் போகலையே.."

அந்த நம்பிக்கையில் ஒரு லாரி மண்ணைக் கொண்டு வந்து கொட்டினார் பிரதாப்..

"இப்பத்தானேப்பா கடை திறக்கப் போனிங்க..? அதுக்குள்ள வந்துட்டிங்களே.."

யாமினி தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை..

"இல்லையேம்மா.. காலையில எட்டு மணிக்கே கடைதிறக்கப் போனவன்.. ரெண்டு மனிக்குத்தானம்மா லன்ச் சாப்பிட வந்திருக்கேன்..?"

பிரதாப் யாமினியின் இரண்டாவது கேள்வியையும் அடித்துத் தூள் பரப்பி விக்கெட்டுக்களை வீழ்த்தினார்..

"என்னது..?..! மணி ரெண்டாகிருச்சா..?"

யாமினி ஊஞ்சலையும்.. ஊஞ்சலில் இருந்த கடிதத்தையும் மறந்து வீட்டுக்குள் ஓடப் போனாள்..

"நில்லும்மா.." அவள் கைபிடித்து நிறுத்திய பிரதாப்.

"எதுக்கு இந்தப் பதட்டம்..?" என்று விசாரித்தார்..

"அதுப்பா.. நான் இன்னும் குக்கரை வைக்கல.." யாமினி நம்பியாரைப்போல கைகளை பிசைந்து வைத்தாள்.

"அதுக்கு ஏன்ம்மா பதட்டப்படற..? பிரட் இருக்கா..?"

"இருக்குப்பா.."

"தக்காளித் தொக்கு இருக்கா..?"

"அதுவும் இருக்குப்பா.."

"அப்புறம் என்ன..? பிரட்டை ரோஸ்ட் பண்ணி தக்காளித் தொக்கோட சாப்பிட்டுட்டா லன்ச் ஓவர்.. இதுக்குப் போயி கவலைப்படலாமா..? வா.."

பிரதாப் மகளை ஆறுதல் படுத்தியபடி வீட்டுக்குள் அழைத்துக் சென்றார்.. யாமினிக்கு வந்த கடிதம் அம்போ என்று ஊஞ்சலில் வீற்றிருந்தது..

அவர்கள் வீட்டுக்குள் போனபோது அனுராதா டைனிங் டேபிளில் பாத்திரங்களை பரத்திக் கொண்டிருந்தாள்..

"என்ன அது..?"

டைனிங் டேபிளை பார்வையிட்டபடி பவ்யமாக கேட்டு வைத்தார் பிரதாப்.. சப்தமாகப் பேசப் போய் அவள் மறுபடியும் மலையேறிவிட்டால் என்ன செய்வது..?

"ஊம்..? பிரட்டை ரோஸ்ட் பண்ணி.. ரெடிமேட் தக்காளித் தொக்கு பாட்டிலை வைச்சுக்கிட்டு இருக்கேன்.." நொடித்தாள் அனுராதா..

டைனிங் டேபிளிலில் இருந்த பாத்திரங்களில் ஆவி பறக்கும் சாம்பாரும்.. காலிபிளவர் பிரையும் 'வா'வென்று அழைத்ததில் யாமினி மகிழ்ந்து போய்..

"அம்மா.." என்று அனுராதாவைக் கட்டிக் கொண்டாள்..

முகமெல்லாம் கடுகடுப்பாக மகளை முறைத்த அனுராதாவின் குடும்பப்பொறுப்பில் மனம் நனைந்தவராக காதலுடன் மனைவியைப் பார்த்தார் பிரதாப்..



2

புலி கண்டு அஞ்சாத மீன் வம்சம் எமது வம்சம்..!

கடல் மல்லைப் பகுதியில் பாண்டிய வீரனொருவனின் பாதம் பதிந்து விட்டது..

கணப்பொழுதில் தீயாக இச்செய்தி அப்பகுதி முழுவது பரவிப் படர்ந்ததில்.. அவ்வாலிபன் மறைந்திருந்த கட்டுமானக் கோவிலைச் சுற்றி வளைத்தன சோழர்களின் புரவிகள்..

“கோவிலுக்குள் செல்வோம்..”

“வேண்டாம்.. அவனை வெளியே வரவழைப்போம்.. கோவிலுக்குள் போர் புரிதல் தகாது..”

இப்பேச்சுக்குரல் எழுந்த மறுகணம் மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டான் அவன்... அவனை நோக்கி குறிபார்க்கப்பட்ட நாணேற்றப்பட்ட வில்களை படு அலட்சியமாகப் பார்த்தபடி மின்னலென அவனது புரவியில் தாவி அமர்ந்தான் அவன்..

அமர்ந்த மறுகணத்தில் தூணில் கட்டப் பட்டிருந்த கடிவாளக்கயிறை அவிழ்த்தவன் புரவியில் பறந்தான்..

வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகள் மாரி போல இடைவெளி இன்றி அவனைத் தொடுத்து வர.. அவனது புரவி அம்புகளை விட அதிவேகமாக பாய்ந்தது..

அவனைத் தொடர்ந்த அம்புகள் கடல் மல்லையின் மணல் வெளியில் பாய்ந்து வீழ்ந்ததில் ஆத்திரம் கொண்ட சோழர்படை வீரர்கள் அவனைத் துரத்தினார்கள்..

சற்றுத் தொலைவில் சென்றதும் அவனது புரவி சுழன்று திரும்பியது.. துரத்திய படைவீரர்கள் அவனைச் சுற்றி சக்கரவியூமிட அதன் மத்தியில் தன்னந்தனியனாக மீன்லச்சினை பதித்த வாளைக் கையிலேந்தி அச்சமின்றி நோக்கினான் அவன்..

"புறமுதுகு காட்ட விழைந்தாயோ..?" இகழ்ச்சியுடன் வினவினான் சோழர் படைவீரர்களில் ஒருவன்..

"ஹ..! அவ்வாறெனில் எதற்காக யாம் தேங்கி ன்றோம்..? கோவிலின் உள்ளே யுத்தம் புரிவது கந்ததல்ல என்று நீங்களே எண்ணும்போது.. அதற்குக் காரணமாக உள்ள யாம் வெளியேறி மணல்வெளியில் ங்களை எதிர்கொள்ள எண்ண மாட்டோமா..?"

"அவ்வாறா வீரனே..? வியப்பாக உள்ளதே.. ஓடி ளிவதுதானே பாண்டியர்களின் வழக்கம்..?"

இவ்வுரைக்கு மற்ற படைவீரர்கள் உரக்க நகைத்து ங்களின் பாராட்டுதலைத் தெரிவித்தனர்.. சக்கர யுகத்தின் மத்தியில் இருந்த புரவி வீரனின் வதனம் ினத்தில் செந்தணலாக சிவந்தது..

"மூர்க்கனே..! மறைந்து வெளிப்பட்டு தாக்கு தற்கும்.. ஓடி ஒளிவதற்குமான வேறுபாட்டை முதலில் .யறிந்து கொண்டு அதன் பின்னால் மொழியப் பழகு.." .லன் சீறினான்..

"அடடா..! தமக்கு எதன்பொருட்டு இத்துனை சினம் மிக வேண்டும்..? மெய்யைத்தானே யாம் உரைத்தோம்..? பொய்யுரைக்கவில்லையே... வீரபாண்டியன் முதல்... ஜடாவர்மன் வரை ஒளிந்து மறைந்து வாழ்ந்த பாண்டிய மன்னர்களைப் பற்றிய பட்டியலை வாசிக்க இன்றைய பொழுது போதாதே அப்பனே..!"

"ஆணவம் கொண்டவனே..! வீரபாண்டியன் முதல் ஜடாவர்மன் வரை மறைந்து வாழ்ந்த பாண்டிய மன்னர்கள் எப்போதும் மறைவிடத்திலேயே பதுங்கியிருக்கவில்லை.. தக்க தருணம் வாய்த்ததும் மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டு.. தம் இறுதி வரை யுத்தம் புரிந்தார்கள்.. எமது மண்ணைக் காக்க மறைந்திருப்போம்.. வெளிப்படுவோம்.. போராடுவோம்.. முத்துவளம் கொழிக்கும் 'கொற்கை'யின் வணிக வளத்தில் இச்சை கொண்டு எம்மண்ணை அபகரித்த சோழர் படையின் வீரர்கள் பாண்டியர்களைப் பற்றிப் பேசல் தகாது.."

"'கொற்கை' வணிகம்தான் சிறந்ததா..? காவேரி பூம்பட்டினத்தின் கடற்கரை வணிகம் என்ன குறைந்ததா..?"

"ஆம்..! எம் பாண்டிய நாட்டின் கடல் கடந்த வணிகத்தைவிட சோழவள நாட்டின் வணிகம் குறைந்தது தான்... எமது வணிகத்தின் மேன்மையில் நாட்டம் கொண்டுதானே உமது சோழ மன்னன் ராஜேந்திரன் தமது மூன்று புதல்வர்களுக்கும் சுந்தரசோழ பாண்டியன், விக்கிரம சோழ பாண்டியன், பராக்கிரம பாண்டியன் என்றெல்லாம் நாமமிட்டு 'சோழ பாண்டியர்' என்ற புதிய

பட்டங்களை வழங்கி பாண்டிய நாட்டை ஆட்சி செய்ய வைத்தான். எமது தென்பாண்டி மண்டலத்திற்கு 'ராசராச மண்டலம்' என்ற நாமமிட்டது எவர்..?"

"இவற்றையெல்லாம் உரைத்த நீ.. சோழ நாட்டிற்கு பாண்டிய நாடு 'திறை' செழுத்த வேண்டிய சிற்றரசு என்பதனை மறந்து போனது ஏனோ..?"

"யாம் சிற்றரசா.. அல்லது.. வல்லரசா என்பதனை இனிவரும் தினங்களில் காணத்தானே போகிறீர்கள்.. அதற்கு வெள்ளோட்டமாக இன்றைய பொழுதைக் காணுங்கள்.."

அவ்வாலிபனின் கரத்திலிருந்த மீன் லச்சினை பொறித்த பாண்டியர் குலத்தின் வீரவாள் மந்திரக் கோலென சுழன்றது..

சக்கர வியுகமென சுற்றி வளைத்திருந்த படை வீரர்களின் கரங்களிலிருந்த வாள்கள் காற்றில் பறந்தன.. அவர்கள் அவ்வாலிபனின் வாள் முனையால் காயம் கொண்டு..

"ஆ.." என்ற அலறலுடன் புரவியிலிருந்து கடல் மல்லையின் மணல்வெளியில் வீழ்ந்தார்கள்..

வீரர்கள் இல்லாத புரவிகள் கனைத்தபடி.. கார்கூரையில் இங்கும் அங்குமாக ஓடின.. ஏறக்குறைய அனைத்து வீரர்களும் அவ்வாலிபனை எதிர்க்க இயலாமல் தோல்வியைத் தழுவி.. கடல் மல்லையின் மணலைக் கவ்வியபோது.. ஒரு புரவி வீரன் மட்டும் அங்கிருந்து பின்வாங்கி.. காஞ்சியை நோக்கி விரைந்து விட்டான்..

'இது மட்டும் புறமுதுகு இல்லையா..?'

அவன் இகழ்ச்சி நகையுடன் புரவியின் வேகத்தைக் கூட்டினான்..

அவன் அறிவான்.. விரைந்திருக்கும் புரவி வீரன் புறமுகுது காட்டி ஓடவில்லை என்பதை..

அவன் காஞ்சி நகரத்தின் காவல் படைத் தலைவனிடம் விவரம் தெரிவிக்க விரைந்து சென்றிருக் கிறான்.. எக்கணமும் காஞ்சியை காத்து நிற்கும் காவல்படை அவனைத் தேடி வரலாம் என்பதில் அவ்வாலிபன் அவ்விடத்தை விட்டு அதி விரைவில் அகன்று விடும் உத்தேசத்துடன் விரைந்தான்..

கடலோரமாக பயணித்தவனின் செவிகளில் அவனை துரத்தி வந்த புரவிகளின் குளம்படியோசை தெள்ளத் தெளிவாக விழுந்தது..

'இத்துனை விரைவில் வருகை புரிந்து விட்டார்களா..?'

எதிரிகளின் வேகத்தை மெச்சிய புன்முறுவல் அவன் வதனத்தில் உதித்தது.. ஒருவனாக தனித்திருக்கும் அச்சம் சிறிதுமின்றி.. துரத்தி வரும் படைகளின் பார்வைக்கு எட்டாத தொலைவில் அவன் பறந்து கொண்டிருந்தான்..

'அதிக நாழிகை இதுபோல அவர்களிடம் அகப்படாமல் பயணிக்க இயலாது..'

அவனது அறிவு எச்சரித்ததில் அவன் மறைந்து கொள்ள தோதான இடம் தென்படுகிறதா என்று பார்வையால் துழாவினான்..

கடலோரமாக இருந்த சவுக்குத் தோப்பு அவனை 'வா' வென்று அழைத்தது.. அதற்குள் புரவியை விட்டான்.. அவனைத் தேடி காஞ்சியின் காவல்படை சவுக்குத் தோப்பிற்குள்தான் முதலில் நுழையும் என்பதையும் அவன் யூகித்திருந்தான்..

ஆயினும்.. மணல்வெளியில் போரிடுவதைவிட.. சவுக்குத்தோப்பு மரங்களின் மறைவில் போர் புரிவது என்பது பாதுகாப்பான ஒன்று என்பதில் அவன் சவுக்குத் தோப்பின் மறைவினில் புரவியை ஓடவிட்டான்..

அவன் கணித்தபடியேதான் நிகழ்ந்தது.. அவனைத் துரத்தி வந்த சோழர்படை சவுக்குத் தோப்புக்குள் புகுந்து விட்டது.. போர் புரிய ஆயத்தமானவனின் விழிகளில் யாது செய்வது என்ற யோசனை வருகை புரிந்தது.. பார்வையை அங்கும் இங்குமாக படற விட்டான்.. கடலோரமாக இருந்த காழில் மிகு கூடாரங்கள் அவன் பார்வையில் பட்டன..

'இங்கு வந்து முகாமிட்டிருப்பது எவராக இருக்கக் கூடும்..?'

சிந்திக்க அவகாசமின்றி அவன் மத்தியில் இருந்த மிகப்பெரிய கூடாரத்துக்குள் புரவியுடன் நுழைந்து விட்டான்..

பதினைந்து புரவிகளை கட்டி வைக்கும் அளவிற்கு மிகப் பரந்ததாக அந்தக் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது.. அதன் மையத்தில் ஹம்சதூளிகா மஞ்சம் இருந்தது.. கற்கரை மணல் துகள்கள் சிறிதளவு கூட எட்டிப் பார்க்க வழியின்றி தரைப்பகுதி முழுவதும் பட்டுக் கம்பளங்கள்

விரிக்கப்பட்டிருந்தன.. மஞ்சத்தின் அருகிலிருந்த சொர்ணப் பாத்திரத்தில் பழவகைகள் அடுக்கப் பட்டிருந்தன.. கூடாரத்தின் மூலையில் இருந்து அகில்புகை வெளிப்பட்டு அந்தக் கூடாரம் முழுவதும் சுகந்தம் நிரம்பிய நறுமணத்தை கமழ்ந்து கொண்டிருந்தது..

'யாதடா இது..?'

அவ்வாலிபனுக்கு நகைப்பு வந்தது.. ஒளிந்து கொள்ள மறைவிடம் தேடிவந்தால் அந்தக் கடல் மல்லையின் கடற்கரைவெளியில் சயனஅறைபோன்ற கூடாரம் அவனை அரவணைக்கிறது..

'விந்தை..!'

அவன் புரவியை ஓரமாக நிறுத்தி விட்டு.. கூடாரத்தின் வாயிலில் சென்று வெளிப்புறமாக நிலவும் சூழ்நிலையை அவதானித்து வரலாம் என்ற முடிவோடு நகர முனைந்தான்..

அவன் நகர முற்பட்ட அதே கணத்தில் அக்கூடாரத்துக்குள் நுழைந்து வாயில் திரைச்சீலையை இழுத்து மூடித் திரும்பினாள் ஓர் மங்கை..

வாலிபனுக்கு மூச்சுத் திணறல் உண்டானது... அம் மங்கை கடலில் நீராடிவிட்டு.. அவளை மறைத் திருந்த சொற்ப உடையுடன் உள் புகுந்திருந்தாள்.. சோதனையிலும் சோதனையாக அச்சொற்ப உடையும் நீரில் நனைந்து அம்மங்கையின் உடலோடு ஒட்டி அவளது அங்க அவயங்களின் எழிலை உள்ளது உள்ளபடியே தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது..

இவ்விதம் நிகழக்கூடும் என்று எண்ணியும் பார்த்திராத அந்த வாலிபன் சங்கடமுற்றான்.. அம்மங்கையின் தோகை போன்ற கூந்தல் பாதம் வரை நீண்டு தொங்கியதில் அவன் மனதுக்குள் வியப்பு மேலிட்டது.. அது போன்ற அதி ரூபசுந்தரியை அதற்கு முன்பு அவன் கண்டதுண்டோ என்று அவன் மனம் நாழிகை தெரியாமல் வினவி வைத்தது..

'இல்லை..' அவன் மனம் ஜொள்ளியது..

'இதுபோன்ற அதிரூப வதனம் கொண்ட சுந்தரியை இதற்கு முன்பு நான் கண்டதே இல்லை..' அவன் தேகம் நடுங்கியது..

கூடாரத்திற்குள் எவரும் இல்லையென்ற சுதந்திர உணர்வுடன் அம்மங்கை அந்த சொற்ப ஆடையையும் களைய முற்பட்டாள்.. அவன் அதிர்ந்து போனான்.. இதயம் பலத்த ஓசை வாசிக்க..

"வேண்டாம்.." என்று விழிகளை ஒரு கரத்தால் மறைத்தபடி மறுகரத்தை முன்புறமாக நீட்டிக் கூவினான்.

எவருமில்லாத கூடாரத்தில் ஓர் ஆண்குரல் ஒலித்ததும் பதறிப் போன அம்மங்கை சடுதியாக வஸ்திரத்திலிருந்த கம்பளத்தை உறுவி தன்னைச் சுற்றிப் போர்த்தி மறைத்துக் கொண்டு..

"எவர் அவர்..?" என்று திரும்பிப் பார்த்தாள்..

பார்த்தவளின் விழிகள் விரிந்தன.. கண்களை ஓர் கரத்தால் மறைத்து.. மறுகரத்தை வேண்டாமென்ற

பாவனையில் அசைத்துக் கொண்டிருந்த அந்த எழில்மிகு ஆணழகனை அவள் வியப்புடன் நோக்கினாள்..

அவன் எண்ணியிருந்தால்.. அவளின் மேனியெழிலை ஆடையின்றி கண்டு களித்திருக்கலாம்.. அவ்வாறன்றி.. அவன் இருப்பதை அறியாமல் ஆடை களைய முற்பட்டவளை பார்க்கவும் கூடாது என்று கண்களை மூடி.. வேண்டாம் என்று வாய் விட்டு அலறி அவளைத் தடுத்தாட்கொண்டவனின் மீது அவள் மனதில் மலையளவுக்கு மரியாதையும், நன்றியுணர்வும் ஏற்பட்டன.

அவளுடைய அனுமதியின்றி அவளது கூடாரத்துக்குள் வருகை புரிந்து விட்டான் என்ற சினம் அவள் மனதில் துளிர்க்க மறுத்தது.. அவனையும், அவனருகிலிருந்த புரவியையும் மாறி, மாறி பார்த்தவளின் விழிகளில் வினா எழுந்தது..

“தாங்கள் யார்..?” என்று வினவினாள்..

“ஓர் வழிப் போக்கன்..” கண்களை மறைத்திருந்த கரத்தை விலக்காமல் அவன் பதில் சொன்னான்..

அச்செய்கையில் அவள் இளநகை கொண்டாள்.. அவள் மனம் கனிந்தது.. மெலிதான மயிலிறகால் மனம் வருடப்படுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

“அவ்வாறா..? வழிப்போக்கருக்கு எம் கூடாரத்தில் யாது பணி..?” நகைப்புடன் அவள் வினவினாள்..

“நிச்சயமாக உடை மாற்றும் ஆரணங்கின் எழிலை ஒளிந்திருந்து பார்வையிட வருகை தரவில்லை..” அவன்

சங்கடத்துடன் உரைத்தான்.. அவன் கரம் கண்களை மறைத்தே இருந்தது..

"ஊஹூம்..?" அவள் நகைப்புடன் வினவினாள்..

"தாங்கள் என் கூற்றை நம்பவில்லையா..? யாம் மெய்யே உரைத்தோம்.. துரத்தும் படைவீரர்களிடமிருந்து மறைந்து கொள்ள உகந்த இடமென்றே இக்கூடாரத்துக்குள் புகுந்தோம்.." சங்கடம் விலகாமல் அவன் விளக்க முனைந்தான்..

அவன் விளக்கத்தில் அவளது வதனம் மாறியது.. கூடாரத்தின் வாயிலை மூடியிருந்த திரைச்சீலையை மெலிதாக விலக்கி வெளியே பார்வையிட்டுத் திரும்பியவளின் புருவங்கள் முடிச்சிட்டிருந்தன..

"யாம் கம்பளத்தால் எமது உடலை போர்த்தி யுள்ளோம்.. தாம் கரம் விலக்கி எமை நோக்கலாம்.."

அவளின் அறிவிப்பில் கரம் விலக்கினாலும் அவள் விழிகளை நேருக்கு நேராக சந்திக்க சங்கடம் கொண்டான் அவன்..

சற்று முன் பார்த்த அவளின் தோற்றமே அவன் முகக்கண்ணில் நின்றதில் அவளைப் பார்க்காமல் புரவியை பார்த்து வைத்தான்.

"அது தமது புரவிதான்.. எங்கும் ஓடி விடாது.." அவள் கேலியாக மொழிந்தாள்..

அவளது கேலியில் அவள் பார்வையை ரசித்தவனுக்கு அவளது நீராடி நின்ற கோலமே நினைவில்

வருகை புரிந்து தொலைத்தது.. தேகம் சூடேற பார்வையைத் திருப்பிக் கொண்டவன்..

"மன்னிக்க வேண்டும்.. இவ்வாறு நேருமென்று யாம் சிந்தித்தும் பார்க்கவில்லை.." என்று மன்னிப்புக் கோரினான்..

"எது நேர்ந்தது..?" அவள் பச்சிளங்குழந்தை போல வினவி வைத்தாள்..

அந்த வினாவில் ஈர்க்கப்பட்டவனின் பார்வை ஓர் கணம் அவள்மீது நிலைத்து அவளது உடல் முழுவதும் வலம் வந்து திரும்பிக் கொண்டது.. அதில் அவளது புருவங்கள் வில்போல உயர்ந்து நெளிந்தன..

உச்சி முதல் பாதம் வரை கம்பளத்தால் மறைத்து நின்றிருந்தவளைக் கண்டாலே அவனுக்கு அவள் நீராடி வந்த கோலமே கண்ணெதிரே நின்று தொலைத்ததில் அவன் மனம் 'ஏதடா இது..' என்று கலவரம் கொண்டது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



2

கண்ணெதிரே தோன்றும் நீழல்..
காட்டுகின்ற ஆட்டம் என்ன..?

"விடுடி என்னை.."

அனுராதா கோபம் போல மகளின் கையைப் பிடித்துத் தள்ளி விட்டாள்..

"ஏண்டி.. குழந்தையைக் கோவிச்சுக்கற..?" பிரதாப் ராகவுக்கு பரிந்து கொண்டு வந்தார்..

"காலையிலே இருந்தே இவளைக் குழந்தைன்னு தாலாட்டியாகிறது.. விட்டா ஃபீடிங் பாட்டிலைத் தூக்கிக் காகயில கொடுத்து.. தொட்டில்கட்டி தாலாட்டுப் பாடி தூங்க வைச்சிருவாங்க போல.. ஏண்டி..? நீயென்ன பச்சைக் குழந்தையா..?"

"இல்லைம்மா.. ஓட்டுப் போடற வயசுக்கு வந்திட்ட பொண்ண..!"

"அதை உன் அன்புள்ள அப்பாகிட்டச் சொல்லு.. எங்கிட்டவும் சொல்லாதே.. அவர் காதோரமாக கத்திச் சொல்லு.. அப்பவாவது அவர் மண்டையில ஏறுதான்னு பார்ப்போம்.. குழந்தையாம் குழந்தை.. காலையிலே மணல்லாலாடப் போனவ, ஆடுறா.. ஆடுறா.. மணிக்கணக்கா ஆடுக்கிட்டு இருக்கா.. இவளை நம்பி மதியச் சாப்பாட்டை போடு பண்ணாம விட்டிருந்தா.. என்ன ஆகிறது..?"

"விடுடி.. அவ என்ன வேணும்னா பண்றா..? சின்னவோ விளையாட்டுப் புத்தி.."

"ஊஹூம்.. இது விளையாட்டுப் புத்தியில்லைங்க.. 'பொம்பகால்..' பிடிச்சதனம்.. அது என்ன வயசுப் பொண்ணானப் பட்டவ 'துணுக்குத்தண்ணி..' தெளிக்காம காலாகுகென்னன்னு உலா வர்றது..?"

"போகப் போக மாறிருவா.. அனு.."

"இதையேதான் கீறல் விழுந்த கிராம போன் ரிகார்டைப் போல இவ பிறந்ததில இருந்தே சொல்லிக் கிட்டு (!) வர்றீங்க.. வருசங்கதான் போகுது.. இவ மாறலை.."

"காலையிலே சப்பாத்திகுருமாவை இவதான பண்ணினா..? என்ன டேஸ்டா இருந்தது..? அது மட்டுமா.. யதுநந்தனுக்கு லன்ச் கட்டிக் கொடுத்தாளே.."

"அதிலயெல்லாம் குறைச்சலில்ல.. அதுக்கப்புறம் எதுக்காக தோட்டத்தில போய் மணிக்கணக்கா ஊஞ்சலாடினான்னு கேளுங்க.."

பிரதாப் கேட்கவில்லை.. அவருடைய பலவீனம் 'பாசம்'... யாமினியின் மீதான தகப்பன்பாசம் அவரை கேள்வி கேட்கவிடாமல் வாயைக்கட்டிப் போட்டிருந்தது.. மகளை பிரியத்துடன் பார்த்தவர்..

"உட்காரும்மா.. சாப்பிடலாம்.." என்றார்..

"இதுதான் கேட்கிற லட்சணமா..?" அனுராதா வெடித்தாள்..

"விடுடி.. சின்னப்பெண்கூட சரிக்குச் சரியா போராடிக்கிட்டு.." பிரதாப்புக்கு கோபம் வந்து விட்டது..

"யாரு..? நான் போராடுறேனா..?" அனுராதாவுக்கு அவரைவிட அதிகமான கோபம் கொப்பளித்தது..

"பின்னே..? இல்லையா..? இப்ப நீ செய்துக்கிட்டு இருக்கிற வேலைக்குப் பெயர் என்ன..?"

"இவ எதைச் செஞ்சாலும் கொஞ்சிக்கிட்டு இருக்கனுமா..? உங்களைப் போல இருக்க என்னால முடியாது.."

"முடியலைன்னா விட்டிரு.. பெத்தவ நீயே உன் பெண்ணை குறைவாப் பேசினா மத்தவங்க இவளை

[illegible]நோயாளின்னு பட்டம் கட்டிற மாட்டாங்களா..? அதை முதல்ல யோசிச்சயா..?"

பிரதாப்பின் கோபத்தில் இருந்த நியாயத்தில் மௌனமானாள் அனுராதா..

பிரதாப்பின் கோபத்தில் இருந்த நியாயத்தில் மௌனமானாள் அனுராதா.. யாமினிக்கு தர்ம சங்கடமாக இருந்தது.. அவளை வைத்துக்கொண்டே.. அவள் பொறுட்டு பெற்றவர்கள் சண்டையிட்டதில் அவள் மனதினை கொண்டாள்..

"ஏதோ யோசனையாய் இருந்துட்டேம்மா.." தாய்க்கு விளக்கம் சொன்னாள்..

"அதைத்தான் என்ன யோசனைன்னு கேட்கிறேன்..?"

இறுகிய முகத்துடன் சொன்னாள் அனுராதா.. [illegible]னியால் பதில் பேச முடியவில்லை.. இந்தப் பேச்சிற்கு [illegible]யிருக்காது என்ற கோபத்துடன் பிரதாப் தட்டைத் தூக்கி [illegible]' என்ற சப்தத்துடன் டைனிங் டேபிளில் வைத்தார்.

"பார்த்து.. உங்க வீரத்தை டைனிங் டேபிள் மேலே [illegible] வேணாம்.. உடைஞ்சிரப் போகுது.." என்றாள் அனுராதா..

"உடைஞ்சா புதுசு வாங்கிப் போட்டுக்குவேன்.. நீ [illegible]யை மூடு.. வந்துட்டா நியாயம் பேச.. நீ சாப்பிட வா [illegible].." பிரதாப் யாமினிக்கும் தட்டைப் போட்டார்..

யாமினி உட்காரவில்லை.. அனுராதாவுக்கு தட்டைப் [illegible] பரிமாறி அவளை உட்காரவைத்தாள்..

"சாப்பிடுங்கம்மா.. வேலை செஞ்சதில டயர்டா ஆகியிருப்பீங்க.."

மகளின் பாசத்தில் அனுராதாவுக்கு கண் கலங்கி விட்டது.. இப்படிப் பட்டவள் சில சமயங்களில் விந்தையாக நடந்து கொள்கிறாளே என்ற வேதனையுடன்..

"நீயும் அப்பா பக்கத்தில உட்கார்ந்து சாப்பிடு.." என்றாள் பிரதாப்பின் இதழ்களில் இளநகை படர்ந்தது..



3

கடலோரம் குளிக்க வந்த கன்னிகையே..! யாரடி நீ..?

இவ்வாறா ஒரு பருவமங்கையின் எழில் தோற்றம் அவனை அலைக்கழித்து வைக்கும்..?

'இவ்வாறு ஆகும் என்று முன்னரே தெரிந்திருந்தால் இக்கூடாரத்துக்குள் நுழையாமல் கடலோரமாக விரைந் திருப்பேனே..' அவன் மானசீகமாக தனது சிரத்தில் அடித்துக் கொண்டான்..

இவையெல்லாம் போதாது என்று 'எது நேர்ந்தது..?' என்று வேறு அவள் இமைகொட்டி வினவி வைக்கிறாளே.. அவள் எது நேரவேண்டும் என்று விருப்பம் கொண்டாளாம்..?

இவ்வெண்ணம் மனதில் உதிக்கும் போதே மற்றொரு கேள்வியும் உடன் பயணித்து வந்தது..

'அல்லது எது நேரவில்லை என்று இவள் வருத்தம் கொள்கிறாளாம்..?' முதல் வினாவை விட தொடுத்த வினா அவனது தேகத்தகிப்பை அதிகப்படுத்தியதில் அவன் அவளை பாராததைப் போல பார்த்து வைத்தான்.. அந்தருணத்தில்தான் அவளும் அவனை அவ்விதமே நோக்கிக் கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது..

'பாரடா.. இவள் என்னை பாராததைப் போல பார்வையிட்டுக் கொண்டிருப்பதை..!'

கன்னிகையே ஓர் கட்டிளங்காளையை பார்வையிட முற்படும் போது.. அவன் கண்ணியத்தை கடைபிடிக்கிறேன் பேர்வழியென்று துறவறமா பூண்டு கொள்வான்..?

அவன் தற்போது அவளை நேருக்கு நேராக பார்த்து வைத்தான்..

'பார்வை பலமுள்ளதாக உள்ளதே..' அவள் நாசிகளில் குறுநகை இழையோடினாலும் வதனத்தில் நாணாச்சிகப்பு வந்து செம்மையை பூசி நின்றது..

உச்சி முதல் பாதம் வரை அவளை அங்குலம்.. அங்குலமாக ஆராய்ந்த அவன் பார்வையில் அவள் சிலாச்சியடைந்தாள்.. அவனது கவர்ச்சியும், எழிலும் நிறைந்த கம்பீரமான தோற்றம் அவளுக்குள் கிறக்கத்தை ஏற்படுத்தது.. அதுபோன்ற பேரெழிலுடன் ஆடவரும் இருக்கக் கூடும் என்பதை அன்றுதான் அவள் கண்டுணர்ந்தாள்..

'இவன் எவராக இருக்கக் கூடும்..?'

அதை வினவ இயலாமல் அவளை கிறங்கடித்தது அவன் பார்வை.. அவளது மேனியெழிலை மேய்ச்சல் நிலத்தைக் கண்டுவிட்ட காளையைப் போல அவன் நோக்க முற்பட்டதில்..

'இவன் என்ன எனை மணமுடிக்க வருகை தந்திருக்கும் மணவாளனா..?' என்று அவளது அகம் நகைத்தது..

அடர்சிகப்பு வண்ணக் கம்பளத்தால் அவள் உடலைச் சுற்றி மூடியிருந்தாலும்.. செழுமை மிகுந்த அவளது தோள்களும்.. வெண்ணையின் வளவளப்பைக் கொண்ட வளைக் கரங்களும், வாழைத் தண்டைப் போன்ற கால்களும் அவளது யௌவனத்தின் வனப்பை மறைக்காமல் அவன் முன் கொட்டிக் கவிழ்த்ததில்.. அவன் மதுவுண்ட வண்டானான்..

அவனது விழிகள் பிரதிபலித்த மயக்கத்தில் அவள் நிலை தடுமாறினாலும்.. கூடாரத்தின் வெளியே ஓலித்த குதிரைகளின் குளம்படியோசை அவளது மயக்கத்தை 'சற்றுப் பொறு' என்று தள்ளி நிறுத்தி வைத்து விட்டு அவனிடம் வினாக்களை எழுப்ப அவளுக்கு உத்தரவிட்டது..

"தாங்கள் சோழர்களின் பகைவரோ..?"

அவளது வினாவில் அவனது விழிகளில் நிலவிய மயக்கம் அகன்று அங்கு ஆச்சரியம் வந்து அமர்ந்து கொண்டது..

"எவ்விதம் இதை அறிந்தீர்கள்..?"

அவனது வினாவிற்கு விடையாக அவளது நகைப்புத் தான் கிட்டியது..

"இதை உணர ஆருடம் பார்ப்பவரை அழைத்து வர வேண்டுமா..? தங்களை துரத்தி வந்திருப்பவர்கள், சோழர்களின் படைவீரர்கள்.. இதைக் கொண்டே தாம் பாண்டியர்களின் பகைவர் என்று இன்றுதான் பிறப்பெடுத்த குழந்தைகூட உரைக்குமே.."

"நன்று..! இதன் பொருட்டு தாங்கள் பச்சிளம் குழந்தையை சாட்சியுரைக்க அழைக்க வேண்டாம்.. யாம் சோழரின் பகைவனே..! எமை உணர்ந்த தாங்கள் பெரும்சாள நாட்டின் அரசகுல மங்கையாக இருத்தல் வேண்டும் என நான் எண்ணுகிறேன்.. எமது யூகம் சரியானதுதானா..?"

அவளது வதனத்தில் வியப்பு வருகை தந்து ஓட்டி மகிழ்ந்து பசை போல அப்பிக் கொண்டது..

"மிகச் சரியான யூகம்..! ஆயினும் எவ்விதம் இதைக் கண்டுணர்ந்தீர்கள் என்று.. உரைக்க இயலுமா..?"

"ஏன் இயலாது..? தாங்கள் சோழர்குலத்தைச் சேர்ந்த மங்கையாக இருந்திருந்தால் எம்மை உம்குலத்தின் பகைவரா என்றே வினவியிருப்பீர்கள்.. தாங்கள் அவ்வாறு வினவவில்லை.. எம்மை சோழர்களின் பகைவரா என்றே வினவினீர்கள்.. இவ்வினா தாங்கள் சோழர்குலத்தைச் சேர்ந்தவரல்ல என்பதனை உள்ளங்கரத்தின் நெல்லிக் கனியைப் போல தெள்ளத் தெளிவாக உரைக்கிறதே.."

"ஆஹா..! அற்புதம்..! அடுத்து நான் ஹொய்சாள நாட்டின் அரசகுல மங்கை என்று எதனைக் கொண்டு உரைத்தீர்கள் என்பதனை யாம் அறியலாமா..?"

"நிச்சயமாக அதைத் தாம் அறியலாம்.. இந்த கடல் மல்லை சோழர்களின் ஆதிக்கத்தில் உள்ளது.. இங்கு அச்சமின்றி கடலில் நீராடி.. கடற்கரையில் கூடாரம் அமைத்து இளைப்பாறும் தாங்கள் சோழர்களின் நட்பு நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.. குலோத்துங்க சோழன் ஆட்சிக்கு வருகை தந்த பின்பு ஹொய்சாளர்கள் சோழ வள நாட்டின் உறவினராக மாறிப் போனதை இந்த அவனி அறியுமே.. எனவே தாங்கள் ஹொய்சாள நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று கணக்கிட்டேன்.. தாங்கள் அரசிளங்குமரியாக இருக்கக்கூடும் என்பதனை இக்கூடாரத்தின் எழிலும், நேர்த்தியும், பரந்து விரிந்த அளவும், ஹம்சதூளிகா மஞ்சமும், தரையில் பரப்பப் பட்டிருக்கும் காஷ்மீரக் கம்பளமும், பழவகைகளை ஏந்திய சொர்ணப் பாத்திரமும் தெளிவாக உரைக்கின்றனவே.."

"அபாரம்..!"

அவள் அவனைப் பார்வையால் கபளீகரம் செய்தபடி மொழிந்தாள்..

"சோழர்களின் கடல்மல்லையில் அவர்களைத் தவிர்த்து ஹொய்சாளர்கள் மட்டும்தானே உரிமையுடன் நடமாட இயலும்..?"

அவ்வாலிபனின் விழிகள் கக்கிய அனலில் அவளது வதனம் மாறியது.. அவனது வெறுப்பு அவளை பாதித்தது.

"தாங்கள் ஹெராய்சாளர்களின் பகைவரா..?"

"ஆம் என்று உரைத்தால் தாங்கள் யாது செய்வதாக உத்தேசித்துள்ளீர்கள் என்பதனை யாம் அறியலாமா..? நகரத்தின் வெளியே குழுமியிருக்கும் சோழர்களை அழைத்து என்னைக் காட்டி கொடுத்து விட எண்ணம் கொண்டுள்ளீர்களா..?"

அவளது வதனம் மேலும் மாறியது.. அவள் விழிகளில் தெரிந்த குற்றச்சாட்டில் அவன் சங்கடம் கொண்டான்..

'எனது துயரில் இம்மங்கையின் மனதை நோகச் செய்கிறேனே..'

தனது இதழ்களை பற்களால் சிறைபிடித்தவனின் விழிகளை அவள் மனம் மயங்கியது.. அவன் வார்த்தைகளில் வருந்திக் கொண்டிருந்த அவள் மனதை அது ஆற்றி விட முயன்றது..

"மன்னிக்கவும்.." குற்ற உணர்வுடன் அவன் மன்னிப்புக் கோரினான்.. அவள் விடை உரைக்கவில்லை.. விழிகளில் தாழ்த்தி தரையில் விரிக்கப் பட்டிருந்த சிகப்பு வண்ணக் கம்பளத்தில் பார்வையை பதித்தாள்..

"போராடிக் களைத்த மனம்..! குருதிப் புனலில் குளித்த உடல்..! தேகத்தில் ஏற்ற ரணங்களை ஆற்றி விடலாம்.. மனதில் ஏற்ற ரணங்கள் ஆற மறுக்கின்றன.. அதன் வேதனையை தாங்கள் உணர மாட்டீர்கள் இளவரசி..!"

"நன்மதா என்றே தாம் எமை அழைக்கலாம்.."

அவனது புண்பட்ட மனதின் விளக்கவுரையில் மனம் நெகிழ்ந்த அந்த மங்கை உரைத்தாள்..

“நர்மதா..?..” அவனது புருவங்கள் உயர்ந்தன..

“ஆம்..! எமது நாமம் அதுவேயாகும்.. யாம் ஹொய்சாள மன்னரின் புதல்விதான் எனினும் எமது தாய் மன்னரின் பலமனைவியரில் ஒருவரே.. பட்டத்து மகிஷி அவரில்லை..”

“புரிகிறது..”

“அரசியல் காரணங்கள் என்ற திரையைப் போர்த்திக் கொண்டு அரசர்கள் பல மணம் புரிவதை தங்களின் பிறப்புரிமையாக வைத்துள்ளார்கள்.. ஓர் வகையில் ஆண்களின் பிறப்புரிமையாக இது காலம் காலமாக பேணப்படுகிறது..”

“ஆண்கள் அனைவரும் பலமணம் புரிபவர்கள் அல்ல.. விதிவிலக்காக பலர் இவ்வுலகில் வாழ்ந்து முடித்திருக்கிறார்கள்.. உதாரணத்துக்கு ராமாயணத்தின் ராமரை தாம் நினைவு கூறலாம்..”

“தாங்கள் ராமாயணம் எனும் மகா காவியத்தை அறிவீர்களா..?”

“ஏன் அறிய மாட்டோம்..? அக்காவியத்தில் பாண்டிய மன்னர்களின் இடைச்சங்க தலைநகரமான ‘கபாடபுரம்..’ பொன் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்றும்.. முத்து, பொன் அலங்காரக் கோட்டைவாசல் இருந்தது என்றும் உரைக்கப் பட்டுள்ளதே..”

அவ்வாலிபன் பெருமையுடன் உரைத்த போது அவனின் வதனம் ஒளிர்ந்ததை நர்மதா உன்னிப்பாக கவனிக்கினாள்.. அவன் மார்பில் புரண்ட கனத்த பொன் ஆபரணத்தில் வடிவமைக்கப் பட்டிருந்த மீன் உருவப் பதக்கத்தை அக்கணத்தில்தான் அவள் கண்டாள்..

"தாங்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்தவரா..?" ஆவலுடன் வினவினாள்..

"ஆம்..!" என்றான் அவன்..

"அவ்வாறெனில் தாம் பாண்டிய அரசகுலத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டுமென யாம் யூகம் செய்கிறோம்.."

"தங்களது யூகம் சரியானதே.. யாம் பாண்டிய அரச குலத்தைச் சேர்ந்தவனே.. எமது நாமம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பதாகும்.."

"யாது உரைத்தீர்..???!!!..."

அவளது விழிகளில் விந்திய மலைச்சாரலின் அழகிற்கு வியப்பு வந்த அமர்ந்தது.. விழிகள் அகல அவனை அவள் நோக்கியதில் அவன் இலகுவாக புன்னகைத்தான்..

"தாம்தான் மாறவர்மனா..?"

"ஆம் இளவரசி..!"

"ஜடாவர்மரின் இளையசகோதரர் தாம்தானா..?"

"யாமேதான்.."

"சோழர்குல சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி.. குலோத்துங்க சோழனுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் அந்த அரசர் தாம்தானா..?"

"அல்ல இளவரசி..! எமது கொடி 'மீன் கொடி..!' யாம் குலோத்துங்கனுக்கு சிம்ம சொப்பனமாக உலா வர விழையவில்லை.. 'மீன்' சொப்பனமாகவே உலா வர விழைகிறோம்.. புலிக்கு சிம்மம்தான் அறைகூவல் விடுக்க வேண்டுமா..? மீன் விடுக்கக் கூடாதா..?"

"அடேங்கப்பா..! என்ன ஒரு நாட்டுப்பற்று..!"

அந்த நெருக்கடியான நிலையிலும் வெகு இயல்பாக அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தவளின் எழில் வதனம் அவனை ஈர்த்தது.. பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தவனுக்குள் உற்சாக நீருற்று கிளம்பியதைப் போன்ற ஓர் புத்துணர்வை அவன் உணர்ந்தான்.. அலை கடலாய் கொந்தளித்த அவன் மனதை அவளுடனான அவ்வுரையாடல் ஆற்றுப்படுத்தியது.. அவ்வுரையாடலைத் தொடர அவன் மனம் இச்சை கொண்டது..

"தற்போது 'அட' என்று தாங்கள் அழைத்து எம்மைத்தானா இளவரசி..?" விழிகளில் நகைப்புடன் அவன் வினவினான்..

அதை இனம் கண்ட கொண்ட அவள் அகத்தை இனம் விளங்காத உணர்வுகள் ஸ்பரிசித்து ஆக்ரமித்தன.. நாணத்துடன் வதனம் சிவந்தவள்..

"தங்களை 'அட' என்று அழைப்பவர்களும் இந்த அவனியில் உண்டா..?" என்று வினவிவைத்தாள்..

அவளின் வினயம் நிறைந்த விடையில் அவன் மனம் மலர்ந்தது.. சுடுமணலில் பாதங்கள் புண்ணாக பயணித்தவனுக்கு பாலைவனச் சோலை இளைப்பாற எதிரில் வந்ததைப் போல அவன் இன்பம் கொண்டான் அவளது விழிகள் அவனது மேனி முழுவதும் பரவிப் படர்ந்து பார்க்க முற்பட்டதில் அவனது உள்ளம் உவகை கொண்டது..

"அவ்வாறா இயம்புகிறீர்கள்..?" உல்லாசமாக அவன் உரையாடினான்..

"அவ்வாறுதான் மன்னவரே..!" அவள் சிரம் உயர்த்தி அவனை பார்த்து வைத்தாள்..

அப்பார்வையில் தெரிந்த வசீகரம் அவனை வளைத்துக் கொண்டது..

"அன்பு மேலிட்டால்.. வெகு பிரியமானவர்கள்.. தங்களின் பிரியத்துக்கு உகந்தவர்களை 'அடா' என்று அழைப்பார்கள் என்பதனை தாங்கள் அறிவீர்களா..?"

அவனது தாழ்ந்த குரலின் முணுமுணுப்பு வெகு ரம்யமாக அவள் செவிகளில் நுழைந்து அவளைத் தாலாட்டியது..

"இதுவரை அறிந்தததில்லை.." அவள் இமைகள் படபடக்க மறுமொழியை மொழிந்தாள்..

"இனிமேல் அறிவீர்கள்.." அவன் விழிகள் ரகசியம் உரைத்தன..

அதில் அவள் கட்டுண்டு பிணைக் கைதியானாள்.. அவன் நயனங்களில் தெரிந்த ரகசிய பாஷையில் அவள்

மனம் சிக்கித் தவித்தது.. அவளது குழலில் இருந்து சொட்டிய நீர்த்துளிகள் தரையில் விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தை நனைத்ததில்..

"தாங்கள் இன்னமும் சிகை துவட்டி உலர்ந்த ஆடைக்கு மாறவில்லை.." என்று அவன் அறிவுறுத்தினான்.

'இவன் அகத்தில் யாது எண்ணுகிறான்..? இவன் முன்னிலையில் நான் ஆடை மாற்றி சிகை துவட்ட வேண்டுமா..?'

அவள் மனதுக்குள் சினம் கொள்ள முனைந்தாள்.. ஆனால் என்னதான் அவள் தாம்பூலம் வைத்து வருக.. வருக.. என வருந்தி அழைத்தாலும் அவன் மீதான சினம் வருகை தர மறுத்தது அவளுக்கு அழகு காட்டி அகன்று ஓடியது..

"யாது செய்யலாம்..? தங்கள் முன்னிலையில் நான் உலர்ந்த ஆடைக்கு மாற இயலுமா..?" அவன் வினவி விட்டாள்..

அவன் சங்கடம் கொண்டான்.. என்னதான் அவளது பேரெழில் அவனை வசீகரித்தாலும்.. அவள் மீதான மயக்கம் அவன் அகத்தில் இருந்தாலும்.. அதே வகையான மயக்கத்தை அவளது விழிகளில் உணர்ந்தாலும்.. ஓர் கன்னிகை ஆடை மாற்றுவதை அருகிலிருந்து பார்வையிட அவன் எண்ணம் கொள்ளவில்லை..

"ஓர் தினமும் யாம் அவ்வாறு இயம்ப மாட்டோம்.. இளவரசி..! அத்தகைய சங்கடத்தை தங்களுக்கு

உண்டாக்க மாட்டோம்.. நான் இக்கணமே இக்கூடாரத்தை விட்டு நீங்குகிறேன்..”

“கூடாரத்துக்கு வெளியே காஞ்சியின் காவல்படை தமைகைது செய்யக் காத்திருக்கிறது..”

“இருக்கட்டும்.. இது போன்ற சூழலைவிட எதிரிகளின் கரங்களில் அகப்பட்டுக் கொள்வது சாலச் சிறந்ததாகும்..”

அவன் புரவியின் கடிவாளத்தைப் பற்ற முற்பட்டான். அவள் விழிகளில் மயக்கத்தோடு மரியாதையும் கலந்து வந்தது.. அவளின் கண்ணியம் காக்க.. எதிரியின் கரங்களில் கைதி ஆக முனைந்த அவன் கண்ணியத்தில் அவள் மனதை பறிகொடுத்தாள்..

ஏழாவது ஸ்வரத்தின் ‘நீழல் ஆட்ட யுத்தம்’



3

தேடுவது எதையென்று தெரியாத தேடல் இது..!

யாமினியிடம் மனிதர்களின் மனதைவெல்லும் வித்தை இருந்தது.. அனுராதாவின் கடினமான கோபத்தை மிக எளிதாக இளக்கி விடும் வல்லமை யாமினியின் பாசத்திடம் இருந்தது.. அந்த வல்லமையால் அவள் அப்போதைக்குத் தாயின் வாயைக் கட்டிப் போட்டாள்.. மகளின் அந்தத் திறமையில் பிரதாப்பின் மனம் குளிர்ந்தது.

"இனியாச்சும் கொஞ்சநேரம் கட்டையைச் சாய்க்கிறேன்.. யதுநந்தன் வாரப்ப டிபன் காபி ரெடியா இருக்கனும்.. இல்லைன்னா காட்டுக் கத்தலாக் கத்துவான்.. வேலை செய்ய எனர்ஜி வேணும்னா நான் கொஞ்ச நேரத்துக்காவது மதியத்தூக்கம் போட்டாகனும்.."

கண்களைச் சுழற்றிய தூக்கத்துடன் எழுந்து கொள்ளப்போன அனு பிரதாப்பைப் பார்த்து..

"நீங்க கடைக்குக் கிளப்பலையா..?" என்று கேட்டாள்..

அவளின் தொனி விரட்டும் தோரணையில் இருந்ததில்.. இவளுக்கு என்னவானது என்று ஆச்சரியப் பட்டுப் போனார் பிரதாப்..

"நான் கடைக்குக் கிளம்பறதுக்கும், நீ மதியத் தூக்கம் போடறதுக்கும் என்ன சம்பந்தம் அனு..? தூக்கம் வந்தா தூங்கப் போயேன்.."

"அதுசரி..! இந்த வீட்டுக்கு வாட்ச்-வுமனா மாறனும்கிற தலையெழுத்து வந்தபின்னாலே தூக்கம் வந்தவுடனே நான் தூங்கப் போயிர முடியுமா..? அந்தத் தலையெழுத்தா எனக்கு வாய்ச்சிருக்கு..?"

"இது என்னடி கொடுமையா இருக்கு..? உன்னை யாரு வாட்ச்-வுமனா இருக்கச் சொன்னது..?"

"வேணாங்க.. விட்டிருங்க.. இப்பத்தான் ஒருவழியா மலையிறங்கியிருக்கேன்.. திரும்பவும் மலையேத்தி விடாதீங்க.. நீங்க கிளம்பற வழியைப் பாருங்க...

நான் கதவைத் தாழ் போட்டு.. பூட்டி சாவியை கையில் பிடிச்சுக்கிட்டுத் தூங்கப் போகனும்.. நேரமாச்சு.. கிளம்புங்க..”

அவசரப்படுத்திய அனுராதாவை வினோதமாக பார்த்தார் பிரதாப்.. “இது என்னடி வழக்கமில்லாத வழக்கமா இருக்கு..? நீ மட்டும் தனியா இருந்தா நீ சொல்கிறது சரிதான்.. இந்த வீட்டில யாமினியும் உன்கூட இருக்காள்ல..? அதுக்கப்புறமும் எதுக்கு பயம்..?”

“எனக்கு பயமே இவளால்தான்.. தனியா இருந்த யாரு பயப்படப் போறது..?”

அனுராதா மகளை முறைத்தாள்.. யாமினி நெளிந்தாள்.. பிரதாப் மனைவியை அதட்டினார்..

“இப்ப எதுக்கு அனு அவளை வம்புக்கு இழுக்கற..? நீ தூங்கப் போனா கதவை இவ மூடி தாழ் போட்டுக்க மாட்டாளா..?”

“யாரு..? உங்கமக பத்திரமா கதவைப் பூட்டி வீட்டையும், அம்மாவையும் பாதுகாத்திருவா..? ஏங்க நீங்க வேற.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. திடிர்ன்னு நினைப்பு வந்து கடலோரமா உலாவப் போயிருவா.. வீட்டுக் கதவு ஜாமத்துக்கு மேலே திறந்து கிடந்ததைப் போல பப்பரப்பான்னு திறந்து கிடக்கும்.. ஒருநேரம் போல ஒரு நேரம் இருந்து வைக்காது.. வீட்டை நோட்டம் போட்டுக் கிட்டிருக்கிற எந்தத் திருட்டுப் பயலாவது உள்ளே நுழைஞ்சு கைவரிசையைக் காட்டிட்டுப் போயிட்டா தலயில துண்டைப் போட்டுக்கிட்டு..

உன்னாலே நான் கெட்டேன்.. என்னாலே நீ கெட்டேன்னு குடும்பத்தில இருக்கிறவங்க ஒருத்தருக்கொருத்தர் அடிச்சுக்கிட்டு மண்டையைப் பிளந்துக்க வேண்டியது தான்.. தேவையா..?"

அனுராதா கேட்ட விதத்தில் தேவையில்லை என்று அலறிவிட வாயைத்திறந்த பிரதாப் யாமினியின் அடிபட்ட முகபாவத்தை உத்தேசித்து அடக்கிக் கொண்டார்..

கோபமாக சொன்னாலும் அனுராதாவின் வார்த்தைகளில் நூறுசதவிகிதம் உண்மை இருந்ததை அவர் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.. மறுக்க முடிய வில்லை..

'ஆனாலும்..' மகளின் முகத்தை இரக்கத்துடன் பார்த்தார்..

"அனு நீ வீட்டைப் பூட்டி சாவியை கையில எடுத்துக்கிட்டுப் போயிட்டா யாமினி என்ன பண்ணுவா..?"

"தூங்கட்டும்.."

"தூக்கம் வரலைன்னா..?"

"அதைச் சொல்லுங்க.. இவளுக்கு ஜாமத்திலேயே தூக்கம் வந்து தொலைக்காது.. இதில மட்ட மதியானத்திலே எங்கேயிருந்து தூக்கம் வந்து சேரப் போகுது..? டிவியைப் பார்க்கச் சொல்லுங்க.."

"எவ்வளவு நேரம்தான் டிவி பார்ப்பா..?"

"அப்ப பேஸ்புக்கில தலையக் கொடுத்துக்கச் சொல்லுங்க.."

"அங்கேயும் ஒரு அளவுக்கு மேலே உட்கார முடியுமாடி..?"

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றிங்க..?"

"பாரதியாரே பாடியிருக்கார் அனு.."

"இவளைப் பத்தியா..?"

"அப்படித்தான் வைச்சுக்கயேன்.."

"என்னன்னு..?"

அனுராதா இடக்காக கேட்டும் போதே பிரதாப் நிறுத்தியிருக்கவேண்டும்.. அதைவிட்டு.. மகளின் சுதந்திரத்திற்காக போராடும் தந்தையாக அவர் பாரதியாரின் பாடலை சொல்ல ஆரம்பித்தார்..



4

என் கண்வளைவில் மயக்கம் கண்டும்..
உன் கண்ணியத்தில் எனை சிறை பிடித்தாய்..

அக்கூடாரத்துக்குள் அவன் மறைந்திருந்ததை அவள் அறியாள்.. அவன் எண்ணியிருந்தால் அவள் ஆடை மாற்றும் பேரெழிலை கண்டு ரசித்திருக்கலாம்.. அவ்வாறு அவன் செயல்படவில்லை.. கரம் கொண்டு விழி மறைத்து அவளைத் தடுத்தாட்கொண்டான்.. அப்போதும் அவளுக்கு சங்கடம் விளைவிக்காமல் வெளியேறி விடச் சித்தம் கொள்கிறான்..

‘இதுவன்றோ பேராண்மை..!’ அவள் மனம் நெகிழ்ந்தது..

“சற்றுப் பொறுங்கள்..” அவள் அவனை தடுத்து நிறுத்தினாள்..

“ஏன்..?”

“தாங்கள் வெளியேற யத்தனிக்க வேண்டாம்..”

“அதுதான் ஏன்..? யாம் வெளியேறித்தானே தீர வேண்டும்..? ஓர் கன்னிகை தனித்திருக்கும் கூடாரத்தில் நான் மறைந்திருப்பது முறையற்ற செயலாகும்.. இந்த மாறவர்மன் இதுதினம்வரை முறையற்ற எச்செயலையும் புரிந்ததில்லை..”

“இனியும் அவ்விதமே இருக்கும்..”

“நான் இங்கிருக்கும் போது தாங்கள் உலர்ந்த ஆடைக்கு மாற இயலாதே இளவரசி..!”

“அக்கவலை தங்களுக்கு எதற்கு..? அது எம் கவலை..”

‘இவள் யாது உரைக்கிறாள்..?’

அவனுக்கு ஓர் மணல்துகளும் விளங்கவில்லை.. ஒருவேளை அவன் முன்னிலையிலேயே ஆடை மாற்ற உத்தேசம் கொண்டிருப்பாளோ..?

‘அவ்விதம் ஜொள்ளாதே..’

அவன் அகத்தை அதட்டி அடக்கி வைத்தான்.. அகத்தில் உள்ளதை வதனத்தில் கண்டுணர்ந்த வட்ட மென்முறுவலுடன் அவள் பெட்டகத்தை திறந்து ஆடை அணிகலன்களை அள்ளிக் கொண்டு கூடாரத்தை விட்டு வெளியேறி விட்டாள்..

'அடுத்த கூடாரத்தில் ஆடை மாற்றி வரச் சென்றிருக்கலாம்..'

அவன் மனதின் ஓரமாக துளியளவு ஏமாற்றம் தோன்றியதை அவன் கிள்ளி எறிந்தான்.. மறைய இடமளித்திருப்பவளைப் பற்றி இத்தகு எண்ணம் கொள்வது தவறு என்று தன் மனதிற்கு பாடம் போதித்தான்.. அது செவி கொடுத்துக் கேட்பதைப் போல பாவனை செய்து விட்டு.. அவள் நீராடிய கோலத்துடன் வந்த எழிலையே கூத்து மேடைக்காட்சியைப் போல அவன் மனதில் மீண்டும்.. மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டிருந்தது..

'அடங்க மாட்டாயா..?' மனதை அதட்டினான்..

இதை போதி மரத்தடி புத்தனிடம் சென்று உரை என்று அது வதனம் திருப்பி அவள் நினைவையே கொண்டு வந்தது..

'ஏதடா இது..!' அவனுக்கு சிரவேதனையாகிப் போனது..

அவனிருக்கும் சூழலில் இதுபோன்ற இதமான இம்சைகளை இழுத்து விட்டுக் கொள்ள இயலுமா..?

அனைத்தும் சிறிது நாழிகை வரையில்தான் நீடித்தன.. எல்லாம் இயலும் என்ற பாவனையுடன் சர்வ அலங்கார பூஷிதையாக கரங்களில் பட்டுத்துணியால் மூடப்பட்ட சொர்ணப் பாத்திரத்துடன் அவள் கூடாரத்துக்குள் நுழைந்ததும் அனைத்து சிந்தனைகளும் அவனிடம் விடை பெறாமலே விரைந்தோடி விட்டன..

எவ்வித ஒப்பனையுமின்றி நீராடி விட்டு வந்த கோலத்திலேயே பேரெழிலுடன் திகழ்ந்தவள் அவள்.. தற்போது பட்டாடை உடுத்தி.. வைர ஆபரணங்களை அணிந்து.. கூந்தலை அழகு படுத்தி.. அதைச் சுற்றி மலர்சரங்களை சூடி.. வாசனைத் திரவியங்கள் பூசி.. பிறைநுதல் நெற்றியில் சிங்காரமாக செஞ்சாந்து திலகமிட்டு அவனெதிர் வந்து நின்று அவனுக்கு மயக்கத்தை வரவழைத்தாள் நர்மதாதேவி..!

"வெகு நாழிகையாகி விட்டதா..?"

வெகுகாலம் அறிந்தவளைப் போல வெகு இயல்பாக உரையாடியவளிடம் அரை நாழிகைக்கு முன்புதான் அவனைச் சந்தித்த உணர்வில்லை.. அவனுக்கும் அது போலவே தோன்றி வைத்தது..

"அல்ல இளவரசி..!" என்றான் மாறவர்மன்.

"நர்மதா என்றே அழைக்கலாமே.." மோகனப் புன்முறுவலுடன் கரங்களில் இருந்த சொர்ணப் பாத்திரத்தை ஹம்சதூளிகா மஞ்சத்தில் வைத்தாள் அவள்..

"அழைக்கலாம்.. எனினும்.." மாறவர்மன் இழுத்தான்.

"எனினும்..?" வினாவோடு அவள் நிமிர்ந்து நோக்கினாள்..

"தமிழ் சங்கம் வளர்த்த நாடு எங்களின் பாண்டிய நாடு..! எங்கள் குல மன்னர்கள் மதுரையில் தமிழ்சங்கம் வைத்து தமிழ் வளர்த்து வருகிறோம்.. எமது குலத்தில்தான் உமையவளான பார்வதி மலையத்துவ பாண்டிய அரசனின்

மகளாக 'மீனாட்சி..!' என்ற நாமத்துடன் உதித்தார்.. மீனாட்சி என்ற நாமத்தின் பொருள் மீன் போன்ற நயனங்களை உடையவள் என்பதாகும்.. இவர் மதுரையை ஆண்ட காலத்தில் சிவபெருமான் சோமசுந்தரப் பெருமானாக காட்சி தந்து எங்கள் குல மீனாட்சி அரசியை திருமணம் புரிந்து கொண்டார்.. சோமசுந்தர பெருமான்.. சொக்கநாத மன்னனாக மதுரையின் தமிழ்சங்கத்திலிருந்து தமிழ் வளர்த்தார்.."

அவளையே ஊடுறுவி பார்த்தபடி அவன் உரைத்ததில் அவளுக்கு ஆர்வம் ஏற்பட்டாலும் குழப்பமும் உடன் வந்தது..

"இவற்றையெல்லாம் எதன் பொருட்டு இத்தருணத்தில் உரைக்கிறீர்கள் மன்னவரே..! இத்தருணம் தங்களின் தமிழ் மொழியைப் பற்றிய பெருமையையும்.. தங்களின் மதுரை மாநகரை இறைவனும், இறைசியும் ஆண்டார்கள் என்ற பெருமையையும் உரைக்கும் தருணமல்லவே.." என்று வினவினாள்..

"ஆம் இளவரசி..! அதை யாம் அறிவோம்.. அறிந்தும் எதன் பொருட்டு இவற்றை உரைத்தோமென்றால்.. தங்களின் நாமம் தமிழ்மொழியோடு தொடர்பற்று இருப்பதைப் போல தோன்றிவைக்கிறது.."

"எமக்கு அவ்வாறு தோன்றவில்லையே.."

"இருக்கலாம்.. எனக்கென்னவோ.. 'நர்மதா' எனும் நாமத்தைவிட 'நறுமுகை..' என்ற நாமம் தங்களுக்கு பொருத்தமாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.."

அவன் விழிகள் அவளை ஊடுறுவியதில் அவளது மென்கரங்கள் நடுக்கம் கொண்டன.. அவனது பார்வையை எதிர்கொள்ள இயலாமல் நாணத்துடன் சிரம் கவிழ்த்துக் கொண்டவனை அள்ளி அணைத்துக் கொண்டால் என்ன என்று அவனது கரங்கள் பரபரத்தன..

“சரியாகப் போயிற்று போங்கள்..”

“எங்கு போகச் சொல்கிறீர்கள் இளவரசி..?”

“தாம் எங்கும் செல்ல வேண்டாம்.. எமது தாய், தந்தையர் வைத்த நாமத்தை மாற்றி அழைத்தால் அவர்கள் என்னை ஓர்வழி செய்து விடுவார்கள் என்பதனையே அவ்வாறு உரைத்தேன்..”

“அவ்வாறா..?”

“அவ்வாறேதான்..”

“அவ்வாறெனில்.. யாம் மட்டும் தங்களை ‘நறுமுகை’ என்ற நாமத்திலேயே அழைத்துக் கொள்கிறோமே.. இதற்கான தங்களின் அனுமதி கிட்டுமா..?”

துளைத்த அவன் பார்வையை துணிவுடன் அவள் ஏறிட்டு நோக்கினாள். அவளுக்கான பிரத்யேக நாமத்தை அவன் சூட்டியதில் அவள் மனதில் தென்றல் சூழ்ந்தது..

“அவ்வாறே ஆகட்டும்..”

அவள் ஒப்புதலாய் சிரத்தை அசைத்ததில் அவன் மனதிலும் தென்றல் மையம் கொண்டது..

“அமருங்கள்..”

அவனுக்கான ஆசனத்தை அவள் சுட்டிக் காட்டினாள்.

"எவரேனும் வருகை புரிந்தால்..?" அவன் தயங்கினான்..

"காஞ்சியின் காவல்படை எங்களது கூடாரங்களை விட்டு நீங்கி தொலை தூரத்திற்கு சென்று விட்டது.. எமதுபடைவீரர்கள் எமக்கான இக்கூடாரத்திற்குள் வருகை புரிய மாட்டார்கள்.. அத்துணிவு தங்களுக்கு மட்டுமே உண்டு.."

அவளின் உரையில் அவன் மெதுவாக நகைத்தான்.. அந்த நகைப்பில் அவனது வதனத்தின் கவர்ச்சி மிகுந்த பேரெழில் கூடுவதையும், அவனது புன்னகை அவளை வசீகரிப்பதையும் மயக்கத்துடன் அவள் உணர்ந்தாள்..

'ஆடவரும் இத்துணை எழிலோடு இருக்கக் கூடுமா..?'

மீண்டும் அவள் மனதில் சம்சயம் வருகை தந்தது.. அதற்கான அத்தாட்சிதான் உமது கண்ணெதிரே உள்ளதே என்பதைப் போல அவன் அவளுக்கு நன்றி உரைத்து விட்டு அவள் சுட்டிக் காட்டிய ஆசனத்தில் அரச தோரணையோடு அமர்ந்தான்..

"படைவீரர் வருகைபுரிய மாட்டார்கள்.. தமது சேடிப் பெண்கள் வருகை புரிந்தால்..?"

அடுத்த வினா அம்பை எய்தான் அவன்..

"தங்களுக்கு விடையளித்தே சோர்ந்து விடப் போகிறேன்.."

இனிய புன்முறுவலுடன் அவனுக்கு எதிரே இருந்த ஹம்சதூளிகா மஞ்சத்தில் அமர்ந்தாள் நர்மதாதேவி..

"மன்னிக்க வேண்டும் நறுமுகை..! தமைக் குறித்த அக்கறையினால்தான் அதிக அளவில் வினாக்களை எழுப்புகிறேன்.. என்பொருட்டு எத்துன்பமும் தமக்கு நேர்ந்து விடக் கூடாது.."

அவனது 'நறுமுகை' என்ற பிரத்யேக அழைப்பிலும்.. அவள் மீதான கவலையிலும் அவள் மனம் மகிழ்வைக் கொண்டது..

"அதுபற்றி தாங்கள் கவலை கொள்ள வேண்டாம்.. நான் ஓய்வெடுக்க விரும்புவதால் எம்மை தொந்தரவு செய்தல் கூடாது என எமது சேடிப்பெண்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன்... நான் அழைக்காமல் எவரும் இக் கூடாரத்துக்குள் பிரவேசிக்க மாட்டார்கள்.."

அவனை அமைதிப் படுத்தும் விதத்தில் கூறியபடியே ஹம்சதூளிகா மஞ்சத்தில் இருந்த சொர்ணப் பாத்திரத்தை கரத்தில் எடுத்தாள் நர்மதா.. அதை மூடியிருந்த பட்டுத் துணியை விலக்கினாள்.. பாத்திரத்துக்குள் பலவகை உணவுகள் இருந்தன..

"யாது இது..?" வியப்புடன் வினவினான் மாறவர்மன்.

"சித்ரான்னம்..! கடலில் நீராடியவுடன் உண்ணுவதற்கு சித்ரான்னமே சிறந்தது என்று சமைத்திருக்கிறார்கள்.. புளிக்காய்ச்சலுடன் கூடிய அன்னம்..! தயிரமுது..! எழுமிச்சை பழத்தின் சாறுகொண்ட அன்னம்..! தேங்காய் பாலைக் கொண்டு சமைத்த அன்னம்..! என்று பலவகையான சித்ரான்ன வகைகள் இதில் உள்ளன.. உண்ணுங்கள்.."

பசியோடு இருந்தவனிடம் பலவகையான உணவு வகைகளை பரிவுடன் நீட்டி பசியாறுங்கள் என்று கரத்தவளை இமைக்காமல் பார்த்து வைத்தான் மாறவர்மன்..

அவன் பார்வையின் தீட்சண்யத்தில் அவள் சிரம் குனிந்தாள்..

"எதன் பொருட்டு என்மீது இத்துணை பரிவு கொள்கிறீர்கள் நறுமுகை..? யாம் தமது தந்தையின் பரம்பரினருக்கு பகைவன் ஆவோம்.."

"அறிவேன் அரசே..! குலோத்துங்க சோழர் எமது தந்தையின் மாமன் ஆவார்.. ஆயினும் அரசே..! எமது தந்தையின் பல ராணிகளில் ஒரு ராணிக்கு புதல்வியாக பிறந்த எனக்கு சோழர்குலத்தின் மீது எந்தவிதப் பற்றுதலுமில்லை.. அவர்களின் பகைவரை எமது பகைவராக எண்ணவுமில்லை.."

"தமது தந்தையார் அவ்விதம் எண்ணலாமே.."

"நான் பிறப்பெடுத்ததிலிருந்து ஒரிரு முறைதான் எம் தந்தையின் திருவதனத்தை தரிசித்திருக்கிறோம்.. அரசரின் புதல்வி என்ற நாமம் மட்டுமே எமக்கு உரித்தானதாகும்.. அவரது அருகாமை எமக்கு உரித்தானதல்ல.. ஒருவேளை அரசர் அந்த மகிஷியின் திருவயிற்றில் உதித்த புதல்வர் புதல்விகளுக்கும், புதல்விகளுக்கும் அவரின் அருகாமை கிடைத்திருக்குமோ என்னவோ.."

நர்மதா தேவியின் நெடு மூச்சில் துயரம் கொண்டான் மாறவர்மன்..

'இத்துணை கனிவான மங்கையின் மனதில் இதுபோன்ற துயர் ஒளிந்துள்ளதா..?' அவனுக்கு காருண்யம் வந்தது..

"ஹொய்சாள அரசகுல வம்சத்தினரின் இளவரசிகளில் நானும் ஒருத்தி..! அவ்வளவே.. எமது தாய்க்கென்று தனி மாளிகை உள்ளது.. மாளிகையைக் காவல் காக்க படை பரிவாரம் உள்ளது.. மாளிகையில் சேவை செய்ய சேடிப் பெண்களும், சேவகர்களும் உள்ளனர்.. பொக்கிச அறையில் வைர, வைடூரிய ஆபரணங்கள் உள்ளன.. கோவில்களுக்கும்.. அருகில் உள்ள பூஞ்சோலை களுக்கும், நகரங்களுக்கும் சென்றுவர எங்களுக்கென்று ரதங்கள் பல உள்ளன.. சில கிராமங்களும் எனது தாய்க்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.. இத்துணை இருந்தும் எனது தந்தை எங்களுடன் இல்லை.."

மாறவர்மன் தன்முன்னால் இருந்த உணவு வகைகளை மறந்து அவளது இதயத்தின் சாளரக்கதவுகள் திறந்து உள்ளிருந்து கொட்டிய உணர்வலைகளை உள்வாங்கிக் கொண்டிருந்தான்..

"எமது தாயிடம் வினவினால்.. இதுதான் அரசர்குல வழக்கம் என்கிறார்.. பலராணிகளில் ஒரு ராணியாக இருப்பதில் அவர் மனதில் வருத்தம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.."

"அவரது மனம் அதை ஏற்றுக் கொண்டிருக் கலாமல்லவா..?"

"அவரும் இதையே உரைக்கிறார்.. அரசியல் காரணங்களுக்காக ஓர் அரசர் பல ராணிகளை மணம் புரிவது தொன்று தொட்டு அரசகுலத்தில் இருந்து வரும் மரபு என்கிறார்.."

"தங்களின் மனம் அதை ஏற்றுக் கொள்ளவில்லையா..?"

"ஆம்.."

நர்மதா தேவி துயரத்துடன் சிரத்தை அசைத்தாள்.. அவள் வதனத்தில் குடிகொண்டிருந்த துக்கத்தில் மாறவர்மனின் மனம் அசைந்தது..

"இத்துணை எழில் கொண்ட பெண்மனம் வேதனை கொள்ளல் ஆகாது நறுமுகை..!" என்றான் அவன்..

அவன் எதிர்பார்த்தபடி அவளது வதனம் மலர்ந்தது.

"எழில் கொண்ட பெண்ணா..? எவரை உரைக்கிறீர்கள்..?" என்று அறியாத மழலையைப் போல வினவி வைத்தாள்..

"இக்கூடாரத்தில் தமை விடுத்து வேறு பெண் எவரேனும் உள்ளனரா..?" மாறவர்மன் கூடாரத்தைச் சுற்றி பார்வையால் துழாவினான்..

அதில் அவளுக்கு சினம் வந்துவிட்டது..

"இருந்தால் யாது செய்வதாக உத்தேசமாம்..? அவர்களை பார்வையிட உத்தேசமா..?" வதனம் திருப்பிக் கொண்டாள்..

"அல்ல நறுமுகை..!" தீர்க்கமான பார்வையோடு மறுத்தான் மாறவர்மன்..

அத்தொனியில் அவன் பார்வையோடு பார்வை கலந்தாள் நர்மதா..

"எமது பார்வைக்கு தாம் மட்டுமே பேரெழில் கொண்டவர்களாக உள்ளீர்கள் நறுமுகை..! தமை விடுத்து வேறு எவரையும் பேரெழில் கொண்டவர்களாக இந்த மாறவர்மன் உரைக்க மாட்டான்.."

நர்மதா தேவியின் மேனி சிலிர்த்தது.. அவள் மாறவர்மனின் கரத்திலிருந்த சொர்ணப் பாத்திரத்தை பார்க்கும்படி கூறினாள்..

"தங்களின் கரத்தில் உள்ள உணவு வகைகளை உண்ணுங்கள் அரசே..! நாழிகையாகிறது.. எப்போது பசியாறினீர்களோ.."

தாயினும் பரிந்த அவளின் பரிவுரையில் அவன் மனம் நெகிழ்ந்தது..

"இது தங்களுக்கான உணவு வகைகள் என்று யாம் எண்ணுகிறோம் நறுமுகை..!" என்றான் அவன்..

'கண்டு கொண்டானே..'

அவனை ஏறிட்ட நர்மதா தேவியின் விழிகளில் தெரிந்த வியப்பிற்கு பதிலாக புன்னகையை பரிசளித்தான் மாறவர்மன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



4

வட்ட நிலா கையில் வந்து..
பேசுவது போல் ஓர் நினைவு..

யாமினிக்காக வந்த வேலை நியமன உத்தரவைப் பற்றிய கடிதம் பிரிக்கப்படாமல் அப்படியே தோட்டத்தின் ஊஞ்சலில் இருந்தது.. பலத்த காற்றடித்து.. தோட்டத்துச் செடிகள் குழுங்கின.. கடிதம் குழுங்கவில்லை..

புல்வெளியில் கிடந்த சருகுகள் பறந்தன.. கடிதம் பறக்கவில்லை..

மெலிதான காகித உரையைக் கொண்ட அந்தக் கடிதம்.. கனத்த இரும்புக் குண்டினைப் போல சட்டமாக ஊஞ்சலில் அமர்ந்திருந்தது..

“வீட்டுக்குள்ளே பெண்ணை..
பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்..”

பிரதாப் வெகு கம்பீரமாக பாரதியாரின் பாடலை சொல்லிக் கொண்டிருந்தார்.. அனுராதா நொடித்தாள்..

“விந்தை மனிதரைப் பத்தியெல்லாம் ஜாமத்தில தோட்டத்தில உலாத்தற மகளைப் பெத்த நீங்க பாடக் கூடாது..”

“அனு..!”

“என்னத்துக்கு என்கிட்ட சவுண்டு விடறிங்க..? இந்தப் பாட்டு நான் பாடிக்காட்டின பாட்டுத்தான்.. பாரதி புதுமைப் பெண்ணைப் பத்தித்தான் பாடியிருக்கார்.. உங்க பொண்ணைப் போல மெகால் பிடிச்ச பெண்ணைப் பத்திப் பாடலை..”

“இப்ப என்னதாண்டி சொல்ற..?”

“நான் தனியா இருந்தாக்கூட வீட்டைத் தொறந்து போட்டுட்டு படுத்துத் தூங்குவேன்.. இவகூட இருக்கிறப்ப அதைச் செய்ய மாட்டேன்..”

“அப்ப நீ என் பெண்ணை வீட்டுக்குள்ள வைச்சு பூட்டி வைப்ப..?”

"ஊஹூம்.. என்னை வீட்டுக்குள்ளே வைச்சுப் பூட்டிக்குவேன்.. இவளைப் பூட்டி வைக்க என்னால முடியுமா..? காத்துக்கு வேலி போடறதும்.. கடலுக்கு மூடி போடறதும்.. இவளைப் பூட்டி வைக்கிறதும் ஒன்னுதான்.."

"யாமினி நீ கிளம்பு.."

"எங்கே..? அப்பாவும் மகளும் தூரதேசம் போறிங்களா..?"

"ஏண்டி.. உன் வாயிலே நல்ல வார்த்தையே வராதா..?"

"எனக்கும் ஆசைதான்.. இவளை மகளாய் பெத்த பின்னாலே அந்தக் கொடுப்பினைதான் எனக்கு டாட்டா காட்டிட்டுப் போயிருச்சே.."

அனுராதா எரிச்சலுடன் டிவியைப் போட்டாள்.. அதில்..

"ஆனந்த யாழை மீட்டுகிறாய் - நெஞ்சில்
ஆயிரம் வண்ணங்களை கூட்டுகிறாய்.."

என்ற பாடல் ஒலித்தது..

"போதும்டாசாமி..! வீட்டில படற ரோதனையே தாங்கலை.. இதில டிவியில வேற பாசமழையை கொட்டியாகிறது.." படக்கென்று டிவியை அணைத்து விட்டாள்..

நடக்கும் சண்டை யாமினியை கையமாக வைத்தது என்பதில் முகவாட்டம் கொண்டிருந்த மகளை கனிவுடன் பார்த்தார் பிரதாப்..

"கடைக்கு வா யாமினி.. உனக்கும் மாறுதலா இருக்கும்.."

"ஆமாமா.. இவ வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறா பாருங்க.. கடைக்கு வந்தா மாறுதலாத்தான் இருக்கும்.. அழைச்சுக்கிட்டுப் போங்க.."

"இவ கிடக்கிறா.. நீ வாம்மா.."

பிரதாப்பின் வற்புறுத்தலில் யாமினி அவருடன் கடைக்குச் செல்லக் கிளம்பினாள்.. தகப்பனும் மகளும் கிளம்பியவுடன் டாட்டா கூடச் சொல்லாமல் எரிச்சலுடன் கதவை அடைத்துக் கொண்டு போய் விட்டாள் அனுராதா.. ஊஞ்சலைக் கடந்து சென்ற யாமினியைப் பார்த்தபடி அசைவற்று கிடந்தது அக்கடிதம்..!

பிரதாப்பின் கடை கடலோரமாக அமைந்திருந்தது.. அடிக்கடி அங்கே வருவாள் யாமினி.. யதுநந்தனை விட அவள்தான் அந்தக் கடையின்மீது ஆர்வமாக இருப்பாள்.. அங்கேயிருக்கும் சிற்பங்களையும்.. பல்லவர்களின் ஆட்சிகாலத்தை நினைவுறுத்தும் பழங்காலத்து கலைப் பொருள்களையும்.. சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிய கலைநயம் கொண்ட ஓவியங்களையும் பார்த்துப் பார்த்து ரசிப்பாள்.. சில நேரங்களில் அந்த ஓவியங்களின் அருகில் சென்று மணிக்கணக்கில் அதைப் பார்த்தபடி அசையாமல் நிற்பாள்..

அப்போதெல்லாம் அனுராதாவின் கோபத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து வருத்தம் கொள்வார் பிரதாப்.. மகளின் மனதில் என்னதான் உள்ளது என்று அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அடிக்கடி அவள் முகத்தில் குடிகொள்ளும் சோகத்திற்கான காரணம் பிடிபடாமல் திகைத்திருக்கிறார்..

யாமினிக்கு அந்த மாமல்லபுர கடற்கரையைப் பிடிக்கும்.. அதற்கு அடுத்தபடியாக அவள் வலம் வர விரும்புவது காஞ்சிபுரத்தை..

மகாபலிபுரத்தில் பிறந்தவள் காஞ்சியை எதற்காக விரும்புகிறாள் என்று தெரியாமல் தலைமுடியை பிய்த்துக் கொள்வாள் அனுராதா.. பிரதாப் அதுபோல செய்வதில்லை என்றாலும் அவர் மனதையும் அந்தக் கேள்வி குடைந்து கொண்டுதான் இருந்தது..

இவையெல்லாம் போதாது என்று யாமினி அடிக்கடி தஞ்சாவூருக்கு வேறு கிளம்பிச் சென்று விடுவாள்..



5

அழுது படைத்து பரிவு காட்டும்.. ஆருயிரே..! நீ யாரோ..?

மாறவர்மனின் விழிகள் ஆதுரத்துடன் நர்மதா தேவியின் வதனத்தையே பார்த்தன.. அவளுக்கான அழுதை அவனுக்கென்று கொணர்ந்திருக்கும் அவளின் அந்தச் செய்கையில் அவன் மனம் பாகாக குழைந்தது..

'அல்ல' என்று பொய்யுரைக்க இயலாமல் தடுமாறிப் போனாள் ஹொய்சாள அரசிளங்குமரியான நர்மதாதேவி..!

"தாமாக யூகம் கொள்ள வேண்டாம்.. முதலில் அழுதை உண்ணுங்கள்.. தங்களது யூகங்களுக்கான விடைகளை அதன்பின்பு தேடலாம்.."

அவன் பரிவுடன் நகைத்தான்..

"இது யூகம் அல்ல நறுமுகை..! மெய்..! யாம் இங்கு மறைந்திருப்பதை தாம் எவரிடமும் உரைக்க இயலாது.. அவ்வாறிருக்க.. எவ்விதம் எனக்கான அமுதை தாங்கள் கொண்டுவர இயலும்..? எனவே இவ்வமுது தமக்கானது என்பதில் எமக்கு யாதொரு சம்சயமும் இல்லை.."

"இத்தருணத்தில் இந்த உரையாடல் தேவையானது தானா..?"

"எமக்குத் தேவையானதுதான் இளவரசி..! இந்த அமுதை தாங்கள் தனித்து உண்ணப் போவதாக உரைத்து விட்டு கொணர்ந்திருக்க வேண்டும்.. அரசிளங்குமரிக்குத் தான் சொர்ணபாத்திரத்தில் உணவை அளிப்பார்கள்.. அடைக்கலமாய் வந்தவனுக்கு அவ்விதம் அளிக்க மாட்டார்கள்.. இது ஒன்றே இது உமக்கான அமுது என்பதற்கான சான்றாகும்.."

'அருமை..' அவளுக்குப் பாராட்டத் தோன்றியது..

மாறவர்மன் சொர்ணப்பாத்திரத்தின் உள்ளே பார்வையிட்டான் உணவின் சுவைக்காக அமுதின் மேலாக வாழையிலைகளை மூடி வைத்திருந்தனர்.. அந்த இலைகளை வெளியில் எடுத்தான்.. அவள் கரத்தில் ஓர் இலையைக் கொடுத்து விட்டு தனதருகில் மறு இலையை பரப்பிக் கொண்டான்..

"யாது செய்யப் போகிறீர்கள்..?" குழப்பத்துடன் அவள் வினவினாள்..

"பகிர்ந்துண்ணப் போகிறோம்.." நிதானமாக விடையளித்தான் மாறவர்மன்..

அந்த விடையில் அவளது மேனி சிலிர்த்தது.. சொர்ணப்பாத்திரத்தில் நிரம்பியிருந்த சித்ரான்ன வகைகளை இரு இலைகளிலும் சமமாகப் பிரித்து வைத்தான் மாறவர்மன்.. அந்தச் செயலையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த நர்மதா தேவியை நோக்கி புனனகைத்தான..

"நம் இருவருக்கும் சரி பாதி.."

"யாது உரைத்தீர்..?"

நர்மதா தேவி பரபரத்தாள்.. 'நம் இருவருக்கும் சரி பாதி..' என்று மாறவர்மன் உரைத்த உரை.. அவள் செவிகளில் 'நாம் இருவருமே சரி பாதி..' என்று விழுந்து வைத்திருந்தது..

"நம் இருவருக்கும் சரிபாதி என்று உரைத்தேன்.. நறுமுகை..! ஏன்..? எமது உரையில் ஏதும் தவறு உள்ளதா..?"

"அல்ல.."

ஏமாற்றத்துடன் உரைத்த நர்மதா தேவி.. அவளுக்கான இலையில் இருந்த உணவு வகைகளை அவனது இலையில் எடுத்து வைக்க முயன்றாள்..

"வேண்டாம் இளவரசி..!" மாறவர்மன் தடுத்தான்..

"தாம் நெடுந்தூரம் பயணப்பட்டு வந்திருப்பவர் அரசே..! வழியில் சரிவர உணவுண்டீர்களோ என்னவோ.."

நர்மதா தேவியின் கவலையில் மாறவர்மன் அவளையே நோக்கினான்.. அப்பார்வையில் பிரதிபலித்த நுண்ணிய உணர்வலையில் நர்மதாதேவியின் மனம் அமிழ்ந்து எழுந்தது..

"தமது காருண்யத்திற்கு மெத்த வந்தனம் நறுமுகை..! ஆணும் பெண்ணும் சரிபாதி என்ற கொள்கையுடையவன் நான்.. எமது மதுரையை ஆண்ட சொக்கநாதர் தமது தேவிக்கு தமது உடலின் சரிபாதியை அளித்தவர்.. அவர் வழித் தோன்றல்களான எம் குல அரசர்கள் தமது ராணிகளைப் போற்றிப் பாதுகாப்பவர்கள்.. எமது உணவைக் குறைத்து.. தமக்கு அதிக அளவில் உணவை அளிக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான்.. தமது உணவைக் குறைத்து நான் அதிக அளவில் உண்ணுவதா..? ஒர்தினமும் அது நடக்காது.."

மாறவர்மனின் தீர்க்கமான உரையில் இதுபோன்ற பலதினங்கள் இனிவரும் காலத்தில் வரக்கூடுமோ என்று ஏங்கிப் போனாள் நர்மதா.. அரிதாகக் கிடைத்திருக்கும் அத்தினம் அவள் வாழ்வின் 'பொற்தினம்..!'

இதை அவன் அறிவானா என்று அவள் மனம் தவித்தது..

இவ்வுலகில் அனைத்தும் கிட்டியவர் என்று எவருமே இல்லையென்றுதான் கூறவேண்டும்.. நர்மதா தேவியும் அவ்விதம்தான்.. அவள் ஹொய்சாள மன்னனுக்குப் பிறந்த புதல்வியாக இருந்தாலும்.. அவனுடைய அரண்மனையில் உரிமையுடன் வசிக்கும் பேறு அவளுக்குக் கிட்டவே யில்லை..

ஹொய்சாள மன்னன் வல்லாளதேவன் மணந்த பல ராணிகளில் ஒரு ராணியாக நர்மதா தேவியின் தாய் கூறப்பட்டாள்.. அவர்களுக்கென்று தனித்த அரண்மனை.. சேவகர்.. செல்வம் என்று அனைத்தும் இருந்தும் தந்தையை உரிமையுடன் அணுக இயலாத துயரம் நர்மதா

தேவியின் மனதை சூழ்ந்திருந்தது.. அரண்மனையின் விஷேச தருணங்களில் பல ராணிகளில் ஒரு ராணியாக நர்மதா தேவியின் தாயார் செல்ல நேரிடும்போது ஓர்முறை நர்மதா தேவியும் உடன் சென்றிருந்தாள்.. அன்றுதான் அவளது தந்தை எனக் கூறப்படும் ஹொய்சாள மன்னரை முதன முதலாக பார்த்தாள்..

"தாம் குழந்தைப் பருவத்தில் இருந்த போது அடிக்கடி மன்னர் நம் இல்லத்திற்கு வருகை புரிவார் மகளே..! தமக்கு அது நினைவில் இருக்காது.." நர்மதா தேவியின் தாய் விளக்கம் உரைத்தாள்..

"எமக்கு விவரம் தெரிய ஆரம்பித்த பின்பு தந்தை ஏன் வருகை புரியவில்லை அம்மா..?" நர்மதா தேவியின் வினா கூர்மையுடன் வெளிவந்தது..

"அது.. அது.."

"உரையுங்கள்.."

"அதன் பின்னரும் பல் ராணிகளை மன்னர் மணம் புரிந்தார் குழந்தாய்..! அவர்களின் இல்லங்களுக்கும் செல்ல வேண்டுமல்லவா..?"

'என்ன ஒரு நியாயம்..?' நர்மதா தேவியின் குருதி கொதித்தது..

அரசகுல மரபின்படி பல ராணிகளை மன்னர் விவாஹம் செய்வாராம்.. மணம் புரிந்த ராணியுடன் ஓரிரு வருடங்கள் கூடி வாழ்வாராம்.. அவளுக்கென்று குழந்தைகளை அளித்த பின்பு அடுத்த ராணியைத் தேடிச் சென்று விடுவாராம்.. அவரது ராணியாக வாழ்க்கைப்பட்டு வந்தவள் மட்டும் இறுதிவரை அவரது தேவியென்ற

நாமத்துடனும் அவர் அளித்த குழந்தைகளுடனும் தனித்து நிற்தல் வேண்டுமாம்..

"இதுவே அரசக் குல மரபு.."

இப்படியொரு மரபுடன் கூடிய குலத்தில் எதற்காக உதித்தோம் என்று நர்மதா தேவி வருந்தாத தினமே இல்லை..

"ஆனால் அம்மா.. மன்னருடன் இணைபிரியாமல் உடனிருக்கும் இளவரசர்களும், இளவரசிகளும் எனைப் போல அவரது பிள்ளைச் செல்வங்கள் தானே..! எனக்குக் கிட்டாத உரிமையும், அவரது அருகாமையும், அவர்களுக்கு மட்டும் எவ்வாறு கிட்டியது..?"

"அவர்கள் மன்னரின் பட்டத்து ராணி பெற்ற செல்வங்கள் குழந்தாய்..! அவர்களால் அரண்மனையில் வசிக்க இயலும்.. மன்னரின் அருகாமையில் இருத்தல் இயலும்.."

என்னதான் மனதை மறைத்து மரபுக்களை ஏற்று உணர்வற்று வாழப் பழகியிருந்தாலும் அவள் குரல் இதை உரைக்கும் போது தழதழத்து விட்டதை தற்போது நர்மதா தன் நினைவில் வைத்திருக்கிறாள்..

"தமை மட்டும் ஏன் அம்மா ஓர் மன்னரின் பட்டத்து ராணியாக்க தமது தந்தை எண்ணவில்லை..?"

நர்மதா தேவியின் கோபம் கொண்ட வினாவிற்கு நர்மதாதேவியின் தாய் அளித்த விடை அளித்த ரணம் இன்று வரை அவள் மனதில் ஆறவில்லை..

"ஏனெனில்.. எமது தாயும் எமது தந்தையின் பல ராணிகளில் ஒரு ராணியாக வாழ்ந்தவரே.."

அவ்வாறெனில் நர்மதா தேவியின் மணவாழ்வும் அதைப்போலவே விதிக்கப்பட்டு விடுமோ..?

"மன்னரின் கட்டளை அதுவாக இருந்தால் மறுத்து உரைக்க எவராலும் இயலாது மகளே..!"

ஹொய்சாள மன்னன் வல்லாளதேவன் அதைப் போன்ற கட்டளையைத்தான் இடுவான் என்பதை நர்மதா அறியாதவளா என்ன..?

"பகை தவிர்க்க மன்னர்கள் இம்முறையை கையாள்வது தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வரும் மரபுதான் மகளே..! உனது தந்தையும் உறவைப் பலப்படுத்த.. நட்புறவை உண்டாக்கிக் கொள்ள என்று ஏதேனும் ஒரு மன்னருக்கு பலராணிகளில் ஒரு ராணியாக உன்னை விவாஹம் புரிந்து வைக்க எண்ணலாம்.."

"எண்ணலாம் என்று எதற்காக சம்சயத்துடன் கூறுகிறீர்கள் அம்மா.. தந்தை அவ்விதம்தான் எண்ணுவார்."

கசப்புடன் மொழிந்த மகளுக்கு நர்மதாதேவியின் தாயால் என்ன சமாதானத்தை உரைக்க இயலும்..?

"அரசகுல மகளிர்க்கு தனித்த மனம் இல்லை மகளே..!"

"தனித்த மனம் கொண்டது எனது தவறா தாயே..?"

"அறிவேன்.. எனினும்.. இவ்வெண்ணத்தை விலக்கி எது வந்தபோதும் எதிர்கொள்ளல் வேண்டும் என்ற உறுதியையும், நியதியையும் உன் மனதில் ஏற்றுக் கொள்ள வழக்கப்படுத்திக் கொள் மகளே..!"

"அல்லாது போனால் யாம் எமது தந்தையின் சினத்திற்கு ஆளாக நேரிடும்.. அவ்வாறுதானே அம்மா..?"

நர்மதா தேவியின் மனம் பாறையைப் போன்ற கடினம் கொண்டது. அத்தினத்தில்தான்.. அதன் பின்னர் அவள் மனதில் தாம் ஓர் அரசிளங்குமரி என்ற எண்ணமே உதித்ததில்லை..

'மாளிகையை பெருக்கும் வஸ்துவிற்கு நாமம் பட்டுக் குஞ்சலமாம்.. அதைப் போல எமக்கு ராஜகுமாரி பட்டமாம்.'

நட்புறவை மேம்படுத்த என்று எவனோ ஓர் வயோதிக மன்னனுக்கு பல தாரங்களில் ஒரு தாரமாக போக வேண்டிய விதியுடன் வாழ்பவள் செல்வச் செழிப்பில் மகிழ்ந்து விடுவாளா என்ன..?

'யாம் பலி கொடுக்க வளர்க்கப் படும் பிராணி ஆவோம்..'

துக்கத்துடன் இந்நினைவை அடிக்கடி நினைத்துக் கொள்வாள் நர்மதாதேவி..! தந்தை என்ற பாசம் அவள் மனதில் துளிர்க்கும் போதே கருகி விட்டது.. ஹொய்சாள நாட்டின் மீதோ.. அதன் நட்புறவில் உள்ள நாடுகளின் மீதோ அவளுக்கு எந்தவொரு பிடிமானமும், அபிமானமும் உண்டாகியதில்லை..

அத்தருணத்தில்தான் அவள் மாறவர்மனின் எழுச்சியைப் பற்றி கேள்வியுற்றாள்..

"பாண்டிய மன்னனாம்.. ஜடாவர்மன் குலசேகரனின் இளவலாம்.. வீரத்தில் அவனுக்கு நிகரென்று எவரு மில்லையாம்.. நம் சோழவளநாட்டின் சக்கரவர்த்தி குலோத்துங்கருக்கே அறைகூவல் விடும் துணிவுள்ள வனாம்.."

நர்மதா தேவியின் தாயான தரங்கிணிதேவி விவரித்தபோது வதனம் சுளித்தாள் நர்மதா தேவி..

"நம் சோழவள நாடடா..? நமக்கென்று அந்நாட்டை எத்தருணத்தில் சாசனம் செய்து அளித்தார்கள் என்பதனை உரைக்க இயலுமா அம்மா..?"

"யாது இது நர்மதா..? நமது ஹொய்சாள ராஜ்யத்திற்கு சோழவளநாடு உறவு நாடல்லவா..?"

"நமது ஹொய்சாள ராஜ்யமா..? எந்தத் துணிவில் இதை உரைத்தீர்கள் அம்மா..? பட்டமகிஷியின் செவிகளில் விழுந்தால் அவர் தம்முடன் யுத்தம் புரிந்து ராஜ்யத்தை விட்டு விரட்ட அவரது புதல்வர்களை அனுப்பி வைத்து விடுவாள்.. எனவே சிந்தித்து உரையாற்றுங்கள்.. மாளிகையின் சுவர்களுக்கும் செவிகள் உண்டு.."

நர்மதா தேவியின் இடக்கான உரையில் தரங்கிணியின் வதனம் கலங்கிச் சிவந்த போதும் அவளது விழிகள் சுற்றுப் புறத்தில் எவரேனும் உள்ளனரோ என்று துழாவி விட்டுதான் வேறு பணியைப் பார்த்தன..

அதைக் கண்டு கொண்ட நர்மதா தேவி மெதுவாக நகைத்து வைத்தாள்..

"போதும்.." தரங்கிணி சீறினாள்..

"அவ்வாறே அம்மா.." என்ற போதும் நர்மதா தனது நகைப்பை நிறுத்தவில்லை..

அதில் சினம் கொண்ட போதும் அரிதாக நகைத்து வைக்கும் தனது புதல்வியின் நகைப்பில் மனம் நனைந்தாள் தரங்கிணி தேவி..!

'மனம் விட்டு எத்துணை அழகாக என்மகள் நகைக்கிறாள்..!'

"தமக்கு அனைத்துமே கேலிதான்.."

அலுத்துக் கொண்ட தரங்கினியின் கழுத்தை வளைத்தன நர்மதா தேவியின் கரங்கள்..

"தம்மிடம் விளையாடாமல் வேறு எவரிடம் விளையாடுவேன் அம்மா..? சினம் கொள்ள வேண்டாம்.. தாம் உரைக்க வந்ததை உரையுங்கள்.."

"சோழ நாட்டில் போர் வரக்கூடும் என்று நம் மன்னர் உரைத்ததாக கேள்வி.."

"கேள்விதான்.. தமது கணவர் உரைப்பதை செவி மடுக்க தம்மால் இயலாது.. கேள்வியுற மட்டுமே இயலும்.. என்ன வாழ்க்கை இது.."

"இதைக்குறித்து பலதினங்கள் நாம் விவாதித்து விட்டோம் நர்மதா.. அதைத்தவிர்த்து நாட்டு நடப்பைப் பற்றி விவாதிக்கலாமே.."

"ஏனாம்..? நம்மை என்ன மன்னர் மந்திர ஆலோசனையில் பங்கு பெற வருகை தாருங்கள் என்று தாம்பூழம் வைத்து அழைக்கப் போகிறாரா..?"

"நர்மதா...!"

"அமைதி கொண்டேன்.."

வாயை கரங்களால் மூடியபடி நகைத்தவளை வெகு பிரியத்துடன் அணைத்துக் கொண்டாள் தரங்கிணி..

"மாறவர்மனைப் பற்றிய அச்சம் குலோத்துங்க சக்கரவர்த்தியின் மனதில் நிலவுகிறதாம் மகளே..! அவ்வாறு

போர் நேர்ந்தால் உனது தந்தையின் உதவிக்கரத்தை அவர் நாடக்கூடும்..”

‘அவ்வாறு கதை செல்கிறதா..?’

“ஹொய்சாள மன்னர் மாறவர்மனின் மீது சினம் கொண்டுள்ளார்..”

‘எதற்காம்..? இவரது பட்டத்து மகிஷியின் புதல்வியை பல ராணிகளில் ஒரு ராணியாக விவாஹம் செய்து கொள்ள அந்த மாறவர்மன் தூது அனுப்பியுள்ளானா..?’

“அவரது மாமனின் மனதில் அச்சத்தை உண்டாக்கிய மாறவர்மனை வெறுக்கிறாராம்..”

‘அவ்வாறெனில் யாம் அவனை விரும்புகிறோம்..’

“சோழர்களின் பகைவன் ஹொய்சாள மன்னருக்கும் பகைவன்..”

‘இருந்து விட்டுப் போகட்டும்.. எவர் ஆட்சேபித்தது..? எமக்கொன்றும், இதுபோன்ற கோட்பாடு இல்லையே.. சோழர்களின் பகைவன்.. எமக்கு நண்பன்..!’

இது போலதான் எவரென்று வதனம் பார்க்கும் முன்னரே நர்மதா தேவியின் இதயத்தில் சிம்மாசனமிட்டு அமர்ந்து வைத்தான் மாறவர்மன்..!

அதன் பின்னர் தனது அந்தரங்கத் தோழிகளிடம் மாறவர்மனைப் பற்றியே பேசலானாள் நர்மதா தேவி..! அவர்களும் அவனைப்பற்றிய விவரங்களை சேகரித்து வந்து அவளது செவிகளில் ரகசியமாக உரைக்கத் தொடங்கினார்கள்..

“மாறவர்மன் மாவீரனாம் இளவரசி..!”

"அதை யாம் அறிவோமே.."

"அவரைத் தாங்கள் சந்தித்தீர்களா..?"

"சந்தித்தால்தான் இதுபற்றி உரைக்க வேண்டுமா..? கேள்வி ஞானத்திலும் உரைக்கலாம்.. அவரைப் பற்றி நானறியும் செவிவழிச் செய்திகள் அவர் மாவீரர் என்றே உரைத்து வருகின்றன.."

"அவ்வாறுதானாம் தேவி..! எவருக்கும் அஞ்சாத குலோத்துங்க சக்கரவர்த்தியே மாறவர்மரின் எழுச்சி கண்டு அஞ்சுகிறாராம்.."

"எவருக்கும் அஞ்சாமல் இருக்க வீரம் மட்டும் போதாது தோழி..! படைபலமும் குறைவற நிறைந்திருக்க வேண்டும்.. கடல் போன்ற சேனையைக் கொண்ட குலோத்துங்க சக்கரவர்த்தி எவருக்கும் அஞ்சாமல் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.. தனித்த ஒருவனாக ஒரு சேனாபலத்தையே எதிர்த்து அறைகூவத்தான் அசாத்திய மனத்துணிவும், மாவீரமும் நிறைந்திருக்க வேண்டும்... அது மாறவர்மனிடம் குறைவில்லாமல் கொட்டிக் கிடக்கிறது.."

"விட்டால் இன்றைய தினம் முழுதும் மாறவர்மரின் புகழ் பாடிக் கொண்டிருப்பீர்கள் போல.."

"விடாமல் யாது செய்யப் போகிறாய் தோழி..? இன்றைய தினம் மட்டும்தான் அவர் புகழ்பாட வேண்டுமா..? நாளைய தினம் சுபதினம் அல்லவா..?"

"எவர் சொன்னது.. இனி வரும் அனைத்து தினங்களும் தமக்கு சுபதினங்கள்தான் இளவரசி.."

"அவ்வாறெனில் அனைத்து தினங்களும் அவர் புகழ் பாடுவேன்.."

அவ்வாறு தன் மனதில் புகழாரம் சூட்டிக் கொண்டிருந்த மாறவர்மனை நேரில் சந்தித்து விட்ட மகிழ்வில் நர்மதா இருந்தாள்.. அதுவும் எவ்வாறு..? அவனை அடைக்கலம் கொடுத்து காப்பாற்றி விட்ட தோழமையுடன் அவனருகில் அமர்ந்து உரையாடும் அளவிற்கு அவனை மனதளவில் நெருங்கி விட்ட மகிழ்வின் உச்சத்தில் இருந்தாள்..

"காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரை தரிசித்து விட்டு வா நர்மதா..!"

இதை உரைத்த தரங்கிணி பயணம் செய்ய இயலாதவளாக உடல் நலம் குன்றியிருந்தாள்..

"தனியாகச் செல்வதா அம்மா..?"

"தம்முடன் படை பரிவாரம் வரும் மகளே..!"

"தாமில்லாத படை பரிவாரம் எனக்குத் தனிமைதான் அம்மா.."

மகளின் விடையில் மனம் நெகிழ்ந்த தரங்கிணி அவள் விரல் பற்றி தம் கரத்துடன் இறுக்கிக் கொண்டாள்..

"எமக்கு தேக நலன் சீராக சற்று தினங்களாகலாம்.."

"அதுவரை பொறுத்திருக்கலாமே.."

"அல்ல என்ற ஆரூடம் கணிப்பவர் இயம்புகிறார்.. தமது ஜாதகத்தின்படி காஞ்சி ஏகாம்பரேஸ்வரரை தரிசித்து

விட்டு வருவது நலம் பயக்கும் என்று அவர் அறிவுறுத்து கிறார்.."

அவ்விதம்தான் நர்மதா தேவி.. தரங்கிணியின் துணையில்லாமல் தனித்து காஞ்சி நோக்கிப் பயணப் பட்டாள்.. வழியில் கடல் மல்லையின் எழிலைக் கண்டவள் அங்கு ஓர்தினம் தங்கி நீராடி மகிழ்ந்து கடற்கரை சிற்பங்களை கண்டு கழித்தபின் கிளம்பிச்செல்லலாம் என்று விருப்பம் கொண்டதினால் அவளது படை பரிவாரம் கடல் மல்லையில் கூடாரமிட்டுத் தங்கியது.. அவளும் அவள் மனதில் நெடுங்காலமாய் குடியிருந்த மாறவர்மனை சந்தித்து உரையாடி அளவளாவிக் கொண்டிருக்கிறாள்..

"தங்கள் சிந்தனையில் யாது உள்ளது இளவரசி..?"

"நறுமுகையென்ற அழைப்பை விடுத்து விட்டீர்களே.."

அவளின் மனத்தாங்களில் அவன் வதனத்தில் கனிவு தோன்றியது.. அவளை ஆழ்ந்து நோக்கியவனின் பார்வை அவள் பார்வையில் மறைந்திருந்த பிரியத்தை இனம் கண்டு கொண்டது..

'இது எவ்வாறு..?' அவன் புருவங்கள் உயர்ந்தன..

அவளை சந்தித்து சில நாழிகைகள் மட்டுமே கழிந்திருக்கின்றன.. அவ்வாறு இருக்க அந்தப் பொழுதுக்குள் அவள் மனதில் அவன் மீதான பிரியம் முகிழ்ந்து விட்டதா..?

'இது எவ்வகையில் சாத்தியமாகும்..?'

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



5

கொட்டுகிற மழைத்துளியில் யார் முகத்தைத் தேடுகிறாய்...?

"தஞ்சாவூருக்கு எதுக்குப் போகனும்கிறா..?"

தலைமுடியை பிய்த்துக் கொள்ளாத குறையாக கேட்பார் பிரதாப்.. அவர்களுக்கு தஞ்சையில் உறவினர்கள் இல்லை.. நண்பர்களும் இல்லை.. யாமினியுடன் படித்த சிநேகிதிகள் அங்கு இருக்கிறார்களா என்று கேட்டால் அதற்கும் அவள் இல்லையென்ற பதிலை சொல்லி வைத்தாள்..

"உனக்குத் தெரியுமாடி..?"

அனுராதாவை அவர் வினவியபோது.. அவள்..

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்..?" என்று அவரை முறைத்து வைத்தாள்..

"யது.. நீ சொல்லுடா.."

"பேசாம போயிருங்கப்பா.. நான் ஏற்கனவே படு கடுப்பில இருக்கேன்.. இதில நீங்க வேற வந்து இம்சையைக் கூட்டாதீங்க.."

"இல்லேடா.. யாமினி எதுக்காக தஞ்சாவூருக்குப் போகனும்கிறா..?"

"அவளையே கேளுங்க.. அவ யாதும் ஊரே யாவரும் கேளிர்ம்பா.."

யாமினி அதைத்தான் சொன்னாள்..

"என்னங்கப்பா இது..? சொந்த பந்தம் இருந்தாத்தான் முரு ஊருக்குப் போகனுமா..? சுற்றிப் பார்க்கப் போகக் கூடாதா..?"

"ஆமாமில்ல.."

பிரதாப்புக்கு பதில் கிடைத்து விட்ட சந்தோசத்தில் அப்பாடா..' என்றிருந்தது..

"சுற்றிப் பார்க்கத்தான் போகனும்கிறாளாம் அனு.." அவர் மகிழ்ந்து போன போது..

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.." என்றாள் அனுராதா..

"ஏண்டி..?"

"உலகத்தில இருக்கிறவங்கள்ளாம் நம்ம ஊரைச் சுத்திப் பார்க்க வர்றாங்க.. இதில இவ மட்டும் நாஞ்சாவூருக்கு சுத்திப் பாக்கப் போகனுமுன்னு கால்மானம் பண்ணுவக்கிறா.."

"கால்மானமா..?"

பிரதாப்புக்கு விளங்கவில்லை.. இதுபோன்ற விளக்கம் கிடைக்காத வார்த்தைகள் அடுக்கடுக்காக அனுராதாவின் கைவசத்தில் இருந்தன.. அதற்கான விளக்கவுரையைச் சொல்லும் அகராதிகள் இவ்வுலகில் எங்குமே கிடைக்காது என்பதினால் அவற்றுக்கு அர்த்தம்

தேடும் வேலையை அந்தரத்திலேயே விட்டு விட்டார் பிரதாப்..

"உங்களுக்கு விளக்கம் சொல்லிச் சொல்லியே என் வாழ்நாள் முடிஞ்சிரும் போல இருக்கு.."

"நான் விளக்கம் கேட்கலை அனு.."

"கேட்டுத்தான் பாருங்களேன்.."

"ஏண்டி.. நான் சண்டைக்கே வரலைங்கிறேன்.. நீ வம்படியா வழக்குக்கு இழுக்கறே.."

"உங்களை இழுத்துட்டாலும்.."

அனுராதா நொடித்துக் கொள்ளும் வேளைகளில் அதி அற்புதமான அழகோடு இருந்து வைப்பாள்.. அவளிடம் மோதவும் முடியாமல், இழையவும் முடியாமல் பிரதாப் தடுமாறிப் போவார்..

அதை அறிந்து வைத்துக் கொண்டுதான் அவரிடம் அவள் நொடித்து வைக்கிறாளோ என்ற ஆழ்ந்த சந்தேகம் நெடுநாள்களாய் அவரிடம் உண்டு..

"என்னை இழுக்காமலா ஒன்னுக்கு இரண்டா பிள்ளைகளைப் பெத்து வைச்சிருக்க..?"

ஓர்முறை அவர் கேட்டே விட்டார்.. அருகில் பிள்ளைகள் இல்லாத சூழலில் அவர் அவளிடம் கேட்டு வைத்தபோது அவளது வாயாடல் ஓடியே போய் விட்டது.. முகம் குங்குமமாக சிவக்க அவரை காதலுடன் பார்த்தபடி..

"பேசாம போயிருங்க.. இல்லேன்னா ஏதாச்சும் சொல்லிறப் போறேன்.." என்று அவர் மார்பில் கை வைத்து தள்ளி விட்டாள்..

அவர் மல்லாந்து விழுகாமல் கால்களை அகற்றி நின்று பேலன்ஸ் செய்தபடி அவர் மார்பிலிருந்த அவள் கையைப் பற்றி சுண்டி இழுத்தார்..

சுழன்று அவர்மீது சரிந்த அனுராதாவை கைகளில் வாங்கி ஒரு ஹீரோவைப் போல படுக்கையறையை அவர் அடைந்தபோது உலகத்திலேயே என் கணவன்தான் தீரன் என்ற எண்ணம் அனுராதாவுக்கு வந்தது..

வாழ்நாளின் ஏதேனும் ஓர் தினத்தில் இதுபோன்ற ஓர் தினனை அனைத்து கணவன்மார்களும் அவர்களின் மனைவிகளுக்கு அளிக்கத்தான் செய்கிறார்கள்..

பிரதாப்பும் அது போன்ற நொடிகளை அனுராதாவுக்கு அள்ளி வழங்குகிறவர்தான் என்றாலும்.. யாமினியின் ஞாணாதிசியத்தால் அவருக்கும் அனுராதாவுக்குமிடையே அடிக்கடி வாக்குவாதம் வர ஆரம்பித்தது..

"மகாபலிபுரத்திலேயே பிறந்து வளர்ந்தவளுக்கு இந்தக் கடலும் கடலோர சிற்பங்களும் பார்த்துப் பார்த்து சலித்துப் போயிருக்காதா அனு..? ஒரு மாறுதலுக்கு தஞ்சாவூருக்கு போயிட்டு வரட்டுமே.."

"அதுக்கு தஞ்சாவூருக்குத்தான் போகணுமா..?"

இந்தக் கேள்வியில் பிரதாப் திகைத்தார்..



6

உன்னை மட்டும் எண்ணி வந்த உள்ளமிது..! அறிவாயா..?

அவள் எவரென்று அவன் அறிய மாட்டான்.. ஹொய்சாள நாட்டின் அரச குலத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும் என்று யூகித்தாலும்.. அவளது நாமத்தை அவன் அறிந்திருக்கவில்லை..

ஆனால்.. அவனது நாமம் மாறவர்மன் என்று அவன் உரைத்த மறுகணமே தாங்கள்தானா அவர் என்று விழிகள் விரிய அவள் வினவினாள்..

அவ்வாறெனில் அவனை அவள் அறிவாளா..?

"நறுமுகை..!"

வார்த்தைக்கு வலி ஏற்படக் கூடுமோ என்று அஞ்சியவனைப் போல் அவள் நாமத்தை மிக மென்மையாக அவன் உரைத்தான்.. அதில் அவளது வதனம் மலர்ந்து போனது.

"உரையுங்கள்.." ஆவலுடன் அவன் வதனம் நோக்கினாள்..

"எம்மை தாங்கள் அறிவீர்களா..? தற்போது அறிந்ததை உரைக்கவில்லை.. இதற்கு முன்னர் எம்மைப் பற்றிய செய்திகளை தாம் செவி மடுத்துள்ளீர்களா..? ஏனெனில், யாம் எமது நாமத்தை உரைத்த மறுகணமே தாங்கள் தான் மாறவர்மரா என்று தாம் வினவினீர்கள்.."

"ஆம்.. அவ்வாறுதான் வினவினேன்.."

"எதன் பொருட்டு அவ்விதமாக வினவினீர்கள் இளவரசி..?"

"மறுபடியும் இளவரசியா..?"

"இருந்து விட்டுச் செல்லட்டும்.. இளவரசி என்று அழைப்பதில் எமக்கு இன்பம் கிட்டுகிறது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.."

"ஆனால் 'நறுமுகை' என்ற அழைப்பில்தானே எமக்கு இன்பம் கிட்டுகிறது..?"

அவளது விடையில் அவளையே ஊடுறுவதைப் போல பார்த்து வைத்த மாறவர்மன்..

"ஏன்..?" என்று வினவினான்..

"அறியவில்லை.." அவள் கரம் விரித்தாள்..

"எமை அறிவீர்களா..?"

"அறிவேன்.."

"எவ்விதம்..?"

"தங்களின் புகழ் எட்டுத்திக்கிலும் பரவியுள்ளதை நாங்கள் அறியவில்லையா..? அனைத்து திசைகளும் அறிந்த செய்திகளை.. குலோத்துங்க சோழரை மாமனாகக் கொண்டிருக்கும் எம் தந்தை அறிய மாட்டாரா..? அயலரருகே வசிக்காவிட்டாலும் அவர் நாட்டில் வசிக்கும் நாங்கள் மாளிகையையும் அச்செய்தி எட்டாதா..?"

அவள் புருவங்களை உயர்த்தி விழிகளைச் சுழற்றியதில்..

"எட்டும்.. எட்டும்.." என்று கரங்களை உயர்த்தி நகைத்தான் மாறவர்மன்..

"போதும் மன்னவரே..!" அவளது வதனம் சிவந்து விட்டது..

"ஆகட்டும்.. உரையாடலை நிறுத்திவிட்டு உணவினை உண்ணலாம்.. தாங்கள் கடல் நீரில் நீராடிய பசிக் களைப்புடன் இருப்பீர்கள்.. அன்னத்தினை உண்ணுங்கள்.."

"தாங்கள் மட்டும் இந்த ஹம்சதூளிகா மஞ்சத்திலே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தீர்களா..? நெடுந்தொலைவி லிருந்து வருகை தந்துள்ளீர்கள்.. எமைவிட மிகுதியான அளவில் பசிக் களைப்பு தங்களுக்கு இருக்கும்.. தாங்களும் உண்ண ஆரம்பிக்கலாமே.."

நர்மதாவின் வற்புறுத்தலில் அவன் உண்ண ஆரம்பிக்காமல் அவள் உண்ண மாட்டாள் என்று புரிந்து கொண்ட மாறவர்மன் இலையிலிருந்த சித்ரான்னங்களை உண்ண ஆரம்பித்தான்.. பசியும் அவற்றை அவன் சடுதியில் காலி செய்த வேகத்தைப் பார்த்தவளின் மனம் வருத்தம் கொண்டது..

'எத்துணை புசியோ..'

அவளது இலையில் இருக்கும் சித்ரான்னங்களை அவன் பகிர்ந்து கொள்ள மாட்டான் என்பதில்..

'யாது செய்வது..?' என்ற சிந்தனையுடன் அவள் சுற்றிலும் நோக்கினாள்.

ஹம்சதூளிகா மஞ்சத்தின் அருகில் இருந்த பழவகைகளில் அவள் பார்வை பதிந்தது.. அவள்

யதனத்தில் மலர்ச்சி வந்தது.. அவனது பசி போக்கும் ார்க்கத்தை கண்டு கொண்டவளாக அந்த பழவகைகளை .அவனருகில் நகர்த்தி வைத்தாள்..

"யாது இது..?" அவன் திகைத்தான்..

"பழவகைகள்.. என் இலையில் உள்ள சித்ரான்னத் ைதத்தான் யாம் தமக்கு அளிக்கக் கூடாது.. பழவகைகளை .ளிக்கலாமே.. தங்களது வதனமே தாங்கள் சரிவர பசியாற ில்லை என்பதனைக் கூறுகின்றது.. உண்ணுங்கள்.."

அவளது பரிவு அவன் இதயத்தை ஸ்பரிசித்தது.. றுக்காமல் அந்த பழவகைகளை உண்ண ஆரம்பித்தான்.. பழவகைகள் இருந்த சொர்ணப் பாத்திரமும் காலியானது.. சொர்ணக் குவளையில் இருந்த பாலை அவன் புறமாக நகர்த்தி வைத்தாள் நர்மதா தேவி..!

"தங்களுக்கு.." அவன் மாற்றுக் குவளையைத் தேடினான்..

"ஒரு குவளைதான் உள்ளது.." அவள் மறுகுவளையை மறைத்து வைத்தாள்..

அவ்வாறு இயம்பினால் அவன் சொர்ணக் குவளையில் உள்ள அனைத்துப் பாலையும் குடித்துத் தீர்ப்பான் என்று அவள் கணித்தால்.. அவன் குவளையை உயர்த்தி வதனத்தையும் உயர்த்தி.. பாதிக் குவளைப் பாலை மட்டும் வாய்க்குள் ஊற்றிக் கொண்டு மீதிக் குவளைப் பாலை அவள் எதிரில் வைத்தான்..

"இது எதற்காம்..?" அவள் குழம்பினாள்..

"தமக்காக இளவரசி..!" என்று விடையளித்தான் .அவன்..

"யாது உரைத்தீர்..?"

தன் செவிகளை நம்ப மாட்டாத ஆனந்தத் திகைப்புடன் அவனை விழி மலர்த்தி நோக்கினாள் நர்மதா தேவி..!

அவனோ வெகு இயல்பான வதனத் தோற்றத்துடன் இலகுவாக உரைத்தான்..

"இது தமக்கான பங்கு என்று உரைத்தேன் நறுமுகை..!"

அவன் உண்ட பாலில் சரிபாதியை அவளுக்கென்று அளிக்கின்றானா..? இதன் தாத்பர்யத்தை அவன் உணர்வானா..?

புது மணமக்கள் மட்டுமே பாலை பகிர்ந்து பருகுவார்கள்.. அதை அறியாமல் அவன் உரைத்த அம்மொழியில் அவள் இதயம் குளிர்ந்தது..

அத்தினத்தை மணநாள் போல அவள் உணர்ந்தாள். சடுதியில் தமது இலையில் இருந்த சித்ரான்னத்தை உண்டு முடித்தவள்.. அவன் அளித்த பாலை ஆனந்தத்துடன் சொட்டுச் சொட்டாக ரசித்துப் பருகி முடித்தாள்..

"தாங்கள் ஓய்வு கொள்ளுங்கள்.."

சோர்ந்திருந்த அவன் இமைகளை கண்ணுற்றபடி அவள் ஹம்சதூளிகா மஞ்சத்தைக் காட்டினாள்..

"தாம்..?"

"கூடாரத்தை விட்டு வெளியே சென்று தோழிகளுடன் விளையாட்டு மொழிகளைப் பேசிப் பொழுதைக் கழிப்போம்.. யாம் இல்லாத தருணங்களில்

ாழாது கூடாரத்துக்குள் நுழையும் துணிவு தமை விடுத்து ேவறு எவர்க்கும் இருந்ததில்லை..”

அவளின் குறும்பான மொழியில் அவன் இதழ் விரித்து ிரகைத்தான்.. அடர்ந்த கருநிற மீசையின் அடியில் தெரிந்த ெவண்நிறப் பற்களின் வரிசையில் அவள் மயங்கிப் ேபானாள்..

‘இவன்தான் எத்துணை எழில் கொண்டவன்..!’

மீண்டும் அவள் மனம் கூறிக் கொண்டது.. ாறவர்மனின் பார்வை கூடாரத்தின் மூலையில் நின்றிருந்த ,ரவியின் மீது பட்டது.. அதை வெகு நாழிகை அங்கே ாறைத்து வைத்திருக்க இயலாது என்பதனை அவன் ிந்தித்தான்..

அது பாவம்.. ஐந்தறிவு மட்டும் உள்ள விலங்கு..! ாயில்லாத ஜீவன்..! கனைக்க மட்டுமே தெரியும்.. .அக்கனைப்பையும் மாறவர்மன் சமிக்ஞை செய்ததினால் .அடக்கிக் கொண்டு.. அடங்கி.. ஒடுங்கி.. நின்றிருந்தது.. .அதுவரை அது தரையில் விரித்திருந்த கம்பளத்தை நாசப்படுத்தும் எச்செயலையும் புரியவில்லை என்றாலும் .அதிக நாழிகைகளுக்கு அது அவ்வாறே தன்னடக்கத்துடன் இருக்கும் என்று எதிர்பார்க்க இயலாது.. தவிரவும்.. நெடுந்தொலைவு பயணம் செய்த பசியும் களைப்பும் மாறவர்மனைப் போலவே அந்தப் புரவிக்கும் இருக்குமல்லவா..?

“புரவியைக் குறித்த கவலையை எம்மிடம் விட்டு விடுங்கள்..”

அவன் பார்வையிலிருந்தே அவன் கவலையை உணர்ந்து கொண்டவளின் மீது அவனுக்குள் பிரியம் பெருகியது..

"ஆயினும் எவ்விதம் இதைத் தாங்கள் பராமரிக்க இயலும் இளவரசி..? இதற்கு பசியாற புல்லும், கொள்ளும்.. தாகம் தீர்க்க நீரும் தேவை.. அத்துடன் இது இருக்க வேண்டிய இடம் மரத்தடியும், கடற்கரை மணல்வெளியும் தான்.. இயற்கை உபாதைகள் தீர்க்க இது யத்தனித்தால் தங்களின் கூடாரமும்.. விலையுயர்ந்த காஷ்மீரத்து கம்பளமும் நாசமாகி விடும்.."

அவன் உரைத்த விதத்தில் அவளுக்கு நகைப்பு வந்தது..

"இதுவரை இது அச்செயல்களைப் புரியவில்லையே.."

"என் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டு நிற்கிறது..?"

"அவ்வாறா..?" அவள் வியந்து போனாள்..

மாறவர்மனின் கட்டளைக்கு கீழ்படிந்து அவனது புரவி இயற்கை உபாதைகளைக் கூட வெளி விடாமல் கட்டுப்படுத்தி நிற்கின்றதா..?

"வியப்புத்தான்.. தாங்கள் புரவியைக் கூட தங்களின் சுண்டுவிரல் அசைவில் கட்டளையிட்டு கட்டுப்படுத்தி வைத்துள்ளீர்களே.."

"இது கட்டளையல்ல.. அன்பு..!"

மாறவர்மன் புரவியின் அருகே சென்று அதன் பிடறியை பிரியத்துடன் வருடிக் கொடுத்தான்.. அவனது

வருடலுக்கு வாகாக அது கழுத்தை நீட்டி நின்றதில்.. .அந்தப் புரவியாக தாமில்லையே என்ற தாபம் நர்மதாவின் .அகத்தில் எழுந்தது..

"ஆறறிவு உள்ள மனிதரைவிட ஐந்தறிவு கொண்ட விலங்குகள் விசுவாசம் கொண்டவை நறுமுகை.. இப்புரவி எந்தன் தோழனாகும்.. மேடு, பள்ளங்களில் நான் விரையும் போது.. எனைத் தாங்கி இதுதான் விரைந்திருக்கிறது.. வனத்திலும், மலைக்குகைகளிலும் நான் மறைந்து வாழ்ந்த தினங்களில் இதுதான் என்னுடன் துணையாக நின்றிருக்கிறது.. இது புரவியல்ல.. என் தோழன்..!"

'அவ்வாறா புரவியே..?' நர்மதா தேவியின் விழிகள் புரவியிடம் கேட்டன.. அதை அறிந்ததைப் போல அவளை உற்றுப் பார்த்து வைத்தது அந்தப் புரவி..!

'நீ எனக்குப் பிரியமானவனுக்கு பிரியமான தோழனா..? அவ்வாறெனில் நீ எமக்கு தோழனாவாய்..'

நர்மதா புரவியின் கடிவாளத்தைப் பிடித்தபடி கூடாரத்தை விட்டு வெளியே எட்டிப் பார்த்தாள்.. நிதானித்தாள்.. புரவியின் கடிவாளத்தை விட்டு விட்டு கூடாரத்தை விட்டு வெளியே சென்றாள்.. கரம் கொட்டி காவலர்களை அழைத்து ஏதோ ஓர் பணியை உரைத்து அகல வைத்தாள்.. அவர்கள் அகன்றதும் புரவியுடன் வெளியே சென்றாள்.. தோழியை அழைத்து அவள் செவிகளில் ரகசியமாக எதையோ உரைத்தாள்.. வியப்புடன் கூடாரத்தை திரும்பிப் பார்த்த அந்தக் தோழி.. புரவியின் கடிவாளத்தை பிடித்தபடி அகன்று விட்டாள்..

சென்ற காவலர்கள் திரும்பி வந்ததும் நர்மதா கூடாரத்துக்குள் வந்தாள்..

"இனித் தாங்கள் ஓய்வெடுக்கலாம்.."

"புரவி..?"

"என் தோழியின் வசம் உள்ளது.. அவள் சற்றுத் தொலைவில் உள்ள மரங்களின் மறைவில் அதைக் கட்டிவைத்து புல்லும் கொள்ளும் உண்ணக் கொடுத்து.. நீரை பருக அளிப்பாள்.. சுதந்திரமாக மரங்களின் மறைவில் அது எவ்விதத் தளைகளுமின்றி ஓய்வெடுக்கலாம்.."

"வியப்பாக உள்ளது.."

"ஏன்..?"

"எனையன்றி வேறு எவருடனும் எம் புரவி சென்றதில்லை.. எமை விட்டு நீங்காமல் உடனிருக்கும் ஜீவன் அது.. தங்களைத் தொடர்ந்து அது வந்தது எவ்வாறு என்று வியக்கிறேன்.. இதில் வேறு தங்களின் கட்டளைக்கு கீழ் படிந்து.. தங்களின் தோழியின் பொறுப்பில் சென்றுள்ளதே.."

"அவ்வாறா.. உரைக்கின்றீர்கள்..?"

"ஆம் இளவரசி..! என் கட்டளையன்றி வேறொருவரின் கட்டளைக்கு அது அடி பணியாது.. இன்று தான் முதன் முறையாக தங்களின் கட்டளைக்கு அது அடிபணிந்திருக்கிறது.."

நர்மதாதேவி ஆனந்தம் கொண்டாள்.. அவளின் மனம் கவர்ந்த மன்னனின் புரவி அவளின் ஆக்ஞைக்கு கீழ்படிகிறது..

"புரவிகளுக்கு நுண்ணுணர்வு உண்டு.."

அவளது வதனத்தையே கூர்ந்து நோக்கியபடி மாறவர்மன் உரைத்தான்.. நர்மதா தேவி நீர்வீழ்ச்சியின் கீழ் நிற்பதைப் போல சிலிர்த்துப் போனாள்..

"அவற்றுக்கு நுட்பமான அறிவு உண்டு.. தனது எஜமானனின் நன்மை வேண்டுபவர் நேசிக்கத் தக்கவர் என்பதனை எனது புரவி உணர்ந்திருக்கக் கூடும்.."

'இது போதும் மன்னவனே..!'

நர்மதா தேவியின் விழிகள் பனித்தன.. அதை அவனறியாத வண்ணம் மறைத்து வதனம் திருப்பியவள்..

"துயில் கொண்டு எழுங்கள் மன்னவரே..!" என்று கூறினாள்..

"யாம் அதிக நாழிகை இங்கு இருத்தல் இயலாது.."

"அதைப் பற்றி சற்றுப்பொழுது கழிந்தவுடன் உரையாடிக் கொள்ளலாமே.. தற்போது தாங்கள் வெளியில் செல்லுதல் உசிதமாகாது.. இருள் வரும் வரை பொறுத்திருங்கள்.. அதன் பின்னர் யாது செய்யலாம் என்பதனை ஆலோசிக்கலாம்.."

அவனுக்கு கட்டளையிட்டவளை வியப்புடன் அவன் நோக்கினான்.. அவனுக்கான செயல்முறைகளை அவள் வகுத்த விதத்தில் இளநகை கொண்டவன் மஞ்சத்தில் சரிந்தான்.. அதில் உணர்ந்த சுகந்த நறுமணத்தில்..

"இம்மஞ்சம் தங்களுக்கானது.." என்றான்..

"இருக்கட்டும்.. அதில் தங்களுக்கு யாதேனும் ஆட்சேபனை உண்டோ..?" அவள் ஓயிலாக சிரத்தை

சரித்து அவனை மையலுடன் நோக்கிய வண்ணம் வினவினாள்..

"இதுபோன்ற சுகந்த நறுமணத்தை நுகர்ந்தபடி துயில் கொள்ள எமக்கென்ன ஆட்சேபனை மேலிடப் போகிறது..? தமது மேனி படிந்த இப்பஞ்சணையில் எனது தேகமும் படிவதில் தங்களுக்குத்தான் ஆட்சேபனை உதிக்க வேண்டும்.."

அவன் நாசியில் நுழைந்து நறுமணத்தை அனுபவித்து முகர்ந்து உள்வாங்கி.. ரசித்து..

"ம்ஹா..!" என்றான்..

அத்துடன் நிறுத்தாமல் நர்மதாவின் வதனம் பார்த்து..

"இந்நறுமணம் தங்கள் மேனியளித்த நறுமணமோ..?" என்று வினவவும் செய்தான்..

மன்மதனையொத்த தேக எழிலுடன் அவள் வதனத்தை ஒரு மார்க்கமாக நோக்கி விழிகள் இடுங்க அவன் வினவி வைத்ததில் உணர்வின் பேரலைகள் ஓங்கி எழுந்து நர்மதாவின் மீது வீழ்ந்தன.. அவள் கரையுடைத்த மோக வெள்ளத்தில் மூழ்கிப் போனவளாக சுவாசத் திணறலை கொண்டாள்..

"நறுமுகை..?"

அவளின் வதனத்தில் இருந்து அவளது உணர்வுகளை அவதானித்தவனாக அவன் ஆழ்ந்த குரலில் அழைத்தான்..

ஓர் நாழிகை தாமதித்தாலும்.. அவனது பார்வையின் அழைப்பில் அவள் அவன் தேகத்துடன் ஒன்றி விடுவாள் என்பதில் நர்மதா குரல் நடுங்க வதனம் திருப்பி..

"துயில் கொள்ளுங்கள் மன்னவரே..! மாலையில் சந்திப்போம்.." என்று உரைத்து விட்டு விரைவுடன் பல்லக்கில் ஏறினாள்..

எதன் பொருட்டு அவள் விலகி ஓடுகிறாள் என்பது அவனுக்குப் புரியாமல் இல்லை.. அவளது அச்சத்தில் ஓர் பொருள் உள்ளது என்று எண்ணிக் கொண்டவனின் தேகம் நடுங்கியது.. மஞ்சத்தில் முகிழ்ந்த நறுமணம் அவளது தேகத்தின் நறுமணமாக இருத்தல் வேண்டும் என்ற நிச்சயத்துடன் அவன் மஞ்சத்தில் பரவிப் படர்ந்தான்.. என்னவோ அவளது தேகத்தில் பரவிப் படரும் நினைவு அவனுக்கு.. மஞ்சத்தின் மென்மைகூட கடினம் போல அவனுக்குத் தோன்றி வைத்தது.. நீராடி முடித்த கோலத்துடன் அவள் நின்ற தோற்றம் மனக் கண்ணில் வருகை புரிய.. அவளது வெண்ணிற வெண்ணையின் குழைவோடு கூடிய தோள்களின் செழுமையில் அவன் மனம் லயித்தது..

'அவளது தேகத்தின் மென்மையை விட இந்த ஹம்சதூளிகா மஞ்சம் அதிக மென்மையை அளித்து விட இயலுமா..?'

தனக்குள் அவன் வினவிக் கொண்டான்.. அவனது வினாவிற்கு..

'அல்ல..' என்ற விடையை ஆணித்தரமாக அவன் மனம் உரைத்தது..

அவளைத் தழுவ முடியாத தாபத்துடன் அவன் இமைகளை மூடினான்.. காத்திருந்த நித்திராதேவி ஓடி

வந்து அவனை அரவணைத்ததில் இமைமூடி துயில ஆரம்பித்து விட்டான்..

'நிச்சிந்தையான துயில்..!'

அவன் துயில் கொண்ட சில மணித்துளிகளில் கூடாரத்துக்குள் எட்டிப் பார்த்த நர்மதா தேவி பரிவுடன் எண்ணிக் கொண்டாள்.. அவள்மீது நம்பிக்கை வைத்து.. அவனை அவள் பொறுப்பில் விட்டு இமை மூடி அவன் துயில் கொண்டிருந்ததில் அவள் மனம் நெகிழ்ந்து கொண்டது..

'என்மீது இத்துனை நம்பிக்கையா மன்னவனே..?'

அவன் துயில் கலைந்து எழுந்த போது.. சொர்ணக் குவளையில் பழச்சாறுடன் அவனை அணுகியவள் இவ்வினாவை எழுப்பியபோது.. ஆழ்ந்த பார்வையுடன்..

"ஆம்.." என்றான் மாறவர்மன்..

"ஒருவேளை யாம் ஹொய்சாள மன்னரின் புதல்விக் குரிய அடையாளமாக சோழர்களிடம் தங்களைக் காட்டிக் கொடுக்க உத்தேசித்திருந்தால்..?" அவள் வினாவை முடிக்காமல் இழுத்தபோது..

"உவகையுடன் இறந்து விடுவேன்.." என்றான் அவன்.

"மன்னவரே..!" பதைத்துப் போய் அவனது அதரங்களை தன் கரம் கொண்டு மூடினாள் நர்மதா தேவி..!

மூடிய அவளது கரத்தில் முத்தமிட்டு கரம் விலக்கி தன்னிருகரங்களுக்குள் அவள் கரத்தை வலிமையுடன்

சிறைபிடித்து இறுக்கிக் கொண்டவன் ஊடுறுவும் பார்வையோடு தன் உள்ளத்தை உரைத்தான்..

"நம்பியவர் துரோகம் விளைவிக்க, யத்தனித்து விட்டதை அறிந்து கொள்ளும் போதே அங்கு மரணம் தானாகவே வந்து நம்மை தழுவி விடும் தேவி..!"

•

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



6

கடந்து வந்த பிறவிகளின்
காலடிச் சுவடுகளைத் தேடுகிறேன்..

உண்மைதானே..?

ஊர் சுற்றிப் பார்க்க விரும்புகிறவள் அவ்வூராக தஞ்சாவூரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமா..? தமிழகத்தில் உள்ள வேறு எந்த ஊர்களும் அவள் நினைவுக்கு வரவில்லையா..? அது ஏன்..?

மறுக்க முடியாமல் யாமினியை அழைத்துக் கொண்டு தஞ்சாவூருக்கு சென்று வந்த அனுராதா அன்று முழுவதும் கணவனைத் திட்டித் தீர்த்தாள்..

"நான்தான் தலைப்பாடா அடிச்சுக்கிட்டேனில்ல.. இவ போடற தாளத்துக்கு ஆடாதேங்கன்னு.. என் பேச்சை யார் கேட்கிறா..?"

"ஏண்டி..? என்ன ஆச்சு..?"

"எரிச்சலைக் கிளப்பாதீங்க.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.."

"வந்துட்டுப் போகட்டும்.. நீ என்ன விசயம்ங்கிறதைச் சொல்லு.."

"தஞ்சாவூருக்குப் போனா இவ பிரகதீஸ்வரர் கோவிலையே வெறிச்சு வெறிச்சுப் பார்க்கிறா.."

"ரசிச்சிருப்பாடி.."

"அதான இல்ல.. என்னவோ பகையாளியைப் பார்க்கறதைப் போல பல்லைக் கடிச்சு வைக்கிறா.."

"என்னடி சொல்ற..?"

பிரதாப்புக்கு பயம் பீடித்துக் கொண்டது.. யாமினி காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரருக்கு பரம பக்தை..! அவளா பிரகதீஸ்வரர் கோவிலை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்..?

"சாமியையெல்லாம் விழுந்து விழுந்துதான் கும்பிட்டா.." அலுத்துக் கொண்டாள் அனுராதா..

"என்னடி இது..! கோவிலை வெறிக்க வெறிக்கப் பார்த்தவ.. சாமிய மட்டும் விழுந்து விழுந்து கும்பிட்டாளா..?"

"ஆமாங்க.. ஏண்டின்னு கேட்டா.. அந்தக் கோவிலை ராஜராஜ சோழன் கட்டினாராம்.."

"ராஜராஜ சோழன் கட்டினா இவளுக்கென்ன..? இவளுக்கும் அவருக்கும் என்ன ஜென்மப் பகையா..?"

இந்தக் கேள்வியில் யாமினி அதிர்ந்து அவரைப் பார்த்தபோது அடுத்துப் பேச முடியாமல் பிரதாப்புக்கு

வாயடைத்துப் போனது.. யாமினியின் அதிர்ந்த பார்வையில் அவர் மனதை பயம் பீடித்து ஆட்டியது..

"என்னம்மா..?"

"ஒன்னுமில்லைப்பா.."

ஒன்றுமில்லையா..? ஒன்றுமே இல்லையா..? ஒன்றும் இல்லாததிற்கா அவள் எதையோ தொலைத்தவளைப் போல இருள் வெளியை வெறித்துக் கொண்டிருக்கிறாள்..? கடற்கரை சிற்பக் கோவில்களில் எதைத் தேடி சுற்றிக் கொண்டிருக்கிறாள்..?

'யாமினி..!' அவர் மனம் துயரம் கொண்டது..

பிரதாப்புடன் அவரது கடைக்கு வந்த யாமினி.. கலைப் பொருள்களை துடைத்து வைத்தாள்.. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அழகான ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்தாள்.. சிற்பங்களைப் பற்றி விவரித்தபோது அவள் முகத்தில் தோன்றிய பெருமிதத்தில் அயர்ந்து போனார் பிரதாப்.. கலையைப் பற்றிக் கூறுவதைப் போல இல்லாமல் குடும்பக் கலையைப் பற்றி அவள் கூறுவதைப் போன்ற சொந்தத்துடன் அவள் பேசினாள்.. சிலைகளைப் பற்றியும்.. சிலை வடிப்பதைப் பற்றியும் கையை ஆட்டி.. விழிகளை விரித்து படு உற்சாகமாக அவள் பேசிய போது பிரதாப்புக்கு மயக்கமே வந்து விட்டது.. அவள் சொல்லியதில் பல விவரங்கள் அவருக்கே தெரியாது..

'இதையெல்லாம் இவ எப்போத் தெரிஞ்சுக்கிட்டா..?'

"மியூசியன் கையில இருக்கிற இன்ஸ்டுரூமென்டும். சிலை வடிக்கிற சிற்பி கையில இருக்கிற உளியும்

ஒன்னுதாங்க.. அவங்க வாசிச்சா ராகம் வரும்.. இவங்க வடிக்கிற சிலையில உயிர்ப்பு வரும்.. ஒருவகையில இரண்டுமே ஸ்வரங்கள்தாங்க..” யாமினியின் விழிகளில் தெரிந்த ஜ்வலிப்பில் கவரப்பட்ட சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கதை கேட்டார்கள்..

“இந்தச் சிலை பல்லவர்கால சிலைகளோட மாடலில் வடிக்கப்பட்டதுங்க.. இது சோழர் காலத்து சிலையின் மாடல்.. இது பாண்டியர் காலம்..”

யாமினி சொல்லிய வரலாற்றுப் பிண்ணணிகளைப் பற்றி எதுவும் அறியாத பிரதாப்..

‘யாமறிவேன் பராபரமே..!’ என்று திருதிருத்துக் கொண்டிருக்க.. அவரது கடையில் இருந்த பெரும் பான்மையான சிலைகளை அன்று விற்றுத் தீர்த்து விட்டாள் யாமினி..

“எப்புடி..?”

வீட்டுக்குள் வந்தவர் பீற்றிக் கொண்டிருக்க யாமினியோ எதுவுமே நிகழாததைப் போல டிவியில் ஆழ்ந்து விட்டாள்..

“பாருடா...”

“யாரைடி சொல்ற..?”

“உங்களையில்லைங்க..”

பிரதாப்புக்கு தைரியம் கொடுத்து விட்டு மகளைப் பார்த்தாள் அனுராதா..



7

உன் புரவியின் குளம்போசை..!
என் நெஞ்சின் குழலோசை..!

நர்மதா தேவியின் விழியிரண்டிலும் கண்ணீர் பொங்கி வழிந்தது.. மாறவர்மன் உதிர்த்த வார்த்தைகளின் பாரம் தாளாமல் அவளது பூவிதயம் துடித்துப் போனது..

"எப்பேற்பட்ட வார்தைகளை உரைக்கின்றீர்கள் அரசே..!" அவள் பதற்றம் கொண்டாள்..

"அல்ல தேவி..!" மாறவர்மன் ஒரு அமைதியுடன் சிரத்தை அசைத்தான்..

அவன் வதனத்தில் நிலவிய சாந்தியும்.. சாத்வீகமும்.. சொல்லில் அடங்காதவையாக இருந்தன..

"ஒருவர்மீது நாம் ஆழ்ந்த நம்பிக்கை கொள்கிறோம்.. அவர்மீது இந்த அவனியில் எவர்மீதும் கொள்ளாத அளவில் மிகுதியான பிரியம் கொள்கிறோம்.. அவர் நமது சிரத்தை கொய்ய முனைந்து விட்ட பின்பு இந்தப் புவியில் இருந்தென்ன சாதிக்கப் போகிறோம் தேவி..? எதன் பொருட்டு உயிர் தரிக்க வேண்டும்..?"

"மன்னவரே..!"

"தாம் யார்..? யாம் யார்..? எதன் பொருட்டு நாமிருவரும் இக்கடல் மல்லையில் சந்திக்க வேண்டும்..? தமது தந்தையின் உறவினரின் பகைவன் யாம் என்று

அறிந்த பின்பும்.. எதற்காக தாம் என்னைக் காத்தருள வேண்டும்..? பசியாற உணவளித்து.. என் புரவிக்கும் இடமளித்து.. தமது மஞ்சத்தையும் யாம் துயில அளித்த தம்மீது என் அகத்தில் நம்பிக்கையும், நேசமும் வித்தாக விழுந்து விட்ட பின்பு.. தாம் துரோக சிந்தை கொண்டால்.. இந்த அவனியில் அன்பு என்ற ஒன்றே இல்லாமல் அற்று விடுமே தேவி..! அதன் பின்பும் யாம் உயிர் தரித்து வாழ்தல் வேண்டுமா..?"

"போதும் அரசே..!"

கரம் குவித்து மண்டியிட்டாள் நர்மதா தேவி.. மஞ்சத்தைவிட்டு எழுந்த மாறவர்மன் அவளது தோள்களை ஸ்பரிசித்துத் தூக்கினான்.. அந்த இன்பத்தில் அவளது தளிருடல் நடுங்க.. அவள் தொய்ந்து அவன்மீது சரிந்தாள்.. மாறவர்மனின் கரங்கள் அவளைத் தாங்கிக் கொண்டன..

ஹம்ச தூளிகா மஞ்சத்தில் அவளை அமர்த்தியவன்..

"இம்மஞ்சம் தமக்கானது நறுமுகை..! தங்களுடைய உடைமை.. எனக்கு இரவலாகத்தான் இடமளித்தீர்கள்.. யாம் மஞ்சத்தில் அமர்ந்திருக்க.. தாம் தரையில் மண்டியிடுவதா..?" என்று வினவினான்..

"எமதென்று இப்புவியில் எதுவுமே இல்லை அரசே..! எமதென்று இருப்பதெல்லாம் தங்களுடையதாகும்.." உணர்ச்சிப் பெருக்குடன் உரைத்தாள் நர்மதா..

நர்மதா என்ற நாமத்தை விடுத்து 'நறுமுகை..' என்று அவளுக்காக பிரத்யேக நாமத்தை அளித்தவன்..

அந்நாமத்தையும் மறந்து 'தேவி' என்று அழைத்ததில் அவள் ஜென்ம சாபல்யம் பெற்று விட்டதைப் போல உணர்ந்தாள்..

அவளது உணர்வலைகளை அவளது வதனத்தில் அவதானித்த மாறவர்மனின் உள்ளத்தில் வினா எழுந்தது.. நர்மதா எழுந்து கொள்ள முனைந்தாள்.. அவளது தோளில் கரம் வைத்து அமரச் செய்தான் மாறவர்மன்.. அவள் அமர மறுத்தாள்..

"ஏன் தேவி..?"

"தாங்கள் நின்றிருக்க.. நான் வீற்றிருப்பதா..?"

"அவ்வாறெனில் யாமும் தம் அருகிலேயே அமர்கிறோம்.. போதுமா..? இனி அமரலாம் அல்லவா..?"

உவகையுடன் அவன் அருகில் அமர்ந்தவளின் வதனத்தையே தீர்க்கமாக நோக்கிய மாறவர்மன்..

"எமது வினாக்களுக்கு அகம் மறைக்காமல் விடையளிப்பீர்களா..?" என்று வினவினான்..

"தம்மிடம் என் அகம் மறைப்பதா..? வார்த்தைகளால் எமை வதைக்க வேண்டாம் அரசே..! தமது சந்தேகங்கள் எவையாயினும் வினவுங்கள்.. யாம் விடையளிக்கிறோம்.."

"என்மீது எதற்காக இத்துணை பரிவு தேவி..?"

மாறவர்மனின் வினாவிற்கு விடையளிக்க இயலாமல் திணறிப் போனாள் நர்மதா தேவி..

"அய்யனே..!"

"உரையுங்கள்.."

"தமது புகழை எமது மாளிகையில் எனது அன்னை உரைக்க கேள்வியுற்றேன்.."

"ம்ம்ம்.."

"எம் தந்தையின் மாமனான குலோத்துங்க சோழ சக்கரவர்த்திக்கே தாம் அறைகூவல் விடுத்திருப்பதாக என் அன்னை உரைத்தாள்.."

"ம்ம்ம்.."

"அவ்வீரத்தில் என் மனதை விட்டேன்.."

நர்மதா தமது அகத்தை ஒளியாமல் உரைத்து விட்டு நாண மேலிட்டால் வதனம் சிவக்க சிரம் கவிழ்ந்தாள்.. மாறவர்மன் விழிகள் மின்ன.. ஒளிர்ந்த வதனத்துடன்..

"நறுமுகை..?..!" என்று வியப்புடன் விளித்தான்..

"ஆம் அய்யனே..! தமது வீரம் பற்றிய விவரங்களை செவி மடுத்த கணத்திலிருந்தே தங்கள் மீதான அபிமானம் எனது அகத்தில் முகிழ்ந்து விட்டது.. தினந்தோறும் தமைப் பற்றியே எமது தோழிகளிடம் வினவிக் கொண்டிருப்பேன்.. அவர்களும் எனக்காக தங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வந்து உரைப்பார்கள்.. அதை செவி மடுப்பதில் என் பொழுதுகள் வெகு இனிமையாக கழிந்தன.. நாளடைவில் என் மனதில் தாங்கள் சிம்மாசனமிட்டு அமர்ந்து விட்டீர்கள் அரசே..!"

"வியப்பாக உள்ளது நறுமுகை..! தாம் என்னை சித்திரத்தில் கண்டதுண்டா..?"

"இல்லை அரசே..!"

"எம் வதனத்தை அறிந்ததுண்டா..?"

"இதற்கு முன்பு அறிந்ததில்லை.."

"எம் தோற்றத்தைப் பற்றிப் பிறர் உரைக்க செவி மடுத்ததுண்டா..?"

"தமது வீரத்தைப் பற்றித்தான் பிறர் உரைக்க செவி மடுத்திருக்கிறேன்.."

"அவ்வாறிருக்க.. எவ்விதம் என்மீது பிரேமை கொண்டாய்..?"

"அறியவில்லை அரசே..!"

நர்மதா விம்மினாள்.. மாறவர்மன் அவள் கரம் பற்றி தனது மார்பில் பதித்துக் கொண்டான்.. அதில் உணர்ந்த நடுக்கத்தில்..

"யாம் தமக்குரியவன் தேவி..!" என்றான்..

"அவ்வாறா அரசே..?" தவிப்புடன் அவன் வதனம் நோக்கினாள் நர்மதா..

"அதில் தமக்கு எதற்காக இத்துணை சந்தேகம் தேவி..?" ஆதுரத்துடன வினவினான் மாறவர்மன்..

"ஓர் அரசனுக்கு பல தேவியர்கள் வருகை தருவது அரசகுல மரபல்லவா...? அவ்விதமிருக்க.. தாம் எமக்கு மட்டுமே உரியவராக இருத்தல் என்பது சாத்தியமாகுமா..?"

நர்மதா தேவியின் வினாவில் அவளது மனக்கிடக்கையும்.. மனக் குமுறலும் வெளிப்பட்டு

விட்டன.. மாறவர்மன் அவளது வதனத்தை நிமிர்த்தி அவள் விழிகளுக்குள் ஆழ்ந்து நோக்கினான்..

"யாம் தமக்கு வாக்களிக்க வேண்டுமா..?"

"வாக்களிப்பீர்களா..?"

"வெறும் வார்த்தைகளால் தம் அகத்திற்கு சாந்தியளிக்க இயலாது என்பதனை நான் அறிவேன்.. வாக்கினால் மட்டுமே அது சாத்தியமாகும்.. சொல் தேவி..! யாம் எவ்விதம் தமக்கு வாக்களிக்க..?"

"என் இறுதி மூச்சுவரை நான் மட்டுமே தங்களின் தேவியாக இருத்தல் வேண்டும்.. எனைத் தவிர்த்த வேறொரு மனைவி தங்களுக்கு இருக்கக் கூடாது.. தங்களின் பல ராணிகளில் ஒருராணியாக இல்லாமல்.. தங்களின் ஒரேயொரு ராணியாக நான் மட்டுமே திகழ வேண்டும்.. எம் இறுதிவரை தங்களின் அகமும், தேகமும் எனக்கு மட்டுமே சொந்தமானவையாக.. இருத்தல் வேண்டும்.. இந்த வாக்கை எனக்களிக்க தங்களால் இயலுமா..?"

"நிச்சயம் இயலும் தேவி..! என் இறுதிவரை.."

"என் இறுதிவரை என்றே யாம் வேண்டினோம் மன்னவரே..!"

"ஏன் தேவி..? மாற்றி உரைத்தல் கூடாதா..?"

"கூடாது.. யாம் வேண்டியபடியே வாக்களிக்க வேண்டுகிறேன்.."

"நன்று..! தம் விருப்பப்படியே வாக்களிக்கிறேன்.. உன் இறுதி வரை நீ மட்டுமே எனது காதலியாகவும், மனைவியாகவும் இருப்பாய் நறுமுகை..! உனைத்தவிர வேறொரு நங்கையை என் மனதாலும் எண்ண மாட்டேன்.. என் மனமும், தேகமும் உனக்கு மட்டுமே சொந்தமானது.. நீ மட்டுமே எனது தேவி..! எனக்குப் பல ராணிகள் தேவையில்லை.. நறுமுகை என்ற ஒரு ராணியே போதும்.. நான் பாண்டிய நாட்டை மீட்டு அரியணையில் ஏறும் போது எனது பட்டத்து மகிஷியாக நீ அருகில் வீற்றிருப்பாய்.."

"அத்துனை பேராசையெல்லாம் எம் அகத்தில் இல்லை மன்னவா..! தமது மனமென்னும் சிங்காதனத்தில் நான் மட்டுமே வீற்றிருக்க வேண்டும் என்று மட்டுமே ஆசை கொள்கிறேன்.. தமது பட்டத்து மகிஷியாகும் ஆசையெல்லாம் என் மனதில் இல்லை.. தாம் எனக்கு மட்டுமே சொந்தமானவராக இருத்தல் வேண்டும்.."

"இருப்பேன் நறுமுகை.. இந்த மாறவர்மன் இனி நறுமுகை என்னும் அவனது தேவிக்குச் சொந்தமானவன்.. அவளது இறுதிவரை அவன் மனதாலும் வேறொரு பெண்ணை எண்ண மாட்டான்.."

"எனதன்பே..!"

நர்மதா தேவி மாறவர்மனின் மார்பில் வதனம் புதைத்தாள்.. அவளது செழுமையான தோள்களை வருடிய மாறவர்மனின் மனதில் அவள் நீராடிய கோலத்துடன் நின்றிருந்த தோற்றம் வருகை தந்தது.. அவனது தேகம்

தகிக்க ஆரம்பித்தது.. அவன் கண்டு ரசித்த செழுமையான தோள்களும்.. வெண்ணையின் குழைவுடன் கூடிய மேனியும் அவன் வசத்தில்..

அவனது கரங்கள் அவளது மேலாடையை மீறி.. அவளது தேகத்தில் ஊர ஆரம்பித்தன.. முதன் முதலாக உணர்ந்து கொண்டிருந்த ஆண்மையின் ஸ்பரிசத்தில் நர்மதாவின் தேகம் சிலிர்த்தது.. அவள் கிளர்ந்து மயங்கினாள்.. அவனது வதனம் நோக்க இயலாத நாணத்துடன் அவனுள் புதைந்தாள்..

அடைக்கலம் என்று அவனிடம் சரணடைந்து விட்டவளை சொந்தத்துடன் தழுவிக் கொண்டான் மாறவர்மன்.. அவளது செழுமையான தோளில் அவனது இதழ்கள் அழுந்திப் பதிந்து முத்தமிட்டன..

"ஸ்.. ஆ.."

முதல் முத்தத்தைத் தாள முடியாத தவிப்புடன் அரற்றினாள் நர்மதாதேவி.. அவனது அடர்ந்த மீசையின் ரோமங்கள் அவளது செவிமடலோரம் உராய்ந்ததில் ஏற்பட்ட இன்ப உணர்வுகளின் ஆளுகையை தாங்க இயலாமல் தொய்ந்தாள்..

மாறவர்மன் முன்னேறினான்.. அவளது செவி மடல்களில் இதழ் பதித்து முத்தம் கொடுத்தவன்.. கிறங்கிப் போய் விழிகளை மூடிக் கொண்ட அவளது அடர்ந்த இமைகளின் மீது மென்மையாக இதழ் பதித்தான்..

கரம் தேர்ந்த இசை வல்லுனன் ஒருவன் தேர்ந்த ஸ்வரலயத்துடன் இசைக் கருவியை மீட்டுவதைப் போல அவனது அணுகுதல் இருந்தது.. வெகு மென்மையாகவும், லாவகமாகவும் அவளைக் கையாண்டான் அவன்..

அவளது செவியோரமாக அவன் முணுமுணுத்த ரகசிய உரைகளில் அவள் கிளர்ந்து செவிகளை கரங்கள் கொண்டு மூடிக்கொண்டாள்.. அதை ரசித்து..

"ஹா.. ஹா.." என்ற நகைப்பு அவனிடத்தில் எழுந்தது..

அதிக சப்தம் எழுப்பாத எச்சரிக்கை உணர்வோடு அவன் நகைத்த நகைப்பு அவளை வசீகரித்தது..

'இவன் நகைக்கும்போது இவனது எழில் கூடுகிறது என்பதனை அறிவானா..?' தனக்குள் அவள் வினவிக் கொண்டாள்..

அவளது விழிகளில் பிரதிபலித்த மயக்கத்தில் அவன் இமைசிமிட்டினான்.. அதில் அவள் ஈர்க்கப்பட்டாள்..

'இவன் காந்த சக்தியுள்ளவன்..!' அவள் மனதில் அவன் மீதான காதல் அதிகரித்தது..

அவளது செழுமையான கன்னமேட்டில் அவனது இதழ்கள் மெதுவாக பதிந்தபோது இமைமூடி அவனுடன் ஒன்றிப் போனாள் நர்மதா.. அவளது கன்னத்தில் முத்தமிட்டவன் அவளது இதழ்களைத் தேடி அவள் வதனத்துடன் வதனம் பதித்து அழுந்திக் கொண்டபோது

ஆசேவமான அலையொன்றில் அடித்துச் செல்லப் படுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

"ம்ஹா.."

விலகிப் புரண்டவளின் மீது படர்ந்து பரவினான் மாறவர்மன்.. அவனது மார்பில் புரண்ட மீன்பதக்கம் அவளது கழுத்தில் படிந்தது.. அதை அவிழித்து அவளது கழுத்தில் அணிவித்தபோது அவளது நயனங்களை ஆனந்தக் கண்ணீர் நிரப்பியது..

"இது உன் கழுத்தில் நான் அணிவிக்கும் மங்கலநாண்.."

உரிமையுடன் அவன் கூறினான்.. அவனது விரலில் அனிந்திருந்த கணையாழிகளில் ஒன்றைக் கழற்றி அவள் விரலில் அணிவித்தான்.. அவனது சுண்டு விரலை அலங்கரித்த அந்தக் கணையாழி.. அவளது மோதிர விரலை அலங்கரித்தது..

"வெகு எழிலாக உள்ளது.." மெச்சிப் போனான்..

அவள் சூடுவதற்காக கொண்ர்ந்திருந்த மலர்ச்சரத்தை இரு மாலைகளாக்கி.. அவள் கரத்தில் ஒன்றைக் கொடுத்து.. தன் கரத்தில் ஒன்றை எடுத்துக் கொண்டான்..

"காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர்தாம் நம் இருவரையும் இங்கு சந்திக்க வைத்துள்ளார்.. அவரை மனதில் இருத்தி.. நாம் மாலைகளை மாற்றிக் கொள்வோம் நறுமுகை..! நமது மனச்சடங்கு இத்துடன் நிறைவு பெறுகிறது.." என்று கூறினான்..

"ஆம் மன்னவரே..!"

அவன் அணிவித்த மங்கலநாணான மீன் பதக்க ஆபரணத்தையும்.. விரலில் மின்னிய கணையாழியையும் பார்த்துக் கொண்டாள் நர்மதா தேவி..!

"நமது மணச்சடங்கு மாலை மாற்றுவதுடன் நிறைவு பெறுவதென்னவோ மெய்தான்.. எனினும் அரசே.. இச்சடங்குகளை காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் தாம் நிறைவேற்றினால் நான் அகம் மகிழ்வேன்.."

"அவ்வாறா உரைக்கிறாய்..?"

"ஆம் மன்னவா..! எமக்கான அங்கீகாரம் அதுவாகவே இருக்கக் கூடும்.. ஆயினும்.. தங்களின் தற்போதைய மறைந்து வாழும் நிலைமைக்கு அது சங்கடம் விளைவிக்கக் கூடுமானால் அதைத் தவிர்த்து விடலாம் மன்னவா..! இந்த விவாகத்தையே.. நமக்கான விவாகமாக நான் ஏற்றுக் கொள்கிறேன்.."

"தமது விருப்பம் அதுவானால் நான் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரனின் சன்னதியிலேயே தமக்கு மாங்கல்யம் அணிவித்து.. மாலை சூடுகிறோம் தேவி..! இன்றைய சடங்கு நமது மணநாளின் நிச்சயதாம்பூல விழாவாக இருக்கட்டும்.. நான் அணிவித்த கணையாழி.. அதை அறிவிக்கும் கணையாழியாக திகழட்டும்.. மீன் பதக்க ஆபரணம், யாம் தமக்களித்த தாம்பூல பரிசிலாக இருக்கட்டும்.."

"ஆனால் அரசே..! காஞ்சியில் தாம் வெளிப்படையாக ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்திற்கு வருகை புரிய இயலுமா..?"

"இயலாது என்ற வார்த்தையே எம் அகராதியில் இல்லை என்பதை அறிவாய் நறுமுகை..! இந்த மாறவர்மன் எண்ணியதை செயலாற்றி முடிப்பவன்.."

காதலின் வீர உரையில் பெருமிதம் கொண்டாள் நர்மதா.. எப்பேற்பட்ட தீரனைத் தாம் காதலனாக வரித்துள்ளோம் என்ற இறுமாப்பில் மெய்மறந்தாள்..

மாறவர்மன் அவள்மீது சயனித்திருந்த கோலத்தில் படர்ந்திருந்தான்.. உரிமையுடன் அவளை ஆக்ரமித்து ஆண்டு விட முடியாத ஏமாற்றம் அவனது உள்ளத்தில் உண்டானது..

"என்னை வதைக்கிறாயடி.." அவளது செவிகளில் முணுமுணுத்தான்..

அதில் எல்லையற்ற இன்பம் கொண்டாள் நர்மதா தேவி..!

"வதைபடுவது தாங்கள் மட்டுமல்ல அரசே..! யாமும்தான்.." பதிலுக்கு முணுமுணுத்தாள்..

அதில் அவனது வேட்கைதீ கொழுந்து விட்டு எரிந்தது..

"நீ இரக்கமில்லாதவள்.."

"அவ்வாறா..?"

"ஆம்.."

"எதனால் இம்முடிவிற்கு வந்தீர்களாம்.."

"போர்.. போர்.. என்று இருந்தவனின் மனதில் மோகத்தை மூட்டி விட்டு அதில் குளிர் காய யத்தனிக்கும் ராட்சசி நீ.."

"என்னவொரு பழி..! இதுவும் தாங்கள் எனக்களிக்கும் பிரத்யேக நாமமா..?"

"பிரத்யேகத்தைப் பற்றியெல்லாம் நீ உரைக்கக் கூடாது.."

"எதனாலாம்..?"

"பிரத்யேகமாக பள்ளியறையில் மஞ்சத்தில் உன்மீது சயனித்திருப்பவனின் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள இயலாமல் வேலியிட்டு விட்ட இரக்கமற்றவள் நீ.."

"அடுத்த நாமகரணமா..?"

"இனியும் தொடர்ந்து வரும்.."

"என்மீது தங்களுக்கு அத்துணை சினமா..?"

"அல்ல.. அத்துணை வேட்கை.."

அவனது ஆரத் தழுவலில் தேகம் கொதித்தாள் நர்மதா.. அவனது வேட்கைத் தீயுடன் அவளுக்குள் மூண்ட மோகத்தீயும் இணைந்து விட.. தாளமுடியாத தாபத்துடன் தவித்தாள்..

"மன்னவா..!"

"சொல்லடி.."

"தமக்கு மட்டும்தான் யாம் தேவைப்படுகிறேனா..? எமக்கும் தாங்கள் தேவைப்படுகிறீர்களே.."

"ஹ..! இருந்தும் ஏனடி எனக்கு விலங்கிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்கிறாய்..?"

"விலங்குடைத்து எனை ஆள வேண்டாமென்று எவர் தங்களை தடுத்தது..?"

விரகதாபத்துடன் வினவியவளை விட்டு விலகி அவள் வதனம் பார்த்து மறுப்பாக சிரம் அசைத்தான் மாறவர்மன்..

"என்னால் அது இயலாதடி.. உனது அன்னையை பல ராணிகளுள் ஒரு ராணியாக உனது தந்தை மணைந்தார் என்ற துயரத்தில் வருந்துபவள் நீ..! உன்னை ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் எனது தேவியாக ஏற்காமல் உனை ஆள நினைப்பது என் ஆண்மைக்கு இழுக்கு..!"

அந்த மணித்துளியில் ஆண்மையின் அடையாளமாக அவள் மனதில் இமயம் போல உயர்ந்து நின்றான் மாறவர்மன்..

அவளது உணர்வுகளுக்கு அவன் அளித்த மரியாதையிலும் கௌரவத்திலும் மனம் நிறைந்த நர்மதா அவன் கரங்களுக்குள் புதைந்தாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



7

ஏழுபிறப்பிலும் உனைத் தொடரும்
சொந்தமெந்தன் சொந்தம்..

"என் மகளைச் சொல்கிறேங்க.."

"மகளை 'டா' போட்டுச் சொல்லுவியா..?"

"தோடா..!"

"இது வேறயா..? இதுவும் என்னைச் சொல்லலைன்னு உதார் விடுவியே.."

"மாட்டவே மாட்டேன்.. சாட்சாத் உங்களைத்தான் சொன்னேன்.. தோடா..! இதிலயும் சந்தேகமான்னேன்.."

"அது என்னவோடி அனு.. நீ உருப்படியாய் பேசினாலும் என்னைக் கேலி பண்றயோன்னு மனசுக்குள்ள ஒரு குறுகுறுப்பு.."

"வரும்.. வரும்.. ஏன் வராது..? அழகு மகளை பெத்து வைத்துக்கிட்டு என்கிட்ட உதார் விடறாரு.."

"இப்ப என்னதான் சொல்ல வந்த..? அதைச் சொல்லு முதல்ல.."

"பாருடா..! இவகூட கெட்டிக்காரத்தனமாய் வேலை பார்த்திருக்காளேன்னு சொல்ல வந்தேன்.. எங்கே

சொல்ல விட்டிங்க..? பாருடான்னவுடனே என்னையான்னு ஆரம்பிச்சுட்டிங்க.."

இருந்திருந்து மகளைத் தன் வாயாலேயே பாராட்டி விட்ட மனைவியை காதலுடன் பார்த்தார் பிரதாப்.. அவள் கழுத்தை நொடித்தபடி உன் காதலும் வேண்டாம்.. கடற்கரை மணலும் வேண்டாம் என்று சமையலறைப் பக்கமாக நகர்ந்தாள்..

"யது வந்தாச்சா..?"

மனைவி மையல் கொள்ளவில்லையே என்ற ஏமாற்றத்துடன் வினவினார் பிரதாப்..

"இந்நேரத்துக்கு வந்திருக்கனும்.. ஏன் வரலைன்னு தான் தெரியலை.. அவன் வந்திட்டா எல்லாத்துக்கும் காபிக் கடையை விரிச்சு வைச்சு வேலையை முடிச்சிருவேன்.. ஆளுக்கொரு நேரத்துக்கு வந்தா என்னால வேலை செய்ய முடியுதா..?"

மனைவியின் அலுப்பில் அப்போதைக்கு அவள் காதல் பார்வையை பார்க்க மாட்டாள் என்பதை புரிந்து கொண்ட பிரதாப்.. காபியையாவது குடித்து வைக்கலாம் என்று சோபாவில் விழுந்தார்..

"ரிமோட் எங்கே..?"

"என்னைக் கேட்டா..? நானென்ன ரிமோட் கண்ட்ரோலை வைச்சா காபி கலக்கப் போறேன்..? கிச்சனில இருக்கிறவளுக்கு டிவி ரிமோட்டால என்ன வேலை ஆகப் போகுது..? உங்க மககிட்டக் கேளுங்க.."

"யாமினி.."

மகளை அழைத்தபடி டிவியைப் பார்த்த பிரதாப் தலையில் கைவைத்தார்..

ஏதோ ஒரு ஊரில் பூமியில் புதையுண்டிருந்த பழங்கால அரண்மனையை தொல்பொருள் துறை மீட்டியிருந்ததை டிவியில் ஒளிபரப்பிக் கொண்டிருந்தார்கள்.. என்னவோ அந்த ஊரையும் அரண்மனையையும் காலம் காலமாக அறிந்தவளைப் போல யாமினி கன்னத்தில் கை வைத்து டிவியில் ஆழ்ந்திருந்தாள்..

பிரதாப் அழைத்ததைக் கூடக் கவனிக்காமல் புதையுண்டு வெளிப்பட்டிருந்த அரண்மனையைப் பார்த்துக் கொண்டிருந்தவளை..

"யாமினி.." என்று உரத்த குரலில் மீண்டும் அழைத்தார் பிரதாப்..

"அப்பா..?" உலுக்கி விட்டவளைப் போல தந்தையின் முகம் பார்த்தவளைக் கவலையுடன் அவர் பார்த்தார்..

'ஏம்மா இப்படி இருக்கிற..?'

மகளிடம் வெளிப்படையாக கேட்க இயலாமல் மனதுக்குள் கேட்டுக் கொண்டவர்.. குற்ற உணர்வுடன் விழித்த மகளிடம்..

"ரிமோட்டைக் குடும்மா.." என்றார்..

"ஏம்ப்பா.. வேற புரோக்ராம் பார்க்கப் போகிறிங்களா..?" அவள் ஏமாற்றத்துடன் கேட்டாள்..

இந்த அளவுக்கு ஏமாற்றமடைய அவள் சீரியலையா பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்ற கேள்வி மனதில் எழ.. அவளது ஏமாற்றத்தைக் கவனிக்காதவரைப் போல மகளின் கையிலிருந்த ரிமோட்டை ஏறக்குறைய பிடுங்கினார் பிரதாப்..

"இந்த புரோக்ராமே இருக்கட்டும்ப்பா.."

"வேணாம்மா.. கடையில்லயும் இதைத்தானே பார்க்கிறேன்..? வீட்டுக்கு வந்தா என்டெர்டெயினா எதையாச்சும் பார்க்கணும்.. அப்பத்தான் மனசு ரிலாக்ஸா இருக்கும்.."

பிரதாப்பின் மறுப்பில் யாமினி எழுந்து வாசல் பக்கமாக போனாள்.. மகளின் கோரிக்கையை மறுத்து விட்ட வருத்தம் வந்த போதும்.. யாமினியை அவள் போக்கிலேயே விடக் கூடாது என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு காமெடி ஷோவை பார்க்க ஆரம்பித்தார் பிரதாப்..

தோட்டத்தின் ஊஞ்சலில் அவள் வைத்த இடத்தை விட்டு அகலாமல் ஏதோ கட்டளைக்கு கீழ்படிந்ததை போல அக்கடிதம் சட்டமாக உட்கார்ந்திருந்தது.. அவளைக் கண்டதும் ஆசுவாச பெருமூச்சைவிட்டது.. அவளது பார்வை தன்மீது விழாதா என்று கடிதம் காத்திருக்க.. வானத்தில் மின்னல் வெட்டியது.. யாமினி அண்ணாந்து பார்த்தாள்..

'மழைக்காத்து அடிக்குதே.. மழை வருமோ..?'



8

உன் வாளினுக்கு மாலையிட்ட.. வஞ்சியினை அறிவாயா..?

மாலை மயங்கிய பொழுதில் நர்மதா அவன் மார்பை விட்டு விலகினாள்.. அவளை நீங்க விடாமல் சிறை பிடித்தான் மாறவர்மன்..

"ஏனிந்த துரிதம்..?"

"அந்தி மாலை மயங்கி.. இருள் சூளும் இரவு வேளை நெருங்கிக் கொண்டிருக்கிறது அரசே.."

"நெருங்கட்டுமே.. எம்மால்தான் தம்மை ஓர் எல்லைக்கு மேல் நெருங்க இயலவில்லை.. இரவுக்காவது அப்பேறு கிட்டட்டுமே.."

வேட்கையுடன் மொழிந்த மாறவர்மனின் மொழியில் வெட்கி வதனம் சிவந்து சிரம் கவிழ்ந்தாள் நர்மதா தேவி.. அந்நிலையில் அவளைக் கண்ணுற்ற மாறவர்மன் மதுவுண்ட போதை கொண்டான்..

'இவள்தான் எத்துணை எழிலோடு உள்ளாள்..!' அவன் மனம் வியந்தது..

அவளது வதனமம் தொட்டு நிமிர்த்தி.. அவள் விழிகளோடு தம் விழிகளைக் கலந்தான்.. அவன் விழிகளைச் சந்தித்தவளின் விழிகளில் ததும்பிய அப்பழுக்கற்ற காதலில் அவன் மனம் பிரமித்தது..

அத்துணை எழில் கொண்டவளின் மனம் அவனிடத்தில் சரண் புகுந்திருந்ததில் அவனது ஆண்மை அதீத கர்வம் கொண்டது..

"அன்பே..!" தொண்டை கரகரக்க.. உணர்ச்சிப் பெருக்குடன் அவளை அழைத்தான்..

"ம்ம்ம்.." அதே உணர்வுப் பெருக்கோடு.. பேச இயலாதவளாக அவள் முணுமுணுத்தாள்..

"நீ எனக்கு இன்றியமையாதவள்..!"

மாறவர்மனின் உரையில் அவள் விழிகள் ஒளிர்ந்தன.. அவன் விழிகளை ஆழ்ந்து நோக்கியவளின் பார்வையில் ஆராதனை இருந்தது..

மனம் விரும்பும் காதலனுக்கு தான் மட்டுமே இன்றியமைதாவளாக இருத்தல் வேண்டும் என்று எண்ணாத பெண் இவ்வுல்கில் உண்டோ..?

ஹொய்சாள நாட்டு மன்னனின் பல ராணியரில் ஒரு ராணியாக வாழ நேர்ந்த தரங்கிணியின் மணி வயிற்றில் உதித்தவள் நர்மதாதேவி..

தனது தாய் ஹொய்சாள அரசனின் பட்டத்து ராணியல்ல.. பல மனைவியரில் ஒரு மனைவி.. என்பதில் அளவு கடந்த மனவேதனை அவளுக்கு உண்டு.. அவளின் தாயை மட்டுமே நேசிக்கும் தந்தை அவளுக்கு வாய்க்கவில்லையே என்று மனம் பொருமுகிறவள் நர்மதா தேவி..

அவள் மனதின் ஆசைக் கிடக்கையாக அவளை மட்டுமே நேசிக்கும் ஆண்மகனை மணந்து கொள்ள வேண்டும் என்ற பேராவல் உள்ளது.. அத்தருணத்தில்தான் .அவள் மாறவர்மனைப் பற்றிக் கேள்வியுற்றாள்..

ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் இளவலான மாறவர்மன் சுந்தர பாண்டியன் எவருக்கும் அஞ்சாத இளம்சிங்கமாக.. புலிக் கொடி கொண்ட சோழர்குல ீக்கரவர்த்திக்கு அறைகூவல் விடுத்த வீரத்தை .அறிந்ததிலிருந்து அவன் மீதான வற்றாத காதல் ஊற்று .அவள் அகத்தில் உண்டாகி விட்டது..

குலோத்துங்க சோழ சக்கரவர்த்தி ஹொய்சள ன்னனின் மாமன் ஆவார்.. ஹொய்சள அரசன் சோழ ாணிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்ததில் இயல்பாகவே நர்மதா தேவியின் உள்ளத்தில் சோழர்களின் ீதான வெறுப்பு உண்டாகி விடுகிறது.. அவர்களை எதிர்க்கும் மாறவர்மனைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அவள் ானதில் சொந்தம் முகிழ்ந்து விட்டது..

மாறவர்மனைப் பற்றியும் அவனது வீரத்தைப் ற்றியும் அறிவதில் அவள் ஆர்வம் காட்டினாள்.. அவளது னமறிந்த அவளது அந்தரங்கத் தோழி அனைத்துத் திசைகளிலும் பரவியிருந்த மாறவர்மனின் புகழை செவி டுத்து சேகரித்து.. அனுதினமும் நர்மதாவின் செவிகளில் ஓ ரைக்கத் தொடங்கினாள்.. அவற்றை செவி மடுப்பதில் நர்மதா தேவி அடையும் இன்பத்தை அவளது வதனம் ிரதிபலித்ததில் அவளது தோழி உவகை கொண்டாள்..

அவ்வாறு அவன் புகழ் கேட்கத் துடித்தவளின் முன்னிலையில் மெய்யாகவே ஓர் தினத்தில் அவன் வந்து நின்றபோது அவள் விழி விரித்து பிரமித்தாள்.. அவளது காதலின் சக்திதான் அவனை அவளிடம் கொண்டு வந்து சேர்த்தது என்று மனதார அவள் நம்பினாள்..

அவள் மனதைக் கவர்ந்தவன்.. அவள் மனதை அறிந்து விட்டதுமில்லாமல் அவன் மனதில் அவளுக்கு மட்டும் இடமளித்ததில் நர்மதாவின் மனம்..

'இது போதும் மன்னவனே..!' என்று விம்மியது..

இவ்வாழ்வில் அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

எவருமற்ற ஆரண்யத்தில்.. மணம் பரப்பும் மலர்களைக் கொண்ட கொன்றை மரத்தின் அடியில் யாழ் மீட்டும் சுகானுபவத்தை அவள் அன்று உணர்ந்தாள்..

அவளது வதனத்தின் உணர்வலைகளில் தெரிந்த உன்னதத்தை உற்று நோக்கிய வண்ணமிருந்த மாறவர்மன்..

"தம் சிந்தையில் பயணிப்பது எது இளவரசி..?" என்று நர்மதா தேவியின் சிரத்தில் விரல்களால் சுண்டியபடி வினவினான்.

"ஸ் ஆ.." மெதுவாக சிணுங்கினாள் நர்மதா தேவி..

"எனது விளையாடல் தமக்கு வேதனையை அளித்து விட்டதா..?"

நர்மதா தேவியின் சிரம் வருடி வினவிய மாறவர்மனின் வலிமை வாய்ந்த விரல்களைப் பற்றி

அவற்றில் இதழ் பதித்தாள் நர்மதா தேவி.. அத்தருணத்தில் அவளது வதனத்தில் தோன்றிய அலாதியான பிரியத்தில் மனம் நெகிழ்ந்தான் மாறவர்மன்..

"தங்களின் விரல்களின் ஸ்பரிசத்தில் என் தேகம் வேதனை கொள்ளுமோ..?"

அவள் என்னவோ.. அவனது விரல் சுண்டுதலில் அவளது சிரம் வேதனை கொள்ளாது என்பதனை விளக்கும் விதமாகத்தான் இதனை உரைத்தாள்.. அவன் இதழ் மடித்து பற்களால் அதை சிறைபிடித்து ஓர் விதமாக அவளை நோக்கி வைத்தான்..

'யாம் யாது உரைத்தோம்..? எதன் பொருட்டு இவன் இவ்வாறு நோக்கி வைக்கிறான்..?' குழம்பிப் போனாள் நர்மதா..

"அவ்வாறா..?" அவன் இமை சிமிட்டினான்..

'இது ஏனாம்..?' அவளது வதனம் செவ்வானமானது..

"எனது விரல்களின் ஸ்பரிசம் தமது தேகத்திற்கு ஓர் நொடியும் வேதனையை அளிக்காது தேவி..! இன்பத்தைத் தான் கொள்ளை, கொள்ளையாக அள்ளி வழங்கும்.."

குறும்புடன் அவன் நகைத்ததில் அவன் உரைக்க வருவதை புரிந்து கொண்டாள் நர்மதா தேவி..! அவளுக்குள் பொங்கிய உணர்வலைகளின் ஆதிக்கத்தில் சுவாசத் திணறலைக் கொண்டாள்..

"யாம் ஒன்றும் அதைப் பற்றி உரைக்கவில்லை.."

சிவந்து போன வதனத்துடன் சிரத்தைக் கவிழ்ந்து.. காலின் பெருவிரலால் தரையில் விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தை சுரண்டியவளை ரசனையுடன் பார்த்து நகைத்தான் மாறவர்மன்..

"விட்டு விடு தேவி..! தரையாக இருந்தால் இப்பொழுதிற்கு சுனை ஒன்று உருவாகியிருக்கும்.. கம்பளத்தில் அது சாத்தியமாகாது.. தமது பெருவிரல்தான் நோகும்.. அது நோவுற்றால் அதைவிட அதிக அளவில் எனது மனம் நோவை ஏற்கும்.. என் பொருட்டு தமது பெருவிரலை சோதிக்காமல் விட்டு விடு என் தேவி..!"

மாறவர்மனின் கேலியில் நர்மதாவின் சுவாசத் திணறல் அதிகமானது.. அவளது நிலையறிந்தவனாக மாறவர்மன் அவளை இழுத்து தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.. அவனது ரோமம் அடர்ந்த பரந்த மார்பில் வதனம் புதைத்தவளுக்கு அந்த அவனிக்கே அரசியாகி விட்டதைப் போன்ற பூரிப்பு ஏற்பட்டது..

"தாங்கள் உள்ளீர்களே.."

"உள்ளேன்தான்.. தம் அருகினில்.. தம் அணைப்பினில் உள்ளேன்.. அதற்கு என்ன தேவி..?"

"யாதுமில்லை.."

"யாதுமில்லாததிற்கா ஆயாசம் கொண்டாய்..?"

"எதன்பொருட்டு ஆயாசம் கொண்டேன் என்பதை தாங்கள் அறிய மாட்டீர்களா..?"

"அறியவில்லை என்பதினால்தானே வினவுகிறேன்..?"

"ஆஹா..! தாங்கள் ஒன்றும் அறியாத பச்சிளம் சிசுதான்.."

"தாம் எவ்வாறும் எமை வசை பாடலாம்.. ஆனால் 'சிசு' என்று மட்டும் இடித்துரைக்கக் கூடாது.."

"ஏனாம்..?"

"ஏனென்றால்.. எமக்கு தம் மணி வயிற்றில் சிசுவை அனிக்கத்தான் ஆவல்.. சிசுவாக மாற ஆவலில்லை.."

மாறவர்மனின் கரங்கள் அவளை அழுத்தப் பற்றியதில் அவளது தேகத்தில் அவனது கரங்களில் தடங்கள் அழுந்திப் பதிந்தன..

'இவள்தான் எத்துணை மென்மையானவள்..!'

மோப்பக் குழைக்கும் அனிச்ச மலரைப் போல.. அவன் அவளது தேகத்தை ஸ்பரிசித்ததில் பதிந்த தடம் கண்டு அவன் வியந்து போனான்.. அவனது இறுக்கத்தில் அவள் குழைந்து போனாள்..

"மன்னவா..!"

உணர்வலைகளின் ஆக்ரமிப்பில் கிளர்ந்தவள் கலவாசத் திணறலுடன் அவனது தழுவலுக்குள் தம்மை முழுப்புக் கொடுத்து முணுமுணுத்தாள்..

"சொல் தேவி..!"

"தாங்கள் எனக்கு அனைத்துமானவர்..!"

'ஹ..!' அவனது இதயம் பெருமிதம் கொண்டது..

நாட்டை மீட்க போராடிக் கொண்டிருக்கும் போராளியை அனைத்துமானவனாக அவள் கொண்டாடியதில் அவன் மனம் விடியலின் வேய்ங்குழல் இசையை உணர்ந்தது..

வைகறையின் நிலாமுற்றம் அளிக்கும் வசந்தகால பனித்துளிகளின் குளுமையை அவளது சரணாகதி அவனுக்கு அளித்தது..

ஆலோலம் பாடும் அன்றில் பறவையின் ஆட்படுதலுடன்.. அவன் மார்பில் சரண் புகுந்திருந்த அவளின் ஆண்மா இசைத்த அதி அற்புத சங்கீதத்தை அவனது ஆன்மா செவியுற்று இன்பம் கொண்டது..

"தாமும் எனக்கு அனைத்துமானவளே..!"

அவனது உத்திரவாதத்தில் அவள் வதனம் உயர்ந்து அவன் வதனம் பார்த்தது..

"இது ஒன்றே போதும்.. என் அகம் நிறைவு கொண்டது.. இந்நாநிலத்தில் வேறொன்றை யாம் வேண்டோம்.."

அவன் மார்பில் மீண்டும் அவள் வதனம் புதைத்தாள்.. அவளது கூந்தலைக் கோதிக் கொடுத்த மாறவர்மனின் இதழ்களில் மந்தகாசப் புன்னகை இருந்தது.. இருள் சூழ்ந்து விட்டதை அறிவுறுத்தும் தீப்பந்தங்கள் கூடாரத்துக்கு வெளியே ஏற்றப்பட்டதில் நர்மதா தேவி பதட்டம் கொண்டு விலகினாள்..

"நாம் புறப்பட வேண்டிய தருணம் அணுகி விட்டது.."

"நாமா..?"

"ஆம்.. நாம்தான்.."

"தாம் எங்கு செல்கிறாய் என்று அறியேன்.. ஆனால்.. எமது பயணம் நெடுந் தொலைவைக் கொண்டது.."

"எத்துணை தொலைவாக இருப்பினும்.. யாமும் நங்களுடனே பயணிப்போம்.. விலகி வேறு வழி செல்ல என்னால் இயலாது.."

அவளின் உறுதியில் மாறவர்மன் மெய் சிலிர்த்தான்.. அவளது கன்னங்களை வருடி வதனம் பார்த்தான்..

"மாளிகையில் வசித்த உன்னை.. பாண்டிய நாட்டின் அரண்மனைக்கு அரசியாக்குவேன் நறுமுகை... அத்தினம் வரும் வரை நீ எம்முடன் காடு, மேடுகளில்.. மலைக் குகைகளில் மறைந்து வாழ நேரிடலாம்.."

"யாம் அதற்கு ஆயத்தமாகவே உள்ளோம்.."

"கடும் பாதையில் தமது மலர் பாதங்கள் நோகலாம்.."

"தம்மைப் பிரிந்தால் என் மனம் நோகுமே என்னவனே..? அந்த நோவுக்கு முன்னால் இந்த நோவு நிற்கக்கூட இயலாதே.."

"தமது தாய்க்கு தாம் ஒரே புதல்வி..!"

"அது குறித்த பெருமிதத்தை விட.. தமக்கு யாம் ஒரே துணை தேவி என்பதில்தான் எனக்கு பெருமிதம் அதிகமாக உள்ளது அரசே..! யாம் இவ்வடையாளத்தையே விரும்புகிறோம்.."

நர்மதா தேவியின் திடத்தில் தன் வயமிழந்தான் மாறவர்மன்.. அவள் கரங்களை இறுகப் பற்றித் தன் இதழ்களில் பதித்து முத்தமிட்டான் முடிவெடுத்து விட்டான்..

"ஆகட்டும் தேவி..! எது வந்தபோதும் எதிர் கொள்ள நான் சித்தமாகவே உள்ளேன்.. என்னுடன் புறப்படு.."

"எங்கே மன்னவரே..?"

"யாம் செல்லுமிடங்களை அந்தந்த பொழுதுகளில் காலமே நிர்ணயித்து அளிக்கிறது.. அதன் போக்கில் பயணிக்கும் வழிப்போக்கன்தான் நான்.. எனை நம்பி என்னுடன் வருகை புரிவாயா...?"

"வருவேன்.."

"அவ்வாறெனில் வினா எதற்கு தேவி..?"

"மன்னிக்க வேண்டும் அன்பே..! எனது வினா வேறு வகையானது.. தற்போது காஞ்சியை நோக்கி நான் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.. ஏகாம்பரேஸ்வரை நான் தரிசிக்க வேண்டும் என்பது எனது அன்னையின் விருப்பம்.."

"ஆம் அல்லவா..? அதன் பொருட்டுத்தானே இக்கடல் மல்லையின் வழி வந்ததாக நீ உரைத்தாய்.."

"ம்ம்ம்.. அன்னையைப் பிரிந்து தங்களுடன் என்னை இணைத்துக் கொள்ள முடிவெடுத்த பின்னர்.. அவரது விருப்பத்தை நிறைவேற்றி விட்டு பிரியலாமே என்று என் மனம் ஏங்குகிறது அரசே.."

"நறுமுகை..!"

அவன் பொருட்டு.. அவளது பிரியத்துக்குரிய தாயை அவள் பிரிய முற்பட்டு விட்டதில் நெகிழ்ச்சி கொண்டான் ராகவர்மன்..

"அத்துடன் நமது விவாகமும் ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் நிகழ வேண்டும் என்பது எனது விருப்பம்.."

"அறிவேன் நான்..! காஞ்சியில் உன்னை சந்திக்கிறேன்.."

"இத்தருணத்தில் தாங்கள் தனித்துப் புரவியில் காஞ்சியை நோக்கிப் பயணிப்பது உகந்தது அல்ல அரசே..! தங்களை காஞ்சியின் காவல்படை துழாவிக் கொண்டிருக்கிறது.."

"இருக்கட்டுமே.. வாள்வீச அஞ்சியவனல்ல இந்த ராகவர்மன்.."

"தங்களின் வீரத்தை நான் அறிவேன்... இருந்த போதிலும் நமது விவாகம் நடந்து முடியும்வரை தாங்கள் எவருடனும் போர் புரிய யத்தனிக்க வேண்டாம் என்று வேண்டுக் கொள்கிறேன்.."

"எவ்விதம் அது இயலும் தேவி..?"

"தாம் மனது வைத்தால் இயலும்.."

"எவ்வாறு..?"

"எமது சிவிகையில் தாமும் வருகை தந்தால் அது இயலும்.. தங்களது புரவியை எப்பாடு பட்டேனும் எனது தோழி அழைத்துக் கொண்டு வந்து விடுவாள்.."

"அது இயலாது நறுமுகை.."

கடினமான வதனத்துடன் மறுத்து விட்டான் மாறவர்மன்.. நர்மதாவின் வதனத்தில் பதட்டம் சூழ்ந்தது..

"இதை விடுத்தால் வேறு மார்க்கமில்லை அன்பே..!"

"ஏன் இல்லை..? தமது சிவிகையில்தான் யாம் பயணிக்க வேண்டுமா..? பட்டுத் துணிகள் கொண்டு மூடப்பட்ட சிவிகைக்குள் பெண்களைப் போல மறைந்து பயணிப்பது எமது வீரத்திற்கு இழுக்கு.. அதைத் தவிர்த்து தமது சிவிகையைச் சூழ்ந்து வரும் புரவி வீரர்களில் ஒருவனாக நான் வருகிறேன்.."

"அது இயலுமா..?" பரபரத்தாள் நர்மதாதேவி..

"ஏன் இயலாது..? தமக்கென்ன.. தமது சிவிகையின் அருகாமையில்.. தமது கண் பார்வையில் யாம் பயணிக்க வேண்டும்.. அவ்வளவுதானே..?"

"அவ்வாவுதான்.."

"அவ்வாறே யாம் பயணிப்போம்.. கவலை கொள்ள வேண்டாம்.. தமது புரவி வீரர்களிடம் எமை புதிதாக சேர்ந்த வீரன் என்று அறிமுகம் செய்வித்து விடு.."

"அவ்வாறே செய்கிறேன்.. நாழிகையாகி விட்டது.. கூடாரத்துக்குள் விளக்கேற்ற வருகை தருவதற்காக எனது தோழி காத்திருப்பாள்.."

"நான் மறைந்து கொள்ள வேண்டுமா..?"

"வேண்டாம்.. தாங்கள் இங்கிருப்பதை அவள் முருத்தி மட்டுமே அறிவாள்.."

"நன்று.. மறைந்து கொள்ளும் பணியை குறைத்து யிட்டாய்.."

"தங்களது தேவியாக விட்டேனல்லவா..? தங்களின் நலன்மீது.. தங்களைவிட அதீதமான அக்கறை எனக்குத்தான் உள்ளது அரசே..!"

"அவ்வாறா..?"

மாறவர்மன் அவளது கன்னம் தட்டி இமை மிட்டினான்.. நர்மதாவின் தேகம் சிலிர்த்தது.. மயங்கும் னதை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவள் கூடாரத்திற்கு வெளியே சென்றாள்.. காத்திருந்த தோழி நர்மதாவின் ரலைசைவில் உள்ளே வந்தாள்.. கூடாரத்துக்குள் .அன்னபட்சியின் முகப்பைக் கொண்ட ஆளுயர ளக்குகளை ஏற்றிய வண்ணம் அடிப் பார்வையில் மாறவர்மனை ஆராய்ந்தாள்..

"நேரடியாகவே நோக்கலாமே.." குறும்புடன் றினான் மாறவர்மன்..

தோழி நாணம் கொண்டு தடுமாறினாள்.. அவசர தியில் விளக்குகளை ஏற்றிவிட்டு விரைவாக வெளியேறி விட்டாள்..

"இவ்விதமா என் தோழியை அச்சுறுத்துவது..?" நர்மதா செல்லக் கோபத்துடன் அதட்டினாள்..

"அடாத பழி இது..! யாம் எங்கே அச்சுறுத்தினோம்..? தமது தோழியல்லவா அவளின் கருட பார்வையில் என்னை அச்சுறுத்தினாள்..?"

மாறுகண் பார்வையைக் கொண்ட அந்தத் தோழியின் தோற்றத்தைப் பற்றி நகைச்சுவையுடன் மாறவர்மன் உரைத்ததும் நர்மதாவிற்கு நகைப்பு வந்து விட்டது..

"போதும்.. போதம்.. கேலியை உடன்பிறப்பாக கொண்டவருடன் எவரால் பேச இயலும்..?"

"எனது நறுமுகையால் பேச இயலும்.."

மாறவர்மனின் கரங்கள் அவளது இடையை வளைத்தன.. அவன் கழுத்தில் தன் கரங்களை மாலையாக்கிய நர்மதாதேவி.. புறப்பட வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தினாள்..

"இரவுப் பொழுதில் கடல் மல்லையின் கடற்கரையில் கூடாரம் அமைத்துத் தங்குவது ஆபத்தானது என்று எமது தந்தை கூறியுள்ளாராம்.. இரவு உணவு எங்களுக்காக காஞ்சியில் தயாராகிக் கொண்டிருக்கிறது.. மாலைப் பொழுதிலேயே நாங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கியிருக்க வேண்டும்.."

"ஏன் நீங்கவில்லை..?"

"ஏனென்றால் தங்களை நீங்க எம்மால் இயல வில்லை.."

மையலுடன் கூறியவளின் இதழ்மீது இதழ் பதித்தான் மாறவர்மன்..

அவனது மீசையின் ரோமங்களை உராய்ந்ததில் இதமான இம்சை கொண்ட இன்பத்தை நுகர்ந்தாள் நர்மதா..

"நாம் புறப்பட்டாக வேண்டும் அரசே..!" ஏக்கத்துடன் கூறினாள்..

"புறப்படலாம்.." ஆழ்ந்த முத்தத்திற்கு பின் அவளை விடுவித்தான் மாறவர்மன்..

"தாங்கள் புரவி வீரராக மாற வேண்டுமெனில்.. எமது படைவீரரின் உடையை அணிய வேண்டும்.."

"அதற்கு எங்கே செல்வது..?"

"எங்கும் செல்ல வேண்டாம்.. சற்றுப் பொழுதில் அவரே தங்களை வந்து அடையும்.." மோகனப் புன்முறுவலுடன் அகன்றாள் நர்மதா..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



8

தொன்றுதொட்டு வந்த மரபால்..
என்னை நீ துறந்தாயா..?

மழை வருவதற்கான அனைத்து அறிகுறிகளும் வான மண்டலத்தில் தென்பட்டன.. இருளைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட மின்னல் கோடுகள் கண்களை கூச வைத்தன.. இடி இடித்ததில் அதைவிட அதிகமாக அலறாத சப்தம் போட்டாள்..

"ஏங்க.. இவ என்னத்துக்குங்க.. மின்னல் வெட்டற வானத்த கொட்டக் கொட்ட முழிச்சுக்கிட்டு பார்த்து வைக்கிறா..? உள்ளே வரச் சொல்லுங்க.. வானிலை ஆராய்ச்சி பண்றவன் கூட இப்படிப் பார்க்க மாட்டான்.."

யாமினி கதவை மூடினாள்.. அவள் பார்வையில் படாமல் போனதில் கடிதம் ஏமாற்றம் கொண்டது.. மழைக்காற்று வலுக்க ஆரம்பித்தது.. தோட்டத்துச் சருகுகள் சூறாவளிக் காற்றில் சுழன்று கொண்டிருக்க.. கடிதம் மட்டும் இரும்பினால் செய்யப்பட்டதைப் போல எதற்கும் அசையாமல் வைத்தது வைத்த படி ஜன்னலில் இருந்தது..

"இந்த யது நேரத்தில வீட்டுக்கு வந்து சேரக் கூடாதா..?"

"ஆபிஸில வேலை முடிஞ்சிருக்காது அனு.."

"அது இந்த மழைக்குத் தெரியுமா..? கொட்டோ கொட்டுன்னு கொட்டிரும் போல இருக்கே.."

"மழைன்னா கொட்டத்தான் செய்யும்.."

பிரதாப் வியாக்கினம் செய்ததில் அனுராதா பல்லைக் கடித்தபடி அவரை முறைத்துப் பார்த்தாள்..

"இப்ப இந்த விளக்கத்தைச் சொல்லுங்கன்னு நான் அழுதேனா..?"

'நீ ஏண்டி அழப் போற..? மத்தவங்களைத்தான் அழ வைப்ப..'

மனதுக்குள் நினைத்துக் கொண்டார் பிரதாப்.. வெளியில் சொல்லவில்லை.. அதற்கான தைரியமெல்லாம் இது போன்ற மௌனங்களுடன் இருந்தாக வேண்டியிருக்கிறதே..

வேகமாக வீசிய மழைக் காற்றில் ஜன்னல் கதவுகள் படபடத்தன.. அனுராதா பிரதாப்புக்கும், யாமினிக்கும் காபி டியை கொடுத்து விட்டு கவலையுடன் ஜன்னலைப் பார்த்தாள்..

"இப்படிக் காத்தடிக்குதே.."

"அடிச்சா அடிக்கட்டுமே அனு.."

"எனக்கு நல்லா வந்துரும் வாயிலே.. சும்மா வாதையாச்சும் நொணநொணன்னு வியாக்கினம் பேசிக் கிட்டு இருக்கனுமின்னு வேண்டுதலோட பிறந்திருக்கீங்களா..?"

"இல்லடி அனு.."

"என்னத்த நொல்லடி அனு..? நானே யது இன்னும் பரலையேங்கிற கவலையில இருக்கேன்.. அடிக்கிற காத்தில கரண்ட் கட்டாகிட்டா என்ன செய்யறது..?"

"அதுக்குத்தான் இன்வெண்டர் இருக்கே.."

"இதுக்கும் பதில் சொல்லியாச்சா..? ஏங்க இப்படி இருக்கீங்க..? கொஞ்ச நேரம் பேசாமத்தான் இருங்களேன்.."

'அதைத்தாண்டி எப்பவும் செஞ்சுக்கிட்டு இருக்கேன்..?'

பிரதாப் பேசா மடந்தனாகி டிபன் காபியில் கவனமானார்.. யாமினி காபி தம்ளரை வாயில் வைத்தபடி ஏதோ சிந்தனையுடன் இருந்தாள்.. எட்டிப் பார்த்த அனுராதா மகளின் தலையில் ஒரு குட்டை வைத்தாள்..

"கடன்காரி..! ஒரு மொடக்கு காபியாவது உன் தொண்டையில இறங்கியிருக்குமாடி..? காபியைக் கொடுத்தாக் குடிச்சுத் தொலைக்கனும்.. இப்படியா கையில வைச்சுக்கிட்டு அழும்பு பண்ணுவ..? உன்கூட போராடிப் போராடி என் ஆவிதான் குறையுது.."

பேசா மடந்தனாக இருந்த பிரதாப்புக்கு மகளைத் திட்டுவதைக் கண்டு மனம் பொறுக்க வில்லை..

"ஏண்டி.. எப்பப் பார்த்தாலும் அவளைக் கரிச்சுக் கொட்டிக்கிட்டே இருக்கே..?" என்று கேட்டு விட்டார்..

அவ்வளவுதான்.. அனுராதா ருத்ர அவதாரம் எடுத்து விட்டாள்.. சமையலறையில் இருந்த பாத்திரங்கள் பறக்க ஆரம்பித்தன..

"வீடா இது..? ஒருத்தராவது சொல்பேச்சுக் கேட்கிறாங்களா..? ஒருத்தியா இவங்க கூட மல்லுக்கட்டி குடும்பம் நடத்தறதுக்கு சன்யாசம் வாங்கிட்டுப் போயிடலாம்.."

அனுராதாவின் கோபத்தில் யாமினி மடக்.. மடக்கென்று ஒரே மூச்சில் காபியை தொண்டையில் சரித்துவிட்டு காலி தம்ளரை சின்க்கில் போட சமையலறைக்குள் ஓடினாள்..

"இதை அப்பவே செஞ்சு தொலைக்கிறதுக்கு என்ன...?" அதற்கும் எரிந்து விழுந்தாள் அனுராதா..

"இல்லேம்மா.. காபியை ரசிச்சுக் குடிச்சேன்.." விளக்கம் சொல்ல யோசித்து கதை பிணைந்தாள் யாமினி..

அனுராதா முறைத்த முறைப்பில் அனல் பறந்தது.. சமையலறையின் ஜன்னல் வழியாக வந்த குளுமையான காற்றினால் அவளது கோபத்தை தனிக்க முடிய வில்லை..



9

வஞ்சியெந்தன் அகத்தைக் தொட்ட..
காஞ்சித் தலைவன் நீதானோ..!

காஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த ராஜபாட்டையில் அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த குதிரைகள்.. பட்டுத் துணிகளால் மூடப்பட்ட சிவிகையினுள் இருந்து அமர்ந்திருந்த நர்மதா தேவி.. அத்திரைச் சீலைகளின் இடைவெளியில் சிவிகையை ஒட்டிப் பறவையில் வந்து கொண்டிருந்த மாறவர்மனையே இமைக்காமல் நோக்கினாள்.

நொடிக்கொரு முறை அவனும் சிவிகையைப் பார்த்தான்தான்.. எனினும்.. அவளைப் போல முழுமையாக அவளின் உருவத்தை மாறவர்மனால் பார்க்க இயல

வில்லை.. அவ்விதமாக இல்லாமல் நர்மதாவால் மாறவர்மனின் முழு உருவத்தையும் தெளிவாக பார்க்க இயன்றது..

புரவியில் ஆரோகணித்திருந்தவனின் தேக எழிலில் அவள் மனம் பித்தானது.. ஹொய்சாள படைவீரர்களின் உடை அவனுக்கு வெகு பாந்தமாக பொருந்தியிருந்தது.. முரட்டு மீசையை வதனத்தை மறைப்பதைப் போல ஒட்ட வைத்திருந்தான்.. கன்னத்தில் மிகப் பெரிய கரிய வண்ணம் கொண்ட மரு.. புருவங்களின் அடர்த்தியை செயற்கை ரோமங்களைக் கொண்டு அதிகப் படுத்தியிருந்தான்.. நெற்றியில் அகலமான திலகம்..

மாறவர்மனின் மாறுவேடத்தில் நர்மதா வியப்புற்றாள்.. எவ்விதம் நொடிப் பொழுதில் அவன் உருமாறினான் என்று அவள் அதிசயித்த போது..

"எனக்கு இது வழக்கம்தானே தேவி..?" என்று இளநகையுடன் கூறினான் மாறவர்மன்..

"மன்னவரே..!" அவள் மனம் வலித்தது..

"இதற்கெல்லாம் மனம் வருந்தலாமா..? அரசர்குல வாழ்வில் இதுபோன்ற போராட்டங்கள் வழக்கமானவை தான் நறுமுகை..! காஞ்சியையே எடுத்துக் கொள்ளேன்.. ஒரு காலத்தில் அந்நகரம் பல்லவர்களின் தலைநகரமாக பெருமையுடன் திகழ்ந்தது.. அது சோழர்களின் கரங்களுக்கு மாறவில்லையா..?"

"அவ்வாறா..?" நர்மதாவின் மனம் சிணுங்கியது..

"ஏன் தேவி..?" அன்புடன் வினவினான் மாறவர்மன்..

"காஞ்சியில்தான் நான் தங்களுக்கு மாலை சூட்டப் போகிறேன்.."

"நானும் உனக்கு மாங்கல்யாம் அணிவிக்கப் போகிறேன்.."

மாறவர்மனின் இமை சிமிட்டலில் நர்மதாவின் உலகமே மறந்து போனது.. அவனை விழுங்கி விடுவதைப் போல வெகு ஆசையுடன் பார்த்து வைத்தாள்.. அதில் மிளர்ச்சி கொண்ட மாறவர்மன் அவளை நெருங்கினான்..

"இது பணிக்கு ஆகாது மன்னவரே..!" அவள் நகைத்துப் பின் வாங்கினாள்..

எட்டி நின்றவளை வேட்கையுடன் அவன் நோக்கியதில் அவளது தாபம் அதிகரித்தது..

"எமது பணியை முடக்குவதையே குறிக்கோளாக கொண்டுள்ளாய்.." அவன் சீறினான்..

"இப்பணியை தாம் துவங்கினால் அது எப்பணியில் கொண்டு சேர்க்கும் என்பதை நான் அறிவேன்.." அவள் கள்ளத்தனம் மிகுந்த நகைப்புடன் உரைத்தாள்..

அதில் அவன் மதுவூரும் போதை கொண்டான்..

"எப்பணியில் கொண்டு சேர்க்குமாம்..?" அவளைத் துளைக்கும் பார்வை பார்த்தபடி வினவினான்..

"நான் உரைக்க மாட்டேன்.." விரல்களால் வதனத்தை வெட்கத்துடன் மூடிக் கொண்டவள்

விரல்களின் இடைவெளியில் கள்ளத்தனமாக அவனை கண்டு களித்ததில் அவனது வேகம் மிகுதியானது..

"அடி கள்ளி..!" அவன் கரங்கள் பரபரத்தன..

"இந்த ஓர் இரவுப் பொழுதுதான் மன்னவரே..!" கொஞ்சல் கெலந்த கெஞ்சலுடன் அவள் மொழிந்தாள்..

"அதன் பின்பு..?"

"யாமம் முடிந்து வைகறை நெருங்கும் தறுவாயில் நாம் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் சன்னதியில் சதிபதியாக மாறியிருப்போம்.."

நர்மதாவின் கண்களில் கனவு மிகுந்தது.. மாறவர்மனின் தேகம் தகித்தது..

"அதன் பின்பு..?" அவன் தூண்டினான்..

"அதன் பின்பு.. அதன் பின்பு.."

உரைக்க இயலாமல் தடுமாறியவள் மீண்டும் கரங்களைக் கொண்டு வதனம் மறைத்துக் கொண்டாள்..

"நறுமுகை..!"

மாறவர்மனின் மார்பில் சாய்ந்தவள் அவன் வதனத்தை அண்ணாந்து நோக்கி இறைஞ்சினாள்..

"நம்மை சதிபதியாக்கும் காஞ்சியின் மன்னவராக நீங்கள் திகழ வேண்டும் அரசே..! இதுவே எனது ஆசை..!"

"நிச்சயம் தமது ஆசையை நிறைவேற்றுவேன் தேவி..!"

மாறவர்மன் வாக்குக் கொடுத்தான்..

“காஞ்சியை நான் கைப்பற்றுவேன்.. எனது தேவியாக உன்னை காஞ்சியின் மகாராணியாக்குவேன்.. இது நான் செய்யும் சபதம்.. எழுத்தாணி கொண்டு பொறித்து வைத்துக் கொள் நறுமுகை.. இன்னும் சில தினங்களில் உனது மாறவர்மன் காஞ்சிக்குத் தலைவனாக ஆவேன்..”

‘எனது மாறவர்மன்..!’ சிவிகையின் உள்ளே அமர்ந்த வண்ணம் நடந்த நிகழ்வுகளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நர்மதா தேவியின் நெஞ்சம் இனித்தது..

அவளது மாறவர்மன் அதே பொழுதில் சிவிகையைப் பார்த்தான்.. பிரிந்திருந்த திரைச்சீலைகளின் ஊடே அவள் வதனம் கண்டு விட்டவனின் கண்கள் மலர்ந்தன.. நொடிப் பொழுதில் அவன் இமை சிமிட்டியதில் அவளது முகத்துக்குள் கிளர்ச்சி உண்டானது..

‘கள்வன்..!’

அவனது அடாத செயலை அவள் ரசித்தாள்..

‘உடன் வருபவர் எவரேனும் கண்சிமிட்டலைக் கண்டு விட்டால் யாது செய்வது என்ற பயம் துளியளவாவது இவனிடம் உறைந்துள்ளதா..? என்ன ஒரு திண்ணாணக்கம்..!’

அவன் துணிவில் அவள் மனம் லயித்தாள்.. அவளது புன்னகையை ஒட்டி ஒட்டி அவன் புரவியை செழுத்தியதில் அவளது மனம் உல்லாசம் கொண்டது..

அவள் மனம் கவர்ந்த கள்வன்.. அவள் பொருட்டு காஞ்சிக்கு வருகை தந்து கொண்டிருந்ததில் அவள் சிறகில்லாமல் வானில் பறந்தாள்..

'இவன் என்னுடையவன்..'

அருகில் உராய முனையும் அவனது அடாவடித்தனம் மிகுந்த கரங்களைப் பார்த்தபடி அவள் எண்ணிக் கொண்டாள்..

'இவன் எனக்கே எனக்கானவன்.. என் இறுதிவரை எனைத்தவிர்த்து வேறொரு பெண்ணை மனதாலும் நினையேன் என்ற வாக்கை எனக்களித்திருப்பவன்..'

ஆனந்த அயர்வுடன் விழி மூடினாள் நர்மதா... மூடிய இமைகளுக்குள் ஹொய்சாள நாடு வந்தது.. அரண்மனையின் விழாக்களில் அந்தப்புற மாதர்களில் ஒரு மாதாக அவள் தாய் அமர்ந்திருந்தது நினைவில் வந்தது..

விழாக்கள் மாறும்.. அந்தப்புர ராணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.. ஒவ்வொரு விழாக்களின் போதும் பட்டத்து ராணியை பக்கத்தில் இருத்திக் கொள்ளும் மன்னன்.. அத்தருணத்தில் புதிதாக மணந்திருக்கும் ராணியை மட்டும் பிரத்யேகமாக ஒரு பார்வை பார்த்து வைப்பான்.. அந்தப் பார்வை நர்மதாவின் தாயான தரங்கிணி தேவியின் மீது படிந்ததே இல்லை..

"நீ பிறந்த பின்பு பல ராணிகள் வருகை புரிந்து விட்டனரே மகளே..!"

நர்மதாவின் கேள்விக்குச் சமாதானம் கூறினாள் தரங்கிணி.. இவற்றை உரைக்கும்போது ஏன் அவள் விழிகளில் துன்பத்தின் சாயல் இல்லை என்று தனக்குள் வினவிக் கொள்வாள் நர்மதா..

"இதுதான் வாழ்வென்று ஆனபின்பு துன்பப்பட்டு யாது பயன் நர்மதா..? யாம் துன்புறுவதால் மட்டும் எமது துன்பம் விலகி ஓடிப் போகப் போகிறதா..? துன்பத்தின் நிழலில் வாழ வேண்டுமென்ற எனது விதி விதிக்கப் பட்டதுதானே..? அதை மாற்ற எம்மால் இயலுமா..? அதை விடுத்து.. துன்பத்தின் நிழலிலும் நகைத்து வாழப் பழகிக் கொண்டால் இந்த வாழ்வை எதிர்கொண்டு வாழ்ந்து முடித்து விடலாம்தானே.."

மகளின் மனதை வாசித்து அறிந்து கொண்டதைப் போல மெல்லிய புன்முறுவலுடன் அதற்கும் விளக்கம் உரைப்பாள் தரங்கிணி.. சில தருணங்களில் அவளைக் காணும் போது..

'இவள் தபஸ்வினி..!' என நினைத்துக் கொள்வாள் நர்மதாதேவி..

'எனது தாயுடன் தந்தை சுகித்திருந்த தினங்கள் சொற்பமாகவே இருந்திருக்க வேண்டும்.. அத்தினங்களின் கூடலில் என்னைக் கருவுற்று பெற்றிருக்க வேண்டும்.. நான் பிறந்த சில தினங்களில் எமது தந்தை புதிய மணம் ஒன்றை புரிந்து கொண்டார் எனும் போது.. எமது தாயை அவர் மறந்திருக்க வேண்டும்.. எனை விடுத்து வேறொரு

மகவு என் தாய்க்கு இல்லை என்பது.. அந்தத் தினங்களுக்கு அடுத்து அரசர் எம்தாயைக் காண வருகை புரியவே இல்லை என்பதை எடுத்துரைப்பதாகும்..'

நினைத்துப் பார்க்கையில் நர்மதாவின் விழியோரம் நீர் கசியும்.. வாழ்நாளில் சில தினங்களே கணவனின் அணைப்பு கிட்டுமென்றால்.. அவனை மணந்து வாழ வந்தவளின் மனம் என்ன பாடுபட்டிருக்கக் கூடும்..?

"எனக்கு மட்டுமா இந்நிலைமை..?"

அதற்கும் வினாவைக் கொண்ட விடை தரங்கிணியிட மிருந்தது..

"எனைப் போல பலராணிகள் உள்ளனரே.. அவர்களுக்கும் இதே நிலைதானே.. விதிவிலக்காக ஓரிரு ராணிகள் இருக்கக் கூடும்.. அவர்கள் அரசரின் அபிமானத்தை எவ்வகையிலோ பெற்றுவிட்ட பாக்கியசாலிகள்.."

தரங்கிணியின் நெடுமூச்சில் மலை உச்சியிலிருந்து குதித்து விடலாமா என்று நர்மதாவுக்குள் வேகம் வரும்..

'அவ்வாறா..?' அவளது பெண் மனம் பொருமும்..

'கணவனின் அபிமானத்தைப் பெற குலமங்கை யானவள் பல வகைகளில் முயற்சி செய்தல் வேண்டுமா..? எதன் பொருட்டு..? அவனுக்கான காதலுடன்.. அபிமானத்துடன் ஒருத்தி இருக்கும்போது.. அவள்மீது அவன் காதல் கொண்டு அபிமானத்துடன் வாழ வேண்டாமா..? அவை இல்லாவிடில் எதன் பொருட்டு

அம்மங்கையை அவன் மணம் புரிந்து கொள்ள வேண்டும்..? அவன் மாலை சூடி வாழ வா என்று அழைத்து வரும் மங்கை அதன் பின்னரும் அவன் மனதைக் கவர என்ன மார்க்கம் உள்ளது என்று சிந்திக்க வேண்டுமா..?'

எண்ணக்கூட விழையாமல் அருவெறுப்புடன் முகம் சுளிப்பாள் நர்மதா தேவி..! அது போன்ற சிந்தனைகள் வரும்போது.. அதைப் போன்ற வாழ்வுதானே அவளுக்குக் கிட்டப் போகிறது என்ற அச்சத்தில் அவள் தேகம் நடுங்கும்..

கடிவாளமிட்டு லாயத்தில் அடைத்து வைப்பதைப் போல.. அரச குல மங்கையருக்கும் மங்கலநாண்களை அணிவித்து அந்தப் புரத்தில் அடைத்து வைக்கின்றனரே.. இது போன்ற மரபுக்களை உடைய அரசகுலத்தில் பிறவாமல் சாமானியர்களின் இல்லத்தில் மகளாக பிறப் பெடுத்திருக்கக் கூடாதா என்று அவள் வருந்தியபோது..

"அங்கும் இதே கதைதான்.." என்றாள் நர்மதாவின் அந்தரங்கத் தோழி..

"யாது உரைக்கிறாய்..?" நர்மதா அதிர்ந்து வினவினாள்..

"ஆம் இளவரசி..! எனது பாட்டனாருக்கு சொந்தமாக ஒரு ஓலைக்குடிசையும்.. ஒற்றைப் பனைமரமும் மட்டுமே உள்ளன.. அவருக்கு பலதாரம்.. அதில் ஒரு தாரத்திற்குப் பிறந்த என் தந்தைக்கு ஓலைக்குடிசையிலும்.. ஒற்றைப் பனைமரத்திலும் கரமளவு கூட பாகம் கிட்டவில்லை..

இருப்பினும் எனது தந்தை ஐந்தாறு மணங்களை அயர்வின்றி செய்து கொண்டார்.. அதில் ஓர் மனைவிக்குப் பிறந்த புதல்விதான் நான்.. இளவரசி..!"

"என்ன அநியாயம் இது..!"

"இதை நியாயமென்று ஆண்கள் உரைக்கிறார்களே.."

"இதை ஏனென்று கேட்க எவருமில்லையா..?"

"எவர் இருக்கிறார்..? நியாய் சபையை அணுகினால் அங்கு நியாயம் கூற வருபவருக்கு நான்குக்கு மேல் மனைவியர் உள்ளார்கள்... அவரை அடுத்து மந்திரியை அணுக முயன்றால்... அவரது இல்லமெங்கும் மனைவியர்கள் உள்ளனர்.. அரசர்களைப் பற்றிக் கூறவே வேண்டாம்.. இதில் எவரிடம் சென்று நியாயம் கேட்பது இளவரசி..?"

"அரசர் எவ்வழியோ.. அவ்வழிதானே மக்களும் செல்வார்கள்..?"

நர்மதா தேவிக்கு வெறுத்துப் போய் விட்டது.. அவளுக்கென்று ஓர் அகம் உள்ளது.. அதில் ஒருவனின் நினைவு மட்டுமே உள்ளது எனில்.. அந்த ஒருவனின் அகத்திலும் அவளைப் பற்றிய நினைவு மட்டும்தானே இருத்தல் வேண்டும்..?

"இது சொப்பனத்தில்தான் நிகழக் கூடும் இளவரசி..!"

நர்மதாவின் தோழி உரைத்த கூற்றைப் பொய்யாக்க.. இதோ அவளுக்கே.. அவளுக்கு என்று மாறவர்மன் வருகை தந்து விட்டான்..

மெதுவாக அசைந்து சென்ற சிவிகையில் முய்யாரமாக சாய்ந்து பட்டுத்துணியின் இடைவெளியில் மாறவர்மனையே உண்ணுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்த நர்மதாதேவிக்கு அவனைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.. அவனது ஆஜானுபாகுவான கம்பீர தோற்றமும்.. ஆண்மையின் பொழிவும்.. முகவடிவின் எழிலும் அவளை காந்தம் போல கவர்ந்திழுத்தன..

இத்துணை எழில் கொண்ட ஆண்மகன் அவளுக்கு மட்டும் சொந்தமானவனா..?

நம்ப முடியாத ஆனந்தத் திகைப்புடன் அவள் காதலுடன் அவனைப் பார்த்தாள்..

விண்மீது நிலவு பவனி வந்து கொண்டிருந்தது.. .அவளது உள்ளத்தில் ததும்பிய அமைதியில் அவள் மெதுவாக கானமிசைத்தாள்.. அதை செவியுற்ற மாறவர்மன் விழிகள் மின்ன அவளைப் பார்த்தான்.. அந்தப் பார்வையில் .அவளது உள்ளத்தில் உவகை பொங்கியது..

“அழுதைப் பொழியும் நிலவே..! - நீ
அருகில் வராததேனோ..?
அருகில் வராததேனோ..?”

சிவிகையின் பட்டுத் துணியை மெலிதாக விலக்கி .அவள் பாடியதில் புலப்பட்ட அவளது எழில் வடிவத்தில் மாறவர்மன் மயங்கிப் போனான்.. அருகில் வரவா என்று .அவன் விழிகள் சமிக்ஞை செய்தன.. அவனது அந்தத் துணிவில் அவள் இதழ் மலர்த்தி நகைத்தாள் அவன்

இவ்விதம்தான் செய்வான் என்ற செல்லச் சாடல் அவள் மனதில் எழுந்தது..

“இதயம் மேவிய காதலினாலே..
ஏங்கிடும் அல்லியைப் பாராய்..
புதுமலர் மீதினில் ஆசை மேலிட..
புன்னகை வீசி ஆறுதல் கூற..
அருகில் வராததேனோ..?”

அவள் அல்லி மலரைப் போலதான் இருந்தாள்.. நிலவின் ஒளியில் அவளது தேகத்தின் நிறம் அல்லி மலரின் வண்ணத்தைப் போலவே இருந்ததில் மாறவர்மன் மயக்கம் கொண்டான்.. அவளது விழிகளில் தெரிந்த ஏக்கம் அவனுக்கானது என்பதில் அவளது சிவிகையில் புகுந்து.. அவளை கவர்ந்து சென்றுவிட வேண்டுமென்ற துடிப்பு அவனுக்குள் ஏற்பட்டது..

அவ்வாறு கவர்ந்து செல்ல இயலாமல் அவனது கரங்களை அவள் பிணைத்து வைத்திருப்பதில் ஏக்கப் பெருமூச்சு அவனுக்குள் எழுந்தது.. அவள் மீதான தாபம் அவனுக்குள் அதிகரித்தது..

“மனதில் ஆசையை மூட்டியபின்னே..
மறைந்தே போய் விடலாமோ..?”

இதை இவள் உரைக்கிறாளா என்ற சினம் அவன் கண்களில் துளிர்ப்பதில் அவள் இன்பம் கொண்டாள்.. இரு.. விடியல் வந்தவுடன் உன் கழுத்தில் மங்கலநாணை பூட்டிய பின்னர் உன்னை ஓர் வழி ஆக்குகிறேன் என்று அவன் விழிகள் கொக்கரிப்பதை உள்ளம் துள்ள அவள் அவதானித்தபடி தொடர்ந்து இசைத்தாள்..

"இனிமை நினைவும் இதயக்கனவும்..
கனவாய் கதையாய்..
மறைந்திடும் முன்பே
அருகில் வராததேனோ..?"

அவளது இசையென்னும் இன்ப வெள்ளத்தில் மூழ்கிக்கப் பட்டவர்களாக ஹொய்சாள நாட்டின் ..ை..வீரர்கள் உற்சாகமாக சிவிகையைச் சுமந்து முடிலார்கள்..

புரவியில் வந்த மாறவர்மனை தனது அண்ணன் ...ர்களில் ஒருவன் என்று நர்மதாவின் அந்தரங்கத் தோழி ...ை வீரர்களிடம் உரைத்திருந்தாள்..

"என் தமையன் ஊர் சுற்றிப் பார்க்க இங்கு வருகை ...ிருந்தான்.. இளவரசியிடம் அவனுக்கு பணியளிக்கும் ...ி சிபாரிசு செய்யக் கோரினான்.. அரண்மனைக்குத் ...ிரும்பி விட்டால் அவனது பணிக்காக நான் ...ியாரைத்தான் அணுக வேண்டியிருக்கும்.. இங்கானால் இளவரசியின் முன்னிலையில் என் தமையனை நிறுத்தி ...ுக்கொரு பணி அளியுங்கள் என்று கோரி விடலாம்.. ...ேதான் இளவரசியிடம் இவனை அழைத்துச் ...றேன்.. நமது வீரர் படைக்கு திடகாத்திரமான ஆள் ...தானே என்று உடனடியாக பணியில் சேரும்படி இளவரசி உத்தரவிட்டு விட்டார்.."

.ழகாக புனைந்து கூறிய அவளது கதையை நம்பி ... ஹொய்சாள படைவீரர்களுடன் ஒரு வீரனாக கலந்து ...யில் சென்று கொண்டிருந்தான் மாறவர்மன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



9

மைவிழியை மயக்கி விடும்
மந்திரத்தை எங்கு கற்றாய்..?

அனுரதாவின் பார்வை சொல்லியது என்ன என்று யாமினியால் அனுமானிக்க முடியவில்லை.. அப்படியொரு பார்வையை மகளை நோக்கிப் பார்த்து வைத்தாள் அனுராதா..

"என்னம்மா..?" தடுமாறினாள்..

"என்னத்த நொன்னம்மா..? நீ..? ரசிச்சு.. காபி குடிச்ச..? அதை நான் நம்பனும்..?"

"அம்மா.."

"பேசாம போயிரு யாமினி..! நானே செம கடுப்பில இருக்கேன்.. காலயில இருந்து நீ பண்ணி வைக்கிற கூத்தில கூறாம சன்யாசம் வாங்கிரலாம்ங்கிற முடிவோட இருக்கேன்.. நீ மேல.. மேல.. என்ன நோகடிக்காதே.."

"என்னம்மா இப்படியெல்லாம் கோவிச்சுக்கறிங்க..?"

"உன்னை கோவிச்சு எனக்கென்ன ஆகப் போகுது..? உங்கப்பா மாதிரியே நீயும் பேசாதே.. உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நான் உன்னைக் காரணமில்லாம கோவிச்சுக்கறேனா..? காலம் போன கடைசியில

உங்கப்பாவுக்கும் எனக்கும் டைவர்ஸ் வாங்கிக் கொடுத்துரனும்ங்கிற கங்கணத்தோட இருந்துக்கிட்டு நியாயம் பிளக்கக் கிளம்பிட்டியா..?"

"அம்மா.."

"போனா போன இடம்.. வந்தா வந்த இடம்.. எப்பப் பார்த்தாலும் மெகாலு பிடிச்ச தனமா கடலோரமாவே சுத்திக்கிட்டு இருக்கிறது.. உனக்கென்னடி.. எனக்குப் பெண்ணா பிறந்து தொலைச்சிட்ட.. இதுவே உனக்கு ஒரு மகள் பிறந்து அவ இப்படி உன்னைக் கலங்கடிச்சா உனக்கு எப்படியிருக்கும்ன்னு நினைச்சுப் பாருடி.. அப்பத் தெரியும் என் துயரம்.."

அனுராதாவின் ஆற்றாமையைக் கேட்டுக் கொண்டிருந்த பிரதாப்பின் மனம் வலித்தது.. மனைவி மீதும் துயரை அவரால் தாள முடியவில்லை.. எழுந்து சமையலறைக்குள் வந்தார்.. அவரைக் கண்டதும் அனுராதா முகம் திருப்பிக் கொண்டாள்..

"ஸாரி அனு.." பிரதாப் குற்ற உணர்வுடன் மன்னிப்புக் கேட்டார்..

"அவரை ஹாலுக்குப் போகச் சொல்லு யாமினி.." கோபம் குறையாமல் பேசினாள் அனுராதா..

"ஏதோ ஒரு யோசனையில பேசிட்டேன் அனு.."

"இதை நம்ப நானொன்னும் கேணச்சியில்ல யாமினி.. இவர் சிந்திக்கிறாராம்.. ஒரு கூடை பூவையும் ஒட்டு மொத்தமா என் காதில சுத்த வேணாம்ன்னு சொல்லி வை..

யோசிக்கிற ஆளைப் பாரு.. அதுக்கெல்லாம் தனி மூஞ்சி இருக்கணும்.."

"ஏண்டி.. என் மூஞ்சிக் கென்ன..?"

"என் வாயைக் கட்டி இழுக்காம அவர் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போகச் சொல்லு.. கரிச்சுக் கொட்ட றேனாம்.. சொல்ல வந்திட்டாரு.. இவருக்கு மட்டும்தான் மகள்.. எனக்கு தெருவில போகிறவளா..? பெத்தவருக்கே இப்படின்னா.. பத்து மாதம் வயித்தில சுமந்துவளுக்கு எப்படியிருக்கும்..?"

"அனு.."

"மனுசங்களோட நாக்கு எப்படியெல்லாம் பேசும்ன்னு எனக்கில்ல தெரியும்.. இவருக்கென்ன தெரியும்..? கடை விட்டா வீடு.. வீடு விட்டா கடைன்னு ஒத்தக் கோட்டில சுத்திவர்ற மனுசனுக்கு வயசுப் பெண்ணை எப்படி வளர்க்கனும்ங்கிற அறிவும், பொறுப்பும் எங்கிருந்து வரும்..?"

"இதுக்குத்தான் நான் கோபப் படறேன் அனு.. யாமினிக்கு என்னடி குறை..?"

"எதுவும் இல்லைன்னு நமக்குத் தெரியும்.. ஊருக்குத் தெரியுமா..? இவ வித்தியாசமா நடந்துக்கிறதை ஊர், உலகம் வேற மாதிரி பேசி வைத்துட்டா இவ எதிர்காலம் என்னவாகிறது..?"

மனைவியின் கேள்வியில் அர்த்தம் பொதிந்திருந்ததில் கதி கலங்கிப் போனார் பிரதாப்.. ஏற்கனவே அது போன்ற சில கேள்விகளை அவர் எதிர்கொண்டிருந்தார்..

"ஏன் பிரதாப்..? உங்க டாட்டர் யாமினி.. இருட்டின பின்னாடியும் கடலோரமாவே சுற்றிக்கிட்டு இருக்கே.. ஏன்..? ஏதாச்சும் லவ் பெயிலியரா..?"

கேட்டவரின் முகரையைப் பெயர்க்க வேண்டும் போல கோபம் கொண்ட பிரதாப்.. அதற்கு இணையாக அந்த மனிதரைத் திட்டித் தீர்த்து விட்டார்.. பிரதாப் பேசிய பேச்சில் அந்த நபர் பின்னங்கால் பிடறியில் பட ஓடி விட்டாலும்.. வெகு நாள்கள் வரை அந்தக் கவலை பிரதாப்பின் மனதை அரித்துக் கொண்டே இருந்தது..

'இவன் மத்தவங்ககிட்டப் போயி என்ன சொல்லி வைப்பானோ..'



10

மங்கலநாணை நீ பூட்ட - உன் மகாராணியாகும் பேறு பெற்றேன்..

கடல் மல்லையின் கூடாரத்தைப் போல காஞ்சியில் நர்மதா தேவி இருந்த மாளிகைக்குள் மாறவர்மணால் மறைந்திருக்க இயலவில்லை.. அவளது மாளிகையை காவல் செய்த வீரர்களுடன் காஞ்சியின் காவல்படையும் சேர்ந்திருந்ததில் அவனால் நர்மதாதேவியை எளிதில் அணுகிட இயலாமல் போனது..

"எங்கு செல்கிறாய் நண்பா..?"

மெதுவாக நகர முயன்ற மாறவர்மனை அருகிலிருந்த புரவிவீரன் தடுத்து நிறுத்தினான்..

'நான் எங்கு சென்றால் தமக்கு என்ன..?' என்று வார்த்தைகள் மாறவர்மனின் தொண்டைக் குழியிலிருந்து புறப்பட்டு வாய் வரை வந்து விட்டது.. அதை மீண்டும் தொண்டைக் குழிக்குள் தள்ளி விட்டான் அவன்..

"இம்மாளிகையை சுற்றிப் பார்க்கச் செல்ல நினைத்தேன்.."

நர்மதாதேவியின் விருப்பப்படி அவளது கழுத்தில் மங்கலநாணைப் பூட்டி அவனது மனையாட்டியாக்கி கவர்ந்து செல்லும்வரை அவன் யாரென்பதை வெளிப் படுத்தி விடலாகாது என்ற முன்னெச்சரிக்கையுடன் வினா எழுப்பிய வீரனுக்கு தன்மையாகவே விடையளித்தான் மாறவர்மன்..

"நீ என்ன உல்லாசப் பயணத்திற்கா வருகை தந்துள்ளாய்..?"

அந்த வீரன் வினவியதில் அருகிலிருந்த வீரர்கள் கரம் கொட்டி "ஹா.. ஹா.." என்று நகைத்து மகிழ்ந்தார்கள்..

"எதற்காக நகைக்கிறீர்கள்..?" அந்த வீரன் சீறினான்..

"தாம் என்னை பரிகசித்து விட்டீர்களாம்.. அதை இவர்கள் ரசித்து மகிழ்கிறார்களாம்.." மாறவர்மன் பற்களை நறநறத்தபடி விளக்கம் கூறினான்..

"இவர்கள் நகைப்பதில் தவறேதும் இல்லை.."

"எவ்வாறு இருக்கும்..? தமது பரிகாசத்தை ரசித்து அல்லவா இவர்கள் நகைக்கிறார்கள்..? அதில் தவறு இருக்காதுதான்.."

"தவறு உன்மீதுதான் வீரனே..!"

"அவ்வாறா..?"

"ஆம்..! தாம் எதற்காக பணியில் சேர்ந்தீர்கள்..?"

'ஹொய்சாள மன்னனின் புதல்வியைக் கடத்த..'

மறுபடியும் மெய் வருகை தந்து.. மாறர்மனின் வாயில் வந்து நின்று தொலைத்தது..

'உன்னை எவர் இங்கு அழைத்தது..?' என்று அதட்டி அதைத் தொண்டைக்குழிக்குள் அமிழ்த்தி வைத்து விட்டு.. பொய்யை வருக.. வருக.. என்று தாம்பூலம் வைத்து மாறவர்மன் அழைப்பு விடுத்தான்.. அவன் அழைத்த விதத்தில் மயங்கிப் போய் அதுவும் வந்தேன் என்று வருகை தந்தது..

"ஹொய்சாள படையில் வீரனாக பணி புரிய வந்தேன்.."

"தெரிகிறதல்லவா..?"

"தெரிகிறது.."

"பணி புரிய வந்தவன் பணியை விடுத்து ஊர் சுற்றிப் பார்க்க எண்ணுவது உசிதமாகுமா..?"

"ஆகாதுதான்.. ஆயினும்.. இவ்வூர் எழில் நிரம்பியதாக உள்ளது.."

"ஆம்.."

"இங்குள்ள மாளிகைகள் அற்புதமாக வடிவமைக்கப் பட்டுள்ளன.."

இதைக் கூறி விட்டு அருகிலிருந்தவனின் வதனத்தை மாறவர்மன் நோக்க.. அவன் துறவியைப் போல பதிலுக்கு நோக்கி விட்டு..

"என் வதனத்தை எதன் பொருட்டு பார்த்து வைக்கிறாய் நண்பனே..? அதில் எழுத்தாணி கொண்டு எந்தச் செய்தியும் பொறிக்கப் படவில்லையே.. என் விடைக்காக வதனம் நோக்கியிருந்தால் விடையைச் சொல்கிறேன்.. கேள்.. இதற்கும் எனது விடை ஆம் என்பதுதான்.." என்று அலுத்துக் கொண்டான்..

"அது மட்டுமல்ல அன்பனே..!"

"நண்பனே என்று அழை.. அன்பனே என்ற அழைப்பைச் செவி மடுக்க எனக்கு சகிக்கவில்லை.."

'எனக்கு மட்டும் சகிக்கிறதா..? உன் வதனத்தை நோக்கும் மங்கையர் அதை கோட்டானின் வதனமென்று எண்ணி அஞ்சி நடுங்கி விடுவார்களே.. அப்பேற்பட்ட வதனம் கொண்ட உன்னை அன்பனே என்று அழைக்கும் விதி வந்து எனக்கு வாய்த்து விட்டதே.. நான் யாது செய்வேன்..?'

"என்ன அப்பனே..! மனதிற்குள் என்னை வசை பாடுகிறாயோ..?"

'ஆஹா..! தெளிவாக கண்டு கொண்டாயே..'

"வசையை விட்டுவிடு.. நமக்கு அதைவிட முக்கியமான பல அலுவல்கள் உள்ளன.."

'உனக்கு என்று உரை..! நமக்கு என்று என்னையும் உன்னுடன் கூட்டுச் சேர்க்காதே.. இந்த மாறவர்மன் பாண்டிய நாட்டை மீட்க வேண்டிய அலுவலில் உள்ளான்.. ஹொய்சள நாட்டில் பணி புரிய வேண்டிய அலுவலில் இல்லை..'

"அது மட்டுமல்ல என்று ஏதோ உரைக்கவந்தாயே..?"

'எங்கே உரைக்க விட்டாய்..?'

"இப்போது அதை உரைக்கலாமே.."

'உரைக்கத்தானே ஆயத்தமாகிறேன்..?'

மாறவர்மன் எதையும் அறியாத பச்சிளம் சிசுவைப் போல வதனத்தை வைத்துக் கொண்டு வெண்மையாக நகைத்து வைத்தான்.. அந்தச் சிரிப்பில் பரிதாபம் கொண்ட அவ்வீரன்..

"அடடா..! இவ்வளவு வெகுளியாக உள்ளாயே.." என்று அனுதாபப் பட்டான்..

"அது தங்களுக்கும் தெரிந்து விட்டதா..?"

"தமது வதனத்தை நோக்கும் எவருக்கும் தெரியுமே.."

அவ்வாறா என்று நர்மதாதேவியிடம் வினவ வேண்டும் என்று எண்ணிக் கொண்ட மாறவர்மனுக்கு நகைப்புத்தான் வந்தது.. அடக்கிக் கொண்டான்..

"நல்லது நண்பனே..!"

"இது சரியான வார்த்தை.."

"ஆகட்டும் நண்பனே..! இனி அன்பனே என்ற விளிப்பை தவிர்த்து நண்பனே என்று விளித்து வைக்கிறேன்.."

"இவ்வாறுதான்.. கற்றுக் கொடுப்பதைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்து விடவேண்டும்.."

"நாம் என்ன ஆற்றாங்கரையிலா இருக்கிறோம்..?"

"காஞ்சி மாநகரில் நின்று கொண்டு இத்தகைய சம்சயமா..?"

"அல்ல நண்பனே..!"

"அஃது.."

"தாம்தானே கரை சேர்வுதைப் பற்றி உரைத்தீர்கள்..? அதனால் அல்லவோ இது காஞ்சி மாநகரா.. அல்லது ஆற்றங்கரையா என்ற சம்சயம் என்னுள் எழுந்தது..?"

அப்பாவி போன்ற வதனத்துடன் ஏதுமறியாத பச்சிளம் பாலகனாக மாறவர்மன் வினவி வைத்ததில்..

"ஐயோ பாவம்..!" என்று அனுதாபம் கொண்டான் அவ்வீரன்..

"யாமா நண்பனே..?"

"அல்ல.. தமை மணக்கப் போகும் நங்கையை பாவம் என்று அனுதாபம் கொண்டேன்.."

'பாரடா..' என்றிருந்தது மாறவர்மனுக்கு..

எவரைக் காவல் காக்கும் பணியில் உள்ளானோ.., அந்த ஹொய்சாள நாட்டு இளவரசியைக் குறித்து அனுதாபம் கொள்ளும் உணர்வே இல்லாமல் அவ்வீரன் பாவம் பட்டதில்..

"எமை மணக்கப் போகும் நங்கையைக் குறித்து தாம் அனுதாபம் கொள்ள யாது காரணம்..?" என்று வினவினான் அவன்..

"தம்மைப் போன்ற அப்பாவியை மணம் புரியும் நங்கை தமது வாழ்வு முழுவதும் என்ன பாடுபட வேண்டி வருமோ என்று எண்ணியே அனுதாபம் கொண்டேன்.." என்றான் அவ்வீரன்..

"அதைத் குறித்த அனுதாபம் தமக்கு வேண்டாம் நண்பனே..! அதை யாம் பார்த்துக் கொள்வோம்.. எம் வாழ்வைப் பற்றிய கவலையை விடுத்து.. தம் வாழ்வில் இடம் பெறப் போகும் நங்கையைக் குறித்து தாம் கவலை கொள்வதே சாலச் சிறந்தது.." உக்கிரமானான் மாறவர்மன்..

"எம் வாழ்வில் நங்கையருக்கே இடமில்லை அப்பனே..!"

"ஏன் நண்பனே..! தாம் பெண் கேட்கப் போவதை அறிந்ததும் மங்கையரின் கூட்டம் தமது ஊரைவிட்டுச் சொல்லாமல் விரைந்தோடி விட்டதோ..?" நகைக்காமல் வினவி வைத்தான் மாறவர்மன்..

'இவ்விவரத்தை இவன் எவ்வாறு அறிவான்..?' அவ்வீரனுக்கு தூக்கி வாரிப் போட்டு விட்டது..

'இவன் அப்பாவிதானா..?'

மாறவர்மனின் வதனத்தை உற்று நோக்கினான் மாறவர்மனோ.. இந்தப் பூனையும் பாலை சுவைக்குமா என்ற விதத்தில் கள்ளமில்லா வதனத்துடன் உற்று நோக்கிய வீரனின் கண்களை உற்று நோக்கி வைத்தான்.

'இவன் அப்பாவிதான்.. அறியாமல்தான் வினவியுள்ளான்..' அவ்வீரன் தெளிந்தான்..

"எமக்கு நங்கையரைப் பிடிக்காது.."

"நங்கையருக்குத் தம்மைப் பிடிக்குமா..?"

மறுபடியும் அவ்வீரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது மறுபடியும் அவன் மாறவர்மன் அப்பாவிதானா என்ற ஐயத்துடன் அவன்து வதனத்தை உற்று நோக்கினான். மறுபடியும் மாறவர்மன் பாலை சுவைக்கத் தெரியாத பூனையைப் போல வதனத்தை வைத்துக் கொள்ள மறுபடியும் மாறவர்மன் அப்பாவியே என்றத் தெளிவான (?) முடிவிற்கு அவ்வீரன் வந்தான்..

"அதை ஏன் அப்பனே வினவுகிறாய்..?"

"ஆகட்டும்.. வினவவில்லை.."

"அட..! ஒரு பேச்சுக்கு உரைத்தேன் அப்பனே..!"

"அவ்வாறா..?"

"அவ்வாறேதான்.. நங்கையருக்கும் எமக்கும் ஏழாம் பொருத்தம்.."

"ஓஹோ.."

"எமக்கு அவர்களைக் கண்டால் ஆகாது.."

"அவர்களுக்கு உம்மைக் கண்டால் ஆகவே ஆகாது.. சரியாக உரைத்து விட்டேனா..?"

"ம்ம்ம்.. ம்ம்ம்.."

"என்னவோ நண்பனே..! இந்த நங்கையரைப் புரிந்து கொள்வது என்பது எளிதான ஒன்றல்ல.."

"ஆம்.. அப்பனே.. ஆம்.."

'இதற்கு மட்டும் அடுத்தடுத்து ஆம் என்று உரை..' கடுப்பானான் மாறவர்மன்..

"நங்கையரைப் பற்றிய உரை நமக்கு எதற்கு..?"

"யாமே அறிவுறுத்த எண்ணினோம்.. நீயே உரைத்து விட்டாய்.. அவர்களைப் பற்றி நான் எண்ணுவதே இல்லை.."

"வீணான எண்ணங்களால் யாது பயனென்று எண்ணி இருப்பீர்கள்.." மாறவர்மனின் கேலிஉரையை புரிந்து கொள்ளாமல்..

"ஆம், ஆம் அப்பனே..! ஆம்.. ஆம்.." என்றான் அவ்வீரன்..

"போகட்டும் விடுங்கள்.. அடுத்த பிறவியிலாவது தாம் நங்கையர் இல்லாத ஊரில் பிறக்க வேண்டிக்

கொள்கிறேன்.. தற்போது காஞ்சி மாநகரின் எழிலுக்கு வருவோம்..”

“வந்து விட்டால் போகிறது..”

“இத்தகைய எழிலுடன் கூடிய நகரத்தை சுற்றிப் பார்க்க ஆசை கொண்டால் அது தவறாகுமா..?”

இதை செவிமடுத்த வீரன் நெடுமூச்சை விட்டான்.. சுற்று முற்றும் பார்த்து விட்டு மாறவர்மனின் செவியோரமாக..

“தவறாகாதுதான்.. இதை எவர் அரசர் குலத்திடம் உரைப்பது..? அவர்கள் சுற்றுலா வருவார்கள்.. நாம் அவர்களை காவல் புரிய வேண்டும்.. கண் கவரும் கட்டிடங்களும், காட்சிகளும்.. நம் முன் அணி வகுத்து நின்றாலும் நாம் அவற்றை ஏறெடுத்தும் பார்த்தல் தகாது.. இது காலம் காலமாக வீரர்களின் சிரங்களின் மீது சுமத்தப் பட்டிருக்கும் பாரம் நண்பா..!” என்று கிசுகிசுத்தான்..

“இதை சப்தமாகவே உரைக்கலாமே..”

“என்ன அலுவலுக்கு..? புரட்சிப் படையை துவக்க யத்தனிக்கிறேன் என்று என்னைக் காராக்கிருகத்தில் தள்ளி விடட்டும் என்று யுக்தி செய்கிறாயா..?”

“யுக்தியா..? அதற்கு என்ன பொருள் அப்பனே..?”

“அதைக் கூறு.. இதற்குக் கூடப் பொருள் அறியாத உன்னிடம் போய் புரட்சிப் படையைப் பற்றி உரைக்கிறேன் பார்.. என்னைக் கூற வேண்டும்..”

"என்ன கூற வேண்டும்..?"

"எது வேண்டுமானாலும் கூறிக் கொள்.."

"மாங்காய் மடையர் என்று கூறலாமா..?"

"யாது உரைத்தாய்..?"

"ஏன் நண்பனே கோபம் கொள்கிறாய்..? மாங்காய் மடையன் என்று மரியாதை குறைவாக தம்மை உரைத்தேனா..? அல்லவே.. மாங்காய் மடையர் என்று மரியாதையுடன்தானே உரைத்தேன்..? இதற்கா இத்துணை கோபம்..?"

அவ்வீரனை, சிரத்தால் நீர் அருந்த வைத்துக் கொண்டிருந்தான் மாறவர்மன்.. சிகையைப் பிய்த்துக் கொள்ளலாமா.. அல்லது சுவரில் சிரத்தை மோதிக் கொள்ளலாமா.. என்ற பரிசீலனையில் அவ்வீரன் இறங்கியிருந்தபோது.. அவனைக் காக்க வந்த யட்சக் கன்னிகையாய் நர்மதா தேவியின் அந்தரங்கத் தோழி அங்கு வருகை தந்தாள்.. வந்தவள் மாறவர்மனை அன்பொழுக பார்த்து வைத்து..

"தமையனே.." என்று அழைத்து வைத்தாள்..

'தமையனா..? இவளது தமையன் இங்கு எங்கு உள்ளான்..?'

மாறவர்மனின் விழிகள் சுழன்று அங்கிருந்த வீரர்களில் எவ்வீரன்.. அந்தத் தோழியின் தமையன் என்று அலசாவ ஆரம்பித்தன..

அந்தத் தோழியோ சிரத்தில் கரம் கொண்டு அடித்தபடி..

"இளவரசி..!" என்று பற்களைக் கடித்தாள்..

"எங்கே இளவரசி..? எங்கே இளவரசி..?"

தோழியின் தமையனைத் தேடுவதை மறந்து மாறவர்மன் பரபரத்துப் பாயப் போனான்..

'இளவரசியின் காதலர் என்னை படை வீரர்களிடம் மாட்டி விடாமல் விட்டு வைக்க மாட்டார் போல உள்ளதே..'

தோழி மறுபடியும் சிரத்தில் அடித்துக் கொள்ள முயன்று.. இறுதி நொடியில்.. மாறவர்மனின் அடாத செய்கைகளுக்காக சிரத்தில் அடித்து வைத்தால்.. கரங்களும், சிரமும்தான் வேதனை கொள்ளுமென்று தெளிந்து தாமதித்தாள்..

"தங்களைத்தான் தமையனே..!"

அவள் பற்களின் இடையே வார்த்தைகளை மென்று உமிழ்ந்ததில் மாறவர்மனின் அறிவில் ஆலயமணி ஒலித்தது..

'இவள் என்னையா தமையன் என்று அழைக்கிறாள்..?'

அவனது சந்தேகத்தை உறுதிப் படுத்துவதைப் போல பக்கத்தில் சிரத்தால் நீர் அருந்த வேண்டிய வேதனையிலிருந்து விடுபட்டு விட்ட உற்சாகத்துடன் நின்றிருந்த வீரன்..

"என்ன அப்பனே..? உனது தங்கை அழைக்கிறாள்.. [illegible]ருக்கு வந்த அழைப்போ என்று நெடுமரம் போல [illegible]யே.. ஆனாலும் நீ மிகவும் அப்பாவியாக உள்ளாய்.. [illegible]று இவ்வுலகில் காலம் தள்ளப் போகிறாயோ.." என்று [illegible]த்து வைத்தான்..

'இவரா அப்பாவி..?' தோழிக்குச் சிரிப்புத்தான் [illegible]து..

"பார்த்தாயா அண்ணா.. நான் அரண்மனையில் [illegible]முழியாக உள்ளதினால் தம்மை அடிக்கடி காண [illegible]வில்லை.. அதற்காக என் வதனத்தை மறப்பாயா..? [illegible]ன் உன்னை என் தமையன் இல்லையென்று எண்ணி [illegible] போகிறார்.."

அந்தத் தோழியின் விழிகளில் தெரிந்த எச்சரிக்கை [illegible]ஞையில் இதழ்களை மடித்துக் கடித்தான் மாறவர்மன்..

'இதை மறந்து விட்டேனே..'

"நான் எதன்பொட்டு அவ்விதமாக எண்ணப் [illegible]கிறேன்..? தமது தமையன் ஓர் அப்பாவி என்பதை [illegible]னிவாக நான் அறிந்து வைத்துள்ளேன்.." என்றான் [illegible]தப் படைவீரன்..

"ஆஹா..! தங்களைப் போன்ற தெளிவான மதியுடன் [illegible]ருக்கும் வீரர்களைப் பெறுவதற்கு ஹொய்சாள நாடு [illegible]ரும் பாக்கியம் புரிந்திருக்கிறது.. இவ்வாறே தெளிவுடன் [illegible]ருங்கள்.. விளங்கி விடும்.." எரிச்சலுடன் உரைத்தாள் [illegible]தாழி..

"ஆஹா..! அவ்விதமே..!" என்றான் படைவீரன்..

"இயலவில்லை.." தோழிக்கு சிரவேதனையாக இருந்தது..

"ஐயா..! தங்களால் படு அப்பாவி என்று கணிக்கப் பட்டிருக்கும் எனது தமையனாருடன் ஓரிரு வார்த்தைகள் பேச வேண்டும்.. அழைத்துச் செல்லவா.." கடுப்புடன் அந்த படைவீரனிடம் வினவினாள்..

"யாம் என்ன தமக்கு கணவனா..? தமது தமையனிடம் உரையாட எமது அனுமதி தமக்கு வேண்டுமா..? ஹி.. ஹி.." சகிக்க முடியாமல் நகைத்து வைத்தான் அவ்வீரன்..

"தேவைதான் எனக்கு.. தாம் எனக்குக் கணவராக வாய்ப்பதானால் காலம் முழுவதும் யாம் கன்னிகையாகவே காலம் கழித்து விடுவோம்.." உக்கிரத்துடன் அவனை முறைத்த தோழி..

"நீ வா அண்ணா..! உன்னாலதான் இத்தனையும்.." என்று கோபத்துடன் மாறவர்மனின் கரம் பற்றி இழுத்துச் சென்றாள்..

சற்றுத் தொலைவில் வந்ததும் மாறவர்மனின் கரத்தை விட்டுவிட்டு..

"மன்னிக்க வேண்டும் அரசே..! அந்தப் படைவீரனின் உளரலை என்னால் செவி மடுக்க இயலவில்லை.. இன்னும் ஓர் மணித்துளி அளவில் அங்கு நின்றிருந்தாலும்.. எனது இடையில் செருகியிருக்கும் கத்தியை அவன்

மார்பில் செருகியிருப்பேன்.. எனக்கு அவன் கணவனா..? ஈகிக்கவில்லை..” என்று தழைந்த குரலில் உரைத்தாள்..

“போகட்டும்.. விட்டு விடு தங்காய்..! அவ்வாறேனும் ஏதாவது ஒரு நங்கையின் கணவனாக தம்மை எண்ணிப் பார்த்துக் கொள்கிறான் அவன்.. அதில் அவனுக்கு ஒரு இன்பம்..”

“அதற்கு நான்தான் கிட்டினேனா..?”

“அதைக்கூறு.. என் பொருட்டுத்தானே தமக்கு இந்தச் சிரமம்.. இதற்காக நான்தான் தம்மிடம் மன்னிப்புக் கோர வேண்டும்..”

“அரசே..?...!...”

ஆச்சரியப்பட்டுப் போனாள் அந்த அந்தரங்கத் தோழி..! பாண்டிய நாட்டின் மன்னன்..! சோழர்குல சக்கரவர்த்தி குலோத்துங்க சோழருக்கு அறைகூவல் விடுப்பவன்..! ஹொய்சால நாட்டின் இளவரசியர்களில் ஒருத்தியான நர்மதா தேவியின் மனம் கவர்ந்த ஆணழகன்..! அவன் நர்மதாதேவியின் அந்தரங்கத் தோழியிடம் மன்னிப்புக் கோருவதா..?

“ஆம் தங்காய்..! எம்மைத் தமையன் என்று அழைத்த நீ எனக்குத் தங்கையே ஆவாய்.. தமது நலனில் நான் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.. அதை விடுத்து.. அப்படைவீரனை உளர அனுமதித்து விட்டேன்.. அது தவறல்லவா..?”

"எமது இளவரசி.. தக்க துணையையே தேர்ந்தெடுத்திருக்கிறார் அரசே..! தங்களைப் போன்ற பெருந்தன்மையான குணம் கொண்டவரின் மனைவியாகும் தகுதி பெற்றவர் எமது இளவரசி மட்டுமே.."

"அதை யாம் அறிவோம்.."

மாறவர்மனின் மலர்ந்த புன்னகையில் மனித நேயம் வெளிப்பட்டது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



10

பத்துவிரல் கொண்டு எண்ணினாலும்..
உன் முகத்தை மட்டுமே எண்ணத்தோன்றும்..

பிரதாப் மனைவி, மக்களின் மீது பாசம் கொண்டவர்.. அனுராதாவுக்கும், யதுநந்தனுக்கும் அவருடைய அதீத பாசத்தினால் ஏற்படும் பரிவும், காருண்யமும் தேவைப்பட்டதில்லை.. அவர்கள் சராசரி மனிதர்கள் எப்படியிருப்பார்களோ அப்படி இருந்தார்கள்..

யாமினி அப்படியில்லாமல் வித்தியாசமாக இருந்தில் அவரின் பரிவும், காருண்யமும் ஒட்டு மொத்தமாக அவளைக்காவல் செய்யும் பணியில் ஈடுபட்டன..

அனுராதாவின் தவிப்பும், துடிப்பும்.. அவரிடமும் இருந்தன.. ஆனால் அதைத் தாண்டிய கேள்வியொன்றும் அவர் மனதில் இருந்தது.

'யாமினி என்ன வேண்டும்ன்னா இதைப் போல [illegible] வைக்கிறா..?'

இல்லை என்பதை அவர் அறிவார்.. யாமினி [illegible]டிப்பட்ட பெண்ணில்லை.. பெற்றவர்களின் மனம் [illegible] எதையும் செய்யக்கூடாதென்ற எண்ணம் [illegible]ண்டவள்.. அவளுடைய விசித்திரமான நடவடிக்கை [illegible]க்கான காரணத்தைப்பற்றி அவளுக்கே எதுவும் [illegible]யாது எனும்போது அவளை நொந்து என்ன பலன் [illegible]டுவிடப் போகிறது..?

"உன் மனசு எனக்குப் புரியலைன்னா நினைக்கிற [illegible]..?"

பிரதாப்பின் குரல் கரகரத்ததில் அனுராதாவுக்கு [illegible]ழுகை வந்து விட்டது.. உதட்டைக் கடித்தபடி.. [illegible]யலறையின் ஜன்னல் பக்கமாக திரும்பிக் [illegible]ண்டாள்.. பிரதாப்பின் கைகள் அவளது தோள்படிந்து [illegible]ளை அவர் புறமாக திருப்பின.. மனைவியின் [illegible]ணீரில் அவர் துணுக்குற்றார்..

"அனு..? அழுகிறயா..?"

"இல்ல.. சிரிக்கறேன்.."

"அனு.."

"உங்களைப் போல புருசனும்.. உங்க மகளைப் [illegible]ல மகளும் கிடைச்சிருக்கிறவ.. சிரிச்சு மகிழாம [illegible]வா செய்வா..?"

என்னதான் இயல்பான பேச்சில் அவளது துயரத்தை [illegible] போட்டு மறைக்க முயன்றாலும் ஒரு கட்டத்திற்கு

மேல் அனுராதாவால் நடிக்க இயலவில்லை.. அவள் தேம்பலுடன் அவர் மார்பில் சாய்ந்தாள்.

"அனு.."

மனைவியை அணைத்துக் கொண்ட பிரதாப்பின் விழிகள் பனித்தன..

மகள்மீது மனைவி கொண்டிருக்கும் பாசத்தை அவர் அறியாதவரா என்ன..? அறிந்தும் மனைவியின் மனம் நோக பேசி விட்டதில் அவரது மனம் வலித்தது. மனைவியின் முதுகு தடவி மன்னிப்புக் கேட்டார்..

"ஸாரி அனு.."

"உங்க ஸாரியைக் கொண்டு போய் குப்பையில் போடுங்க.."

"தெரியாம பேசிட்டேன்.."

"இந்த டயலாக்கைக் கேட்டுக் கேட்டு என் காது புளிச்சுப் போச்சு.."

"இல்லடி.."

"என்னத்த இல்ல..? பொழுது விடிஞ்சு பொழுது போகிறதுக்குள்ள இதைப் போல எத்தனை பேச்சை பேசி வைக்கறிங்க..? யாமினியைக் கண்டிச்சு ஒரு வார்த்தை சொல்ல விட மாட்டேங்கறிங்க.. அவ என்ன என்னோட சக்களத்தி மகளா..?"

"சேச்சே..! என்ன வார்த்தை பேசற..? நான் ஏக பத்தினி விரதன்டி.. உன் முகத்தைத் தவிர வேற ஒருத்தி

[illegible]த்த நிமிர்ந்து பாத்திருப்பேனா..? என்கிட்டப் போய் [illegible]க்களத்தி.. அது.. இதுன்னு சொல்லிக்கிட்டு..! நீயே [illegible]சொல்லு.."

"என்னத்தச் சொல்ல..?"

"எதிர் வீட்டு நீலாம்பரி.. பார்க்கத் தகதகன்னு [illegible]ங்கச்சிலைபோலவே இருக்கா.. அவ சிரிச்சா சூரியனே [illegible]க்கு யாரு போட்டியா வந்திருக்கிறதுன்னு நின்னு [illegible]ார்ப்பான்.."

பிரதாப் பாவம்.. அந்த ஊரில் உள்ள அவர் வயதுக்கு [illegible]ற நடுத்தர வயதுப் பெண்களின் அழகைப்பற்றிக் கூறி.. [illegible]அவர்களையெல்லாம் அவர் திரும்பிப் பார்த்திருக்கிறாரா [illegible]என்று மனைவியிடம் கேட்கத்தான் விளக்கம் சொல்ல [illegible]ஆரம்பித்தார்..

அந்த விளக்கத்தில் அனுராதாவின் அழுகை நின்று [illegible]து.. அவள் விலகி நின்று புருவங்களை சுருக்கி.. [illegible]டை ஓர் மார்க்கமாக வளைத்து..

"ஓ.." என்றாள்..

அந்த 'ஓ' என்ற ஒலி எழுப்பிய வித்தியாசத்தில் [illegible]ளிந்திருந்த விபரீதத்தை உணராமல் பிரதாப் [illegible]ோகத்துடன் தமது விளக்கவுரையில் கண்ணும் [illegible]ருத்துமாக இருந்தார்..

"நம்ம பக்கத்து வீட்டு மேகலாவையே [illegible]ருக்கயேன்.."

"நீங்கதான் எடுத்துக்கிட்டு இருக்கீங்களே.. அதையே கண்டினியு பண்ணுங்க.. நான் எடுத்தா நல்லாயிருக்காது.."

"அதுவும் சரிதான்.."

"நீங்க சொன்னா அது சரியாத்தானே இருக்கும்.."

அனுராதா பல்லைக் கடித்த சப்தம் வெளியில் இடித்த இடியின் சப்தத்தில் அமுங்கியது..



11

இன் வாள் முனையின் கூர்மையினை.. உன் விழிகளின் முனைகள் வாதுக்கு அழைப்பதோ..?

அந்த இரவு நேரத்தில் காஞ்சியின் எழில் பன்மடங்கு கூடியுள்ளதைப் போல் மாறவர்மனுக்குத் தோன்றியது.. கோட்டை வாசலில் ஒளிர்ந்த தீப்பந்தங்கள் நகரைச் சுற்றிலும் ஒளிவட்டம் போல ஒளிர்ந்த காட்சி காணத் தெவிட்டாததாக இருந்தது.. இல்லங்களில் ஏற்றப் பட்டிருந்த விளக்குகளை அங்கிருந்தே அவனால் கண்டு களிக்க முடிந்தது.. நர்மதா தேவி தங்கியிருந்த விருந்தினர் மாளிகையிலும்.. அதையொட்டிய மாளிகைகளிலும் ஏற்றி வைக்கப் பட்டிருந்த அன்னப்பட்சியின் எழில் வடிவை முகப்பாகக் கொண்ட மிகப் பெரும் குத்து விளக்குகளில் குடம் குடமாக ஊற்றப்பட்டிருந்த எண்ணையில் மிதந்த

கனத்த திரிகள்.. இரவைப் பகலாக்கும் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன..

குளிர்காற்றை உணர்ந்தவனாக.. நர்மதா தேவியின் தோழியை நோக்கி மெலிதாக புன்னகைத்தான் மாறவாமன்..

"இந்த இரவுப் பொழுது இனிமை நிரம்பியதாக உள்ளது.. இது போன்ற இனிமை நிரம்பிய இரவை இதற்கு முன்னர் யாம் கண்டதில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.."

அதனை செவி மடுத்த தோழியின் விழிகள் வியப்பினால் மலர்ந்தன..

"என்ன ஒரு ஆச்சரியம்..!"

"எதைக் குறித்து இத்துணை வியப்பு கொள்கிறாய் தங்காய்..?"

"அரசே..! படைவீரர்களின் முன்னிலையில் தாங்கள் என்னைத் தங்காய் என அழைத்தால் போதும்... தனிமையில் அது தேவையற்றது... யாம் இளவரசியின் தோழி மட்டுமே.."

"அதனால் என்ன..? இளவரசியின் தோழி எனக்குத் தங்கையாக ஆகக் கூடாதென்று எவரும் நியதி வகுத்து வைத்துள்ளனரா..?"

"மன்னர் மன்னா..! தாங்களோ அரசர்.."

"இருக்கட்டும்.. அரசருக்கு தங்கைகள் இருக்கக் கூடாதா..?"

"இருக்கலாம்.. அவர்கள் அரச குலத்தில் பிறப்பெடுத் தவர்களாக இருத்தல் வேண்டும்.. எமைப் போன்ற சேடிப் பெண்ணாக இருத்தல் கூடாது.."

தோழியின் விழிகள் கலங்கியதில் மாறவர்மன் அனுதாபம் கொண்டான்..

"அரசர் மகளுக்கும், சேடிப் பெண்ணிற்கும் வாழ்க்கை முறை வேறு, வேறாக இருக்கலாம்.. உறவுமுறை ஒன்றுதான் சகோதரி...! எமது பாண்டிய குலத்தைப் பற்றிய பல செய்திகளை உரைக்கும் ராமாயண காவியத்தின் தலைவன் ராமன்.. வனவாசியான குகனோடு நட்பு பூண்டபோது.. 'தம்மோடு ஐவரானோம்..' என்று உரைக்கிறான்.. அதன் பொருளை நீ அறிவாயல்லவா..?"

"அறிவேன் அரசே..! தசரத சக்கரவர்த்தியின் தவப் புதல்வர்கள் ராமர், லட்சுமணர், பரதர், சத்ருக்கணர் என்ற நால்வராவார்.. இவர்கள் நால்வரோடு, குகனையும் சகோதரனாக இணைத்து ஐந்து சகோதரர்களாக ஆனோம் என்று ராமர் குகனை பெருமைப் படுத்துகிறார்.."

"அவ்வுரை குகனை கௌரவிப்பதற்காக வந்த உரை மட்டுமல்ல தங்காய்..! ராமரின் அகத்திலிருந்து வெளிவந்தது.. உள்ள பூர்வமான வார்த்தைகளையே உச்சரிப்பவர் அவர்.. ரகுராமனின் திருவாய்மொழியின் வார்த்தைகள் வெறும் சொற்களல்ல.. காலம் கடந்தும் நிற்கும் தெய்வீக வாசகங்கள்.."

"ஆம் அரசே..!"

"அப்பேற்பட்ட ராமச்சந்திர மூர்த்திக்கே ஓடமோட்டும் வேலைவாசியான குகன் சகோதரனாக ஆகும் போது.. இந்த பிராமணவர்மனுக்கு தாம் சகோதரியாக ஆக மாட்டாயா..?"

"தன்யளானேன் அரசே..!"

அத்தோழி கரம் குவித்து மாறவர்மனை வணங்கினாள்.. அவளது விழிகள் பனித்து கண்ணீர் துளிகளை உகுத்தன..

"இப்பிறவியில் எமக்கிது போதும்.. நான் பிறப்பெடுத்த போதே தாயை இழந்தவள்.. பல துயரங்களைக் கொண்ட எனது தந்தைக்கு நான் அவரது ஒரு சுமையின் மகள் என்ற மெய்யே மறந்து போய் விட்டது.. எனது தாய்வழிப் பாட்டியின் இல்லத்தில் வளர்ந்தேன்.. துரதிர்ஷ்டவசமாதிகத்தில் எனது பாட்டியும் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்று இறையுலகம் சென்று விட்டார்.. தனித்து.. அநாதையென்ற நாமத்துடன் நின்றவளுக்கு இராஜவரசி அடைக்கலம் கொடுத்தார்.. அவரது சேடிப் பெண்களில் ஒருத்தியான என்னை அவரது அந்தரங்கத் தோழியாக ஏற்றுக் கொண்டார்.. அதன் பலனாக தாங்கள் எனையனைத் தங்கை என்று அழைத்துள்ளீர்கள்.."

"இது வெறும் அழைப்பல்ல தங்காய்..! தாம் எனது சகோதரியே ஆவாய்..!"

"வந்தனம் தமையனாரே..! எவருமற்ற இந்த அகிலத்துக்கு மன்னர் மாறவர்மன் தமையனாராக கிடைத்துள்ளார்.. இதைவிட பெரும்பேறு இந்த அவனியில் இல்லை.."

தோழியின் நெகிழ்ச்சியில் மாறவர்மனும் மனம் நெகிழ்ந்தான்... அவனது கரத்தில் அனிந்திருந்த கங்கணத்தைக் கழற்றித் தோழியிடம் கொடுத்தான்.

"யாது இது..?" தோழியின் விழிகள் விரிந்தன..

"தமது தமையனின் அன்புப் பரிசு தங்காய்.."

"மன்னரே..! இது பொன் ஆபரணம்.."

"ஆம்.."

"வைரங்கள் பதிக்கப் பட்டுள்ளன.."

"இதற்கும் எமது விடை ஆம் என்பதே ஆகும்.."

"இத்துணை உயரிய ஆபரணத்தை நான் எவ்விதம் பாதுகாப்பேன் அரசே..?"

"தமது திருமணம் நடக்கும் தறுவாயில் நான் எங்கிருப்பேனென்று எவர் அறிவார் தங்காய்..? ஓர் தமையனாக திருமண அகுவையில் உள்ள தங்கைக்கு சீர் செய்ய யாம் விழைந்தோம்.. பெற்றுக் கொள்.. இந்த ஆபரணத்தைக் கொண்டு நூறு சவரன்களுக்கும் மேலான மதிப்பீடுகளைக் கொண்ட ஆபரணங்களை தம்மால் பெற இயலும்.."

"தமையனாரே..!"

"நெகிழ்ச்சி தேவையற்றது சகோதரி..! எம்மைத் தமையனென்று மனமாற அழைத்த தமக்கு சீர் செய்ய வேண்டிய கடமை எமக்குள்ளது.. ஆபரணத்தை பாதுகாத்துக் கொள்.. இதைக் கொண்டு வளமான மண வாழ்வைத் தொடங்கு.."

"தங்களின் கருணைக்கு வானமே எல்லை மன்னவரே..!"

"இதை விடுத்து.. எதன் பொருட்டு எம்மைத் தாம் அழைத்து வந்துள்ளாய் என்ற விவரத்தை தாம் விளம்பலாமே.."

"உரைக்கிறேன் அரசே..! யாமம் முடிந்ததும்.. எமது இளவரசி.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரின் சன்னதிக்கு வருகை தந்து விடுவார்.."

"தோழியரும், காவலரும் புடைசூழ அவர் ஏகாம்பரேஸ்வரரைத் தரிசனம் செய்யப் போகும் சேதியை அறிந்து எமக்கென்ன பயன் ஏற்படப் போகிறது..?"

"அல்ல தமையனாரே..! இளவரசி அதிகாலையில் ஆலய கோவிலுக்கு வருகை தருவார் என்று உரைக்கப் பட்டுள்ளது.. யாமம் முடிந்த புலராத விடிகாலைப் பொழுதில் அவர் துயில் கொண்டிருப்பார் என்றே அனைவரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள்.."

"ஆலே..! தமது இளவரசி மதி நுட்பம் கொண்டவர்.."

"அல்லாமலா தங்களை அவரது மணாளராக தேர்வு செய்துள்ளார்..? மதிநுட்பம் கொண்டவராக உள்ளதினால் அன்பு மனித நேயம் கொண்ட மன்னர் மாறவர்மரை அவரது மணாளராக அவர் தேர்வு செய்துள்ளார் அரசே..!"

தோழியின் வினயமான உரையில் மாறவர்மன் இதழ் விரித்து நகைத்தான்..

"இளவரசியின் மதிநுட்பம் எமது தங்கைக்கும் தொற்றிக் கொண்டதில் வியப்பேதும் இல்லை.. இது காஞ்சி மாநகரம் தங்காய்.. இங்கே ஏகாம்பரேஸ்வரருக்கு சூடம் ஏற்றி சாம்பிராணி காட்டினாலாவது பலன் கிடைக்கும்.. அதை விடுத்து எமக்குச் சாம்பிராணிப் புகையைப் போட்டால் யாது பலன் கிட்டும்..?"

"பலன் கருதி சாம்பிராணி போட்டால் அதற்கு மதிப்பற்றுப் போய் விடும் அரசே..!"

"இளவரசியின் தோழிக்கு பேசக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்..? நன்று..! இளவரசி காஞ்சியின் ஏகாம்ப ரேஸ்வரர் சன்னதிக்கு வரும் போது யாம் அங்கிருக்க வேண்டும்.. அதைத்தானே உரைக்க வந்தாய்..?"

"ஆம் அரசே..!"

"ஆகட்டும்.. அனைத்து மண ஏற்பாடுகளுடன் அவளுக்காக நான் ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் காத்திருப்பேன் என்பதை உரைத்து விடு.."

"அரசே..!"

"சொல் அம்மா..!"

"யாழும் இளவரசியும் சுரங்கப் பாதையின் வாயிலாக கோவிலுக்குள் வருகை தந்து விடுவோம்.. தாம் எவ்விதம் அங்கு வருகை தரப் போகிறீர்கள்..?"

"காரிகைகளுக்குத்தான் சுரங்க மார்க்கம்... ஆடவருக்கு பல மார்க்கம்.. அதில் ஓர் மார்க்கத்தை கடைபிடித்து யாம் தமக்கு முன்பே அங்கிருப்போம்.."

"எமது இளவரசி சரியாகத்தான் கணித்துள்ளார்.."

தோழியின் இதழ் சுளித்த நகைப்பில் நர்மதாதேவி .அவனைக் குறித்து யாது உரைத்தாள் என்பதை அறியும் .ஆர்வம் கொண்டான் மாறவர்மன்..

"எவ்விதம் கணித்தாளாம்..?"

அவனது உரிமையான வினாவை செவி மடுத்த தோழிக்கு உற்சாகமாக இருந்தது.. அந்த உரிமையான ளிளிப்பை நர்மதா தேவியிடம் சென்று உரைத்தால் அவள் ாணம் எவ்வாறெல்லாம் மகிழக்கூடும் என்பதனை கற்பனை ொய்து களித்தாள் தோழி..

"மன்னர் சாகசம் மிகுந்தவர் என்று எமது இளவரசி ர ரைத்தார்கள் தமையனாரே..! ஊசி முனையில் கூட தாம் .ரண்மனையை வடித்து விடுவீர்களாம்.. விந்திய மலைச் ாரல்களில் ஒரு பாதம் இங்கே.. மறுபாதம் அங்கே என்று ாகி விடும் திறமை பெற்றவராம்.. அனுதினமும் தங்களின் ழைப் பற்றியே உரைத்துக் கொண்டிருப்பார் எங்களின் ளவரசி..! யாம் கூட அவரிடம்.. மன்னரின் புகழ்பாடினால் ங்களின் திருவாய்க்கு வலியே ஏற்படாது இளவரசி என்று ரிகசித்து நகைப்போம்.. அப்பரிகாசத்தை இளவரசி ொருட்படுத்தவே மாட்டார்கள்.."

"இன்றைய தினம் முழுவதும் நறுமுகை என்னருகில் ானே இருந்தாள்..? இதில் எப்பொழுதில் தம்மிடம் ித்தனை புகழுரைகளை உரைத்தாள்..?"

"நறுமுகையா..? எவர் அது தமையனாரே..? எமது ளவரசியைத் தவிர்த்து வேறு ஒரு மங்கையின்

எண்ணமும் தமது மனதில் உள்ளதா மன்னவரே..? எமது இளவரசி இதனை செவி மடுத்தால் துடித்துப் போய் விடுவாரே. இது தாங்கள் எம் இளவரசிக்கு இழைக்கும் அநீதியல்லவா..?"

"அல்ல தங்காய்..!"

"போதும் அரசே..! தாங்கள் எமது தமையனாராக இருத்தல் வேண்டாம்.. எமது இளவரசிக்கு அநீதி இழைத்த தங்களின் பாசமும் எனக்கு வேண்டாம்.. இவ்வுலகில் தம் தாய்க்கு அடுத்து தங்களிடம் மட்டுமே எமது இளவரசி உயிரை வைத்தார்.. அத்தகு காதலைப் பெற்ற தங்களின் மனம் பிற மங்கையை நாடலாமா..?"

"யாம் உரைக்க வருவதை செவி மடுக்க மாட்டாயா..?"

"யாது உரைக்கப் போகிறீர்கள் அரசே..? ஆண்டாண்டு காலமாக ஆண்கள் உரைக்கும் செருக்கு மிகுந்த மொழிகளைத்தானே உரைக்கப் போகிறீர்கள்..? கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே சாசனம் செய்து அளிக்கப்பட்ட சொத்து.. ஆண்களுக்கும் கற்புக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.. என்றுதானே உரைக்கப் போகிறீர்கள்..?"

"அடடா..! யாது இது தங்காய்..?"

"எம்மைத் தங்களின் தங்கையென்று விளிக்க வேண்டாம் அரசே..! எமது இளவரசிக்கு அநீதி இழைத்த தங்களின் தங்கையாக நான் இருத்தல் வேண்டாம்.. பல

மங்கையரை எண்ணுவதும்.. அவர்மீது காதல் கொள்வதும்.. பல விவாகங்களைப் புரிந்து குதிரை லாயத்தில் குதிரைகளைக் கட்டி அடைப்பதைப் போல.. பல மனைவியரைக் கொணர்ந்து இல்லத்தில் அடைப்பதும் தானே ஆண்களின் பிறப்புரிமை..? ஒருத்திக்கு ஒருவன் என்ற மரபை நிர்ணயம் செய்த ஆண்குலம்.. ஒருவனுக்கு ஒருத்தி மட்டுமே போதும் என்று ஏன் திருப்தி கொள்ளவில்லை..? அந்த நிர்ணயத்தை ஏன் அவர்கள் நிர்ணயிக்கவில்லை..? இத்தகைய அநீதியைப் புரிந்த தங்களின் பரிசைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள் அரசே..!"

தோழியின் கொதிப்பில் கனிந்து விட்டான் மாறவர்மன்.. தோழியின் மனதில் இத்துணை அன்பை வற்படுத்தியுள்ள நர்மதாவின் நினைவில் அவன் மனம் மேலும் கனிந்தது..

"நறுமுகை என்பவளின் மீது எமக்கு ஆழ்ந்த காதல் என்பதனை தமது இளவரசியிடம் உரைத்துப் பார் தங்காய்..!"

"எதன்பொருட்டு இத்தகு குரூர மனம் கொண்டீர்கள் அரசே..? எமது இளவரசியின் இதயம் வெடிப்பதைக் காண இத்துணை இச்சை கொண்டீர்களா..?"

"அல்ல தங்காய்..! அவளது நாமத்தை அவளிடம் உரைத்தால் அவளது இதயம் எவ்வாறு வெடித்துச் சிதறும்..?"

"என்ன..? எமது இளவரசியின் நாமம் நர்மதா தேவி என்பதல்லவா..?"

"அது அவளைப் பெற்றவர்கள் இட்ட நாமம்..! இது நான் அவளுக்கு இட்ட நாமம்..! எனக்கு மட்டும் அவள் நறுமுகை..!"

"அவ்வாறா..?"

தோழியின் வதனம் மலர்ந்து விட்டது.. அதில் பிரதிபலித்த மெய்யான மகிழ்வில் மாறவர்மனின் மனம் நனைந்தது..

"நறுமுகையின் மீது தமக்கு இத்துணை பிரியமா..?"

"ஆம் அரசே..! உறவென்று உரைக்க எவருமில்லாத எனக்கு அனைத்துமாக உள்ளது இளவரசிதான்.. அவரின் நலனுக்காக நான் எனது உயிரையும் விடுப்பேன்.."

தோழியின் உணர்ச்சி மயமான உரையில் மாறவர்மன் மனம் நெகிழ்ந்தான்.. அன்பெனும் கயிறு கொண்டு அந்த சேடிப் பெண்ணை பிணைத்து வைத்திருக்கும் நர்மதா தேவியை நினைத்து மனதுக்குள் பெருமிதம் கொண்டான்..

"இனியாவது நறுமுகை எப்பொழுதில் எனது சாகசத்தைப் பற்றி உரைத்தாள் என்று கூறலாம் அல்லவா..? இன்றைய தினத்தில் அவள் கூறியிருக்க இயலாது.."

"தங்களின் கணிப்பு மிகச் சரியானதே.. இளவரசி இன்றைய தினத்தில் இதைப் பற்றி உரைக்கவில்லை.."

"பின்னே..?"

"அனுதினமும் தங்களின் சாகசங்களைக் குறித்தே உரையாடிக் கொண்டிருப்பார்கள்.. தங்களின் வீரத்தைப் பற்றி உரைப்பதாக இருந்தால் அறுசுவை உணவைப் போல அவ்வுரை எம் இளவரசிக்கு அமிர்தமாக இருக்கும்.."

"பாரடா இதை.. எங்கிருந்து எனைப் பற்றிய செய்திகளை அவள் தருவிப்பாள்..?"

"யாம் எதன் பொருட்டு உள்ளோம்மாம்..? அனுதினமும் தங்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்துக் கொணர்ந்து வந்து எமது இளவரசியின் செவிகளில் கொட்டுவதுதானே எமது தலையாய பணி..!"

"சிறந்த பணி..!"

மனம் விட்டு நகைத்தான் மாறவர்மன்.. அவனது யதனம் அறியாமல் அவன்மீது ஆழ்ந்த காதலைக் கொண்டிருந்த ஹொய்சாள நாட்டின் அரசகுமாரியின் ரீது அவனுக்குள் ஊற்றாக காதல் பெருக்கெடுத்தது.. அவளிடம் தன்னை ஒப்புக் கொடுத்து விட வேண்டு மென்று அவனது தேகம் பரபரத்தது.. அத்தருணமே நர்மதா தேவியை ஆண்டுவிட அவன் துடித்தான்..

"விடைபெறுகிறேன் அரசே..!"

"செல் தங்காய்..! குறித்த பொழுதில் நான் அவளை ணைப்பேன் என்ற எனது உறுதியை அவளது செவிகளில் ரைப்பாய்.. மாறவர்மன் நறுமுகையை மணம் புரியச் த்தமாக உள்ளான் என்பதை அவளிடம் தெரிவிப்பாய்.."

"அவ்வாறே உரைக்கிறேன் அரசே..!"

"அனுதினமும் எனை நினைத்த எமது காதலியை எனது மனைவியாக்கிக் கொள்ளப் போகும் நாழிகை நெருங்கி விட்டது என்று அவளிடம் உரைப்பாய்.."

"ஆகட்டும் அரசே..!"

பணிவும்.. பரிவுமாக தோழி விடை பெற்றுச் சென்று விட்டாள்.. நர்மதா தேவியைப் பற்றிய இனிய நினைவுகளுடன் திரும்பி வந்த மாறவர்மனின் வதனங்களில் பிரதிபலித்த மந்தஹாசப் புன்னகையில்.. அருகிலிருந்த வீரன்..

"ஏனப்பா.. தமது தங்கையிடம்தானே உரையாடி வந்தாய்..? என்னவோ காதலியைப் பற்றிய செய்திகளை செவி மடுத்து வந்தவனைப் போல வதனத்தில் மலர்ச்சி அப்பிக் கிடக்கிறதே.." என்று வினவி வைத்தான்..

"காதலியைப் பற்றி எமக்கென்ன தெரியும் அன்பனே..!"

"அன்பனா..?"

"நண்பனே..! சரியாக உரைத்து விட்டேனா..?"

"அஃ்து..! இதை எத்தருணமும் நினைவில் கொள்.."

"எத்தருணமும் நினைவில் கொள்ள வேண்டிய தேவை எமக்கு இல்லை.. இன்னும் சற்றுப் பொழுதில் நான் உன்னைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கும்.. அதன் பின்னர் நீயும், நானும் யாரோ.. எவரோ என்று ஆகிவிடப் போகிறோம்.. ஆதலினால் இவ்வழைப்பைப் பற்றி யாம்

நினைவில் கொண்டு ஆகப் போவது எதுவும் இல்லை அப்பனே..!"

"சற்றுப் பொழுதில் பிரிந்து சென்று விடுவாயா..?"

"ஆம்..! எனது தந்தை வழிப் பாட்டிகளில் ஒருவர் எமது அனைத்து சொத்துக்களுக்கும் எம்மை வாரிசாக அறிவித்து உள்ளாராம்.. தற்போதுதான் எனது தங்கை வந்து சேதியைச் சொன்னாள்.."

"மெய்யாகவா..?"

செவிமடுத்த வீரன்.. தனது மார்பில் கைவைத்து ஸ்தம்பித்தான்..

"உமக்கெதற்கு இத்துணை அதிர்ச்சி..?"

"எமக்கும் பல பாட்டிகள் உள்ளனர்.."

"இருக்கத்தானே செய்வாரகள்.."

"அவர்களில் ஒருவருக்கும் ஒரு காணி நிலம் கூட சொந்தமென்று இல்லை.. தாம் கொடுத்து வைத்தவன்.."

"அல்ல நண்பனே..! எமது பாட்டியின் தாய் நிலத்தில்தான் மஞ்சக்காணி நிலமாக அத்துணை சொத்துக்களையும் எமது பாட்டிக்கு கொடுத்து வைத்தார்களாம்.."

மாறவர்மனின் நகைச்சுவையைக் கூட உணராமல் விழிகளில் பொறாமையைத் தேக்கி.. அவனை உறுத்துப் பார்த்தான் அவ்வீரன்..

"பிறந்தால் உனைப் போல பிறந்திருக்க வேண்டும்.."

"பிறந்த பின்பு புலம்பி யாது பயன்..? சற்றுப் பொழுதில் உனை விட்டுப் பிரிய வேண்டும் நண்பனே..! எமது நினைவாக இப்பரிசை பெற்றுக் கொள்.."

தமது இடையிலிருந்த சிறு பையில் கரம் விட்டு பொற்காசுகளை அள்ளி அவ்வீரனுக்கு பரிசளித்தான் மாறவர்மன்.. அதில் பொறிக்கப் பட்டிருந்த பாண்டிய நாட்டின் மீன் லச்சினையைக் கூடக் காணாமல் புளகாங்கிதம் கொண்டான் அந்தப் படைவீரன்..

"தமது மனது பரந்த மனது..! ஊரார் சொத்துக்கு உடந்தைப்பட்டவனாக மாறி விட்டாய் அல்லவா.. வள்ளல் போன்ற கொடை தன்மை வருகை தந்து விடும்தான்.. உழைத்துப் பிழைத்திருந்தால் ஒவ்வொரு பொற்காசையும் பத்திரப் படுத்தியிருப்பாய்.."

அந்தப் பொழுதிலும் அவனது மனக்காய்ச்சலை வெளிப்படுத்தி விட்டுத்தான் ஓய்ந்தான் அந்த படைவீரன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



11

சொந்தமில்லா சொந்தத்தினை..
சொந்தம் கொண்டு தேடுகின்றேன்..

மழைக்காற்று சுழன்றடித்து மழை வரும் தருணத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.. சுழன்றடித்த காற்றில் சிக்கிச் சுழலாமல் யாமினியின் வேலை

நியமன உத்தரவை தாங்கி வந்திருந்த கடிதம் அவள் கவனிப்பதற்காக தோட்டத்து ஊஞ்சலில் காத்திருந்தது..

அதை அறியாமல் யாமினி டிவியில் கவனமாக இருக்க.. சமையலறையில் மனைவியை சமாதானம் செய்ய வந்த பிரதாப்.. வந்த வேலையை மறந்து வாய் விட்டு வனவாசம் போய் கொண்டிருந்தார்..

"அவளோட கேரளத்து அழகில யாருடா இந்த மோகினின்னு நின்னு பாக்காத ஆம்பளை நம்ம தெருவில இருக்கானா..?"

"இல்லவே இல்லன்னு இப்ப நீங்க சொல்லித்தானே எனக்கே தெரியுது.." அனுராதாவின் விழிகள் தீம்பிழம்பாகின..

"நம்ம அடுத்த வீட்டு அம்புஜத்தைப் பாரு.."

"நீங்கதான் தினம்தினம் அவளைப் பாத்திருக்கீங்களே.. இது தெரியாத கேணச்சிகிட்டப் போயி அவளைப் பாக்கச் சொல்கிறீங்களே.. ஆனாலும் என் அயித்தானுக்கு இம்புட்டு எகத்தாளம் இருக்கக் கூடாது."

"ஹா.. ஹா.."

"எதுக்கு இந்த சிரிப்பு..?"

"நீ ஜோக் அடிச்சியே.."

"ஜோக்கு..? நான் அடிச்சேன்..? இருக்கட்டும்.. இருக்கட்டும்.."

"அந்த அம்புஜம் பேரிலதான் மாமி..! இந்தத்தெரு ஆம்பளைகளுக்கு அவதான் சாமி..!"

"நீங்களும் கற்பூரம் ஏத்தி சாம்பிராணி காட்டியிருப் பீங்களே.."

"பின்னே..? அந்தப் பொண்ணு அழகு தெய்வமில்ல.."

"அவ பொண்ணுக்கு போன வாரம்தான் கல்யாணமாச்சு.."

"இதையேண்டி இப்பச் சொல்ற..?"

"இல்ல.. அவள பொண்ணுன்னு சொன்னாப்புல இருந்தது.. அதான்.. தெளிவுரையை சொல்லி வைச்சேன்.."

"என் வயசுக்கு அவள பொண்ணுன்னுதான சொல்ல முடியும்..?"

"அதுசரி.. அதுசரி.. கணக்கெடுப்பு முடிஞ்சிருச்சா..? இல்ல.. இந்த மகாபலிபுரத்தில இருக்கிற அத்தனை வீட்டுப் பொம்பளைகளோட அழகை வர்ணிச்ச பின்னாடிதான் முடியுமா..?"

அதுவரை படு உற்சாகமாக வர்ணனை செய்து கொண்டிருந்த பிரதாப் அனுராதாவின் குரலில் ஒளிந்திருந்த புயலை இனம் கண்டு கொண்டவராக..

"அனு..!" என்று அரண்டு போனார்..

"அனுதான்.. இந்த வீட்டில குப்பை கொட்டற அனுராதாதான்.. எதுத்த வீட்டு நீலாம்பரி.. பக்கத்து வீட்டு மேகலா.. அடுத்தவீட்டு அம்புஜம்ன்னு அத்தனை பொண்ணுகளோட அழகையும் கட்டின பொண்டாட்டி கிட்டயே வர்ணனை செய்யற ஆம்பளைக்கு கழுத்தை

நீட்டிட்ட வன்கொடுமைக்கு ஆளாகிட்ட பாவப்பட்ட பிறவிதான்..”

“ஐயோ அனு..”

“இந்த ஒப்பாரிய நான் போய் சேர்ந்த பின்னால வையுங்க.. ரொம்பப் பொருத்தமாக இருக்கும்..”

“இல்லடி அனு..”

“இல்லதான்.. அதான் வெட்ட வெளிச்சமா தெரிஞ்சு போச்சே.. உங்க மனசில நான் இல்லதான்.. ஊரில இருக்கிற மத்த பொம்பளைகதான் இருக்காங்க..”

“அநியாயமாய் பேசாதேடி..”

“யாரு..? நானு அநியாயமா பேசறேன்..? அப்படி என்ன அநியாயத்தைப் பேசிப் புட்டேன்..? எதிர் வீட்டு ஆகாம்பரத்தோட அழகைப் பாத்து சூரியனே தெறிச்சு ஓடிப் போயிருச்சுன்னு சொல்லிட்டேனா..?”

“அனு..!” பிரதாப்புக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது..

அனுராதா அதைப் பற்றியெல்லாம் கண்டு கொள்வதாகே இல்லை.. அவள் சும்மாவே பிரதாப்பை வாறுத்து எடுத்து விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பாள்... இப்போதோ.. அவரைக் ‘கைம்மா’ பண்ணுவதற்கான அனைத்துக் காரணங்களையும் பிரதாப்பே லட்டு.. லட்டாய் அவளது கைகளில் கொடுத்து தொலைத்து விட்டார்... அவள் விட்டு வைப்பாளா என்ன..?

"இல்ல.. பக்கத்து வீட்டு பரமசிவத்தோட மலையாள அழகில மயங்காத பொம்பளைக இந்தத் தெருவிலேயே இல்லைன்னு சொல்லிட்டேனா..?" அவள் அப்பாவியாய் விழி விரிக்க..

"வேணாம்டி அனு.." என்று அலறிவிட்டார் பிரதாப்..

"இதுக்கே அலறினா எப்படி..? இன்னும் அடுத்த வீட்டு அன்பழகன் மாமாவைப் பத்திச் சொல்லியாகனுமே.."

"மாமாவா..?"

"ஆமா.. அம்புஜம் உங்களுக்கு மாமின்னா.. அன்பழகன் எனக்கு மாமாதான்.."

பிரதாப்பின் அமைதிக்கு வேட்டு வைப்பதிலேயே குறியாக இருந்தாள் அனுராதா..



12

உன்னோடு ஓர் தினமே..
வாழ்ந்தாலும் சம்மதமே..

யாமவதி.. அலங்கார நிலவோடு.. விண்மீன்களையும் துணைக்கழைத்து ஒய்யாரமாக அளவளாவிக் கொண்டிருந்தாள்..

நகர்ந்து செல்லாத மணித்துளிகளில் சலிப் படைந்தான் மாறவர்மன்.. படைவீரர்களுக்கான குளத்தில் நீராடி.. புத்தாடைக்கு மாறியவனை ஹொய்சாள நாட்டின் வீரர்கள் சந்தேக நோக்கோடு வினா எழுப்ப வில்லை..

மாறவர்மனின் மீது காய்ச்சல் கொண்ட படைவீரன்.. அவன் பாட்டியின் சொத்துக்களுக்கு அதிபதியாகி விட்ட செய்தியை பரப்பியிருந்தபடியால் காஞ்சியின் காவல் படைவீரர்கள் கூட நட்புடன் புன்னகை செய்தனர்..

"புறப்பட ஆயத்தமாகி விட்டாயா..?" படைவீரர்களில் ஒருவன் வினவினான்..

"ஆம்.. யாமத்தில் பயணித்தால்தான்.. விடியலின் போது இல்லம் சேர இயலும்.."

"மெய்தான்.. எவ்வாறு பயணப்படப் போகிறாய்..? புரவியிலா..?"

"எம்மிடம் புரவியேது..? என்னதான் யுத்த களத்தில் புரவியேறிச் சென்றாலும்.. சொந்த அலுவலுக்கு நடந்து தானே பயணப்பட வேண்டியுள்ளது..?"

மாறவர்மன் சோகமாக வதனத்தை வைத்துக் கொண்டான்.. இனம் இனத்தோடு என்பதைப் போல.. வினவா எழுப்பிய வீரனும் ஓர் நெடுமூச்சை வெளியேற்றி ஆமோதிப்பாக சிரத்தை அசைத்தான்..

"விடைபெறுகிறேன் நண்பனே..!"

"சென்று வா அப்பனே...! உனது பாட்டியின் சொத்துக்களுக்கு அதிபதியானதும் முதல் பணியாக எனக்கென்று ஒரு புரவியை விலைபேசி வாங்கி விடு.."

"நிச்சயமாக.. அதுவன்றோ எனது முதல் பணி..! அழகிய புரவியொன்றை வாங்கிட வேண்டுமென்பது எனது நெடுங்கால சொப்பனம் நண்பனே.."

"சொப்பனம் நிறைவேறும் காலம்தான் அணுகி உன்னருகில் வருகை தந்து விட்டதே.. ம்ஹீம்.. எனக்கும் தான் ஏகப்பட்ட பாட்டிகள் உள்ளனர்.."

'இவனும் ஆரம்பித்து விட்டானா..?'

மாறவர்மன் விரைவாக அவ்விடத்தை விட்டு நீங்கினான்.. நர்மதாவின் தோழி கூறியிருந்த இடத்திற்கு சென்று.. மறைவாக கட்டப் பட்டிருந்த அவனது புரவியின் கடிவாளத்தை அவிழ்த்து வெகு பிரியத்துடன் அதன் பிடறி முடியினை வருடி கொடுத்தான்..

"கொள்ளும், புல்லும் குறைவறக் கிட்டியதா..?"

என்னவோ குதிரை அவனுடைய வினாவை புரிந்து கொண்டு விடையளிக்கப் போவதைப் போல அதனுடன் உரையாடினான்..

வியப்பிலும் வியப்பாக அது சிரத்தை ஆட்டி ஆமென்ற விடையை அவனுக்கு அளித்தது..

"நன்று தோழனே..! குறைவறக் கிட்டாமல் எப்படி யிருக்கும்..? உன்னை பராமரித்தவள் இந்த மாறவர்மனின் காதலியின் தோழியல்லவா..? கொள்ளும், புல்லும் குறைவற அளித்திருப்பாள்.."

அவன் கூறுவதை செவி மடுப்பதைப் போல குதிரை அசைவற்று நின்றது.. அவன் உரைத்து முடித்ததும் காதுகளை மடக்கி முன்னங்கால்களை உயர்த்தி லேசாக கனைத்தது..

"சப்தமில்லாமல் உன் மகிழ்வைக் கொண்டாடு.. இரு நாட்டின் படைவீரர்களில் எவரும் நம்மைப் பற்றி அறியக்கூடாது.. புரிந்ததா..?"

மாறவர்மனின் கண்டிப்பிற்கு புரவி சிரத்தை அசைத்து வைத்தது..

"அவ்வாறுதான்... புரிந்து நடந்து கொள்... இவர்களுடன் போராட நேர்வதைப் பற்றி எமக்கு யாதொரு கவலையும் இல்லை.. அது மகிழ்வூட்டும் செயலே... ஆனால்.. எனக்காக என் காதலி ஏகாம்பரேஸ்வரனின் ஆலயத்தில் காத்திருக்கிறாள்.. அவளுக்கு மங்கலநாணைப் பூட்டி.. மாலை சூட்டி.. எனது மனையாட்டியாக ஆக்கி கொள்ளல் வேண்டும்.. அதன் பொருட்டே நாம் அமைதி பேண வேண்டியுள்ளது.."

இப்போதும் புரவி சிரத்தை அசைத்து வைத்ததில் அதைப் பிரியத்துடன் தழுவிக் கொண்டான் மாறவர்மன்..

"கெட்டிக்காரன்டா நீ.. புரிந்து கொண்டாய்.. இனி நாம் செல்லலாமா..?" புரவியில் தாவி ஏறினான்..

மாறவர்மனின் மனதை அறிந்ததைப் போல புரவி குளம்படியோசையை எழுப்பாமல் மெதுவாக விரைந்தது.. ஏகாம்பரேஸ்வரரின் கோவிலுக்கு அருகாமையில் வந்ததும்.. மாறவர்மன் தோளில் இருந்த கயிறை எடுத்து.. கோவிலின் மதில் சுவருக்கு வெளியே கிளை பரப்பியிருந்த மரத்தின் உச்சாணிக் கிளையை நோக்கி வீசினான்.. கயிறு மரத்தில்

பிணைந்ததும் அதை இறுக்கிப் பிணைத்தவன்.. புரவியின் முதுகில் தட்டி.. அதன் செவியோரமாக சரிந்து..

"இவ்விடத்திலேயே நில் தோழா..! நான் சென்று.. வென்று என் மனையாட்டியுடன் திரும்புகிறேன்.." என்றான்..

புரவி புரிந்ததைப் போல அசையாமல் நின்றது.. மாறவர்மன் மரத்தில் பிணைந்திருந்த கயிற்றைப் பற்றியபடி சரசரவென மதில் சுவரில் ஏறினான்.. மதிலை ஒட்டியிருந்த மரக்கிளையில் பாதம் பதித்தவன்.. கோவிலுக்குள் குதித்து விட்டான்..

கோவிலுக்கு வெளியே.. மதில் சுவரின் இருள் மறைவில் அவனுக்காக புரவி காத்திருக்க.. மாறவர்மன் கோவிலுக்குள் சப்தம் எழுப்பாமல் நடந்தான்..

இரவுப் பொழுதின் பூஜை முடிந்ததும்.. ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் பட்டுத்திரைச் சீலையை இழுத்து விட்டு.. கர்ப்ப கிரகத்தின் வாயில் கதவைப் பூட்டி விட்டு அர்ச்சகர்கள் அவரவர் இல்லம் தேடி துயில் கொள்ள சென்றிருந்தார்கள்.. எவரும் அற்ற கோவிலில் ஆங்காங்கே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன..

மாறவர்மன் அவனது மேலாடையை மூடியிருந்த வஸ்திரத்தை களைந்து சன்னதியின் முன்பாக விரித்துப் பரப்பினான்.. நெருக்கிக் கட்டப்பட்டிருந்த மலர் மாலைகளும்.. மங்கல நாணும் வஸ்திரத்தில் இருந்தன..

சன்னதியின் அருகாமையிலிருந்த மண்டபத்தின் தூண்களில் ஒன்று சப்தம் எழுப்பியது.. மாறவர்மன் தூண் மறைவில் மறைந்து அது என்ன சப்தம் என்று உன்னிப்பாக அவதானித்தான்..

மண்டபத்தின் தூண் விரிந்து வழி விட்டது.. உள்ளே இருந்த சுரங்கப் பாதையின் படிக்கட்டுக்களில் இருந்து நர்மதா தேவியும்.. அவளது தோழியும் வெளிப்பட்டார்கள்.. அவர்கள் வெளிப்பட்டவுடன் தூண் ஒன்று சேர்ந்து ஒன்றும் அறியாத தூணைப் போல காட்சி அளித்தது..

'வந்து விட்டாள்..'

மாறவர்மன் மறைவிடத்தை விட்டு வெளிப்பட முனைந்த போது நர்மதாவின் மருண்ட பார்வையை கண்டு விட்டான்... விளையாட விரும்பியவன் மறை விடத்திலேயே நின்றுவிட.. நர்மதாதேவி பதட்டத்துடன் கோவிலைச் சுற்றி பார்வையால் துழாவினாள்..

"வந்து விடுவாரா சகியே..?" என்று பதறினாள்..

"பதட்டம் வேண்டாம் இளவரசி..! மன்னர் மாறவர்மர் நிச்சயமாக கோவிலுக்குள் வருகை புரிந்து விடுவார்.." தோழி தைரியம் அளித்தாள்..

"நாழிகை கழிகிறதே.. உஷாக்கால பூஜைக்காக அர்ச்சகர்கள் ஆலயம் நோக்கி வந்து விட்டால் யாம் யாது செய்வோம்..?"

"மன்னர் பொறுப்புள்ளவர் இளவரசி..! தங்களைக் காலங்க வைக்க மாட்டார்.. உஷாக்காலம் வருகை புரியும்

வரைக்கும்.. வருகை தராமல் தங்களை சோதிக்க மாட்டார்.. நம்பிக்கையுடன் காத்திருங்கள்..”

“அவரை நம்பாமல் எவரை நான் நம்புவேன் தோழி..! ஆயினும் என் மனம் அச்சம் கொள்கிறது.. எதிரி நாட்டில் ஒற்றை வீரராக என் ஒருத்தியின் வேண்டுகோளுக்காக வருகை புரிந்திருக்கிறார்.. எவரேனும் அவரை அறிந்து.. போருக்கு அழைத்திருந்தால்..?”

நர்மதா தேவியின் அச்சம் தோய்ந்த குரலில் இளக்கம் கொண்ட மாறவர்மன் மறைவிடத்தை விட்டு வெளியே வந்தான்..

“அதோ.. அரசர் வருகை புரிந்து விட்டார்..”

தோழியின் ஆனந்தத்தில் பரபரத்து திரும்பிப் பார்த்த நர்மதாதேவியின் வதனத்தில் உணர்வுகளின் கலவை ஊர்வலமாக சஞ்சரித்தன.. அவளது விழிகளில் ஒளிர்வில் அசைவற்று நின்றான் மாறவர்மன்..

“வருகை புரிந்து விட்டீர்களா..?”

காலம் காலமாக அவனுடன் இல்லறம் நடத்தி.. பல தினங்கள் பிரிந்திருந்து மீண்டும் சந்திக்கும் போது.. மனையாட்டி எழுப்பும் குரலாக அவள் குரல் இருந்ததில் அவன் மனம் உருகியது..

“ஆம் தேவி..!”

“நான் அச்சம் கொண்டு விட்டேன் அரசே..!”

“எதன் பொருட்டு அச்சம் கொள்ள வேண்டும்..? இந்த மாறவர்மன் வாக்குத் தவறியதாக வரலாறு இல்லை தேவி..”

–

"அதை யாம் அறிய மாட்டோமா..?"

"அறிந்தும் ஏன் கலக்கம் கொள்ள வேண்டும்..?"

"தெரியவில்லை.. தங்களின் வருகையைப் பற்றிய ரகசியம் இருந்தும்.. தங்களின் வதனத்தைக் காணும் வரை.. நான், நானாக இல்லை அரசே..!"

மழலை போல அவள் உரைத்ததில் மனம் கனிந்தான் ராகவர்மன்.. அவளது நடுங்கும் தளிர்விரல்களை ஆதரவாக இறுக்கிப் பற்றியபடி சன்னதியின் முன்பு வந்தான்..

மணப்பெண்ணுக்கான அலங்காரத்துடன் இருந்த தேவியின் எழிலை அள்ளிப் பருகுவதைப் போல பார்த்து வைத்தான்.. அவனது பார்வையில் அவளது நடுக்கம் சற்றுக் குறைந்தது.. நாணச் சிகப்புடன் அவள் சிரம் தாழ்த்தினாள்..

"மணநாளுக்கான அலங்காரத்தில் தமது எழில் பன்மடங்கு அதிகரித்து தெரிகிறது நறுமுகை.." புன்னகையுடன் கூறினான்..

"அவ்வாறெனில்.. அலங்காரமற்ற தோற்றத்தில் நான் எழிலின்றி உள்ளேனா..?" அவள் அவனது புகழுரையில் குற்றம் கண்டாள்..

"எவர் உரைத்தது..? எவ்வித அலங்காரமும் இன்றிக் காலை நேரும்போது தாம் இயற்கை எழிலுடன் எம்மை மயக்கத்தில் ஆழ்த்தி விடுவாயே.." அவன் இமை சிமிட்டி சிரித்தான்..

"ஸ்ஸ்ஸ்.. இது ஏகாம்பரேஸ்வரரின் ஆலயம்.." நர்மதா தேவியின் கன்னங்களில் செவ்வண்ண மலர்கள் மலர்ந்தன..

மாறவர்மன் ஏகாம்பரேஸ்வரரின் சன்னதிக்கு வெளியே நின்று கரம் குவித்து.. திரை விலக்கி ஏகாம்பரேஸ்வரரின் தரிசனத்தைப் பெற அனுமதி வேண்டி நின்றான்..

குவிந்திருந்த அவன் கரங்களில் ஓர் மலர் வந்து வீழ்ந்தது..

"இறைவா..!" அவன் மெய்சிலிர்த்துப் போனான்..

"நறுமுகை.. ஏகாம்பரேஸ்வரர் தரிசனம் அளிக்க ஒப்புதல் அளித்து விட்டார்.." பக்திப் பரவசத்துடன் உரைத்தான்..

"ஆஹா.. அற்புதம்..!"

நர்மதா தேவியும், தோழியும் சன்னதத்தில் போட்டுக் கொண்டார்கள்.. மாறவர்மன் சன்னதியின் பூட்டை நெம்பித் திறந்தான்.. கரம் குவித்து வணங்கி விட்டு.. ஏகாம்பரேஸ்வரரை மறைத்திருந்த பட்டுத் திரைச் சீலையை விலக்கினான்..

"ஈசனே..!" நர்மதா தேவியின் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தது..

ஏகாம்பரேஸ்வரர் அருள் பாலிக்க.. நர்மதா தேவியின் கழுத்தில் மாலையை அணிவித்தான் மாறவர்மன்.. அவள்

கரத்திலிருந்த மலர்மாலையை தன் கழுத்தில் ஏற்றுக் கொண்டான். மங்கல நாணை எடுத்து நர்மதா தேவியின் கழுத்தில் பூட்டினான்.. மலர் தூவி வாழ்த்தினாள் நர்மதாவின் தோழி..!

சதிபதியான தம்பதியர் ஈசனை வணங்கி எழுந்தனர்..

"உஷாக்காலம் அணுகி விட்டது.. நாம் விரைந்து காஞ்சியை விட்டு அகல வேண்டும்.." மாறவர்மன் அறிவுறுத்தினான்..

"தோழி..!" நர்மதா தயக்கம் கொண்டாள்..

"எமைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் இளவரசி..! நான் வந்த வழியில் திரும்பிச் சென்று விடுவேன்.. தாங்கள் மன்னருடன் புறப்பட ஆயத்த மாகுங்கள்.." என்றாள் தோழி..

"தம்மை தனித்து விட்டு அகல வேண்டுமா..?"

"எமக்கென்ன இளவரசி..! அறிந்தவர்கள் மத்தியிலே வசிக்கப் போகிறேன்... தாம் விரும்பிய மனாளனுக்கே மாலை சூட்டி அவரின் மனையாட்டியாகி விட்டீர்கள்.. இனி அவரது தேசமே தங்களின் தேசம்.. ஹொய்சாள தேசத்திற்கு விடைகொடுத்து விட்டு.. தங்களின் தேசம் நோக்கிப் பயணப்படுங்கள் இளவரசி..!"

"இனி இவள் ஹொய்சாள நாட்டின் இளவரசியல்ல தங்காய்.. எமது மகாராணி.."

"ஆம் தமையனாரே..! எமது இளவரசி.. தற்போது தங்களின் அரசியாகி விட்டார்.. அவரின் விழிகளில்

நீர் திரண்டு விடாமல் தங்களின் விழிகளுக்குள் இருத்தி இமைமுடி பாதுகாக்க வேண்டுகிறேன்..”

“தாம் வேண்டித்தான் எம் தேவியை நான் காக்க வேண்டுமா..? இவள் எனது உயிராவாள்..”

“தங்களுக்கு என் வந்தனம் மன்னரே..! நாழிகையாகி விட்டது.. விரைந்து புறப்படுங்கள்..”

தோழி அறிவுறுத்திக் கொண்டிருந்த போதே.. ஆலயத்தைச் சுற்றிப் புரவிகளின் குளம்படியோசைகள் கேட்டன..

“இதோ அவனது புரவி..” என்ற குரல் கேட்டது..

ஆலயத்துக்குள் இருந்த மூவரும் ஒருவர் வதனத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.. நர்மதா தேவியின் வதனத்தில் திகில் பரவியது..

“கண்டு கொண்டனரோ..?” கலக்கத்துடன் வினவினாள்..

“ஆம்..” நிதானத்துடன் விடையளித்தான் மாறவர்மன்..

“நீ சென்று விடு..” தோழியை துரிதப் படுத்தினாள் நர்மதா..

“தங்களை இந்நிலையில் விட்டு நான் மட்டும் தப்பிச் செல்வதா..? இயலாது இளவரசி..” தோழி உறுதியுடன் மறுத்தாள்..

"இவளது நிலைக்கு ஒரு குறைவுமில்லை.. எனது தேவியை பாதுகாக்க எமக்குத் தெரியும்.. நீ விரைந்து சென்று விடு தங்காய்.." மாறவர்மன் எச்சரித்தான்..

"உத்தரவு அரசே..!" செல்ல மனமின்றி அகன்றாள் தோழி..

மாறவர்மன் நர்மதா தேவியின் கரம் பற்றித் தூக்கி மரக்கிளையில் அவளை அமர வைத்தான்.. தாவி ஏறி.. அவருடன் மரக்கிளையில் ஊர்ந்து.. கோவிலின் சுற்று மதில் சுவரைக் கடந்து அந்தப் புறமாக சென்றான்..

'புரவி எங்கே..?'

தொலைவினில் நின்று கொண்டிருந்த புரவி அவனது சீழ்க்கையொலியைக் கேட்டதும்.. விரைந்து ஓடி வந்தது..

"அடேய்..! புரவியின் கடிவாளத்தைப் பிடியடா.. அவனைத் தேடித்தான் புரவி செல்கிறது.."

படைவீரர்கள் பாய்ந்தார்கள்.. ஒருவன் புரவியின் கடிவாளத்தை கைப்பற்ற முனையும் போது. நர்மதாவின் தோழி திடிரென்று அங்கு தோன்றி அவனை தள்ளி விட்டாள்..

விடுபட்ட புரவி வில்லில் இருந்து புறப்பட்ட அம்மைப் போல பாய்ந்து கோவில் மதில் சுவருக்கு அருகில் வந்தது.. மாறவர்மன் நர்மதா தேவியுடன் புரவியில் குதித்தான்.. புரவி பறந்தது.. காற்றை விட வேகமாக காணாமல் போனது..

ஓடிய புரவியை நோக்கிப் பாய்ந்த வாளின் குறுக்கே பாய்ந்த நர்மதாவின் தோழி..

"இளவரசி.." என்ற தீனமான அலறலுடன் மண்ணில் சாய்ந்தாள்..

"உன்னை எவர் குறுக்கே பாயும்படி உரைத்தது..?"

மணலில் சரிந்தவளை மடியில் ஏந்திக் கொண்ட படைவீரர்களில் ஒருவன் விழி சிவந்தான்.. அவன் அந்தத் தோழியை மணமுடிக்க விருப்பம் கொண்டிருந்தவன்.. இளவரசியின் திருமணம் முடிந்த பின்புதான் தனது திருமணத்தை நினைத்துப் பார்ப்பேன் என்று பிடிவாதமாக தோழி உரைத்து விட்டதால் எட்ட நின்று அவளை பார்வையால் கொய்து கொண்டிருந்தவன்..

"நான் ஊடே புகவில்லையெனில் இந்த வாள் புரவியின் மீது பாய்ந்திருக்குமே.." வேதனையுடன் முறுவலித்தாள் தோழி..

"அதைக் குறித்து தமக்கென்ன கவலை..? அரச குலத்தவரிடம் பணி புரிந்தால் விசுவாசமாக இருக்க வேண்டியதுதான்.. அதற்காக உயிர் தியாகம் செய்வதா..?"

"அல்ல அன்பரே..! எமது இளவரசியின் நலனுக்காக மட்டும் நான் எனதுயிரை தியாகம் செய்யவில்லை.. சொந்தமென்று எவரும் இன்றி அரண்மனையில் அடைக்கலம் புகுந்திருந்த என்னை தங்கையாக வரித்தார் மாறவர்மன்.."

"பெண்ணே.."

"ஆம் அன்பரே..! எமக்குத் தமையனாரின் சீராக வைரங்கள் பதித்த நகையொன்றை அளித்தார்.. அதனைக் கொண்டு பலநூறு சவரன்களை விலைக்கு வாங்கிட இயலுமாம்.. அதன் மதிப்பு அவ்வளவுதானா..? இல்லை அன்பரே..! அதற்கு விலை மதிப்பே கிடையாது.. அரண்மனையில் சேவகம் செய்யும் சேடிப் பெண்களில் நானும் ஒருத்தி..! என்னைத் தமது தங்கையாக ஏற்றுக் கொண்ட பாண்டிய மன்னரை அந்நொடியிலேயே தமையனாக என் மனதில் வரித்தேன்.."

"அதன் பொருட்டா இவ்வுயிர் தியாகம்..?"

"அவருக்கு அளிக்க எம்மிடம் வேறு எது உள்ளது..? உயிர் மட்டும்தான் உள்ளது.. உவகையுடன் என் தமையனுக்காக அதை அளித்து விட்டேன்.. சென்று வருகிறேன்.."

"என்னை மறந்தாயா..?"

"எமை விட வளம் பொருந்திய பெண்ணொருத்தி தமக்குக் கிட்டுவாள்.. ஆனால்.. பாண்டிய மன்னரைப் போன்ற தமையன் எவர்க்கும் கிட்ட மாட்டார்.."

படைவீரரின் மடியினில் தோழியின் உயிர் பிரிந்து விட்டது.. வாளை ஏந்திய வேதனைக்கு இடையிலும் லதனம் நிரம்பிய புன்னகையுடன்.. மாறவர்மனையும், நர்மதாவையும் காத்து விட்ட மனநிறைவுடன் அந்த மங்கை உயிர் தியாகம் செய்து விட்டாள்..

அதை அறியாமல் அவள் பத்திரமாக அரண்மனைக்கு போய் சேர்ந்திருப்பாள் என்ற நிச்சயத்துடன் மாறவர்மன் நர்மதாதேவியுடன் புரவியில் பறந்து கொண்டிருந்தான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



12

நித்திரையின் சொப்பனத்தில்..
நின் முகமே வருவதும் ஏன்..?

பிரதாப்புக்கு வார்த்தைக்கடல் வற்றி விட்டது.. அனுராதாவை மலையிறக்க அவரும் ஆன மட்டிலும் முயற்சிகளைச் செய்தார்..

"வேணாம்டி அனு.."

"வேணாம்தான்.. நீங்க எனக்கு வேணாம்தான்.."

"நான் உன் புருசன்டி.."

"இதப் பாருடா..`இது எனக்குத் தெரியாம போச்சே.. இவரு எனக்குப் புருசன்னா.. நான் இவருக்கு யாராம்..?"

"பொண்டாட்டி அனு.."

"அது இப்பத்தான் இவருக்கு நினைப்பு வந்துச்சா..? இந்தத் தெருவில இருக்கிற ஊரான் பொண்டாட்டிகளோட அழகை கட்டின பொண்டாட்டிகிட்டயே ரசிச்சு.. ரசிச்சு.. வர்ணிச்சப்ப வரலையா..?"

"அனு.."

"அப்ப இந்த நினப்பு எங்கே போயிருந்துச்சு..? அடுத்த தெருவில இருக்கிற ஆம்பளைங்களோட பொண்டாட்டிகள

எப்படியெல்லாம் கட்டின பொண்டாட்டிகிட்ட வர்ணிக்கலாம்ன்னு பிளான் போடறதுக்கு ஓடிப் போயிருந்துச்சா..?"

"இல்ல அனு.."

"அது இல்லதான்.. உங்களுக்கு மனச்சாட்சிங்கறதே இல்லதான்.."

"நான் பாவம்டி.."

"அப்படித்தான் ரொம்பப்பேரு சொல்லிக்கிறாங்க.. அவங்களுக்கு உங்க வருணாச்சலத்த பத்தி என்ன தெரியும்..?"

"வேணும்னா நீ தெரியப்படுத்துடி.."

வெள்ளைக் கொடியை பறக்க விடுபவர்க்கு ரோசம் வரக் கூடாதென்ற அடிப்படை தத்துவத்தை அடியோடு மறந்து போனவராக வாய் விட்டுத் தொலைத்து வகையாக மாட்டிக் கொண்டார் பிரதாப்..

அவரை விரோதியைப் போல அனுராதா பார்த்த பார்வையில் அவரின் அடிவயிறு கலங்கியது..

"அனு.."

"இத்தனை நாளா தெரியப் படுத்தலை.. இனிமே அதுதான் என் முதல் வேலை.."

"என்னடி இப்படிச் சொல்ற..?"

"வேற எப்படிச் சொல்வேன்னு நினைக்கறிங்க..? எதிர்வீடு, பக்கத்து வீடு, அடுத்த வீடுன்னு ஒரு வீட்டைக்கூட மிச்சம் வைக்காம நீங்க சைட்டடிச்

சிருக்கீங்க.. உங்களைப் போயி உத்தம புருசன்னு இந்த ஊரும் உலகமும் நம்பலாமா..? நம்ப நான் விடலாமா..?"

"சைட்டா..? நானா..?"

"பாருடா.. இந்தப் பூனையும் 'மியாவ்' சொல்லு மாங்கிறதைப் போல இவரு கொடுக்கிற போஸை..!"

"என்னைப் போயி இப்படிச் சொல்லிட்டயேடி.."

"உங்களைத்தான் சொல்லுவேன்.. பின்னே வழியில தேமேன்னு போயிக்கிட்டிருக்கிற ஊரான் எவனையாவதா சொல்லுவேன்..? சைட் அடிக்காமத்தான் அந்தப் பொம்பளைகளோட அத்தனை அழகும் ஐயாவோட தெய்வீகப் பார்வைக்கு தெரிஞ்சதாக்கும்..?"

"ஏய்ய்..! கல்யாண வயசில பெண்ணும், மகனும் வீட்டில இருக்காங்கடி.."

"அதுக ரெண்டும் அடங்கியிருக்கே.. நீங்க இல்ல ஆடறிங்க.."

"யது காதில விழுந்தா என்னடி நினைப்பான்..?"

"இத்தனை நாளா இந்தத் தகப்பனை ஒன்னும் தெரியாத சின்னக் கண்ணன்னு தப்பா எடை போட்டுட்டேமேன்னு நினைப்பான்.."

"ஸ்ஸ்ஸ்.."

பிரதாப் உதடுகளைக் குவித்து ஆள்காட்டி விரலை அதன் மேல் வைத்தபடி ஹாலை நோக்கி சைகை காட்டினார்.. அனு உதட்டைச் சுழித்து ஒரு மார்க்கமாக.. கோவை சரளாவைப் போன்ற தோரணையுடன்..

"என்ன..?" என்றாள்..

"யாமினிடி.."

"அவ யாமினிதான்.. நான் பெத்த மகளை எனக்கே அடையாளம் காட்டறிங்களா..?"

"அவ காதில விழுந்து வைக்கப் போகுதுடி.."

"இந்தக் கவலை அப்ப இல்லையே.. வயசுப் பொண்ணு காதில நாம பேசறது விழுந்து வைச்சிட்டா.. அவ நம்மளப் பத்தி என்ன நினைப்பாங்கிற எண்ணம் உங்க மனசில இருந்தாப்புல தெரியலையே.."

"நான் அப்பாவிடி அனு.."

"அதை நம்ப நான தயாரா இல்ல.."

"வெள்ளை மனசுடி என் மனசு.."

"பாலைப் போல வெள்ளையில்ல.. கள்ளைப் போல வெள்ளை.."

"சீச்சீ.. கள்ளைப் பத்தி நீ பேசலாமாடி..? ஒரு குடும்பப் பொம்பளை பேசற பேச்சாடி இது..?"

"ஆமாம் சாரே..! குடும்ப ஆம்பளைகள்ளாம் கூட்டுச் சேர்ந்தக்கிட்டு குடிக்கப் போங்க.. கும்மாளம் போடுங்க.. அடுத்த வீட்டு பொம்பளைகளோட அழகை கட்டின பொண்டாட்டிகிட்டயே பிட்டுப் பிட்டு வைங்க.. அதை என்னு அவகேட்டா உடனே நீயெல்லாம் குடும்பப் பொம்பளையாடின்னு கேட்டு வையுங்க.. அடச்சே..! இந்தப் பொழப்பு எனக்கெதுக்கு..? நான் போறேன் எங்க அம்மா வீட்டுக்கு.."

அனுராதா பெட்டியைத் தூக்கி விட்டாள்...



13

வாள்முனையில் உலகை வெல்லும்..
வீரன் மனதை யாம் வென்றோம்..

அடர்ந்த கானகத்தின் ஊடே நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது மாறவர்மனின் புரவி..

அதன் முதுகில் ஆரோகணித்திருந்த மாறவர்மனின் வலதுகரம் நர்மதாதேவியின் வழவழப்பான இடையில் அழுத்தமாக புதைந்திருந்தது.. இடது கரம் புரவியின் கடிவாளத்தைப் பற்றியிருந்தது..

காற்றை விடக் கடுகிப் பறந்த புரவியின் வேகத்தில் பிரழ்ந்து தரையில் வீழ்ந்து விடாதிருக்கும் பொருட்டு.. மாறவர்மனின் மார்பில் முகம் புதைத்து.. அவனது முதுகைத் தன் கரங்களால் இறுக்கிப் பிணைத்து அவன் தேகத்தோடு தேகமாக ஒன்றிப் போய் வீற்றிருந்தாள் நர்மதா தேவி..!

உரிமையுடன் கூடிய அந்த ஒன்றுதலிலும், தழுவலிலும்.. மாறவர்மனின் இதழ்களில் உல்லாசப் புன்னகை படர்ந்தது..

விடியலின் கதிர்கள் கானகத்துக்குள் நுழையவா என்று அனுமதி கேட்பதைப் போல தயக்கத்துடன் விலகி நிற்க.. அடர்ந்த கானகத்தின் நிழல் கூரையின் கீழே நிர்பயத்துடன் புரவியை செழுத்திக் கொண்டிருந்தான் மாறவர்மன்..

விழிகளை மூடியிருந்த நர்மதாதேவி இமை திறந்து பார்த்தாள்.. அவளிடம் அசைவை உணர்ந்த மாறவர்மன்..

"விடியல் வருகை தந்து வெகு நாழிகைகளாகி விட்டன தேவி.." என்று உரைத்தான்..

"நமைத் துரத்திய வீரர்கள்..?"

"பின் தங்கி விட்டனர்.. நாம் அவர்களிடமிருந்து விலகி வெகு தொலைவுக்கு வந்து விட்டோம்.. கவலை கொள்ள வேண்டாம்.. இனி அவர்களால் நம்மை அணுக இயலாது.."

"தங்களின் அருகாமையில் கவலை என்னை அணுகாது அரசே..!"

"அவ்வாறா..?"

புருவங்களை உயர்த்திய மாறவர்மனின் வினாவில் நர்மதாதேவியின் மனதிலும் உல்லாசம் புகுந்து கொண்டது.. அவள் அச்சம் விலகினவளாக நகைப்புடன்..

"அவ்வாறுதான்.." என்று உரைத்தாள்..

"அது எதனால் என்பதை என்னிடம் உரைப்பாயா..?"

"தங்களிடம் உரைக்காமல் எவரிடம் நான் உரைப்பேன்..?"

நர்மதா தேவியின் உரிமை நிரம்பிய சிணுங்கலில் மாறவர்மனின் தேகத்துக்குள் கிளர்ச்சி உருவாகியது.. அவளது வழவழப்பான இடையில் அழுந்தப் பதிந்திருந்த அவனது கரம் மேலும் அழுந்த முற்பட்டதில் அவள் இமைமூடி கிறங்கித் தவித்தாள்..

"எனதன்பே..!"

மாறவர்மனின் கிசுகிசுப்பான விளிப்பில் நர்மதா தேவியின் தேகத்தில் தீப்பற்றிக் கொண்டது.. மோகத்தீயில் கனன்றவளின் செவியோரமாக அவன் இதழ் இருந்ததில்.. அவனது மீசையின் ரோமங்கள் அவளது செவியோடு உறவாடி அவளை இதமான இம்சை கொள்ளச் செய்தன..

"மன்னவா..!"

"மற்றவர்க்குத்தான் நான் மன்னவன்.. தமக்கு மாறவர்மன்.."

"நாமம் சொல்லி நான் அழையேன்.."

"ஏனடி..?"

"மாலையிட்ட மணாளரின் நாமம் சொல்வது.. தமிழர் பண்பாடல்ல.."

"தாம் தென்தமிழ் நாட்டின் வைகைக் கரையில் பிறந்தவளா..?"

"யாம் ஹொய்சள நாட்டில் பிறந்தவள் என்பதை மன்னவர் அறிய மாட்டாரா..? அல்லது அதை எமது திருவாய் மொழியில் செவி மடுக்க விழைந்தாரா..?"

"ஹா.. ஹா.."

"எதன் பொருட்டு இந்நகைப்பாம்..?"

அவனது நகைப்பில் வெளிப்பட்ட முல்லைமலர் பல்வரிசையிலே மயக்கம் கொண்டவளாக வினவி வைத்தாள் நர்மதாதேவி..

"ஊம்..?"

மாறவர்மனின் வலுவான கரம் அழுத்தம் அளித்ததில் நர்மதாதேவியின் தேகம் மேலும் தொய்ந்து அவன் மார்பில் புதைந்தது.

சரணடைந்த மலர்மாதின் உச்சந்தலையில் அதரங்களைப் பதித்து ஆரத் தழுவிக் கொண்ட மாறவர்மன்..

"எமது தென் தமிழகத்தின் வைகைக் கரையில் தான்.. பெண்டிர் தமக்கு மங்கலநாண் பூட்டிய மணாளனின் நாமம் உரைக்கத் தயக்கம் கொள்வார்கள் என்று ணண்ணியிருந்தேன்.." என்றான்.

"மற்ற தேசங்களிலும் அவ்வழக்கமுண்டு ன்னவரே..! எமது தாய்.. எமது தந்தையான ஹொய்சாள ன்னரின் நாமத்தை உரைத்ததில்லை.. அத்துடன்.."

"அத்துடன்..?"

"யாம் ஹொய்சாள நாட்டில் பிறந்தாலும்.. வைகைக் ரையின் மன்னவரை மனந்து தென்தமிழகத்தின் ருமகளாக மாறி விட்டோமல்லவா..?"

"ஆம் கண்ணே..!"

"இனி தமது தேசத்தின் மபுரகள்தானே எமக்கும் ரபு.. தாம் கடைபிடிக்கும் வழக்கங்களைத்தானே யாமும் டை பிடித்தல் வேண்டும்..?"

"அற்புதம்.."

மாறவர்மன் புரவியின் கடிவாளத்தை விடுத்து இரு கரம்கொண்டு நர்மதாதேவியை தழுவிக் கொண்டான்.. அவன் தேகத்தோடு தேகம் படிந்து ஈருடலும் ஓர் உடலாக மாறிப் போன காதலர்களின் தாபத்தை அறிந்ததைப் போல புரவி தன் போக்கில் ஓடிக் கொண்டிருந்தது..

"நறுமுகை.."

"ஊம்.."

"எங்கு செல்கின்றோம் என்ற வினாவை எழுப்ப மாட்டாயா..?"

"என்னால் அது இயலாது அரசே..!"

"ஏனடி..?"

"தாம் எவ்விடம் உள்ளீர்களோ.. அவ்விடத்தில் நானும் தங்களுடன் உறைந்தால் போதும்.. அவ்விடம் எவ்விடமாக இருந்தால் என்ன..? அதை அறிந்து எமக்கு ஆகப்போவதென்ன..?"

"அற்புதம்.."

காதலியின் பதிலில் மகிழ்ந்து போனவனாக மீண்டும் காதலியை இறுக்கிக் கொண்டான் மாறவர்மன்.. அவனது இறுக்கமான தழுவுதலில் நர்மதாவின் அதீதமான காதல் குறித்த பெருமிதம் இருந்தது..

'எம்மைச் சரணடைந்தவள்..' அவனது இதயம் விம்மியது..

"நறுமுகை..!"

"ஊம்..?"

"எம்மிடம் எதைக் கண்டு.. இத்துணை காதலை ன்மீது வைத்தாய்..?"

மாறவர்மனின் வினாவிற்கு விடையளிக்காமல்.. வன் மார்பில் வதனம் புதைத்துக் கொண்டாள் நர்மதா.. அவளது இழைதலில் அவனது உள்ளம் ஆவேசக் காதலைக் கொண்டது.. முன்தினத்தின் விடியலில் ந்தித்தவள்.. மறுதினத்தின் விடியலில் அவனுக்கு னையாட்டியாக மாறிப் போயிருந்த விந்தையில் அவன் ியந்தான்..

"செல்வச் செழிப்பு மிக்க ஹொய்சள நாட்டின் ரசிளங்குமரி.. நாட்டை மீட்கப் போராடிக் கொண்டிருக்கும் தேசாந்திரியான மன்னனை நம்பி ங்கலநாணை ஏற்றுக் கொண்டு உடன் புறப்பட்டு ருவாளோ..?"

"வருவாளே.."

"ஏன் கண்மணி..?"

"அந்த தேசாந்திரியான மன்னனின் வீரத்தை லி மடுத்து.. அவனது வதனம் அறியாத காதலை அகம் முழுக்க நிரப்பி.. அவனுடன் ஓர்தினம் வாழ்ந்தாலும் போதும் என்று உயிரை உருக்கி தவம் புரிந்து. அந்தத் தவத்தின் பலனாக அவனை நேரிடையாக கண்ணுற்று விட்டால்.. அனைத்தையும் துறந்து அவனே சகலமானவனாக ஆகி.. அவனிடம் சரண் புகுந்து உடன் புறப்பட்டு விடுவாள்.."

"அற்புதம்.."

அவனது பரவசம் கலந்த வார்த்தை வெளிப்பட்டவுடன் அடுத்து அவளை அவன் இன்னமும் மிகுதியாக இறுக்கிக் கொள்ளப் போகிறான் என்ற எதிர்பார்ப்பால் அவளது தேகமெங்கும் பரபரப்பு ஊர்ந்தது..

அவளது எதிர்பார்ப்பை அவன் பொய்க்க விடவில்லை.. அவளது இடையினில் புதைந்த கரத்தில் அழுத்தம் கொடுத்து அவளைத் தனக்குள் புதைத்துக் கொண்டான்..

நர்மதா கிறங்கித் தவித்தாள் அவளது இடையில் புதைந்திருந்த அவனது கரங்களின் வலிமையில் அவளது தேகம் கிளர்ச்சி கொண்டது... அவளது வதனம் புதைந்திருந்த வலிமையான பரந்த மார்பு.. அவளை துயில் கொள்ள அழைத்தது.. அவளது உச்சந்தலையில் படிந்த அவனது அதரங்கள் இறங்கி அவளது கன்னக் கதுப்புக்களைத் தேடியபோது நர்மதாவின் சுவாசம் திணறியது.. அவளது அதரங்களைத் தேடி அவனது அதரம் குனிந்த போது பேரலை ஒன்று எழுந்து வந்து அவள் மீது வீழ்ந்து இழுத்தது..

அதரத்தோடு அதரம்படிந்த அவனது முரட்டுத் தனமான ஆலிங்கனத்தில் அவள் மூச்சுத் திணறினாள்.. அவளது இடையினில் பதிந்திருந்த கரங்கள் தேகமெங்கும் பரவ முற்பட்டபோது அவளது கிறக்கம் அதிகரித்து அவளை மூர்ச்சையாக்க யத்தனித்தது..

வெண்ணையின் குழைவோடு இருந்த அவளது செழுமையான தோள்களில் அவனது வதனம் அழுந்தியிருந்ததில் அவனது அடர்ந்த மீசையின் முரட்டு ரோமங்கள் அவளது தேகத்தில் உராய்ந்து இன்பமான வேதனையை அளித்தன..

"நீ என்னவளடி.."

"இல்லையென எவர் மறுத்தது..?"

"தமது தேகம் எனக்கானது.."

"தம்மிடம் அதை ஒப்புக்கொடுத்து விட்டேனே.."

"தமது அகமும் எனக்கானது.."

"அதில் என்றோ தாம் குடி புகுந்து விட்டீரே.."

"அடி கள்ளி..!"

"நானா..?"

"நீதானடி.."

"எதன் பொருட்டு இந்தச் சினமாம்..?"

"எமது வேட்கையை அறிந்தும் அதைத் தீர்க்க முற்படாமல் உரையாடிக் கொண்டுள்ளாயே... நீ இரக்கமற்றவளடி.."

"அடாத பழியை என்மீது சுமத்த யத்தனிக்க வேண்டாம் அரசே..! மங்கலநாண் பூட்டும் முன் சற்று விலகியிருக்கச் சொல்லி வேண்டினேன்தான்.. மங்கல நாணைப் பூட்டியபின்னர் விரதம் காக்கச் சொல்லி தோள் பொழுதில் வேண்டினேனாம்..?"

"யாது உரைத்தாய்..?"

மாறவர்மன் கள்வெறி கொண்டடான்.. அவனது முரட்டுத்தனமான ஆலிங்கனத்தில் அவளது எழும்புகள்.. இருக்கவா.. அல்லது நொறுங்கவா என்று வினவின..

நர்மதா தேவியின் தேகமும், அகமும்... அவள் வசத்தில் இல்லை.. அவையிரண்டுக்கும் உரிமையாளனாக அவனிடம் அவற்றை அவள் ஒப்படைத்திருந்ததில்.. உரிமையாளனான அவன் படுவிரைவாக அவளைச் சூறையாடும். யத்தனங்களை மேற்கொண்டிருந்தான்.. அதை அவள் அறிவுறுத்தியதில் பலமாக நகைத்தும் வைத்தான்..

"உரிமை கொண்டவர் உரிமைப் பொருளை ஆண்டு அனுபவிக்க முற்படுவாரடி.. நீ எனதுரிமையானவள்.."

"சூறையாட முற்படுவாரோ..?"

"ஹ..! அது எனது விருப்பம்.. உரிமைப் பொருளை மென்மையுடன் அணுக வேண்டுமென்ற நியதியேதும் வகுக்கப் பட்டுள்ளதா..?"

"இல்லை.."

"தெரிகிறதல்லவா..? எனவே தமது திருவாயை மூடிக் கொண்டிரு.. எமது உடைமைப் பொருளை நான் வன்மையாகத்தான் சூறையாடுவேன்.. அது எனது விருப்பம்.. எவர் என்னிடம் வினா எழுப்புவது..?"

"எவரும் வினா எழுப்ப முற்பட மாட்டார்கள்.. சுவாமி..! தங்களின் விருப்பம் போல செயல்படலாம்.."

"இது பேச்சு..! இவ்விதம் உரையாடினால் எதன் பொருட்டு எனக்கு சினம் துளிர்க்கப் போகிறது..?"

மாறவர்மன் அவளை ஆலிங்கனத்தில் நொறுக்கினான்.. சிதிலமடைய முற்பட்ட எழும்புகளைப் பற்றி கவலை கொள்ளாமல் அவனது விருப்பத்திற்கு இசைந்து கொடுத்த காதலியை கண்ணுற்றவன்..

"அற்புதம்..!" என்றான்..

"இவ்வார்த்தையை அடிக்கடி பிரயோகிக்கிறிர்கள்.."

"ஆம் கண்ணே..! தமது காதல் அற்புதம்..! தமது எழில் அற்புதம்..! தமது அர்ப்பணிப்பு அற்புதம்..! இன்னமும்.."

மாறவர்மனின் விழிகள் நர்மதா தேவியின் தேகத்தில் மலர்ந்ததில் அடுத்து அவன் எதை உரைக்கப் போகிறானோ என்று அவள் நாணம் கொண்டாள்.. சடுதியில் அவனது திருவாயை தனது கரம் கொண்டு மூடினாள்.. மூடிய அவளது கரத்தில் அவன் அதரங்களைப் பதித்தான்.. அவளது கரம் சிலிர்த்து விலகியதில்... அவளது கன்னக் கதுப்பில் அதரங்களைப் பதித்தவன்..

"நீயே ஒரு அற்புதம்தானடி.." என்றான்..

"எனதன்பே..!" அவன் மார்பில் அவள் சாய்ந்தாள்...

ஓடிக் கொண்டிருந்த புரவி.. அடர்ந்த கானகத்தின் மேடே வெளிப்பட்ட மலைப் பாதையில் ஏறத் துவங்கியது..

அச்சத்துடன் ஒன்றிக் கொண்ட நர்மதா தேவியின் இடையை வளைத்து தன்னுடன் இறுக்கிக் கொண்ட மாறவர்மன்..

"எதன் பொருட்டு அச்சம் கொள்கிறாயடி..! தமது தலைவனான நான் தம்முடன் இருக்கும்போது தாம் அச்சம் கொள்ளலாகுமா..?" என்று வினவினான்..

"மெய்தான் அரசே..!" என்று கூறினாலும்.. செங்குத்தான மலைப்பாதையில் புரவி சரிந்து வீழ்ந்து விடுமோ என்ற அச்சத்தில் நர்மதாதேவியின் இதயம் தடதடத்தது..

மாறவர்மனின் மார்பில் அவளது தேகம் பொருதியிருந்ததால் அவளது இதய தடதடப்பை அவன் உணர்ந்தான்.. பரிவுடன் அவளது கேசம் கோதி.. அவளது செவிமடல்களில் தனது மீசையின் ரோமங்கள் உராய குனிந்து..

"அச்சம் தவிர்க்க இயலவில்லையெனில் இமைமூமடி எம்முடன் ஒன்றிக் கொள்ளடி.. நாம் செல்ல வேண்டிய இடத்தை நெருங்கியதும் இமை திறக்கலாம்.." என்றான்..

அவனது பரிவில் அவள் மனம் நனைந்தது.. இமைமூடி அவனுடன் ஒன்றிக் கொண்டவளின் மீது அவனது பிரியம் அதிகரித்தது..

'கானகத்திற்குச் சென்ற ஸ்ரீராமனைப் பின் தொடர்ந்த சீதையின் மென்மையைத் தன்னுள்ளே கொண்டவளாக இவள் இருக்கிறாள்..'

அவளது தேகம் தழுவி.. அச்சம் கொள்ள வேண்டாம் என்று உணர்த்தினான் மாறவர்மன்.. இவை எவை

குறித்தும் கவலை கொள்ளாமல் தன் போக்கில் மலையேறிக் கொண்டிருந்தது மாறவர்மனின் புரவி..!

மாறவர்மனின் வலிமையான தேகத்தில் புதைந்து.. அவனது கரங்களின் அரவணைப்பில் அடங்கியிருந்த வளுக்கு.. பறவையின் சிறகுக்கடியில் பாதுகாப்பாக ஒன்றியிருக்கும் பறவைக் குஞ்சின் மனநிலை வந்தது..

இதமாக அவள் உணர்ந்தாள்..

புரவியின் ஓட்டம் நின்றது.. மாறவர்மன் அவளது செவியோரம் குனிந்து.. அவளது செவி மடலில் மீசையின் ரோமங்களை உராய விட்டு..

"இனி இமை திறக்கலாம்.." என்றான்..

நர்மதா இமைதிறந்தாள்.. எதிரே கண்ட காட்சியில் விழி விரித்துப் பிரமித்தாள்..

மலை முகட்டின் உச்சியிலிருந்து வெள்ளித் திரளாய்.. பொங்கும் பாலாய்.. அருவி கொட்டிக் கொண்டிருந்தது..

அருவிக் கரையின் ஓரமாக புரவி நின்றிருந்தது.. மாறவர்மன் நர்மதாவின் கன்னக் கதுப்பில் அதரங்களைப் பதித்து விலக்கி அமர வைத்து விட்டு புரவியை விட்டு அருவிக் கரையில் குதித்தான்.. புரவியின் மீது அமர்ந்திருந்த நர்மதாவின் இடையினில் கரம் கொடுத்து அவளைக் கரங்களில் ஏந்திக் கொண்டான்..

புரவியை விடுத்து அவன் கரங்களுக்கு இடம் மாறிய நர்மதா தேவியின் கரங்கள் அவன் கழுத்தை

வளைத்துக் கொண்டன.. அவன் விழிகளும்.. அவள் விழிகளும் கலந்தன..

மாறவர்மனின் பிரியம் ததும்பிய விழிகள்.. காதலை கொட்டிக் கவிழ்த்துக் கொண்டிருந்த நர்மதா தேவியின் விழிகளுடன் கலந்தன.. எத்துனை நாழிகை அவர்களின் பார்வைகள் பிணைந்திருந்ததோ.. அவர்கள் அறியார்.. தமது பணி முடிவு பெற்று விட்டது என்பதனை அறிவுறுத்தும் விதமாக புரவி கனைத்ததில் அவர்கள் மாய உலகிலிருந்து வெளிவந்தனர்..

அருவிக் கரையில் ஓரமாக அடர்ந்திருந்த மரங்களின் நிழலில் ஆசனங்களைப் போல அணி வகுத்திருந்த பாறைகளில் ஒன்றின் மீதில் நர்மதாதேவியை அமர வைத்த மாறவர்மன் அவளை உச்சி முகர்ந்தான்..

அவளது தோள் தடவிய அவனது கைகள் கீழிறங்க.. நர்மதா தேவி வலிமையான அவன் கரத்தில் வதனம் புதைத்தாள்..

புரவி நகர்ந்து.. அருவிக் கரையில் அடர்ந்திருந்த புற்களை மேயத் துவங்கியது..

"இதன் கடிவாளத்தை மரத்தில் பிணைக்க வேண்டாமா..?" வினவினாள் நர்மதா..

"தேவையில்லை.. இது எம்முடைய புரவி.. எமை விடுத்து வேறெங்கும் செல்லாது.." மாறவர்மன் அவளை ஒட்டி அமர்ந்து கொண்டான்..

அவனது அண்மையில் அவளது தேகத்தில் குளிர் காய்ச்சல் பரவியது.. புரவியின் மீது அமர்ந்திருந்தபோதே அவளை சூறையாடியவன்.. தற்போது எவ்விதமாக அவளை சூறையாடப் போகிறானோ என்ற இன்பமயமான எதிர் பார்ப்பில் அவளது மணி வயிற்றுக்குள் பரபரப்பு ஜனித்தது..

அதை உணர்ந்தவனைப் போல அவளை இறுகத் தழுவி.. செழுமையான அவள் தோளில் அதரம் பதித்தான் மாறவர்மன்..

அவனது ஆண்மை நிரம்பிய அணுகலில் அவள் கிறங்கித் தவித்துப் போனாள்.. அவனது தொடுகையில் அவளது தேகத்தில் கிளர்ச்சியென்னும் பெரு நெருப்பு பற்றிக் கொண்டது.. தேகம் முழுவதும் பரவிப் படர்ந்த அந்த பெருந்தீயில் அவள் மோகமென்னும் அணையா நெருப்பில் வீழ்ந்தாள்..

"இவ்விடத்தை தமக்கு பிடித்துள்ளதா..?" மாறவர்மனின் உஷ்ணம் நிரம்பிய அதரங்கள் அவளது கழுத்தில் புதைந்தன..

•

நர்மதா தேவியின் சுவாசம் திணறல் கொண்டது.. அவளால் வாய்திறந்து உரையாற்ற இயலவில்லை.. எனினும்.. அவன் மொழிக்கு மறுமொழியை பகர வேண்டும் என்பதற்காக..

"தாமிருக்கும் எவ்விடமும் எமக்கு பிடித்தமான இடமே.." என்று உரைத்தாள்..

"என் அன்பே..!" அவளது விடையில் கிளர்ந்த மாறவர்மன் அவளது எழும்புகளை சிதிலமாக்கும் நோக்கத்துடன் அவளை இறுக்கித் தழுவினான்..

புல்லை மேய்ந்து கொண்டிருந்த புரவி அவர்களின் பக்கமாக கழுத்தை திருப்பியதில் நாணம் கொண்ட நர்மதா..

"புரவி.." என்றாள்..

"அதற்கென்ன..?" மாறவர்மன் தேடுதலை ஆரம்பிக்கத் துடித்தான்.

"தயை கூர்ந்து பொறுத்தளுங்களேன்.." நர்மதா அவனைத் தடுத்தாள்..

"இன்னமும் யாது உள்ளது..?" மாறவர்மன் சினம் கொண்டான்..

"புரவி வேறெங்கும் செல்லாதா..?" நர்மதாவினால் உரைக்க வந்ததை உரைக்க இயலவில்லை..

"தற்போது புரவியைப் பற்றித்தான் உரையாட வேண்டுமா..? கொடுமை புரிகிறாயடி.." அதிருப்தி கொண்டான் மாறவர்மன்..

"அல்ல அன்பரே..! இப்புரவி இங்குதான் சுற்றி வருமா..?"

"ஆம் கண்ணே ஆம்.. இந்த மலைப்பிரதேசம் இதற்குப் பரிச்சயமானது.. இவ்விடம் நான் மறைந்து உரையும் இடமாகும்.. எமைத்தவிர வேறு எவரும் இங்கு

வந்து சென்றதில்லை.. யாரும்.. எனது புரவியும் மட்டுமே இம்மறைவிடத்தை அறிவோம்.. எனவே.. எனது புரவி எங்கு சென்றாலும் இவ்விடத்திற்கு திரும்பி வந்து விடும்.. போதுமா..?"

மாறவர்மன் உரை முடிந்ததென அவளை தழுவ முற்பட்டான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



13

சில நொடிகள் எனக்காக..
சிந்தித்தால் எனையறிவாய்..

பிள்ளையார் பிடிக்கப் போய் அது ஆஞ்சநேயராக மாறிவிட்டதில்.. கதி கலங்கிப் போய் கைகளை பிசைந்தார் பிரதாப்.. அதை கண்டு கொள்ளாமல் புயல் வேகத்தில் சமையலறையை விட்டு வெளியேறி படுக்கையறைக்குள் நுழைந்தாள் அனுராதா..

அவள் பின்னாலே ஆட்டுக் குட்டியைப் போல தொடுத்துக் கொண்டு ஓடின பிரதாப்..

"கிச்சனை விட்டு ஏன் வந்த அனு..?" என்று கேட்டு வைத்தார்..

அவர் சமாதானம் பேச முனைந்த லட்சணத்தில் அவரை நிமிர்ந்து பார்த்த அனுராதாவின் முகத்தில் கடுகு பொரிந்து கொண்டிருந்தது..

"வராம.. அங்கேயே குடியிருக்கச் சொல்கிறீங்களா..? நிச்சனை எனக்குன்னு பட்டாப் போட்டா கொடுத் திருக்கீங்க..?"

"என்னடி அனு இப்படிப் பேசற..?"

"ஏன்..? நல்லாத்தான பேசறேன்..? எதுத்த வீட்டுப் பொண்ணு மாதிரி பேசலையா..?"

"அவளை நீ விடவே மாட்டாயா அனு..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.. நானா அவ பேச்சை பேசினேன்..? நொட்டை விட்டுக்கிட்டு அவ பேச்சை பேசி வைச்சது யாரு..?"

"நான்தான்.. நான்தான்.. அந்தக் குத்தத்தை செஞ்சு தொலைச்சது சாட்சாத் நானேதான்.. வாயாலே கெட்டேன் அனு.."

அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு சரணாகதியாக.. அனுராதா கொஞ்சம் கூட இரக்கம் காட்டாமல் மலையேறுவதிலேயே குறியாக இருந்தாள்.. பெட்டியில் துணிகளை அவள் அடுக்கிய வேகத்தில் உண்மையாகவே அவள் வீட்டை விட்டு வெளிநடப்பு செய்யப் போகிறாள் என்பது பிடிபட்டுப் போக பிரதாப் கையெடுத்துக் கும்பிடாத குறையாக அவளிடம் கெஞ்ச ஆரம்பித்தார்..

நீ பாட்டுக்குக் கெஞ்சிக் கொண்டிரு... நான் பாட்டுக்கு என் பிறந்த வீட்டுக்கு பெட்டியைக் கட்டறேன் என்ற ரீதியில் அனுராதா தனது வேலையை செவ்வனே

செய்து கொண்டிருக்க.. பிரதாப் ஊடே பாய்ந்து பெட்டியின் மீது விழுந்தார்..

"பாரு அனு.."

பிரதாப் பேச்சு வார்த்தைக்கு அவளை அழைக்கும் மார்க்கமாய் பேச்சை ஆரம்பிக்க.. அனுராதா நீதானே பார்க்கச் சொன்னாய்.. இதோ பார்த்து விட்டேன் என்ற திணுசில் அவரை நிமிர்ந்து 'யாரடா நீ..?' என்ற பாணியில் என்னவோ அவளுக்கும், அவருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்ற ரீதியில் பார்த்து வைத்து விட்டு விட்ட வேலையை தொடர்ந்தாள்..

"சின்ன விசயத்துக்கெல்லாம் பெட்டியைத் தூக்கக் கூடாது அனு.."

"எது சின்ன விசயம்..? எதிர் வீடு.. பக்கத்து வீடு.. ஒரு வீடு விடாம நீங்க கடலை போடறதா சின்ன விசயம்..?"

"ஏய்ய்..! நீயே எனக்கு பட்டம் கட்டி விடுவ போல இருக்கே.. நீ சொல்ற வீடுகள்ல இருக்கிற பொண்ணுக கிட்ட கேட்டுப்பாருடி.. யாராவது சுட்டு விரலை நீட்டி என்மேல ஒரு சின்னக்குத்தமாவது சொல்றாங்களான்னு பாப்போம்.."

"எப்படிச் சொல்வாங்க..? இத்தனை வருசமா ஒரே வீட்டுக்குள்ள பொண்டாட்டின்னு குடித்தனம் பண்ணிக் கிட்டு இருக்கிற என்னாலேயே உங்க பொய் முகத்த கண்டுக்க முடியல.. அவங்க பாவம்.. அனுராதாவோட புருசன்.. உத்தம புருசன்னு நம்பிக்கிட்டு இருக்காங்க..

அவங்க எப்படி உங்க மேல சந்தேகப் படுவாங்க..? அதையாவது நினைச்சுப் பார்த்தீங்களா.."

"நினைச்சுப் பாக்காம என்னடி பண்ணிட்டேன்..?"

"பேசாம போயிருங்க.. நானே கொலைவெறியில இருக்கேன்.."

"என்னை என்ன வேணும்னாலும் செய்துக்க.. வேணும்னா நாலு மொத்துக்கூட மொத்திக்க.. ஆனா விட்டுட்டுப் போகணும்னு மட்டும் முடிவு பண்ணாதேடி.."

"இந்த அனுராதா சொன்னாச் சொன்னதுதான்.."

"இதுவரைக்கும் அப்படியிருந்திருக்கலாம்.. இனி மேலும் அப்படி இருக்கக் கூடாது அனு.. கொஞ்சமாவது மத்தவங்களையும் நினைச்சுப் பார்க்கனும்.. இப்படி எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு முடிவெடுக்கக் கூடாது அனு.."

"அதைப் பத்தியெல்லாம் நீங்க பேசக்கூடாது.."

"வேற யாருடி பேசுவா..? எதிர் வீட்டு ஏகாம்பரம் வந்து பேசுவானா..? இல்ல அடுத்த வீட்டு அன்பழகன் வந்து பேசுவானா..?"

மறுபடியும் வாயால் கெட்டார் பிரதாப்.. கோபம் தலைக்கேறிய அனுராதா பெட்டியைத் தூக்கி பிரதாப்பின் தலைமீது கவிழ்க்க.. உள்ளே அவள் அடுக்கி வைத்திருந்த துணிமணிகள் அவர் தலைமீது பூமாரி போல விழுகத் தொடங்கின..

எதற்காகவோ அனுராதாவைத் தேடி வந்த யாமினி அக்காட்சியைக் கண்டதும் ஆச்சரியத்துடன்..

"அட..!" என்றாள்..

தான் பெற்ற மகளா இப்படி 'அட' போட்டது என்று விரக்தியாகிப் போனார் பிரதாப்..



14

அள்ளி.. அள்ளி.. அருந்தினாலும்.. அடங்காத தாகம் இது..

போர்க்களம் கண்ட வேந்தனாக அவன் அவளை வேட்டையாடத் துடித்தான்.. அவளோ நாணமென்னும் பெண்மையின் தன்மையில் அவனுடன் சேர இயலாமல் தவித்தாள்..

"நறுமுகை..!"

அவனது சினத்தில் அவளது விழிகளில் நீர் துளிர்த்து விட்டது..

"எம்மை விரும்பியது தாம்தான்.. என்மீது காதல் கொண்டுள்ளதாக உரைத்ததும் தாம்தான்.. எனது தேகத்தையும்.. அகத்தையும் நின் ஒருத்திக்கு மட்டுமே உடைமையாக்க வேண்டும் என்ற வரத்தை யாசித்தவளும் தாம்தான்.. எமது கரங்களில் மங்கல நாணை பூட்டிக் கொண்டவளும் தாம்தான்.. தேசம், இல்லம், தாய், தந்தை என்ற அனைத்து உறவுகளையும் துறந்து எம்மையே தஞ்சமென்று நம்பி என்னுடன் வருகை தந்தவளும் தாம்தான்.. தமது தேகமும், அகமும்.. எனக்கு மட்டுமே

சொந்தமானது என்று அவற்றை எனது உடைமைப் பொருள்களாக என்னிடம் ஒப்படைத்ததும் தாம்தான்.. இத்தனை செயல்களையும் புரிந்து விட்டு.. எமது உரிமையை நிலைநாட்ட தடை விதித்தால் என்ன பொருள்..?"

மாறவர்மனின் சீற்றத்தில் மனம் கலங்கிய நர்மதா தேவியின் துளிர் விரல் புரவியை சுட்டிக் காட்டியது..

"இதையே உரைத்துக் கொண்டிருக்கிறாயேடி.. தாம் எனது மங்கல நாணை ஏற்றுக் கொண்டது என்னுடன் இல்லறம் நடத்துவதற்காக.. இவ்வாறு உரையாடலை திசை மாற்றுவதற்காக இல்லை.. புரிந்ததா..?"

"அல்ல அரசே..!"

"உரைக்காதே.. இந்தப் பொழுதிற்காக எனது தேகம் துடித்த துடிப்பை நீ எவ்விதம் அறிவாய்..?"

"தாம் மட்டும்தான் துடித்தீர்களா..?"

நர்மதாவின் வினாவில் பொங்கிய மாறவர்மனின் சினம் அப்படியே தனிந்து விட்டது..

"யாது உரைத்தாய்..?" அவன் பரபரத்தான்..

"போங்கள்.." அவள் நாணத்துடன் வதனத்தை கரம் கொண்டு மூடிக் கொண்டாள்..

மூடிய தளிவிரல்களுக்கு இடையினில் தெரிந்த அவளின் விழிகளில் கண்ட அழைப்பில்..

"அடி கள்ளி..!" என்று வேட்கை கொண்டான் மாறவர்மன்..

அவளது மேலாடையில் அவனது கரம் படிந்தது.. நர்மதா பதட்டத்துடன் மேலாடையை இறுக்கிக் கொண்டதில் விலகி நின்ற மாறவர்மனின் சினம் மீண்டும் வந்து அவனைத் தொற்றிக் கொண்டது..

"யாதடி இது..?" அவன் கர்ஜித்தான்..

"புரவி..!" அவளின் தளிர்விரல் மீண்டும் புரவியை சுட்டிக் காட்டியது..

"புரவிக்கென்ன நறுமுகை..?" அவன் சலித்துக் கொண்டான்..

"புரவி நம்மை நோக்கிக் கொண்டுள்ளது..." நர்மதாவின் வார்த்தைகள் தடுமாறியதில் மாறவர்மனுக்கு விவரம் புரிந்து விட்டது.. அவன் பலமாக நகைத்தான்..

"இதுவா சேதி..? ஹா.. ஹா.. இதையுணராமல் நான் எதையெதையோ உரைத்தேனே.. ஹா.. ஹா.."

"போதும்.."

நாணத்துடன் அவன் மார்பில் ஒன்றியவளை பிணைத்துக் கொண்டவன் அவளைக் கரங்களில் ஏந்தியபடி எழுந்தான்..

அவனது கழுத்தை வளைத்துக் கொண்ட நர்மதா.. புரியாமல் விழித்தாள்..

"என்ன பார்க்கிறாய்..? எவ்விடம் செல்லப் போகிறோமென்று தெரியுமா..?" மாறவர்மன் இமை சிமிட்டி நகைத்தான்..

நர்மதாவிற்கு புரியவில்லையென்றாலும் அவன் மறைவாக ஓர் இடத்தை தேர்ந்தெடுத்துள்ளான் என்பதில் அவள் மனதில் நிம்மதி பரவியது..

'இனியும் இவனது சினத்தைத் தூண்டத் தேவையிருக்காது.. எவ்வித தடையுமின்றி எம்மை ஆள இவனை அனுமதிக்க விடலாம்..'

அந்நினைவில் அவளது தேகத்தில் பரபரப்பு பற்றிக் கொண்டது.. மாறவர்மன்.. அருவிக்கரையின் மலை முகட்டை ஒட்டியிருந்த செடிப் புதரை அணுகினான்..

பச்சிளம் இலைகளாலும்.. கொடிகளாலும் பின்னிப் பிணைந்திருந்த அந்தப் புதரின் ஓரமாக அவன் கரம் வைத்த போது அது திறந்து அவனுக்கு வழிவிட்டது..

'இது கதவா..?' நர்மதா தேவி வியப்படைந்தாள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அது கதவென்றே தெரியாது.. அவ்வளவு திறம்பட செடிகளாலும் கொடிகளாலும் பிணைக்கப்பட்ட புதர் போல அது தோற்றமளித்தது..

அருவிக்கு நெருக்கமான மலை முகட்டின் செடி புதருக்குள் ஓர் கொடி இல்லம் இருக்குமென்று எவராலும் அனுமானிக்கவே இயலாது.. திறம்படி வடிவமைக்கப் பட்டிருந்த அந்த கொடி இல்லத்துக்குள்.. சில பெட்டகங்களும்.. பஞ்சணையும்.. கலயங்களும் தென்பட்டன.. கொடி இல்லத்தின் வாயில் கதவைத் தாழிட்டுத் திரும்பிய மாறவர்மன்.. அங்கிருந்த பஞ்சணையைச் சுட்டிக் காட்டி..

"இதுவே நமது பள்ளியறை.. இனி எம்முடன் கூடுவதில் தமக்கு தடையேதும் இல்லையே.." என்று மீண்டும் இமை சிமிட்டினான்..

கொடி இல்லத்தின் சுற்றுச் சுவர்களாக கருங்கற்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருந்த சுவர் இருந்தது.. அதன் கூரை எஃகும்.. மரங்களும் கொண்டு அமைக்கப் பட்டிருந்தது.. அதன் வாயிற்கதவும் கடினமான மரத்தைக் கொண்டும்.. எஃகு தாழ்ப்பாளைக் கொண்டும் பொருத்தப் பட்டிருந்தது..

வெளியிலிருந்து பார்வையிடும் போது செடிகள் அடர்ந்த புதர் போல தோற்றமளிப்பது மாறவர்மனுக்கான சிறு இல்லம் என்பதில் மலையளவு வியப்பைக் கொண்டாள் நர்மதாதேவி..

"இவ்வில்லத்திற்கு சாளரங்கள் அமைக்கவில்லை.. உணவு சமைப்பதாக இருந்தால்.. வெட்ட வெளியில் அருவிக்கரையில் சமைத்து விடுவேன்.. அதிலிருந்து வெளியேறும் புகை மூட்டம்.. அருவியின் வெண்ணிற நீர் மூட்டத்தோடு கலந்து தென்படுவதால் எவர்க்கும் சந்தேகம் எழும்பாது.. இப்பெட்டகங்களில் எமக்குத் தேவைக்கான பொற்காசுகளும் ஆடைகளும், ஆபரணங்களும் உள்ளன.. அருகில் உள்ள மலையடிவார கிராமத்தில் கூடும் சந்தையில் பொருள்களை விலை கொடுத்து பெற்று வருவது உண்டு.. அப்பொழுதுகளில் சாதாரண விவசாயி போல நான் மாறுவேடம் புனைந்து செல்வேன்.."

"ஓ.."

நர்மதா இதழ் குவித்து அவன் கூறியதை செவி மடுத்தாள்.. மாறவர்மன் பஞ்சணையில் அமர்ந்து அவளை தன்னருகே இழுத்துக் கொண்டபோது மறுப்புரைக்காமல் அவன் கரங்களில் தன்னை ஒப்படைத்தாள்..

தடைகள் விலகியதில் மாறவர்மன் அணையுடைந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்தான்.. புயலில் சிக்கிய பூங்கொடியாக அவள் சுவாசம் திணறியதை அவன் பொருட்படுத்தவே இல்லை.. அவன் வேண்டியதை யெல்லாம் பெற்றுக் கொண்ட பின்னர்தான் அவளை விடுவித்தான்..

அருவியில் நீராடிய போது நர்மதாவின் மனதில் மகிழ்வும் அமைதியும் மட்டுமே சூழ்ந்திருந்தன.. கொட்டுகிற அருவியின் வேகத்தை சற்று முன்னர் மாறவர்மன் உணர்த்திய பொழுதை நினைத்துப் பார்த்தவளின் இதழ்களில் நாணச் சிரிப்பு வந்தது..

'முரடன்..'

செல்ல விளிப்பு அவள் மனதில் வந்தது.. அந்த முரடன் அருவியின் நீரிலும் அவளருகில் வந்து தழுவியபடி நீராடி வைத்தான்.. அவளது நீண்ட கூந்தல் தோகையாய் விரிந்து அவனது தேகமெங்கும் பரவியதில் அவன் கொண்ட இன்பத்தை அவனது தழுவுதல் உணர்த்தியது.. ஈரம் சொட்டிய உடைகளுடன் அருவியிலிருந்து வெளிப் பட்டவளை கண்டவனின் கண்களில் முன்தினத்தின்

காலைப் பொழுதில் கடலில் நீராடி அதைப் போன்ற ஈர உடையுன் அவன் முன்னால் மோகினி போல அவள் வந்து நின்ற தோற்றம் விரிந்தது..

யௌவனத்தின் வனப்பை அவளது ஈர உடை தெள்ளத் தெளிவுற வெளிப்படுத்தியதில் அவனுக்குள் மோகவெறி மிகுந்தது..

'இவள்தான் எத்துனை எழில் கொண்டவளாக உள்ளாள்..'

அவன் விழிகள் அவளது தேகத்தில் மேய்ந்ததில் அவள் நாணமுற்றாள்.. அவன் நீட்டிய சீலையை பெற்றுக் கொள்ள கரம் நீட்டியவளின் கரத்தைப் பிடித்து அருகே இழுத்துக் கொண்டவன்.. அவளது நனைந்த கூந்தலை சீலை கொண்டு துவட்ட முற்பட்டான்..

"அருமையான பணி..!" விழி மலர்ந்து அவள் நகைத்தாள்..

"ஏனடி..? இப்பணிக்கென்ன குறைவு..? இது அருமையான பணி என்பதில் எமக்கு ஐயம் சிறிதளவும் இல்லை.."

"நன்றாக உள்ளது.. நாடாளும் வேந்தன்.. தமது தேவியின் சிகையை உலர்த்த முனைவதை எவரேனும் கண்டால் கரம் கொட்டி நகைப்பார்.."

"நகைக்கட்டுமே.. நாட்டுக்குத்தான் அவன் வேந்தன்..! மங்கல நாண்பூட்டிய மனையாட்டிக்கு அவன்

காதல் கணவன்..! அவளுக்கு பணி புரிவதைவிட தலையாய கடமை வேறேதும் உள்ளதா என்ன..?"

"தாம் வித்தாரம் உரைப்பதிலும் வல்லர்தான்.."

இதழ்களைச் சுழித்து அவள் அழகு காட்டியதில் மயக்கம் கொண்டவன் அவளை தன்புறமாக திருப்பி ஆழ்ந்த குரலில் வினவினான்..

"வித்தாரம் உரைப்பதிலும் வல்லவர் என்று அழுத்தம் அளிக்கிறாயே.. யாம் வேறு எப்பணியில் வல்லவர் என்பதையும் இணைத்து உரைத்தால் நலமாக இருக்கும்.."

அவனது பார்வையின் வேட்கையில் கிறங்கிப் போனாள் நர்மதா..

"இருக்கும்.. இருக்கும்.." நாணத்துடன் நகைத்தாள்..

அவளது செல்ல மொழியில் கிறங்கிப் போனான் மாறவர்மன்.. கொடி இல்லத்தின் பஞ்சணையில் அவனைத் தழுவி ஒன்றியபோது அவன் தகர்த்தெறிந்த தடைகளை வெகு விருப்பத்துடன் அவள் எதிர்கொண்டாள் என்பதில் அவள் மீதான பிரியம் அவனுக்குள் மேலோங்கியது..

நாணத்துடன் கூடிய அவளது கூடலை எண்ணிப் பார்த்தவனுக்கு மறுபடியும் அவளைக் கூடும் ஆசை மிகுந்தது.. அவன் அளித்த சீலையில் சிகை துவட்டி.. வேறு ஒரு சீலையை அணிந்து கொண்டவள், ஈரத்தில் நனைந்திருந்த பட்டாடைகளை அருவி நீரில் கசக்கிப் பிழிந்து கரையோர செடிகளில் உலர்த்திக்

கொண்டிருந்ததை கண்ணுற்றவனுக்கு.. அவனுக்காக அவள் துறந்து வந்திருக்கும் மாளிகை வாழ்வை எண்ணி மிதான வருத்தம் உண்டானது..

அவளருகில் சென்று.. செழுமையான அவளது தோள்களைத் தழுவி.. ஈரம் உலராமல் இருந்த கூந்தல் னத்தில் வதனத்தைப் புதைத்தான்.. அவளது கரங்கள் அவனது வெற்று முதுகில் பரவிப் படர்ந்தன.. அவளது ளைகரத்தின் மென்மையில் மனம் நெகிழ்ந்த மாறவர்மன் அவளது செவியோரமாக ரகசியக் குரலில் வினவினான்..

"பணியாளின்றி தாமாக தமது உடைகளை கசக்கிப் ிழிவது கடினமாக உள்ளதா நறுமுகை..?"

"இல்லையே.."

"பொய்.."

"மெய்.."

"எம்மால்தானே தாம் தனியாக தமது ஆடைகளைக் ுக்கும் பணியை புரிய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது..?"

மாறவர்மனின் வினாவிலிருந்து அவனது மனதைப் ரிந்து கொண்ட நர்மதாதேவி.. விலகி அவன் வதனம் ோக்கி புன்னகை புரிந்தாள்..

"தம்மால்தான் நான் இன்று இவ்வுலகில் உள்ள அத்துணை இன்பங்களையும் துய்த்துக் களித்தேன்.. ன்பே..! தம்மால்தான்.. நான் இன்று எனக்கு மட்டும் சொந்தமான தங்களின் மங்கல நாணை எமது கழுத்தில்

ஏற்றேன்.. பிரியத்துக்குரியரே..! தம்மால்தான் நான் இன்று பெண்ணென்று இப்புவியில் பிறப்பெடுத்தின் முழுப் பலனையும் அறிந்தேன்.. என் சுவாமி..! தம்மால்தான் நான் இன்று என் வாழ்வை வாழ்வாக வாழ்ந்துள்ளேன்.. எமக்கு மட்டும் உரியவராக என் இறுதி வரை தாம் இருப்பதாக வாக்களித்துள்ளீர்களே.. தம் அருகாமையை விட மாளிகை வாசம் உயர்ந்ததில்லை எனது மன்னவரே..!"

"தேனினும் இனிய மொழிகளை மொழிகிறாய்.."

"தாமே தேனானவர் எம் அரசே..!"

"நான் தமது கணவன்.."

"தற்போது இவ்வறிமுகம் தேவைதானா..?"

நர்மதா தேவி நாணத்துடன் கொடி இல்லத்தை திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. மாறவர்மனுடன் அவள் கலந்த மணித்துளிகளை அக்கொடி இல்லம் உரைத்துக் கொண்டிருந்ததில் அவளது கன்னம் சிவந்தது..

அவளது பார்வை உரைக்காமல் உரைத்த செய்தியில் கள்வெறி கொண்டான் மாறவர்மன்.. விலகி நின்றவளை நெருங்கித் தழுவினான்.. சுவாசம் திணற.. எழும்புகளை சிதிலமாக்கிய அவனது இறுக்கமான தழுவலில் தன்னை ஒப்புக் கொடுத்தாள் நர்மதாதேவி.. அவளது தேகம் தழுவி.. அடுத்த கூடலை ஆரம்பமாக்க யத்தனித்தவனின் வயிறு பசியை உணர்த்தியதில் மின்னல் வெட்டைப் போல அந்த நினைவு அவனுக்குள் வந்தது..

'இத்துணை பொழுதாகியும்.. இன்னமும் இவள் பசியாறவில்லையே.. தாமதமாக உணவருந்தி எனக்குப் பழக்கமுண்டு.. இவளுக்கு பழக்கமில்லையே..'

பரபரப்புடன் அவளை விட்டு விலகியவனின் கரம் பற்றி..

"ஏன் அன்பே..?" என்று தாபத்துடன் வினவினாள் நர்மதாதேவி..

பசிமறந்து.. அவனுடன் ஒன்றியிருப்பதை மட்டுமே விரும்பி நின்றவளின் மீது காதலாகிப் போனான் மாறவர்மன்.. அவளது வதனம் பற்றி விழியோடு விழி கலந்தவனின் குரல் கரகரத்தது..

"பசி மறந்தாயா என் பிரியத்துக்குரியவளே..?"

அவனது வினாவை செவி மடுத்த பின்புதான் பசியை உணர்ந்தாள் நர்மதா..

"எமக்கு நினைவில்லை.." கலகலத்து நகைத்தாள்..

அந்நகைப்பில் மாறவர்மனின் மன வருத்தம் பறந்து போனது.. அந்த அடர்ந்த வனத்தில் அருவிக் கரையின் அருகே உணவு கிட்டுமா என்ற ஐயம் துளியளவும் இல்லாமல் அவனை நோக்கியவளின் நம்பிக்கையில் மாறவர்மனின் காதல் அதிகரித்தது..

"உணவைப் பற்றிய நினைவில்லாமல் எதனை நினைத்துக் கொண்டிருந்தாய் நறுமுகை..?" விளையாட்டுடன் அவளது இதழ்களை விரல்கொண்டு சுண்டியவாறு வினவினான் மாறவர்மன்..

"ஸ்.. ஆ.." ஒயிலாக இதழ் வளைத்தவளின் எழில் மாறவர்மனை வசியப்பொடி போட்டு வசியம் பண்ணி மயக்கியது..

"தம் நினைவைத் தவிர வேறு எந்நினைப்பும் எம் மனதில் இல்லை மன்னவரே.." அவள் சிரம் சாய்த்து இதழ் குவித்த போது.. அவளை வேட்டையாடும் வேட்கை அவனுக்குள் மிகுந்தது..

'உடனடியாக இவளுக்கு உணவளிக்க வேண்டும்..'

கணவனின் கடமை அவனை கட்டி வைத்தது.. கூடலைப்பற்றிய நினைவை சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு.. இல்லத்தின் கதவு திறந்து உள்ளே சென்று திரும்பினான் மாறவர்மன்..

அருவிக் கரையின் பாறையில் அமர்ந்து சிகை விரித்து ஈரம் போக அதை அலர்த்திக் கொண்டிருந்தாள் நர்மதா தேவி..

கொடி இல்லத்திலிருந்து வெளிப்பட்ட மாறவர்மன் அவளது எழிலில் பிரமித்துப் போனான்.. சற்றுப் பொழுதிற்கு முன்னர்.. அவளுடன் கூடிய மாறவர்மன் இடையூறாக இருந்த அவளது ஆபரணங்களை அகற்றியிருந்ததால்.. கரங்களில் வளையும்.. கழுத்தில் அவன் பூட்டிய மங்கல நாணையும் தவிர்த்து வேறு அணிகலன்கள் இல்லாமல் வெகு எழிலாக.. கந்தவர்வ மங்கை போல அவள் காட்சி தந்தாள்..

அவளை உண்பதைப் போல பார்த்தபடி அருகில் வந்தவனின் பார்வையை கண்ணுற்றவள் வதனம்

சிலைந்தாள்.. அவளது நாணச்சிகப்பை ரசித்தபடி அருவிக் கரையில் கற்களை உராய்ந்து கனல் மூட்டினான் ராகவர்மன்.. அவன் குவித்திருந்த சுள்ளிக் குவியலில் நெருப்பின் கனல் பொறிகள் பட்டு பற்றிக் கொண்டது.. கொழுந்து விட்டு எரிந்த சிறு நெருப்பில்.. அவனது கரத்திலிருந்தவைகளைப் போட்டான்.. சிறு குச்சி கொண்டு நெருப்பில் அவற்றை புரட்டி விட்டான்.. அணைந்த நெருப்பின் சாம்பல் குவியலில் இருந்து அவன் போட்டவற்றை மீட்டு எடுத்தவன்.. அருவி நீரில் அவற்றைக் கழுவி அருவிக் கரையின் பாறையில் அவற்றை பரத்தினான்..

சின்னச் சின்ன பாறைகள் அணி வகுத்து ஆசனங்களைப் போல அமைந்திருந்த அந்த அருவிக் கரையில் அவனுக்கும், அவளுக்குமான உணவுக்கூடம் தயாரானது..

நர்மதாவுக்கு எதிரில் இருந்த பாறையில் உணவுப் பொருள்களை பரத்தியவன்.. நர்மதாவின் அருகில் அவளை நெருங்கி கொண்டு அமர்ந்ததில் அவர்களின் உணவுவேளை ரம்மியமானது..

தன் முன்னிலையில் உயர்ந்திருந்த பாறையில்.. பெரிய இலைகளால் உருவாக்கப்பட்ட வாழையிலை என்ற வடிவமைப்பை உடைய இலைகளின் தொகுப்பில் ராகவர்மன் அளித்திருந்த உணவு வகைகளைப் பார்த்தாள் நர்மதா..

"இது மரவள்ளி கிழங்கு..! நெருப்பில் வெந்தது.. உண்ண சுவையாக இருக்கும்.. இது பனைக்கிழங்கு.. இதுவும் சுயைானதே.. இது கம்புக் கதிர்.. நெருப்பில் சுடப்பட்டு உதிர்க்கப் பட்டுள்ளது.. இது சுடப்பட்ட வேர்க்கடலை.. இவை இந்த அருவிக் கரையின் பழ மரங்களில் இருந்து உடனடியாக கொய்யப்பட்ட கனிவகைகள்.. போதுமா நறுமுகை..? வேறேதும் தேவையென்றால் இயம்பு.. அருகிலிருக்கும் கிராமத்திற்கு மாறுவேடம் புனைந்து சென்று தருவித்துத் தருகின்றேன்.." இதமாக கூறினான் மாறவர்மன்..

அவனது உபசரிப்பில் நர்மதாவின் விழிகளில் நீர் நிரம்பி விட்டது.. அவளுக்கான இலை முழுவதும் பரப்பப் பட்டிருந்த உணவு வகைகளைப் பார்த்தாள்.. அது தினம் வரை அவள் உண்டு வந்த அறுசுவை உணவு வகைகள் மாறவர்மன் அளித்திருக்கும் உணவு வகைகளுக்கு ஈடாக இயலாது என்று அவளது மனம் நெகிழ்ந்தது..

"இவையே மிகுதியானது.. இதைவிடச் சுவையான உணவை எமது தாய் வசிக்கும் மாளிகையில் கூட யாம் உண்டதில்லை.."

நர்மதா இலையில் இருந்த கிழங்கு வகைகளையும்.. கனி வகைகளையும் சுவைத்து உண்ண ஆரம்பித்தாள்.. இலையில் இருந்தவை காலியான விரைவில் அவளது பசியை உணர்ந்து கொண்ட மாறவர்மனின் மனம் கனிந்தது..

"இது போன்ற அருவிக்கரையும்.. கொடி இல்லமும்.. சுவையான கிழங்கு வகைகளும்.. உடனடியாக கொய்யப்

படும் கனிவகைகளும் அருகினில் தாங்களும்... எமது கழுத்தில் தாங்கள் பூட்டிய மங்கல நாணும் எம் வாழ்வில் கிட்டுமென்று சொப்பனத்திலும் யாம் எண்ணிப் பார்த்ததில்லை அரசே..!" நர்மதாவின் குரல் கம்மியது..

மாறவர்மனின் கரம் அவளை வளைத்துக் கொண்டது.. கொய்யப்பட்டிருந்த கனி வகைகளை அவளது இதழ்களுக்கு.. அவன் இதழ் கவ்வி இடம் மாற்றி சியாற்றிய விதத்தைக் கண்டும் காணாததைப் போல அவனது புரவி வெகு சமர்த்தாக வேறு திசையில் திரும்பி புல்மேய்ந்து கொண்டிருந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



14

ஏதோ ஒரு மயக்கம்..
என் மனதை வாட்டுது..

"தேவைதாண்டி எனக்கு.."

கொதிப்புடன் சொன்னாள் அனுராதா.. அவளது பார்த்தைகளில் இருந்த கொதிப்பை யாமினி கண்டு கொள்ளவில்லை.. அதற்கு காரணங்கள் பல இருந்தன.. அவற்றில் அதி முக்கியமான காரணம்.. அனுராதா யாமினியையும் அவளைப் பெற்ற பிரதாப்பையும் கண்டு விட்டாலே எரிமலையைப் போலக் கொதிக்க ஆரம்பித்து விடுவாள் என்பது..

யதுநந்தன் எரிமலையை குளிர வைப்பவன்.. சராசரி சிந்தனைகளையுடைய வெற்றிகரமான தாயின் சராசரி மகனாக.. சராசரி சிந்தனைகளின் சிகரமாக திகழ்ந்து அவள் மனதை குளிர வைத்துக் கொண்டிருப்பது யது நந்தன் மட்டுமே..

அனுராதா எட்டடி பாய்ந்தால் அவன் எண்ணூறு அடி பாய்ந்து அவளை பூரிக்க வைப்பான்..

“என்னடா யது.. கத்தரிக்காய் வாங்கச் சொன்னா வெண்டைக்காயோட வந்து நிற்கிற..?” அனுராதா விளக்கம் கேட்டால்..

“ம்ம்ா..! கத்தரிக்காய் கால் கிலோ இருபது ரூபாயாம்.. அதுவே வெண்டைக்காய் கிலோ பத்து ரூபான்னு மார்க்கெட்டுக்கு வந்து குமிஞ்சிருக்கு.. பாத்தேன்.. கால் கிலோ கத்தரிக்காய் வாங்கற காசில இரண்டு கிலோ வெண்டைக்காயை வாங்கிட்டு வந்துட்டேன்.. இப்ப என்ன..? கத்தரிக்காய் வதக்கலுக்குப் பதிலா வெண்டைக்காய் பொரியலை பண்ணிருங்க.. நாளைக்கு வெண்டைக்காய் குழம்பு.. அடுத்த நாள் வெண்டைக்காய் தொக்குன்னு ஜமாய்ச்சிர மாட்டிங்க..?”

“நீதாண்டா என் புள்ள..”

“அப்ப யாமினி..?”

“அவ அப்பா புள்ள..”

அந்தக் கூட்டணியில் யது நந்தனுக்கு யாதொரு ஆட்சேபணையும் இருக்காது.. அவனுடன் இணையாக

யோசிப்பது அம்மா மட்டுமே என்ற ஆழமான எண்ணம் அவன் மனதில் பதிந்திருந்தது.. பிரதாப்பின் எண்ணங்களை..

"கவைக்கு உதவாதுப்பா.." என்று விமரிசிப்பான்..

அதற்கேற்றார் போல யாமினியை கத்தரிக்காய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னால்.. அவள் வாடி வதங்கிய கத்தரிக்காயை வாங்கிக் கொண்டு வந்து சேருவாள்.. விலையும் அதிகமானதாக இருக்கும்..

"என்னடி..?" அனுராதா நெற்றிக் கண்ணைத் திறந்தால்..

"நீங்கதானேம்மா கால்கிலோ கத்தரிக்காய் வாங்கிட்டு வான்னு சொன்னீங்க..?" என்று அவளையே கேள்வி கேட்பாள்..

"அதுக்காக வதங்கிப் போனதையா வாங்கிட்டு வருவ..?"

"இதுதாம்மா இருந்துச்சு.."

"விலையும் முப்பது ரூபாய்.."

"இன்னைக்கு விலை கூடிப் போயிருச்சாம்.."

"கூடியிருந்தா வேற காயை வாங்கிட்டு வரது..?"

"எந்தக் காய்ன்னு நீங்க சொல்லலையேம்மா.."

'நான் சொன்னால்தான் எதையும் செய்வியா..? இருட்டு நேரத்திலே மகாபலிபுரக் கடலோரம் சுத்திக்கிட்டு இருன்னு நான்தான் உன்கிட்டச் சொன்னேனா..?'

அனுராதாவிற்கு ரத்தக் கொதிப்பு வந்து விடும்.. அந்தக் கருமாயத்துக்கு பயந்தே அவள் யாமினியை காய் வாங்க அனுப்பிவைக்கும் பரிசோதனையை மேற்கொள்வ தில்லை..

"காலே உடைஞ்சிருந்தாலும் உருண்டுக்கிட்டுப் போயாவது நான் காய் வாங்கிட்டு வந்துக்குவேனேயொழிய உங்க மகளை காய் வாங்க அனுப்ப மாட்டேன்.." பிரதாப்பிடம் சீறுவாள்..

"அவ பாவம் என்னடி பண்ணுவா..? நீ சொல்கிறதை உருப்படியா சொல்லி அனுப்பியிருக்கனும்.." பிரதாப் மகளுக்கு பரிந்து பேசுவார்..

"இப்படியாப்பட்ட உருப்படியை மகளா பெத்து வைச்சுக்கிட்டு நீங்க உருப்படியைப் பத்திப் பேசக் கூடாது.." அனுராதா நொடிப்பாள்..

"அவளோட சிந்தனைகளை நீ புரிஞ்சுக்க முயற்சி பண்ணனும் அனு.."

"என்ன கழுதைக்கு..? நான் உருப்படியா வீட்டில இருக்கிறது உங்களுக்குப் பொறுக்கலையா..? என்னையும் கடலே கதின்னு சுத்தி வரச் சொல்கிறீங்களா..?"

"அனு.."

"கத்தாதீங்க.. பிளட் பிரசர் எகிறப் போகுது.. விழுந்துக்கிட்டா உங்க மக பார்க்க வரமாட்டா.. நான் தான் ஓடி வந்து தொலைக்கனும்.. இருக்கிற இம்சைக பத்தாதுன்னு புதுசா எந்த இம்சையையும் கிளப்பாம வேலை வெட்டியை பாருங்க.."

இவ்வாறு அனுராதா இருத்தல் ஆகாது.. அவள் ...ாரினியை புரிந்து கொள்ளும் முயற்சியை மேற்கொள்ள ...வேண்டும்.. யாமினி வானத்தை வெறித்து வெறித்து ...ார்ப்பதன் பிண்ணனியில் உள்ள வான சாஸ்திரத்தை ...ராய வேண்டும் என்ற ரீதியில் யதுநந்தனை அவர் ...ழுத்து வைத்து மனக்குறைகளை கொட்டினால்..

"ஏன்ப்பா..?" என்று அவன் கேட்டு வைப்பான்..

"என்னடா இப்படி கேட்டு வைக்கிற..?"

அவருக்கு நெஞ்சுவலியே வந்துவிடும்.. அதைச் ...ொன்னால் அதற்கும் யாமினிதான் காரணமென்று அனுராதாவும் யதுநந்தனும் பழி போட்டு விடுவார்கள் ...ன்பதினால் அவர் வாய்மூடிக்கொள்வார்..



15

நீ சொல்கின்ற மார்க்கத்திலே..
எனது வதனம் காண்பாயோ..

எழிலான ஊஞ்சல் அது..!

அரண்மனையின் மேன் மாடங்களிலும்.. ...ப்பரிகைகளிலும் தொங்கும் அலங்கார ஊஞ்சல்களைப் ...ோல் இல்லாமல்.. காட்டுக் கொடிகளைப் பிணைத்து ...டுக்கையாக்கி.. இரு மரத்தின் கிளைகளில் இறுக்கிக் ...ட்டப்பட்டிருந்த ஊஞ்சல் அது..

கொடிகளால் படுக்கை போல் வேயப்பட்ட பசுமை நிற ஊஞ்சலில் சயனித்திருந்தான் மாறவர்மன்.. அவனது பரந்த மார்பில் வதனம் புதைத்து.. இடைவெளியின்றி உடன் பிணைந்திருந்தாள் நர்மதா தேவி.. அந்த நெருக்கத்தில் அவர்கள் இருவரின் தேகங்களிலும் உருவான உஷ்ண அலைகளை தழுவல்களின் மூலமும்.. அதரங்களின் ஆக்ரமிப்பின் மூலமும் தணித்துக் கொண்டிருந்தான் மாறவர்மன்.. அவனது தேகத்தை தன் கூந்தல் கொண்டு கீலை போல போர்த்தியிருந்தவளின் வனப்பில் கிறங்கிப் போயிருந்தான் அவன்..

முதல் தினத்தின் அதிகாலையில் அறிமுகமான மங்கை.. மறுதினத்தின் அதிகாலையில் அவனது மங்கல நாணை ஏற்று.. மனையாட்டியாகி அவனுடன் சயனித்திருக்கும் நிகழ்வில் அதிசயம் கொண்டது அவன் மனம்..

நிகழ்பவை சொப்பனம் போலத் தோன்றியது.. அவனுடன் தேகம் தழுவிக் கலந்திருந்த நர்மதாவின் தேகத்தில் முகிழ்ந்த நறுமணத் திரவியங்களின் வாசனை.. அது சொப்பனம் அல்ல, நிகழ்கால நிகழ்வு என்று உரைக்காமல் உரைத்துக் கொண்டிருந்தது.. அவளது தேகத்தை இறுக்கிக் கொண்டவனின் இறுக்கமான ஆலிங்கனத்தில் எதை உணர்ந்தாளோ.. நர்மதா தேவி விழிகள் மலர அவன் வதனத்தை ஆசையுடன் நோக்கினாள்.. அந்தப் பார்வையில் தன் வயமிழந்தான் மதுரை மாநகரின் மன்னன்..

"ஓர் தினத்துக்குள் எத்துனை நிகழ்வு..!
உன் பார்வையை நோக்கிடும் பொழுது..!
தொடுவானத்தை ஸ்பரிசிக்கும் உணர்வு..!
ஓ..! ஓ..! ஓ..!"

மெய் மறந்த அவன் பாடலில் மயங்கிப் போனாள் ஹொய்சாள நாட்டின் அரசிளங்குமாரி.. அவன் பாடலில் பொதிந்திருந்த பொருளில் கலந்து.. கரைந்து போனவளின் இதழ்கள் தாமாக இசைக்க ஆரம்பித்தன..

"ஓர் நாழிகைக்குள் எத்துனை மயக்கம்..!
இந்த மயக்கத்தில் எத்துனை தயக்கம்..!
இந்த தயக்கத்திலே வரும் நடுக்கம்..
நின்றாலும் கால்கள் நடக்கும்.."

அவளது முயல்குட்டி பாதங்களில் மாறவர்மனின் வலிமையான பாதங்கள் அழுந்திப் பதிந்தன.. அவளது தேகம் சிலிர்த்தது.. எவனது புகழை செவி மடுத்து மயக்கம் கொண்டாளோ.. அவனருகே, அவனது மனையாட்டியாக சயனித்திருக்கும் நிகழ்வை நம்ப இயலாமல் இது சொப்பனமா என்று தவித்துத் தயங்கியது அவளது பேதை மனம்..!

மனதில் உள்ளதை உரைத்திட மார்க்கம் ஏது..? இசையைத் தவிர்த்து அதற்கான சிறந்த மார்க்கமென்று வேறேதும் உண்டா..?

நர்மதாதேவி இசையை துணைக்கழைத்தாள்.. அவள் மனதினை வார்த்தைகளாக்கி கோர்த்தாள்.. அவள் இசைத்த

இசைச் சரத்தில் அவளது மனக்கோர்வை வெளிப்பட்டு பூவேலியாய் மாறவர்மனை பிணைத்து இறுக்கி தன் வயமாக்கிக் கொண்டது..

“செயல்முறை பாவனை மாற்றிவிட்டாய்..
நான் உரைத்திட வார்த்தைகள் நீ அளித்தாய்..
நீ காதலா..? இல்லை.. கடவுளா..?
புரியாமல் திணறிப் போனேன் நான்..”

நர்மதா தேவியின் குரலில் வழிந்த காதலில் நனைந்து திளைத்தான் மாறவர்மன்.. அவளது இமையோரம் அரும்பிய நீர் முத்துக்களை அவனது பரந்த மார்பு உணர்ந்தது.. உதிர்ந்த நீர் முத்துக்களின் ஸ்பரிசத்தில் அவளது கூந்தலை வருடி.. கூந்தல் வனத்தில் வதனம் பதித்தான்..

நர்மதாவின் தேம்பிய குரல் அவன் மீதான அவளது காதலை தொடர்ந்து உரைத்துக் கொண்டிருந்தது..

“யாரேனும் அழைத்தால் ஓர்முறைதான்..
நீதானோ என்று திரும்பிடுவேன்..
தினம் இரவினிலே.. உன் அருகினிலே..
துயிலாமல் துயில் கொண்டேன் நான்..”

அவளது அதீத காதலை உரைத்த பாடலில் மாறவர்மனின் இதயம் அசைந்தது.. அவளது உச்சந்தலையில் உஷ்ணமான இதழ்களைப் பதித்தவன்.. அவளது செவியோரமாக குனிந்து..

“இது ஏதோ புதுமை உணர்வு..!
இது புரிந்து உய்வுற்ற பொழுது.

ஓர் பனிமலை..! ஓர் எரிமலை..!
கரம் கொட்டி ஒன்றாய் நகைக்கும்..”

என்று ஆழ்ந்த குரலில் பாடினான்.. அந்த நொடிகள் நகராமல் நிலைத்து நிற்க வேண்டுமென நர்மதா விரும்பினாள்.. ஒரு யுகம் முழுவதும் புரியக்கூடிய அத்துனை காதலையும்.. சிலமணித் துளிகளில் புரிந்து விட்ட அந்த ஆண்மகனை விட்டு அகலாமல் உடன் பயணித்திருக்க வேண்டுமென அவளது தேகம் தகித்தது..

அவன் மீதான அவளின் அதீத காதலை அவன் புரிந்து கொண்டுள்ளானா என்று மயங்கியது அவளது மனம்..

அவன் வதனம் பார்க்க அவள் தவித்த தவிப்பை.. அவனைப் பற்றிய செய்திகளை செவி மடுப்பதில் அவள் கொண்டிருந்த நாட்டத்தை.. அச்செய்திகளை அசை போட்டபடி இரவுகளில் துயில் கொள்ளாமல் விழித்திருந்த பொழுதுகளை அவன் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவள் மனம் பரபரத்தது..

நதியோர மரக்கிளைகளில் பிணைத்திருந்த பங்கொடி ஊஞ்சலில் அவனோடு சயனித்திருந்தவளின் பார்வை, அருவிநீர் சுழித்தோடிய நதியோரக் கரைகளின் மரங்களின் மீது படிந்தது..

அந்த நதிக்கரையோர மரங்களுக்கு.. நதியின் மீது அத்துனை காதல் இருக்க வேண்டுமென அவள் எண்ணிக் கொண்டாள்..

அதனால் அல்லவோ.. அவை நதியோரமாக அடர்ந்து வளர்ந்து நதியின் கவனத்தை ஈர்க்க முயன்று கொண்டிருக்கின்றன..

“நதியோரம் பூக்கும் மரங்களுக்கு..
நதிமீது உள்ள காதலையே..
நதி அறியுமா..? கொஞ்சம் புரியுமா..?
கரையோர கனவுகள் எல்லாம்..”

அவளது ஏக்கத்தில் இளகிப் போன மாறவர்மன் அவளது வதனம் திருப்பி பிறைநுதல் நெற்றியில் சிறு முத்தம் இட்டான்..

அவளது ஏக்கத்தை தணிக்கும் வகையில் பாடவும் செய்தான்..

“எனக்கென்று நீயே பிறந்துள்ளாய்..
நீ எனைமட்டும் விரும்புகிறாய்..
நான் பறக்கிறேன்.. உன்னில் தினைக்கிறேன்..
சொப்பன உலகில் வலம் வருகிறேன்..”

அவன் பாடலில் அவள் கொண்ட உவகையை அவளது பார்வை பிரதிபலித்ததில் இவள் தனது எழிலையும்.. பிரியத்தையும் உணர மாட்டாளா என்ற வியப்பு மாறவர்மனின் அகத்தில் எழுந்தது..

அவளை விடவும் எழில் நிரம்பிய யௌவன மங்கைகள் பலரை அவன் சந்தித்திருக்கிறான்.. அவர்களில் எவரிடமும் அவன் மனம் மயக்கம் கொண்டதில்லை.. நர்மதா தேவியிடம் மட்டுமே அவன் மனம் சென்றது..

அதற்கு என்ன காரணம் என்று தன்னையே அவன் வினவிக் கொண்டபோது.. அவன் மீதான அவளது வானளாவிய பிரியம் விடையாக முன் வந்து நின்றது..

அதுபோன்ற அபரிதிமான பிரேமையை அவன் வாழ்நாளில் அவன் எதிர்கொண்டதில்லை... அந்த பிரேமையில் மயங்கிப் போனவன் தன்னையே அவள் வசத்தில் ஒப்படைத்து விட்டான்..

அவ்வாறு அவன் மனதை வென்றவள் கொண்ட மன மயக்கத்தில் அவனுக்கு நகைப்புத்தான் வந்தது..

"தன் வாசனை மலர் அறியாது..
தன் தேனினை அது புரியாது..
அது அறியலாம்.. பின்பு புரியலாம்..
அதுவரை நிகழ்வன நிகழட்டும்.."

அவளது செவியோரம் பாடியவன் தொடர்ந்து நிகழ்த்த ஆரம்பித்த நிகழ்வில் அனைத்தையும் மறந்தாள் நர்மதா தேவி.. அவனது அருகாமை மட்டுமே மனதில் இருக்க அவனிடம் அடைக்கலம் புகுந்தாள்..

அடிக்கடி நீராட அருவி இருந்தது... பசியாற அருவிக்கரையின் கனி மரங்கள் இருந்தன.. மனிதர்களின் இடையூறு இல்லாத வனத்தில் இனிதான தேநிலவை காதலர்கள் இருவரும் துய்த்து மகிழ்ந்தனர்..

மாறவர்மனின் வேட்கை அடங்காத ஆவேசம் கொண்டிருந்தது.. ஆண்டாண்டு காலமாக துய்க்க வேண்டிய மகிழ்வு அனைத்தையும் அந்த ஓர்தினத்துக்குள்

துய்த்து முடிக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளவனைப் போல அவன் இடைவெளியின்றி அவளை நாடினான்..

முதல்தினம்தான் அவளது காதலை அறிந்தவனுக்கே அத்துனை தேடல் இருக்கும் போது.. அனுதினமும் அவனது நினைவுகளை மட்டுமே சுவாசித்து வாழ்ந்தவளுக்குள் எத்துணை தேடல் இருக்கும்..?

நர்மதாதேவியும் அவனது விருப்பங்களுக்கு மறுப்புரைக்காமல் இசைந்து கலந்தாள்.. நண்பகலில் கனி வகைகளையும்.. கிழங்குகளையும் உணவாக உண்டு விட்டு அருவிக் கரையின் கொடி ஊஞ்சலில் சயனித்திருந்த வேளையில் மனம் கசிந்தான் மாறவர்மன்..

"எத்துனை பெருமை கொண்ட தேசம்.. எனது தேசம்..! கடல் கடந்த வணிகத்தை இந்த அவனிக்கு அறிமுகம் செய்வித்தது எனது பாண்டிய தேசம்..! அந்த தேசத்தின் பட்டத்து ராணி நீ..! என்னுடன் அருவிக் கரையில் சயனிக்கிறாய்.. என் மனம் வேதனை கொள்கிறது நறுமுகை..!"

"மாட மாளிகையும்.. கூட கோபுரமும் அளிக்காத இன்பத்தை இந்த அருவிக்கரை எனக்களிக்கிறது மன்னவரே..! தங்களின் பட்டத்துராணியாக அரியணை ஏற வேண்டுமென்று நான் ஆசை கொள்ளவில்லை.. தங்களின் இதய ராணியாக எனது வதனம் மட்டுமே தங்களின் அகத்தில் இருக்க வேண்டுமென்றே ஆசை கொண்டேன்.."

"அது தமது காதல்..! இது எமது வேதனை..! நறுமுகை.. நீ அறிவாயா..?"

"எதனை மன்னவா..?"

"எமது பாண்டிய நாட்டின் வளத்தையும்.. பெருமைகளையும்.."

"அறிவேன் அரசே..! தங்களின் புகழையும்... தங்களின் தாய்த்திரு நாட்டின் புகழையும் செவி மடுப்பது தானே எனது பணி..? தேவி மீனாட்சியும் சொக்கநாதப் பெருமானும் ஆட்சி புரிந்த தேசமல்லவா தங்களின் தேசம்..! பாண்டியர்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ள புராணங்களை நான் பாராயணம் செய்து வைத்துள்ளேனே.."

"நீ அதை மட்டுமே அறிவாய் நறுமுகை..! எமது நாட்டின் வணிக வளத்தைப் பற்றி அறியாய்... யவனர்களோடு யாம் சிறந்த வணிக உறவைக் கொண்டிருந்தோம்.. எமது கொற்கைத் துறைமுகம்... தமிழகத்திலேயே மிகச் சிறந்த துறைமுகமாக எங்களின் ஆட்சிக் காலத்தில் விளங்கியது... கொற்கைப் பெருந் துறையில் முத்துக்களும், சங்குகளும் பெருவாரியாக கிடைத்தன.. கொற்கையில் எடுக்கப் படும் முத்து 'கொற்கை முத்து..' என்ற சிறப்பு நாமம் பெற்று உலகெங்கும் சென்றது.. வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் பெரும் பொருள் ஈட்டியது எங்களின் பாண்டிய தேசம்தான்.. கடல் கடந்த வணிகம் மூலம் எங்கள் நாட்டை செல்வச் செழிப்புடன் யாம் ஆண்டு வந்தோம்...

அந்த வணிகத்தை குறி வைத்தே சோழர்கள் எங்களின் தேசத்தை கைப்பற்றினர்..”

“தாமும் விட்டுக் கொடுக்கவில்லையே.. சிற்றரசாக அடங்கிச் செல்லாமல் மறைந்துறைந்து... சோழர்கள் எதிர்பார்க்காத தருணங்களில் வெளிப்பட்டு அவர்களுடன் யுத்தம் புரிந்து தேசத்தை மீட்கப் போராடிக் கொண்டிருக் கிறீர்களே..”

“ஆம்..! அரியணையைக் கைப்பற்றி.. எங்களின் தேசத்தை மீட்டும் வரையில் எங்களின் போராட்டம் முற்றுப் பெறாது... எமது தமையன் ஜடாவர்மன் குலசேகரனுக்கு இழைத்த அநீதிக்கு சோழதேசம் எனக்கு விடையளித்துத்தான் தீர வேண்டும்..”

விழி சிவந்தான் மாறவர்மன்.. ஏனென்ற வினாவை எழுப்பாமல் அமைதி காத்தாள் நர்மதா தேவி..! அவள் அனைத்தையும் அறிவாள்... சோழர்கள் செழிப்புற்று இருந்த அந்தக் கால கட்டத்தில் பாண்டியர்களின் மறு மலர்ச்சிக்கு அடித்தளமிட்டவன் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்..

குலோத்துங்க சோழனின் ஆட்சியின் கீழ் சிற்றரசனாக ஜடாவர்மன் இருந்து வந்தான்.. ஆயினும்.. விடுதலை வேட்கையில் சோழர்களை எதிர்த்துப் போர் புரிந்து தனது தேசத்தை மீட்கத் துணிந்தான்..

ஜடாவர்மன் குலசேகரனுக்கும், சோழர்களுக்கும் ஏற்பட்ட போரில் சோழர்கள் வெற்றி பெற்று.. பண்டைய பாண்டிய நாட்டின் அரசவையை எரித்து விட்டார்கள்..

இந்த நிகழ்வு ஜடாவர்மனின் மனதில் ஆறாத ரணமாக பதிந்து விட்டது..

புராணங்களும்.. இதிகாசங்களும் போற்றிப் பாடிய பாண்டிய நாட்டிற்கு ஏற்பட்ட இழுக்கை களைய ஜடாவர்மன் துடித்தான்.. குமரிக் கண்டத்தில் தோன்றிய சந்ததியினரான பாண்டிய வம்சத்தின் பண்டைய அரசவையை எரித்த சோழர்களை பழிவாங்கும் வெறியை தன் மனதில் கனலாக ஏற்றான்.. தனது இளவலான மாறவர்மனின் மனதில் பழிவாங்கும் விதையை விதைத்தான் ஜடாவர்மன்... தம்குலப் பெருமையை சொல்லிச் சொல்லி வளர்த்தான்.. மீன் போன்ற விழிகளை உடைய மீனாட்சி அம்மன் ஆண்ட மதுரையைக் குறித்த ஜடாவர்மனின் உருக்கமான வர்ணனைகளில் உரம் பெற்றான் மாறவர்மன்..

சோழர்களின் அடாத செயலை எண்ணி.. எண்ணி.. நெருக்குலைந்து நோய்வாய்பட்ட ஜடாவர்மன் ஓர் தினத்தில் மரணமடைந்து விட்டான்..

அவனது மறைவுக்குப் பின்னர்.. தனது தமையனுக்கு நேர்ந்த துயரத்துக்கு பழிவாங்கத் துடித்தான் மாறவர்மன்.. ஜடாவர்மனின் வாரிசாக சோழர்களின் மீது படையெடுத்தான்..

“மாறன், வழுதி, சடையவர்மன், மாறவர்மன், கழியன் என்ற சிறப்பு நாமங்களைக் கொண்டது எங்களின் பாண்டிய வம்சம்.. அப்பேற்பட்ட பாண்டியர்களின்

நாமத்தை தமது புதல்வர்களின் நாமங்களாக்கினான் ராஜேந்திரசோழன்..! அவனது மூன்று புதல்வர்களும் சுந்தரசோழ பாண்டியன், விக்கிரம சோழ பாண்டியன், பராக்கிரம பாண்டியன் என்று என்னவோ பாண்டிய வம்சத்தின் நாமங்களை சோழ குலத்திற்கு என்று நாங்கள் சாசனம் அளித்து விட்டதைப் போல நாமம் சூட்டிக் கொண்டார்கள்.. எமது சந்திர வம்சத்தை சோழ வம்சம் உராய்ந்து வருவது வெகு காலமாக நிகழ்ந்து வரும் நிகழ்வுகளாகும் நறுமுகை..”

“அறிவேன் அரசே..! தமது வம்சத்தின் நாமங்களை மட்டுமல்ல.. தம் வம்சத்தினர் சூடும் வேப்பம்பூ மாலை.. தமது மீன்கொடி என அனைத்தையும் அறியும் ஆர்வம் மிக்கவள்யாம்..”

“மகிழ்ந்தேன் கண்ணே...!”

மாறவர்மனின் கரம் நர்மதாவின் சிகை கோதி தழுவிக் கொண்டது.. மனம் திறந்து உரையாடுவதில் உள்ள இன்பத்தை அவ்விருவரும் நுகர ஆரம்பித்தனர்.. ஒன்றுபட்ட உள்ளம் கொண்டோர்க்கு பஞ்சனை மட்டுமே இன்பத்தை அளித்து விடாது.. பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளும் இன்பங்களை வாரி வழங்கும்..

“எம் நாட்டின் பெருமைதான் உரைப்பதற்கு இன்றோர் தினம் மட்டும் போதுமா..?”

“அல்ல அரசே..! ஆயுள் முழுவதும் செவி மடுக்கும் புகழ் கொண்டது தங்களின் வம்சம்..”

மனமாற உரைத்த நர்மதாதேவியின் இணக்கத்தில் ஆண்டாண்டு காலமாக துயர் கொண்டிருந்த மாறவர் குலத்தின் மன ரணம் ஆறியது.. மங்கலநாண் பூட்டிய மனையாட்டியிடம் எழில் கொட்டிக் கிடப்பதைப் போல.. பெண் மீதான காதலும் கொட்டிக் கிடக்கிறது என்பதில் அவனின் மனம் ஆறாத்துயரிலிருந்து வெளி வந்து கொளப்பாறியது..

"நன்றே உரைத்தாய் என்தேவி..! இன்னமும் உரைக்கிறேன்.. கேள்.. பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் சென்றபோது அவர்களது ஆடைகளையும்.. ஆயுதங் களையும் மறைத்து வைத்த வன்னிமரம் இருப்பது எமது நாட்டில்தான் கண்ணே..!"

"வியப்பாக உள்ளதே.."

"ஆம் நறுமுகை..! எமது பாண்டிய வம்சத்தின் இளங்குமரியை அர்ச்சுனர் மணந்திருந்தார்.."

"அற்புதம் அரசே..!"

"எமது குலம் கவுரியர் குலம், பஞ்சவர் குலம் எனப் போற்றப் படுகின்றது.. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் சந்ததி எங்களது சந்ததி.."

"அருமை..!"

"எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளை உடைய பேரரசாக எங்களது பாண்டிய நாடு திகழ்ந்தது.. அதற்கு தென்மதுரை தலைநகராக இருந்தது.. இரண்டாம்

கடற்கோளால் அது அழிவுற்ற பின்னர்தான் மதுரா நகரை பாண்டியர்களின் தலைநகரமாக கொண்டோம்.."

"இதைப் பற்றிக் கேள்வியுற்றுள்ளேன்.."

"எங்கள் நாட்டின் அடையாளம் முத்து.. 'கொற்கை முத்து..' என்றால் இந்த அவனியே அறியும்.. கடலுக்குள் சென்று முத்தெடுப்பதை மிகப் பெரும் விழாவாக நாங்கள் கொண்டாடுவோம்.. மன்னரின் தலைமையில் நூறு படகுகள் ஏககாலத்தில் செல்லும் போது.. அவர்களுக்கு முன்னால் மந்திரவாதிகள் படகுகளில் சென்று மந்திரம் ஓதுவார்கள்.."

மாறவர்மன் விவரித்ததில் வியப்படைந்தாள் நர்மதாதேவி..! முத்தெடுக்கும் கடலில் மந்திரங்களை ஓதுவதா..?

"எதன் பொருட்டு மந்திரங்களை ஓதுவார்கள் அரசே..?"

"அந்த மந்திரங்களின் சக்தியால் மனிதர்களை விழுங்கும் பெரும் சுறாக்கள் அந்தப் பகுதிக்கு வருகை தராதாம்.."

"அவ்வாறா..?"

நர்மதாதேவியின் விழிகள் விரிந்ததில் மாறவர்மன் பலமாக நகைத்தான்.. அவனது ஒவ்வொரு சொல்லையும் சிரத்தையாக அவள் செவி மடுத்து வியப்புக் கொண்டதில் அவன் மீதான அவளின் அளவற்ற பிரியத்தை அவன் உணர்ந்தான்..

"மதுரா நகரமான கூடல் மாநகரமே எங்களின் லைநகரமாக இருந்தாலும்.. கொற்கையை இரண்டாவது லைநகரமாக நாங்கள் கொண்டதற்கு கொற்கையில் ழித்திருந்த 'கடல் கடந்த வணிகம்..' தான் அதி க்கியமான காரணம்.."

"இரண்டு தலைநகரங்கள் இருந்தால் ஆட்சி ரிவதில் சிரமங்கள் உண்டாகாதா..?"

"உண்டாகும்தான்.. அதன் பொருட்டே ஆட்சி த்தை மதுரா நகரில் நிலை நிறுத்தினோம்.. அந்த ண்டைய பெருமை வாய்ந்த அரசவையைத்தான் ழார்கள் நெருப்பிட்டு அழித்தனர்.."

மாறவர்மனின் கரங்கள் நர்மதாதேவியின் ழுமையான தோள்களில் அழுந்திப் புதைந்ததில் அவன் தில் உண்டான வேதனையையும்.. சினத்தையும் அவள் ணர்ந்து கொண்டாள்..

"அரசே..!" துயரத்துடன் அழைத்தாள்..

மனையாட்டியின் துயர் கண்டு சினத்தை விடுத்த றவர்மன் ஆதுரத்துடன் புன்னகைத்தான்..

"அச்சம் கொண்டாயா..?"

"அல்ல அரசே..! தம்மிடம் எனக்கு அச்சமா..?"

"ஹா.. ஹா.."

நகைப்புடன் அவளைத் தழுவி அவளது வதனத்தில் தனம் புதைத்தான் மாறவர்மன்.. அவர்களது மனங்களில்

பிணைப்பை உணர்ந்த பிணைப்பு அவர்களிட
தென்பட்டது..

"பாண்டிய நாட்டின் கொற்கைப் பெருந்துறையி
முத்துக்களும், சங்குகளும் பெருவாரியாக கிடைத்த
நறுமுகை..! அவற்றை ஏற்றுமதி செய்தோம்
அவ்வகையில் எமது நாட்டிற்கு பெரும் செல்வம் கிட்டிய
எங்கள் நாடு கடல்வளம் கொண்டது.. இனி அ
தம்முடைய நாடாகவும் மாறிவிட்டது தேவி..!
மாறவர்மனின் மனையாட்டியான உனது நாடு இ
பாண்டிய நாடுதான்.. ஹொய்சாள அரசிளங்குமாரியென்
நாமத்தை விடுத்து பாண்டியனின் பட்டத்து ராணியென்
நாமத்தை மனதில் ஏற்பாய் கண்மணி..!"

"அவ்வாறே அரசே..! இனி எனது தேசம் பாண்டி
தேசமேயாகும்.."

"என் அன்பே..! தமது காதலில் என் மன ரணங்க
ஆறிப்போயின.. நீ எமக்குக் கிடைத்த வரமேயாவாய்.."

"அல்ல மன்னவா..! தாங்கள் எனக்குக் கிட்டியது யா
செய்த தவத்தின் நற்பலனேயாகும்.."

"ஹ..! இத்துனை அழமான நேசம் கொள்ள என்னிட
என்ன எழிலைக் கண்டாயடி..?"

மாறவர்மன் மோகத்துடன் அவளை ஆக்ரமித்தான்
விடுபடாமல் அவள் உடன்பட்டாள்.. அழகா
அந்நாழிகைகள் தொடர்ந்தன..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



15

உன்னிடத்தில் கேட்பதற்கு
ஒருகோடி கேள்வியுண்டு..

"எதுக்காகடி 'அட' போடற..?"

அனுராதா அதட்டியதில் விளக்கம் சொல்ல வாய் திறந்தாள் யாமினி..

"அப்பா மேல பூமழை பொழியறதைப் போல டிரஸ் மழை பொழிஞ்சதா..? அதைப் பார்த்ததும் 'அட..!' அப்படின்னு தோணிருச்சும்மா.."

"தோணும்.. தோணும்.. இப்படி உருப்படியில்லாததுக் கெல்லாம் 'அட..!' போடு.. ஆச்சரியப்படவேண்டியதுக்கு இடிச்சு புளி மாதிரி எதையும் பேசாம மண்ணு போல நில்லு.."

அனுராதாவின் கோபத்தை கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டிய கட்டாயத்திலிருந்த பிரதாப்.. அந்தக் கட்டாயத்தை மறந்து போனார்.. மகளின் மனம் வருத்த மனைவி பேசியதை காணப் பொறுக்காமல் குறுக்கிட்டு விட்டார்..

"இப்ப எதுக்காகடி குழந்தையைப் போய் திட்டற..?"

எரிமலை பொங்கி வெடிக்க ஆயத்தமாகி பிரதாப்பை ஏறிட்டுப் பார்த்த பின்னால்தான் தனது தவறை உணர்ந்து

நாக்கை கடித்துக் கொண்டு தன் விதியை நொந்து கொண்டார் பிரதாப்..

'ஆஹா..! சும்மா இருக்கிற பெண்சிங்கத்த சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாலே ஆபத்து..! இதில வேற சிலிர்த்துக்கிட்டு இருக்கிற பெண் சிங்கத்துக்கு சிடுக்கெடுத்து விட்டுட்டேனே.. இனி எப்படியெல்லாம் பொங்க வைக்கப் போறாளோ..'

"இவ...? குழந்தை...?" புயலின் அமைதியோடு கேட்டாள் அனுராதா..

"பெத்தவங்களுக்கு பிள்ளைக எப்பவுமே குழந்தைக தானேடி அனு..? எங்கம்மாவப் பாரு.. இப்பவும் என்னை பச்சைப் புள்ளன்னுதான் சொல்லுவாங்க.. அம்மாவப் போலதானேடி பிள்ளையும் இருப்பேன்.."

மறுபடியும் தவறு செய்தார் பிரதாப்.. உதாரணமாக சுட்டிக் காட்ட ஓராயிரம் உறவுகள் இருந்தும் அனுராதாவிற்கு பிடிக்காத மாமியாரைச் சுட்டிக்காட்டி எரியும் நெருப்பில் எண்ணைக் கிணறை கவிழ்த்து வைத்து மிகப்பெரும் சோதனைக்கு ஆளானார்..

"அஃது..!"

அனுராதாவின் குரல் கொடுத்த அழுத்தத்திலேயே வரப் போகும் வார்த்தை அம்புகளின் வீர்யம் எத்துனை சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்பதனை உணர்ந்து கொண்டார் பிரதாப்..

"அனு..?" அவர் குரல் நடுங்கியது..

"அம்மாவப் போல பிள்ளை..? அப்படியாப்பட்டவரு அம்மாவோட சேலை முந்தானைய பிடிச்சுக்கிட்டு சுத்தி வர வேண்டியதுதான..? எதுக்காக கல்யாணம்ங்கிற கன்றாவியப் பண்ணிக்கிட்டிங்க..?"

"கல்யாணம்ங்கிறது உனக்கு கண்றாவியா போயிருச்சா..? என்னடி அனு.. நேத்து வரைக்கும் நல்லாத்தானே இருந்த..?"

"இப்பவும் நல்லாத்தான் இருக்கேன்.. எந்தக் கேடும் எனக்கு வரலை.."

அப்புறம் வேறு யாருக்கு கேடு வந்திருக்கிறது என்று புரியாமல் திகைத்துப் போனார் பிரதாப்..

அவருக்குத்தான் கேடு வந்திருக்கிறதா..?

'இப்படியா இடி இடிச்சு மழை கொட்டறதைப் போல மௌன சண்டை போட்டுக்கிட்டே இருப்பா..?'

மனம் சலித்துப் போனார் அந்த மகானுபவன்..!

கருணை அடிப்படையில் மலையிறங்கச் சொல்லி அவளது கைபற்றி விண்ணப்பித்து விடலாமா என்ற சரணாகதி தத்துவம் அவர் மனதில் ஓடியது..

"கேணச்சியப் போல நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.."

'நீயாடி கேணச்சி..? நீ உலகத்தையே கேணையாக்குவியே..'

"என் புருசன்தான்.. எனக்கு மட்டும்தான்னு.."

'இதில இவளுக்கு என்ன இம்புட்டு சந்தேகம்..? நான் இவளுக்கு மட்டுமில்லாம ஊருக்கேவா உடமைப் பொருளா இருக்கேன்..?'

சந்தேகத்தை மனதுக்குள்ளேயே குழி தோண்டி புதைத்து விட்டார் பிரதாப்.. அவளிடம் கேட்கப் போனால் அவள் எந்த லட்சணத்தில் வெடித்து வைப்பாள் என்று அவருக்குத் தெரியாதா என்ன..?

'இந்தப் புத்தி முதலிலேயே இருந்திருக்கலாம்..'

மௌனகுருவாக இல்லாமல் போனதின் வினையை எதிர் நோக்கி இற்றுப் போனார் பிரதாப்..

"புருசன்தான் முக்கியம். "

'இவளா இப்படிச் சொல்றா..?'

இமை கொட்டி அவர் விழித்ததில் யாமினிக்கு சிரிப்பு வந்து தொலைத்தது.ஃ வந்த சிரிப்பை சிரித்து விட்டால் அனுராதா அவளை உண்டு இல்லையென்று ஆக்கி விடும் அபாயம் இருந்ததால் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.. அதை ஓரக் கண்ணால் பார்த்த பிரதாப் திருதிருத்தார்..

'என் மக முன்னாலே இவ என்ன காமெடியனா ஆக்கிக்கிட்டு இருக்காளே..'

அவருக்கு ஆற்றாமையாக இருந்தது.. அதை கண்டு கொள்ளாமல்..

"என் குடும்பம்தான் உலகம்ன்னு சின்ன வட்டத்துக்குள்ள நான் சுத்திக்கிட்டு இருந்தேன்.. இங்கே

என்னடான்னா அம்மாவப் போல பிள்ளைன்னு டயலாக் பேசியாகிறது.. எனக்கு மட்டும் அம்மா இல்லையா..? தாயில்லாம நானில்லன்னு டயலாக் பேச எனக்குத் தெரியாதா..? அம்மா கோண்டுக்கு கல்யாணம் எதுக்கு..?"

அனுராதா அடுத்த தாக்குதலை ஆரம்பித்து விட்டதில் பிரதாப் களைத்துப் போனார்..



16

ஆற்றுக்கு அணையிடலாம்.. கடலுக்கு அதுசரி வருமா..?

தொந்தளிக்கும் மன உணர்வுகளை சமன்படுத்தும் சக்தியாக மாறவர்மனுக்குத் தோன்றினாள் நர்மதாதேவி..

இத்தகைய காதலுடன் அவனுக்காக ஒரு மங்கை காத்திருந்ததை முன்தினம் வரை அவன் உணர்ந்து கொள்ளவில்லை என்பதில் அவனுக்குள் வியப்பு துளிர்த்தது.. அவளிருக்கும் இடத்திற்கு அவனை காலம் கொண்டு சேர்த்ததில் அதைவிடவும் மிகுதியான வியப்புக்கு அவன் ஆளானான்..

அவன் உரைக்கும் வார்த்தைகளை செவி மடுக்க அவள் விருப்பம் கொண்டிருப்பதை அவனது நுண்ணறிவு உணர்த்தியது.. அவன் சார்ந்த அனைத்து.. விவரங்களையும் சேரித்து தன் மனமென்னும்

பெட்டகத்தில் நிரப்பிக் கொள்ள அவள் துடித்த துடிப்பில் அவன் கடந்த காலத்திற்கு பின்னோக்கிச் சென்று உரைக்க ஆரம்பித்தான்..

"முத்து, பவளம், மிளகு, பலவகை பட்டாடைகள் என்று பாண்டிய நாட்டின் விளை பொருள்களையும், உருவாக்கிய பொருள்களையும் மேனாடுகளுக்கு நாங்கள் ஏற்றுமதி செய்தோம்.. ஏற்றுமதி வணிகம் நமது தேசத்தால் தான் சிறப்புற்றது நறுமுகை..!"

அவன் 'நமது தேசம்' என்று அவளையும் இணைத்துக் கொண்டதில் பேருவுவகையை அடைந்து இன்புற்றாள் நர்மதா..

"அவ்வாறா அரசே...?" என்ற வியப்பையும் தெரிவித்தாள்..

"ஆம் கண்ணே..! வணிகத்தில் சிறந்தது நமது பாண்டியநாடு.. அதிலும் கடல் கடந்த வணிகத்தில் இதற்கு நிகராக வேறெந்த தேசமும் தமிழகத்தில் இருந்ததில்லை.."

"பெருமை கொள்கிறேன் மன்னவா..!"

"கடல் கடந்த பாண்டிய தேசத்தின் வணிகம் ஏற்றுமதியை மட்டும் புரியவில்லை.. இறக்குமதியும் புரிந்தது... மேனாடுகளில் இருந்து குதிரைகளும், மதுவகைகளும், கண்ணாடிப் பொருள்களும் கொற்கைத் துறைமுகத்தில் வந்த இறங்கின.."

"செவி மடுக்கவே ஆனந்தமாக உள்ளது.."

"இன்னமும் உள்ளது நறுமுகை.. சுங்கவரியினால் ஆண்டு தோறும் அரசுக்கு அதிக வருவாய் கிட்டியது.. கப்பல்கள் திசை மாறாமல் இருக்க துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைத்திருந்தோம்.."

"அன்னிய தேசத்தினரும் நமது தேசத்திற்கு வருகை புரிவார்களாமே..?"

நர்மதா தேவியின் 'நமது தேசத்திற்கு..' என்ற சொந்தத்தில் மாறவர்மன் மனதிற்கு இதமாக உணர்ந்தான்..

அவனது இன்ப, துன்பங்களில் பங்கெடுக்க அவனுக்கென்று ஒரு மங்கை வருகை புரிந்துவிட்டாள்.. அவள் அவனது தேசத்தை அவளது தேசமாக நேசிக்கிறாள் என்பதில் அவன் மனம் பூரிப்படைந்தது.. இது போன்ற இனிய தினத்தை இதற்கு முன்னர் அவன் எதிர் கொண்டதில்லை என நாமம் தெரியாத பட்ஷியொன்று அந்த அருவிக்கரையின் அடர்ந்த வனத்தில் கூவிச் சென்றது..

'இவளுடன் கழிக்கும் இந்த இனிய தினத்தை எத்தினமும் நான் மறவேன்..' மாறவர்மன் மனதிற்குள் கூறிக் கொண்டான்..

"தாம் செவிமடுத்தது மெய்தான் நறுமுகை..! நமது தேசத்திற்கு வெளிநாட்டு வணிகர்களும், யவனர்களும், கிரேக்கர்களும், ரோமானியர்களும், அரேபியர்களும் வருகை புரிவார்கள்.. அவர்கள் நம் தேச மக்களிடம் தோழமை பூண்டு உறவு பாராட்டுவார்கள்.. பண்டைய கால பாண்டிய

தேசத்தில் கடல் கடந்த வணிகமும், மேனாட்டினரின் தொடர்பும் வியப்புற்று திகழ்ந்தது.. நமது தேசத்தின் அரசிளங்குமாரியை இலங்கை அரசன் மணம் புரிந்து நமது தேசத்துடன் உறவுநாடாக மாறியிருந்தார்..”

“இலங்கையிலிருந்து பலவகையான பரிசுப் பொருள்களை அம்மன்னர் ஆண்டு தோறும் பாண்டிய தேசத்திற்கு அனுப்பி வைப்பாராமே.. இச்செய்தியை ஹொய்சாள நாட்டில் நான் கேள்வியுற்றிருக்கிறேன்..”

“மெய்தான் நறுமுகை..!”

“மக்கள் குறை கேட்கும் நீதிமன்றமும் இருந்தது வாமே..”

“இருந்தது.. நீதி வழுவா நெறிமுறையில் நாங்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தோம்.. தவறான நீதி வழங்கி விட்டால் அக்கணமே உயிர் துறந்தோம்..”

“மன்னவரே..!”

மாறவர்மனின் குரல் உணர்ச்சிப் பெருக்கில் நடுங்கியதில் நர்மதா அவனது விரல்களோடு தன் விரல்களை பிணைத்துக் கொண்டாள்.. ஆறுதல் அளிக்க முனைந்த அவளின் செய்கையில் மனம் நெகிழ்ந்தான் மாறவர்மன்..

“மெய்யே உரைத்தேன் நறுமுகை..! பாண்டிய நாட்டின் மன்னர்களில் ஒருவனான பொற்கை பாண்டியனைப் பற்றி நீ அறியாய்..”

"உரையுங்கள்.. செவி மடுக்கிறேன்.."

"மாறுவேடம் புனைந்து நகர்வலம் வருகையில் ஓர் இல்லத்தில் தலைவன், தலைவியை தனிமையில் விடுத்து வணிகத்தின் பொருட்டு அயலூர் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை செவி மடுத்தாராம் பொற்கை பாண்டிய மன்னன்.."

"ஓ...!"

"தாம் இல்லாமல் தனிமையில் எவ்விதம் இருப்பேன்று தேம்பிய மனையாட்டியிடம்.. நமது பாண்டிய மன்னரின் ஆட்சியில் உனக்கு இடர் புரிய எவர் உள்ளார்..? அனைவரையும் பாதுகாக்கும் மன்னரின் ஆட்சி தனிமையும் பாதுகாக்கும் என்று கூறி பிரிந்து சென்றானாம் அந்தத் தலைவன்.."

"மன்னரின் மீது எத்துனை நம்பிக்கை..!"

"அந்த நம்பிக்கையைக் காக்கும் பொருட்டே நற்கையைக் கொண்ட பாண்டிய மன்னன் பொற்கை பாண்டியனாக மாறினான் நறுமுகை..!"

"விரிவாக விவரியுங்கள் அரசே..!"

"தினந்தோறும் இரவுப் பொழுதில் மாறுவேடம் பூண்டு.. அந்த மங்கை தனித்திருந்த இல்லத்தைக் கண் காணித்து வந்தாராம் மன்னர்.. ஓர் இரவில் அவ்வில்லத்தில் ஆண்குரல் கேட்டதும்.. தனித்திருக்கும் மங்கைக்கு எவரோ ஒருவரால் இடையூறு ஏற்படுகின்றது என்று சினமுற்று அவ்வில்லத்தின் வாயில் கதவைத் தட்டி விட்டாராம்.."

"செவி மடுக்கும் போதே அடுத்து என்ன நிகழப் போகிறதோ என்று இதயம் படபடக்கிறது அய்யனே..!"

"இன்னும் கேள் நறுமுகை..! வாயில் கதவைத் திறந்தவன் அந்த மங்கையின் கணவன்தானாம்.. பொருள் ஈட்ட அயலூருக்கு வணிகம் புரியச் சென்றவன் இல்லத்திற்கு திரும்பியிருந்தானாம்.. மன்னர் இருளில் மறைந்து கொண்டாராம்.. அந்தத் தலைவனின் விழிகளில் மின்னிய சந்தேகத்தை கண்டுணர்ந்தவர் அந்த மங்கையின் மீது பழி ஏற்பட்டு விடாமலிருக்கும் பொருட்டு அந்தப் பகுதியில் இருந்த அனைத்து இல்லங்களின் கதவுகளையும் தட்டி விட்டு திரும்பி விட்டாராம்.."

"நற்செயல் புரிந்தார்.."

"சில தருணங்களில் மற்றவரைக் காக்கப் புரியும் நற்செயல் நம்மைத் திருப்பித் தாக்கும் அபாயம் உண்டு நறுமுகை.."

"எதன்பொருட்டு இவ்விதம் உரைக்கின்றீர்கள் மன்னவரே..!"

"மறுதினத்தில் பொழுது புலர்ந்ததும் மக்கள் குறை தீர்க்கும் மன்றத்தில் மன்னவர் கதவைத் தட்டிய பகுதியில் மக்கள் கூடி முறையிட்டு விட்டனர்.. வழக்கை விசாரணை செய்த மன்னவர்.. குற்றம் புரிந்தவனுக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்று வினவினாராம்.. கதவைத் தட்டியவனின் கரத்தைக் கொய்ய வேண்டும் என்று மக்கள் கூவினராம்.."

மாறவர்மன் உரைக்க.. உரைக்க.. அடுத்து என்ன [illegible]கழ்ந்திருக்கக் கூடும் என்பதை அனுமானித்த நறுமுகை [illegible]லுடன் செவிகளை கரங்கள் கொண்டு மூடி..

"அந்தோ.." என்று பதறினாள்..

"ஆம் கண்ணே..! தமது கரத்தை தாமே கொய்து [illegible]கொண்டு பொற்கையை பொருத்தி பொற்கை [illegible]ண்டியனாக மாறிப் போனார் மன்னவர்.. நடந்தவைகளை [illegible]தன் பின்னர்தான் எடுத்துரைத்திருக்கிறார்.."

"ஏன் அரசே..! இவ்விதம்தான் என்பதை முன்னரே [illegible]ரத்திருக்கலாம் அல்லவா..?"

"அது தண்டனையிலிருந்து தப்பிக்க மார்க்கத்தை [illegible]ருத்துவிடும் அல்லவா..?"

நிதானமாக வினவிய மாறவர்மனின் விழிகளில் [illegible]வழுவா மன்னர்களின் வழி வந்தவன் என்ற செருக்கு [illegible]ருந்தது..

"அன்பே..!" உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தை [illegible]ளிப்படாமல் திகைத்தாள் நர்மதா..

"மன்னர் விவரித்திருக்கிறார்... மக்கள் கூட்டம் [illegible]தத்திருக்கிறது... அவர்களது மன்னரை எண்ணி [illegible]ருமிதம் கொண்டிருக்கிறது.. அத்தகைய மதுராபுரியின் [illegible]ரசன் யாம்..!"

"தமது மனையாட்டி யாம்..!"

அவனைவிட அதிகச் செருக்குடன் உரைத்தவளின் இறுமாப்பில் இறுமாந்தான் மாறவர்மன்.. அவளது வதனம் தொட்டு செழுமையான அவளது கன்னக் கதுப்பில் சிறுமுத்தம் பதித்தான்..

யௌவனம் ததும்பிய அவளது வனப்பை மேலாடைமூடிய எழில்மிகு அங்க லாவண்யங்கள் வெளிப்படுத்தி அவனைக் கிறங்கடித்தன.. கொடி ஊஞ்சலாடிய அவளது யௌவனத் தோற்றம் அவனை மயக்கி ஈர்த்தது... அவள் மீதான அந்த மயக்கம் அவனை இசைக்கத் தூண்டியது... மாறவர்மன் அவளது செவியோரமாக சரிந்து யாழிசைத்தான்..

“ஒரே தினம்.. உனை நான்..
நிலாவில் கண்டது..
உலாவும் உன் யௌவனம்தான்..
ஊஞ்சல் ஆடுது..”

அவனது இசையின் அலைகளில் அடித்துச் செல்லப் பட்டாள் நர்மதா தேவி.. மாறவர்மனின் வலிமையான கரங்கள் அவளது இடையைப் பற்றித் தூக்கிக் கொண்டன.. மலர்மாலையாய் அவன் கழுத்தை வளைத்த அவளது மலர்கரங்களின் ஸ்பரிசத்தில் அவன் உவகை கொண்டான்.. அவளது விழிகளில் மின்னிய எதிர்பார்ப்பில் அவனது வேட்கை கரையுடைத்தது.. அவனது கால்கள் விரைவாக கொடி இல்லத்தை அடைந்தன.. அந்த விரைவில் இமைகளை மூடி மெலிதாக நகைத்தாள் நர்மதா தேவி..!

"எமது நிலை கண்டு தமக்கு நகைப்பு வருகின்றதா..?" போலி சினம் கொண்டான் மாறவர்மன்..

அதைக் கண்டுணர்ந்த நர்மதாதேவி சலுகையுடன் அவனது மார்பில் வதனம் புதைத்து அண்ணாந்து அவன் வதனம் நோக்கி..

"ஆம் என்றுதான் பொருள் கொள்ளுங்களேன்.." என்று உரைத்து விட்டு மேலும் நகைத்தாள்..

"எத்துனை துணிவு தமக்கு..?"

"யாம் மன்னர் மாறவர்மனின் மனையாட்டி..! குலோத்துங்க சோழனின் துயிலைப் பறித்து திண்டாட வைத்திருக்கும் தீரர்பெருமானின் தேவி..! எமக்குத் துணிவிருப்பதில் வியப்பென்ன தங்களுக்கு..? ம்ம்ம்..?"

அவள் புருவங்களை உயர்த்திய எழிலில் வசீகரிக்கப் பட்டான் அந்த வாலிபன்.. நினைவு தெரிந்த தினம் முதலாய் வாள் பயிற்சி.. போர் பயிற்சி என்று அனுதினமும் பகை முடிக்கும் வெஞ்சினத்தில் வாழ்ந்து வந்தவனின் வாழ்வில் வருகை தந்திருந்த அந்த ஓர்தினம் அவனுக்கு உவகைகளை அள்ளி வழங்கிக் கொண்டே இருந்தது..

'இதுதான் எத்துனை அருமையான தினம்..!'

அவனது நாடி நரம்பெல்லாம் உற்சாகம் வெள்ளமெனப் பாய்ந்து முறுக்கேற வைத்தது.. நறுமுகையை பஞ்சணையில் கிடத்தி அவள்மீது பரவிப் படர்ந்தவனின் செவியோரமாக தமது இதழ் பொருத்தி

இம்முறை இசையென்னும் இன்ப மொழியை இசைத்தாள் நர்மதா தேவி..

“பொன்தினம் இது போலே
வருமோ இனி மேலே..
நற்பொன்தினம் இது போலே
வருமோ இனி மேலே..”

அவனுடன் கழிக்கும் அந்த தினத்தில் ஒவ்வொரு மணித்துளியும் உயிர்ப்பு கொண்ட அமுதம் நிரம்பியதாக இருந்ததை அவர்கள் இருவருமே அறிந்து நுகர்ந்தார்கள்.. கழிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் களிப்பு நிரம்பிய தாகவே அவர்களுக்கு இருந்தது..

அவர்கள் கூடிக் கலந்தனர்.. கலந்து பிரிந்து நீராடி.. மறுபடியும் ஒருவரையொருவர் நாடி.. என அம்மோகம் தீராத பெருந்தீயாக அவர்களை சுற்றி வளைத்தது..

முன்தின இரவு முழுவதும் துயிலாத இமைகள் கனத்தன.. விழிகளை மூடி துயில் கொள்ள அழைத்தன.. பிடிவாதம் கொண்டு அத்துயிலை வந்த வழியே திருப்பி அனுப்பி வைத்தான் மாறவர்மன்.. சோர்ந்திருந்த நர்மதா தேவியின் இமைகளில் மென் முத்தம் பதித்து..

“தாம் ஓய்வெடுக்க வேண்டுமோ..?” என்றும் வினவி வைத்தான்..

இவ்விதம் இயம்பினால் அவள் எவ்விதம் மறுமொழி பகருவாள்..?

“வேண்டாம்..” என்றுதானே இயம்புவாள்..

அவன் மார்பில் ஒன்றியவளின் காதலை உணர்ந்து கொண்டவனுக்கு வாழ்நாள் முழுவதும் போராட்டத்திலேயே கழிக்க நேர்ந்த துய்ரம் மறந்து போனது... வெண்ணையைக் குழைத்து... அதைக் கொண்டு உருவாக்கிய மேனியைப் போன்று.. குழைவுடன் இருந்த அவளது திருமேனியைத் தழுவி இன்பம் கொண்டான்..

மாலையில் அவர்கள் மறுபடியும் நீராடினார்கள்.. மாறவர்மனின் பெட்டகத்தில் இருந்த புதுப் பட்டாடையை உடுத்தி.. தனது ஆபரணங்களை அணிந்திருந்தாள் நர்மதா.. உலர்ந்திருந்த ஈரக் கூந்தலை வருடி நீவி.. சிடுக்கற்றதாக ஆக்கி பாதிக் கூந்தலை வளைத்துக் கொண்டையிட்டு.. மீதிக் கூந்தலை இடைவரை தொங்க விட்டிருந்தாள்.. அருவிக் கரையோரம் பூத்திருந்த கொடி மலர்களைப் பறித்து.. அங்கிருந்த நாறில் மலர்ச்சரமாய் தொடுத்து.. தனது கூந்தலின் கொண்டை வளைவில் அலங்காரமாகக் சுற்றி.. தோள் வழியே சரிய வைத்திருந்தாள்.. மீதிமிருந்த மலர்மாலையை மாறவர்மனின் கழுத்தில் சூட்டி மலர்ந்து நகைத்தாள்..

அவளது உல்லாசத்திற்கு மிகுதியான உல்லாசத்தை மாறவர்மன் கொண்டிருந்தான்.. அவளது கூந்தலில் முகம் புதைத்து மலரின் நறுமணத்தை முகர்ந்தவனின் கிறக்கம் அதிகரிக்க..

“ம்ஹா.. நறுமுகை..!” என்று கிளர்ச்சியுடன் அவளைத் தழுவ யத்தனித்தவனின் மார்பில் கரம்

வைத்து தள்ளி விட்டு கலகலத்து நகைத்தபடி அருவிக் கரையோரமாக ஓடினாள் நர்மதா..

"அடிக் கள்ளி..! எம்மிடமிருந்து தப்பியோட தம்மால் இயலுமோ..?" என்று கூவியபடி அவளைத் துரத்தினான் மாறவர்மன்..

நான்கே எட்டில் அவளை அவன் கரம் பற்றிவிட.. அவனது கரங்களுக்குள் வாகாய் சிறைபட்டு மூச்சிரைக்க நின்றவள்..

"தம்மிடமிருந்து தப்பியோட் ஓர்தினமும் நான் நினையேன் அன்பே..!" என்று விழிகள் கலங்க உரைத்தாள்..

"நான் அதை அறிய மாட்டேனா..?" ஆதுரத்துடன் வினவிய மாறவர்மனின் மார்பில் சிரம் சாய்த்து அவன் முதுகினில் வளைக்கரங்களை பரவி விட்டு விழி மூடி நின்றாள் நர்மதாதேவி..

அவளது கூந்தல் கோதி உச்சந்தலையில் மென் முத்தம் பதித்த மாறவர்மனும் அவளை ஆலிங்கனம் செய்தபடி அசையாமல் நின்று விட்டான்..

மாலைப் பொழுதை உணர்த்தும் வகையில் அருவிக் கரையின் கரையோர மரங்களின் கூடுகளுக்குத் திரும்பிய பட்சிகள் தங்களுக்குள் 'கசமுச..' வென உரையாடிக் கொண்டன..

பட்சிகளின் பரிபாஷையில் பிரிந்து நின்றவர்கள்.. அருவிக்கரையின் கரையோர பாறைகளில் ஒன்றில்

அமர்ந்தார்கள்.. முதலில் அமர்ந்த மாறவர்மன்.. அவனருகே அமர யத்தனித்த நர்மதா தேவியை இழுத்துத் தன் மடியில் அமர வைத்துக் கொண்டான்.. அவன் மடியில் புதைந்த நர்மதா தேவியை தன்னுடன் அவன் இறுக்கிக் கொண்டதில் கள்ளூரும் போதையை நர்மதா உணர்ந்து வைத்தாள்..

புல் மேயச் சென்றிருந்த மாறவர்மனின் புரவி திரும்பி வந்திருந்தது.. அதன் கனைப்பு ஒலியில் திரும்பிப் பார்த்த நர்மதாதேவி விழிகள் மலர..

"தானாக திரும்பி விட்டதே.." என்று வியந்து போனாள்..

"அவ்வாறுதான்.. குட்டியாக இருந்தபோதே என் வசத்தில் வந்து விட்டது.. இது வளர்கின்ற பருவத்தில் அனைத்துப் பயிற்சிகளையும் நான் அளித்தேன்.. எனது அனைத்துச் சொல்லையும் இது செவி மடுத்து புரிந்து கொள்ளும் திறன் பெற்றது.."

"எவ்வாறு..? மனிதர்களின் பாஷையை புரவி அறியுமா..?"

"புரவியின் பாஷையை மனிதன் அறிவானே.."

இலகுவாக மாறவர்மன் உரைத்ததில் இன்னமும் மிகுதியான வியப்பைக் கொண்டாள் நர்மதா தேவி..

"மெய்யாகவா..?"

"ம்ம்ம்.. தமது கணவன் மெய்தான் உரைப்பான்.. பொய்யுரைக்க மாட்டான்.. புரிந்ததா..?"

மாறவர்மனின் தகிக்கும் அதரங்கள் அவளது சங்குக் கழுத்தில் புதைந்து அவளது செவியோரமாக கிசுகிசுத்ததில் கிறங்கிப் போனாள் நர்மதா தேவி.. கூடலைத் தவிர்த்த கூடல் கொண்ட அந்த மாலை நேரத்தின் மயக்கம் வார்த்தைகளில் விவரிக்க இயலாத வர்ண ஜாலங்களை உள்ளடக்கியதாக இருந்தது..

அந்த மாலை நேரத்தின் மயக்கத்தில் கட்டுண்டிருந்த காதலர்கள் இருவரையும் தொட்டுத் தழுவிய பூங்காற்று.. அவர்களைத் தொட்டுத் தழுவச் செய்தது.. நர்மதா தேவியின் எழும்புகள் சிதிலமடையும் வகையில் இறுக்கி தழுவிக் கொண்ட மாறவர்மன் அவளது தேகமெங்கும் மலர் வாசனையை உணர்ந்து முகர்ந்தான்..

“இது மாலை நேரத்து மயக்கம்..
பூமாலை போல் தேகம் மயக்கும்..
இதழோடு... இதழ் சேர..
அந்த இன்பம் தேடுது எனக்கும்..”

அவனது இதழ்கள் முணுமுணுப்பாய் வெளிப் படுத்திய இசை உணர்த்திய மோக வெள்ளத்தில் மூழ்க ஆரம்பித்தாள் நர்மதா.. சுவாசம் திணறும் அந்த வெள்ளம் சுழிகள் அற்றதாய்.. ஆழம் நிரம்பியதாய் இருந்தது.. அள்ள அள்ளக் குறையாத இன்பத்தை மாறவர்மனுக்கு வாரி வழங்கியது.. அளிக்க அளிக்க சோராத கொடைத்திறத்தை நர்மதாவுக்கு வழங்கியது..

அவன் கூடத் துடித்தான்.. அவள் மாலைப் பொழுதை ணார்த்தி விலக யத்தனித்தாள்.. அவன் சினம் கொண்டு அவள் கரம் பற்றித் தடுத்தான்..

"நீ கொடுமை புரிகிறாய் நறுமுகை..!"

"அவ்வாறா மன்னவரே..! யாம் கொடுமை புரிபவள் னில் இக்கொடுமையை ஆண்டாண்டு காலமாக அனைத்து மனையாட்டிகளும் தமது கணவன் மார்களுக்கு ழைத்து வந்துள்ளனர் என்பதை தாம் அறிவீர்களா ன்னவரே..?"

"அறிய வேண்டிய தேவை எமக்கில்லை.."

அவனது முரட்டுத்தனம் மிகுந்த சினத்தில் அவள் ரீதான அவனது தாகம் வெளிப்பட்டதில் மனம் குளிர்ந்து போனாள் நர்மதா தேவி.. அவனது மடியிலிருந்து எழுந்து கொள்ளாமல் அவனது கழுத்தை கரம் கொண்டு வளைத்து அவன் வதனம் நோக்கிக் கெஞ்சுதலாக..

"சற்று நாழிகை பொறுத்துக் கொள்ளக் கூடாதா..? ாகக்காக.. தயை கூர்ந்து.. ம்ம்ம்..?" என்று இறைஞ்சினாள்..

"இவ்விதம் இறைஞ்சினால் எவ்விதம் நான் றுப்பது..?"

சலிப்புடன் கூறினாலும் அவளது இறைஞ்சுதலுக்கு ட்டுப் பட்டான் மாறவர்மன்.. மாலை மயங்கி இரவும் ந்தது.. அவளருகில் அவனும் வந்தான்.. மறுப்புச் சொல்லாமல் அவளும் தனது தேகம் தந்தாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



16

அன்றொரு நாள் நீ தழுவி
அடைக்கலம் கொண்டதை மறந்தாயா..?

அனுராதா கோபப்படுவாள்தான்.. அந்த அளவுக்கு கோபப் படமாட்டாள்.. யாமினியின் எக்குத்தப்பான 'மெகாலு' பிடித்தத் தனத்தில் கோபப்பட்டாலும் சட்டென்று அந்த கோபத்திலிருந்து வெளியே வந்து இயல்பாகி விடுவாள்.. அவளிடமிருந்து அந்த குணாதிசியத்தினால்தான் பிரதாப்பின் வீடு.. வீடாக இருந்தது.. அவரின் வாழ்க்கையும் சிக்கலில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது..

இல்லையெனில் சிக்கலான மனநிலை கொண்ட யாமினியை மகளாக கொண்டவர்க்கு சிரித்த முகத்துடன் வாழும் வாழ்க்கை வாய்த்திருக்குமா..?

அதை அனுராதாதான் அந்த வீட்டில் இருந்த அனைவருக்கும் கொடுத்தாள்.. ஒரு வகையில் அவள் ஜீவ சக்தி..! அதை உணராத முட்டாளல்ல பிரதாப்..

என்னவோ அவரின் போதாத காலம்.. அன்று பொழுது விடிந்ததில் இருந்து நடைபெற்ற அனைத்துமே 'நான் சின்காக' அமைந்து தொலைத்து அவரை வாட்டி வதைத்தது..

மலையிறங்குவேனா என்று படு கோபத்துடன் இருந்த மனைவியை மலையிறக்கும் வகை தெரியாமல் திண்டாடிப் போனார் பிரதாப்.. அதுநாள் வரை யாமினியின் விசித்திரமான செய்கைகளால் பலவகையில் அவள் பாதிக்கப் பட்டிருந்தாலும் இந்த அளவுக்கு கோபம் கொண்டதுமில்லை.. பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகிறேன் என்று பயணப்பட்டதுமில்லை...

"என்னடி ஆச்சு உனக்கு..?" அழமாட்டாத குறையாக வினவினார்..

"இன்னும் என்ன ஆகணும்ன்னு ஆசைப்படறிங்க..? சொல்லுங்க.. உங்க அடிமனசோட ஆசைகள அவுத்துக் கொட்டுங்க.. நானும் கண்டுக்கறேன்.." நிஷ்டூரமாக அவரை முறைத்தாள் அனுராதா..

"வேண்டாம்டி அனு.. நான் அப்பாவி.."

"நீங்களா அப்பாவி..?"

"பின்னே..? யாருடி நான்..?"

"படுபாவி..!"

"அனு..!"

"ச்சே..! என் பேரைச் சொல்லிக் கூப்பிடாதீங்க.. பத்திக்கிட்டு வருது.. அதுக்கான தகுதி உங்களுக்கில்ல.. சொல்லிட்டேன்.."

அனுராதாவின் வெறுப்பில் பிரதாப் ஸ்தம்பித்து விட்டார்.. யாமினிக்கு குற்ற உணர்வு வந்தது.. அவளால்தான் அவளுடைய அன்பான அப்பாவும்.. அருமையான அம்மாவும் அடித்துக் கொள்கிறார்கள் என்று அவள் துயரம் கொண்டாள்..

“ம்மா..”

அவளின் தீனமான அழைப்பில் அனுராதாவின் பெற்றவயிறு துடித்தது.. மகளின் துயரை அவளது தாய்மனம் உணர்ந்து கொண்டது..

“என்னடி..?” வரவழைத்துக் கொண்ட கோபத்துடன் கேட்டாள்..

“நிஜமாவே நான் விளையாட்டுக்குத்தான் சொன்னேம்மா..”

“எதைச் சொன்ன..?”

“‘அட..’ அப்படின்னு..”

“அதுக்குத்தான் நான் கோபமாயிருக்கேன்.. அப்படின்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?”

“அதுக்கில்லம்மா..”

“எதுக்கில்ல..?”

“அப்பா மேல டிரஸ்ஸாய் பூமழை போல விழுந்ததைப் பார்க்கிறப்ப பொயட்டிக்கா இருந்துச்சும்மா..”

“அந்த பொயட்டிக் எனக்கு இன்சல்ட்டிங்கா இருந்துச்சுன்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?”

“கோவிச்சுக்காதீங்கம்மா..”

“எதுக்கு கோவிச்சுக்க வேணாங்கிற..”

“இல்லேம்மா..”

“எதுக்கு இல்லே..?”

“வந்தும்மா..”

“எங்க வந்த..?”

“ம்மா.. ப்ளீஸ்.. வேண்டாம்மா..”

யாமினி கையெடுத்துக் கும்பிட்டதில் பிரதாப்புக்கு சிரிப்பு வந்து விட்டது.. அப்பர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.. இல்லாவிட்டால் அவர் முகத்தின் சிரிப்பைப் பார்த்து விட்டு அனுராதா அவரை வாங்கு.. வாங்கென்று வாங்கி விட மாட்டாளா..?

யாமினி குனிந்து அனுராதாவின் காலைத் தொட்டு கண்களில் வெகு பவ்யமாக ஒற்றிக் கொண்டாள்..

“இப்ப என்ன அலுவலுக்கு செண்டிமென்ட் சீன கிரியேட் பண்ற..?” எரிமலையானாள் அனுராதா..

“இந்த வார்த்த விளையாட்டுக்கே நான் வரலைம்மா.. இந்த வாங்கு வாங்கினா நான் தாங்க மாட்டேன்ம்மா.. என்னப் பாத்தா உங்களுக்கு பாவம்.. பாவமா இல்லயா..?”

யாமினி இமை கொட்டி மூக்கை உறிஞ்சிய விதத்தில் இளகி விட்டாள் அனுராதா.. உண்மையிலேயே அவளுக்கு மகளைக் கண்டால் பாவம்.. பாவமாகத்தான் இருந்தது..



17

இத்தினத்தின் மணித்துளிகள்.. எத்தினமும் நினைவில் நிற்கும்..

பட்சிகளின் ஒலியில் விழி மலர்ந்தாள் நர்மதா தேவி..!

வழக்கமான அவள் விழி மலர்ந்ததும் பார்வையின் தென்படும் அரண்மனையின் மேற்கூரையின் வண்ண ஓவியங்களைக் காணாமல் திகைத்தாள்.. புரண்டு திரும்பியவளுக்கு தாம் தரையில் விரிக்கப்பட்டிருக்கும் பஞ்சணையில் துயில் கொண்டிருப்பது தெரிய வந்தது..

'உயர்தரமான மரங்களில் உருவாக்கப்பட்ட எமது பள்ளியறையின் கட்டில் எங்கே சென்றது..?' குழம்பினாள்..

அவள் சயனித்திருந்த பஞ்சனை இதமானதாக இருந்தாலும் அவளுடைய பள்ளியறையில் இருக்கும் மலர் மஞ்சத்திற்கு நிகராக இருக்கவில்லை என்பதில் அவளது மென்மையான தேகம் நோவுற்றிருந்தது..

விழிகளைத் திருப்பியவள்.. அவளது பள்ளி யறையின் சாளரங்களைக் காணாமல் திகைத்தாள்.. அவளது பார்வை அந்த கொடி இல்லம் முழுவதுமாக சுழன்று.. உப்பரிகை எங்கே..? அன்னப் பட்சிகளின் முகப்பினைக் கொண்ட.. அலங்காரமான அகன்ற விளக்குகள் எங்கே..? அமர்வதற்கான பஞ்சனைகளைத்

ஆங்கிய ஆசனங்கள் எங்கே.. எங்கேயென்று துழாவித் ஸரித்தன..

'நான் எவ்விடத்தில் உள்ளேன்..?'

தவிப்புடன் எழுந்து கொள்ள யத்தனித்தவளால் அது ஆலவில்லை.. அவளது தேகம் மீது.. வலிமையான கரம் ஸிழ்ந்து சிறைப்படுத்தியிருந்தது..

'எவர் இது..?'

கரத்தை விலக்க முற்பட்டவளின் கரத்தில் பட்டது அவளின் கழுத்திலிருந்த மங்கல நாண்..!

'அன்பே..!'

துயில் கலைந்து.. மாறவர்மனின் கரத்தில் ஸொன்மையாக முத்தமிட்டு.. தன் விழிகளில் ஒற்றிக் ஸகாண்டாள் நர்மதா தேவி..!

முன்தினத்தின் அதிகாலையில் அவனது மங்கல ஸாணை ஏற்று அவனது மனையாட்டியாகி விட்ட நிகழ்வை அவளது மனம் உணர்த்த.. எழுந்து கொள்ள மனமின்றி ஸத்திக்கும் நினைவுகளை அசை போட்டபடி அவனது ஸார்பில் வதனம் புதைத்தாள்..

ஆழ்ந்த துயிலிலும் அவளது நெருக்கத்தை உணர்ந்த ஸாறவர்மனின் கரம் அவள் மீது படிந்து தன்னிச்சையாக அவள் கேசம் கோதி வதனம் வருடியது.. அவனது ஸதழ்களில் மலர்ந்த மந்தஹாசப் புன்னகையில் நர்மதா ஸதவி மயங்கினாள்.. அவனது மார்பில் படர்ந்து பரவினாள்..

மாறவர்மனின் துயில் கலைந்து தொலைந்து போனது... இமை திறந்து நர்மதாவின் வதனம் நோக்கியவன்..

"எழுந்து வெகு நாழிகையாகி விட்டதா..?" என்று வினவினான்..

"அல்ல அரசே..! தற்போதுதான் கண்விழித்தேன்.."

அவன் மார்பில் விரலால் கோலமிட்டபடி உரைத்தாள் நர்மதாதேவி.. அவளது விரல்களை தன் கரத்தில் அடக்கி அதரங்களில் ஒற்றி முத்தமிட்ட மாறவர்மன் பிரியத்துடன் அவளை நோக்கினான்..

"விழித்ததும்.. யாம் எங்குள்ளோம் எனக் குழம்பிப் போனாயா..?"

அனைத்தையும் அறிந்தவனைப் போல அவன் வினவியதில் அவளுக்கு ஆச்சரியம் மேலிட்டது..

"தாம் அதை எவ்விதம் அறிந்தீர்களாம்..?"

மழலையாக அவள் வினவியதில் மாறவர்மன் மென்மையாக புன்னகைத்தான்.. ஆதுரத்துடன் அவளது கன்னம் தட்டி..

"ஓர் தினம்தானே நறுமுகை..? நேற்றய தினத்தின் விடியலின் போது நான் பூட்டிய மங்கல நாணை கழுத்தினில் ஏற்று எனது மனையாட்டியாக ஆனாய்... இன்றைய தினத்தின் விடியலின் போது பரிச்சயமில்லாத இந்த

அருவிக்கரையின் கொடி இல்லத்தில் விழித்திருக்கிறாய்.. முப்பம் வருவது இயற்கைதானே..” என வினவினான்..

“ஓர் தினம்தானா..?” விழிமூடி முணுமுணுத்தாள் மதா..

“ஓர் தினம்தான் நறுமுகை..” அவளை இறுக்கமாக முவிக் கொண்ட மாறவர்மன் விடையளித்தான்..

“ஓர் யுகத்துக்கான வாழ்வை தம்முடன் வாழ்ந்து ிட்டதாக உணர்கிறேன் அன்பே..! ஓர்தினம்தான் ங்களுடன் வாழ்ந்து முடித்துள்ளதாக உணர்வே றடவில்லை எனது பிரியத்துக்குரியவரே..!”

விழி திறக்காமல் மயக்கத்துடன் மொழிந்தவளின் காதலில் நனைந்து போனான் மாறவர்மன்.. அவர்கள் ழந்து கொடி இல்லத்தின் தாழ் திறந்து அருவிக் கரைக்கு ந்தனர்..

நதியோரமாக நீர் அருந்திக் கொண்டிருந்த புரவி ளவர்களைக் கண்டதும் உற்சாகத்துடன் கனைத்தது..

“காலை வணக்கம் உரைக்கிறது..” நகைத்தான் றவர்மன்..

நர்மதா புத்துணர்வுடன் கூடிய உற்சாகத்துடன் அருவிக் கரையின் எழிலை ரசித்தாள்..

அவளுக்கு அந்த அருவிக் கரையையும்.. ஓடும் தியையும்.. அதன் கரையோரமாக அமைந்திருந்த அந்த கொடி இல்லத்தையும் வெகுவாக பிடித்திருந்தது..

'இத்தகைய வாழ்வை எனது தாய்.. எனது தந்தையுடன் வாழ்ந்திருப்பாரா..?'

அவளது இதயம் கர்வம்க கொண்டது.. எவராலும் எண்ணிட இயலாத எழிலான வாழ்வை அவளுடன் வாழ்ந்து கொண்டிருந்த அவளது ஆசை மணாளனை அவள் காதலுடன் நோக்கினாள்..

"இப்பார்வைக்கு பொருள் யாது..?" அவன் இமை சிமிட்டினான்..

"எமது அகம், தேகம் அனைத்தும் தமக்கு அர்ப்பணம் என்று பொருளாகும் மன்னவரே..!" இதயம் விம்ம அவள் உரைத்தாள்..

"கனிவானவளே..!"

அவளது கூந்தல் கோதி தம் தோளில் சாய்த்துக் கொண்டான் மாறவர்மன்... விலக மனமின்றி பிணைந்திருந்தவளின் செவியோரமாக மெதுவான குரலில்..

"நீராடலாமா..?" என வினவினான்..

"ம்ம்ம்.." அவள் சம்மதமாக சிரம் அசைத்தாள்..

அருவியில் புகுந்த இருவரின் ஆலிங்கனத்தைப் பிரிக்க போர் முரசு கொட்டி வேகமாக வீழ்ந்தது அருவிநீர்..

அந்த நீர் வீழ்ச்சியின் வேகத்தாலும் பிரிக்க முடியாத ஆலிங்கனத்துடன் அவர்கள் நீராடி முடித்து அருவியை விட்டு வெளியே வந்தனர்..

உலர்ந்த ஆடைக்கு மாறிய நர்மதா தேவி... அவர்களின் ஈர உடைகளை கசக்கிப் பிழிந்து அருவியின் கரையோர மலர்செடிகளில் விரித்து உலர வைத்தாள்..

மாறவர்மன் முன்தினம் போல நெருப்பு மூட்டி.. அவர்களின் உணவுக்கு வழிவகை செய்தான்.. கரையோர கனிமரங்களில் இருந்து கொய்யப்பட்ட கனிகளையும்.. நெருப்பில் சுடவைக்கப் பட்ட கிழங்குகளையும் உண்டு முடித்த போது நர்மதா தேவிக்கு எல்லையற்ற திருப்தி உண்டானது..

அருவியின் நதி நீரில் இறங்கி கரங்களைக் கழுவியவள் அவளருகே வந்த மாறவர்மனின் வதனத்தின் மீது நதிநீரை அள்ளி வீசினாள்..

வதனத்தில் படிந்த நீர்த்தாரைகளில் நகைத்த மாறவர்மன்..

"உன்னை..." என்றவாறு நர்மதா தேவியின் இடையினில் கரம் கொடுத்து அள்ளிக் கொண்டான்..

அவனது கால்கள் கொடி ஊஞ்சலை அடைந்தன.. அதில் நர்மதா தேவியை அவன் கிடத்தி மேலே படர்ந்ததும்.. மனமெல்லாம் சிறகடிக்க அவன் கழுத்தை மலர்கரங்கள் கொண்டு வளைத்தபடி அவனது செவியோரமாக இசைக்க ஆரம்பித்தாள் நர்மதா தேவி..

"ஓர்தினம்..! உன்னோடு ஓர் தினம்..!
உறவினில் ஆட.. புதியன பாட..
காண்போமே என்றென்றும் சுபதினம்..!"

மாறவர்மன் உரைக்க மறந்தான்.. அவளுடன் உறவாடிய அந்த ஓர் தினத்தின் இன்ப சுவையில் அவன் மனம் மெய் மறந்தது.. அவளைப் போலவே அவனும் அந்த ஓர்தினத்தில் ஓர் யுகத்துக்குரிய வாழ்வை அவளுடன் வாழ்ந்து விட்டதைப் போல உணர்ந்தான்.. அந்த உணர்வில் அவளைத் தழுவி உச்சி முகர்ந்தவனின் அதரங்கள் தாமாக அவளுடன் இசைக்கத் தொடங்கின..

“மாறனின் மகராணி..!
குங்குமப் பெருந்தேவி..!
உன்னால் பொன்தினம் கண்டேனே..
விழியில் சொர்க்கத்தின்
நிழலைக் கண்டேனே..”

நர்மதா தேவியின் செவியில் தேன் பாய்ந்தது.. அவள்மீதான அவனது அதீத காதலில் அவள் மனம் பரவசம் கொண்டது.. அவனது வதனத்தை ஏறிட்டு நோக்கியவளின் விழிகளில் பொங்கித் ததும்பிய பிரியத்தில் மாறவர்மன் மலைத்துப் போனான்..

“உன் வதனம் நோக்க மலர்ந்தேனே..
உன் நிழல் தேடி வளர்ந்தேனே..”

விம்மலுடன் தனது காதலின் தேடலை உணர்த்தினாள் நர்மதா தேவி.. ஆண்மையின் கர்வம் கொண்டான் மாறவர்மன்..

"ஓர் தினம்..! உன்னோடு ஓர் தினம்..!
உறவினில் கலக்க.. புதியன பயில..
காண்போமா என்றென்றும் சுபதினம்..?"

அவளை இறுக்கித் தழுவிய அவனது இசையில் அதரங்களைச் சுழித்து எழிலுடன் அவனுக்கு வடிவம் காட்டினாள் நர்மதா தேவி.. எந்த எழிலில் கிறங்கிப் போனவன் அவளது எழும்புகள் சிதிலமாகும் அளவிற்கு இறுக்கித் தழுவிய வேகத்தில் நர்மதா தேவி சுவாசம் திணறிப் போனாள்..

"தம்மிடம் நான் கண்ட..
பெருமைகள் பல உண்டு..
கோபம்.. வேகம்.. மாறாதோ..
மாறும் நற்தினம் எத்தினம்..
காண்பேனோ..?"

விழிகளில் கள்ள நகைப்புடன் இசைத்தவளின் குறும்பில் மனம் லயித்த மாறவர்மன் அவளது அதரங்களில் முத்தமிட்டு..

"புன்னகையாலே எனை மாற்று..
பொன்னகையே..! நீ பூங்காற்று..!"

என்று பாடலிசைத்தான்..

அவள் பூங்காற்றாகத்தான் பரிமளித்தாள்.. மாறவர்மனின் வதனத்தோடு வதனம் புரட்டி தனது காதலின் வேகத்தை உணர்த்தினாள்.. கரையுடைக்கும்

வெள்ளமாக அவளை ஆலிங்கனம் செய்து கொண்ட வனைத் தழுவி தன்னை ஒப்படைத்தாள்..

மாறவர்மனின் மார்பில் சாய்ந்தவளின் கழுத்தினில் இருந்த மங்கல நாண் அவனது மார்பில் சரிந்து புரண்டு விளையாடியது.. அதை உணர்ச்சிப் பெருக்குடன் ஸ்பரிச்சத்தவளின் குரல் தேம்பியது..

“மங்கல நாண் அளித்தாய்..
மகனுடன் மகள் அளிப்பாய்..
என்றும் காவல் நீயாக..
உந்தன் வாழ்வின் கீதம் நானாக..”

அவளுக்கு மட்டுமே அவன் என்ற உரிமைகீதத்தை அவளது உணர்வு பாடியது.. அவன் அவளுக்கு மட்டுமே மங்கலநாணைப் பூட்டிய மணாளனாக இருத்தல் வேண்டும்.. அவனுடையு மகவுகளை அவள் மட்டுமே பெற்று அளிக்க வேண்டும்.. அவளுக்கு மட்டுமே அவன் காவலன்.. அவள் மட்டுமே அவன் வாழ்வின் கீதம்..!

அவளது மனம் விரும்பிய இவை அனைத்தையும் மாறவர்மனால் புரிந்து கொள்ள இயன்றது.. அவன் மனம் கனிந்தது.. அவளது வதனத்தை தன் கரங்களில் ஏந்தி விழிகளுக்குள் உற்றுப் பார்த்து அவள் பார்வையுடன் தனது பார்வையினை கலக்க விட்டான்..

அவளது விழிகளின் ஏக்கத்தில் அவள் மனம் வாக்குறுதியை யாசிப்பதை புரிந்து கொண்டவனாக..

"காவியம் போலே வாழ்ந்திருப்போம்..
ஆயிரம் நிலவை கண்டிருப்போம்.."

என்று வாக்களித்துப் பாடினான்..

"அன்பே..!" மனம் விம்ம அவன் மார்பில் வதனம் ।ுைதைத்து விம்மினாள் நர்மதா தேவி..

"கலக்கம் ஏனடி..? உன் கரமருகே நான்..! மங்கல நாண் வேண்டினாய்.. அளித்து விட்டேன்.. மகனுடன் ।கனை வேண்டியிருக்கிறாய்.. அதை அளிக்கவா..?"

மாறவர்மன் இமை சிமிட்டினான்.. உரையாடலின் போக்கை அவன் திசை திருப்புவதை உணர்ந்து கொள்ளாதவளாக அவன் மார்பில் சலுகையுடன் அடித்து விட்டு சிரம் சாய்த்தாள் நர்மதா..

"தாம் இருக்கிறீர்களே..." அதரம் சுளித்து நாணத்துடன் நகைத்தாள்..

அந்த அதரச் சுழிப்பில் மாறவர்மனின் மனம் சிக்கியது.. அனைத்து வகைகளிலும் அவனை வசீகரித்து வசியப்பொடியை தூவும் அந்த வசியக்காரியிடமிருந்து தப்பிக்க விரும்பாமல் சிறைபட அவன் மனம் துடிப்பதை வியப்புடன் அவன் உணர்ந்தான்...

"இருக்கிறேன்தான்.. தாம் விரும்பியபடி தம்முடன் தானே இருக்கிறேன்.. வேறு எந்தப் பெண்ணையும் எம்விழி நோக்கவில்லையேடி.."

"தம் மனதில் அது பெருங்குறையாக வீற்றிருப்பதைப் போல உள்ளதே.."

"குறைபட்டு பயன் என்னடி..? தாம்தான் வாக்குறுதி எனும் தளை கொண்டு என்னைப் பிணைத்து தம்முடனே இருத்திக் கொண்டாயேடி.."

"தளையைத் தளர்த்தினால் யாது செய்வதாக உத்தேசமாம்..?"

"யாதும் செய்யலாம்டி.. உதாரணத்திற்கு.. விவசாயி போல் மாறு வேடமணிந்து அருகில் உள்ள கிராமத்துக்குச் செல்லலாம்.."

"எதன் பொருட்டாம்..?"

"நமது இல்லறத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கி வர வேண்டாமா..? அதன் பொருட்டுத்தானடி.."

"நம்பினேன்.."

"நம்பிக்கை துளியளவும் இல்லாமல் நம்பினேன் என்று உரைப்பதில் உனக்கு நீக்கர் நீதானடி.."

"இந்தப் பாராட்டை நான் வேண்டினேனா..?"

"நீ வேண்டித்தான் அனைத்தையும் நான் அளித்தேனா..?"

மாறவர்மன் இருபொருள்பட உரைத்து இமை சிமிட்டியதில் நாணத்துடன் அதரங்களைக் கடித்துக் கொண்டாள் நர்மதா தேவி.. அவளது வதனம் குங்குமம் பூசியதைப் போல செந்நிறமானது..

"வித்தார மொழிகளை மொழிவதிலும் தாம் வல்லவர்தான்.."

"வேறு எவற்றில் நான் வல்லவன் என்பதை தாம் உ..ரைக்கவில்லையேடி.."

மறுபடியும் இருபொருள்..! இமை சிமிட்டல்..!

காணக் காண நர்மதாவிற்கு தெவிட்டவேயில்லை.. அந்தக் கள்வனின் கள்ளத்தனம் மிகுந்த மொழிகளில் தன்வயமிழந்து கொண்டிருந்தாள் அவள்..

"கிராமத்திற்குச் செல்வது பொருள் வாங்கி வர மட்டும்தானா..?"

"வேறு ஒன்றும் உள்ளதடி.."

"நினைத்தேன்.."

"எவரை..?"

"தம்மைத்தான்.. தமையன்றி வேறு எவரின் திருவுருவத்தையும் யாம் நினைத்துப் பார்த்ததில்லை.."

அவளின் ஆழ்ந்த காதலில் ஈர்க்கப் பட்டான் மாறவர்மன்.. அவனது அதரங்கள் அவளது கழுத்தில் புதைந்தன.. வெப்பமான அவனது சுவாசக் காற்றை உணர்ந்தவளுக்கு அந்த தேனிலவு இனித்தது..

"அக்கிராமத்தில் ஒரு குடியானவன்.."

"கிராமமென்றால் குடியானவர்கள் இருக்கத்தானே செய்வார்கள்.. இதைப் போய் ஓர் மர்மத்தை உரைப்பதைப் போல மன்னர் மாறவர்மன் உரைத்து வைக்கிறாரே.."

"அந்தக் குடியானவனுக்கு எழில் மிகுந்த புதல்வி ஒருத்தியும் இருக்கின்றாளே.. இதற்கு என்ன உரைக்கப் போகிறாயடி..?"

மாறவர்மனின் இதழ்களில் மலர்ந்த கள்ள நகைப்பை கண்டு கொள்ளாத நர்மதா மனம் பதைத்தாள்.. மலங்க.. மலங்க விழித்தாள்.. பரபரத்தாள்..

"எழில் மிகுந்தவளா..?"

"ஆம்..! எழில் மிகுந்தவள்தானடி.."

"தாம் அடிக்கடி அவளைக் காணச் செல்வீர்களா..?"

"அடிக்கடி அக்கிராமத்துக்கு செல்வதுண்டு.."

"இரண்டும் ஒன்றுதானே.."

இரண்டும் வேறு வேறு என்றால் அவள் செவி மடுக்கவா போகிறாள் என்ற நினைவில் அவனுக்கு நகைப்பு வந்தது..

"அவ்வாறா உரைக்கிறாய்..?"

"அவ்வாறுதான்.. அவள் எழிலில் தாம் மயக்கம் கொண்டீரோ..?"

"இல்லையென்றால் நீ ஏற்றுக் கொள்ளவா போகிறாய்..?"

"அவளைக் காண தினம் தினம் கிராமத்துக்குச் செல்வீரோ..?"

"ஆமாமடி.. அதை விடுத்து எனக்கு வேறு பணி கிடையாது பார்.. மண்டூகமே..!"

"நானா..?"

"நீயேதான்.. எனக்கென்று மனையாட்டியாக வந்து வாய்த்திருக்கிறாயே.."

"வேறு எவளாவது மனையாட்டியாக வாய்க்க வேண்டும் என்று விருப்பம் கொண்டீரோ..?"

"எவள்.. அவள்.. என்பதையும் நீயே உரைத்து விடு.."

"ஒருவனென்றால் உரைக்கலாம்.."

"பாரடா.. ஓர் ஊரையே யாம் மணக்க எண்ணினோமா..? என்மீது வெகு நல் அபிப்ராயம் கொண்டுள்ளாயடி..! தமது மதிப்பீட்டில் மனம் மகிழ்ந்து போனேன்.."

"தம்மை மகிழ்விக்கத்தான் பலர் உள்ளனரே.."

"தாம் கண்டாய்.."

"கண்டால்தான்னா..? தமது கள்ளப் பார்வை உரைக்கும் மொழியை உணராத அளவுக்கு நான் ஒன்றும் பச்சிளம் மழலை அல்ல.."

அவளது கோபச் சிகப்பில் அவளது யௌவனத்தில் எழில் கூடியிருப்பதைப் போல அவனுக்கு தோன்றி வைத்தது.. அவளது அதீத வனப்பில் அவன் கிறக்கம் கொண்டான்.. கள்ளூரும் அவளது அதரங்களைச் சுவைத்து போதை கொள்ளும் போதை கொண்டான்..

அவளை நெருங்கினான்.. அவளது அதரங்களில் தனது அதரங்களைப் பதித்து..

"தாம் பச்சிளம் மழலை என்று எந்த அறிவிழியாவது உரைப்பானா..? எழில் மிகுந்த யௌவன மங்கையை பச்சிளம் மழலையாக எண்ணிக் கொஞ்ச எனக்கென்ன அறிவு நுட்பம் அற்றுப் போய் விட்டதா..?" என்று சரசமாக வினவினான்..

"தமது சல்லாப மொழிகளை அந்தக் குடியானவனின் புதல்வியிடம் வைத்துக் கொள்ளுங்கள்.." நர்மதா தேவி வதனம் திருப்ப முயன்றாள்..

"ஹா.. ஹா.." அவளை வதனம் திருப்ப விடாமல் முரட்டுத்தனமாய் நகைத்தபடி தன் வதனத்துடன் பொருதிக் கொண்டவன்..

"அந்தப் புதல்விக்கு அகவை இரண்டு.." என்று உரைத்தான்..

"என்ன..?" இமைகொட்டி விழித்தாள் நர்மதா..

"ஆம்..! எனது மண்டூக மனையாட்டியே..! அந்தக் குடியானவனின் புதல்வி இரண்டு வயது நிரம்பிய பச்சிளம் மழலை.. அவளைக் கண்டால் கைகளில் ஏந்திக் கொஞ்சலாம்.. காதல் மொழிகளை பேச இயலாது.. புரிந்து கொண்டாயாடி..?"

"தாம் இருக்கின்றீர்களே.." நர்மதாவின் விழிகளில் கண்ணீர் தளும்பியது..

"த்ச்சு..! இதற்குப் போய் கண் கலங்குகிறாயேடி.. [illegible] மாறவர்மன் மனதை விட்டது உன் ஒருத்தியிடம் [illegible]டி.. நீ எனது உயிருக்கு நிகரானவளடி.."

அன்புடன் அவன் உரைத்த போது.. அந்த மலைமீது [illegible] புரவிகள் ஏறி விரைந்து வந்து கொண்டிருந்தன..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



17

சுழல்காற்று நினைவுகளில் சுழன்றாடிப் போனேன் நான்..

அனுராதாவின் கோபம் குறைந்தது.. அவள் [illegible]டியை கட்டிலில் வீசினாள்..

'ஹப்பா..!'

ஆசுவாச பெருமூச்சுடன் தன் நெஞ்சைப் பிடித்துக் [illegible]கொண்டார் பிரதாப்.. அப்போதுதான் அவரால் நிம்மதியாக [illegible]ச்சுவிட முடிந்தது.. அந்த அளவுக்கு அனுராதாவின் [illegible]லையேற்றத்தில் அவர் அரண்டு போயிருந்தார்..

யாமினி குனிந்து அறைக்குள் சிதறிக் கிடந்த [illegible]அனுராதாவின் துணிகளை மடித்து அலமாரியில் அடுக்க [illegible]ரம்பித்தாள்.. மகளின் அனுசரணையில் கொஞ்ச நஞ்சம் [illegible]டிக் கொண்டிருந்த கோபமும் பறந்து போக அனுராதா [illegible]ருமுக்குள் புகுந்தாள்..

"தேங்க்ஸ்டா செல்லம்.." என்றார் பிரதாப்..

"தேங்க்ஸெல்லாம் வேணாம்ப்பா.. அதுக்குப் பதிலா இன்னைக்கு சொதப்பினதைப் போல என்னைக்கும் சொதப்பமாட்டிங்கன்னு பிராமிஸ் பண்ணுங்க.." என்றாள் யாமினி..

"சொதப்பினேனா..?"

பிரதாப் திகைத்தார்.. வந்த சண்டைக்கு காரணம் யாமினியல்லவா..? அவளுக்கு பிரதாப் பரிந்து கொண்டு வருகிறார் என்றுதானே அனுராதா கோபப்பட்டாள்..? அதனால்தானே அவர்கள் இருவருக்கும் சண்டை வந்தது..?

"இல்லைப்பா.."

துணிகளை அடுக்கியபடி நிதானமாக சொன்னாள் யாமினி.. அவளது முகத்தில் இருந்த தெளிவில்..

'இது என் மக யாமினிதானா..?' என்று கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார் பிரதாப்..

"வேற என்னம்மா நடந்தது..?" அவளிடமே விளக்கம் கேட்டார்..

"என்னைக் குறை சொல்கிறது அம்மாவோட நேச்சர்.. நீங்க சப்போர்ட்டுக்கு வந்தா உங்க மேலே லேசா கோபப்படுவாங்க.. கொஞ்ச நேரத்திலே சரியாகிருவாங்க. இன்னைக்கு அப்படியில்லைப்பா.."

அதுதான் அவருக்கு தெரிந்த விசயமாச்சே..

‘என்னைக்குமில்லாம இன்னைக்கு ஏன் அனுராதா பொறந்த வீட்டுக்குப் போக பெட்டியைத் தூக்கினா..?’ என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தானே அவர் அல்லாடிக் கொண்டிருக்கிறார்..

“இன்னைக்கு புதுசா என்னத்தம்மா அவ கண்டுட்டா..?” அவர் சலித்துக் கொண்ட போது..

“அம்மாவைத் தவிர.. மத்த லேடிஸையும் நீங்க சைட் அடிப்பீங்கன்னு கண்டுக்கிட்டாங்க..” என்று ஆழ்ந்த குரலில் பதில் சொல்லி அவருக்கு தூக்கி வாரிப் போட வைத்தாள் அவர்மகள்..

“யாமினி..?”

“ஆமாம்ப்பா.. இத்தனை நாளா.. நீங்க உத்தம புருசன்..! மத்த லேடிஸை ஏறெடுத்தும் பார்க்காத ஜென்டில் மேன்..! அப்படின்னெல்லாம் நம்பிக்கிட்டு இருந்த அம்மாவோட நம்பிக்கை ஆட்டம் கண்டுருச்சு.. எதிர்வீடு.. பக்கத்துவீடு.. அடுத்த வீடுன்னு... இந்தத் தெருவில இருக்கிற அத்தனை வீடுகளிலயும் இருக்கிற லேடிஸின் பேரையரைச் சொல்லி.. அவங்க அழகை வர்ணிச்சு.. அவங்க அருமை.. பெருமைகளை விலாவாரியா வர்ணிச்சுத் தொலைச்சுட்டிங்க.. அதைக் கேட்ட பின்னாடியும் அம்மா உங்ககூட இந்த வீட்டில இருப்பாங்கன்னு எந்த நம்பிக்கையில நீங்க கனவு காணறிங்க..?”

“அம்மாடி..! நான் அந்த மீனிங்கில பேசலைடா..”

"இருக்கலாம்ப்பா.. உங்க மனசு சுத்தம்.. அது எனக்குத் தெரியும் யதுக்குத் தெரியும்.. ஏன்.. அம்மாவுக்கும் தெரியும்.. அதுக்காக நீங்க அடுத்த வீட்டு லேடிஸை அம்மா காதுபட அட்மைர் பண்ணிச் 'ஜொள்ளுறது' ரொம்ப ஓவர் இல்லையா..?"

"இது எனக்குத் தோணாம போச்சேம்மா.."

"தோணணும்ப்பா.. ஒரு மனைவியா அவங்களின் மன உணர்வுகளுக்கு நீங்க மதிப்புக் கொடுக்கனும்.. நீங்க சொன்னதை 'இன்னொசென்ஸ்'ன்னு சொல்கிறீங்களே.. அதுவே அம்மா எதிர்வீட்டு அங்கிளைப் பத்திப் பெருமையா சொன்னதும்.. ஒரு குடும்பப் பொம்பளை இப்படிப் பேசலாமான்னு அடிச்சுக்கிட்டிங்களே.."

"அவ அப்படிப் பேசலாமா..?"

"ஒரு குடும்ப ஆம்பளை மட்டும் அப்படிப் பேசலாமா..?"

"யாமினி..!"

தெள்ளத் தெளிவாக நெற்றியிலே ஆணியடித்ததைப் போல 'டாண்.. டாண்..' என யாமினி கேட்ட கேள்விகளில் பாத்ரூமில் முகம் கழுவி விட்டு வெளியே வர கதவைத் திறந்திருந்த அனுராதா பிரமித்துப் போய் நின்று விட்டாள்..

'என் மகளா இத்தனை தெளிவா பேசறா..?'



18

உடைவாளை ஏந்தியவனை இறுக்கிப் பிணைத்தல் இயலாது..

சோழர்கள் செழிப்புடன் இருந்த காலகட்டத்தில் அவர்களிடம் அடிமைப் பட்டுக் கிடந்த பாண்டியர்கள் விடுதலைக்காக போராடிக் கொண்டிருந்த காலம் அது..

சோழர்களை எதிர்க்க முனைந்த ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் மனதில் ஆறாத ரணத்தை உண்டாக்கி விட்டது ஒரு சம்பவம்.. சோழர்களுடன் அவன் புரிந்த போரில் வெற்றி பெற்று முன்னேறிய சோழர்களின் சேனாவீரர்கள் பண்டைய பாண்டிய நாட்டின் அரசவையை தகர்த்து விட்டனர்..

இந்த நிகழ்வு ஜடாவர்மன் குலசேகரனின் மனதில் ஆறாத ரணமாக ஆழப் பதிந்து விட்டது.. அவன் நெஞ்சினத்தை அவனது இளவல் மாறவர்மனின் மனதில் வளர்த்தான்..

அனுதினமும் கழிகின்ற அத்துணை மணித் துளிகளிலும் பகை முடிக்கும் கொதிப்பை மாறவர்மனின் மனதில் புகுத்தினான்.. பாண்டியர்களின் பண்டைய புகழ்ப் பெருமைக்கு நிகழ்ந்த அநீதிக்கு பழி வாங்கும் எண்ணத்தை மாறவர்மனை எடுக்க வைத்தான்.. தினமும் பொழுதும் சோராமல் சோழர்களை எதிர்ப்பதற்கான

போர் பயிற்சியை மாறவர்மனுக்கு அளித்துக் கொண்டிருந்தான்..

பகை முடிக்கும் வித்து மாறனின் மனதினில் ஆழமாக விழுந்து அழுந்தப் பதிந்து விட்டது.. பாண்டியர்களின் விடுதலைக்காக அனுதினமும் ஏங்கிய ஜடாவர்மன் அந்த ஏக்கத்துடனே உயிரை விட்டான்..

மாறவர்மனால் தனது தமையனின் மறைவைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை.. உயிரோடு இருந்த காலத்தில் அவன் காண விரும்பிய பாண்டிய தேசத்தின் விடுதலைக்காக போராட அவன் வெஞ்சினம் கொண்ட மன்னவனாக வெளிப்பட்டான்..

தனது தமையனின் மனதில் ஆறாத்துயரை ஏற்படுத்திய சோழர்களை போரில் வெல்லும் சபதம் எடுத்தான்.. பண்டைய பாண்டிய தேசத்தின் அரசவையை மறுபடியும் புதிதாக உருவாக்கி அதில் மன்னனாக அமர்வேன் என்று சூளுரைத்தான்.. அவனுடைய எழுச்சியில் பாண்டியதேசம் வீறு கொண்டு எழுந்தது.. தாய்த்திரு நாட்டின் மீது பற்றுக் கொண்ட படைவீரர்கள் அவன் பின்னால் ஒன்று திரண்டு.. சோழர்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள்..

பாண்டியர்களின் மறுமலர்ச்சிக்கு அடித்தளமிட்ட ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் இளவல் என்பதை மெய்ப்பித்தான் மாறவர்மன் சுந்தர பாண்டியன்..

அவனது தலைமையில் ஒன்று திரண்டு போர் புரிந்து கொண்டிருந்த படைவீரர்கள் சோழர்களை எதிர்த்துப்

போராடினார்கள்.. விடுதலை வேட்கையும்.. தாய்திரு நாட்டிற்கு ஏற்பட்ட துயரைத் துடைக்கும் வேகமும் கொண்ட பாண்டியர்களின் சேனை சோழர்களின் சேனையை கதிகலங்க வைத்துக் கொண்டிருந்த காலகட்டம் அது..

காஞ்சியை கைப்பற்றும் பொருட்டு.. அந்நகரை மாறுவேடத்தில் வலம் வந்து கண்டுணர வருகை தந்த மாறவர்மன் கடல் மல்லையில் ஹொய்சாள நாட்டின் அரசிளங்குமரியின் காதலில் கட்டுண்டு.. அவள் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டி தேநிலவு கொண்டாட மலைச் சாரலுக்கு இடம் பெயர்ந்து விட்டான்..

மனையாட்டியின் கூந்தலின் வாசனை அவள் சூடியிருந்த மலர்களின் வாசனயால் உதயமானதா.. இல்லை.. அவளது கூந்தலுக்கே இயற்கையில் அந்த நறுமணம் உண்டா என்ற நாட்டுக்குத் தேவைப்பட்ட அதி முக்கிய விவரம் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மாறவர்மனின் வதனம் நோக்கி புருவங்களை வினவும் பாவனையில் ஒயிலாக உயர்த்தி வைத்தாள் நர்மதா..

அந்த எழிலில் கிறங்கிப் போனவனின் அதரங்கள் அவளது அதரங்களைத் தேடிப் பதிந்தன..

வசியம் செய்த அந்த வசியக்காரனின் காதல் வலையில் சிக்குண்ட நர்மதா தேவி மயக்கம் கொண்டாள்.. அந்த மயக்கத்துடன் விழிகளைச் சுழற்றியபடி..

"எனது மன்னவரின் ஆழ் மனதில் உள்ள ஆராய்ச்சி யாதோ..?" என்று வினவினாள்..

"புதிதாக உதித்த ஆராய்ச்சியல்லடி.. எமது மூதாதையர் வகுத்து எமக்கென்று விட்டுச் சென்றிருக்கும் ஆராய்ச்சிதான் அது.." என்று நகைத்தான் மாறவர்மன்..

"மூதாதையர்கள் நாடு, நகரங்களையும்.. சொத்து, சுகங்களையும்தான் தமது வருங்கால சந்ததியினருக்காக விட்டுச் செல்வார்கள்.. ஆராய்ச்சிகளையுமா அளித்துச் செல்வார்கள்..? விசித்திரமாக உள்ளதே.." இமை கொட்டி மழலையாக விழித்தாள் நர்மதா தேவி..

அவளது அறியாமையில் ஆனந்தம் கொண்டான் மாறவர்மன்.. அவளது கன்னக் கதுப்பில் விரல் கொண்டு சுண்டியவன்.. ரசித்து நகைத்தான்..

"எதன் பொருட்டு இந்த நகைப்பாம்..?" சிணுங்கினாள் நர்மதாதேவி..

"உன்னிடம் நான் நகைப்பதற்கு காரணம் தேவையா நறுமுகை..?" மேலும் நகைத்தான் அவன்..

"யாதென்று உரைக்காமல் எம்மைக் கேலி புரிவீரோ.." ஊடலுடன் வதனம் திருப்பிக் கொண்டாள் நர்மதா..

அவள் வதனத்தை தன்புறமாக திருப்பிய மாறவர்மன்..

"கேலி புரியவில்லையடி.. மெய்தான் உரைத்தேன்.." என்று நகைப்பு மாறாமலே கூறினான்..

"பொய்.."

"அல்ல தேவி.. மெய்தான்.."

"தமது மூதாதையர் தங்களுக்கு ஆராய்ச்சியை விட்டுச் சென்றனர் என்பது தாம் புரியும் கேலிதானே.."

"அல்லவே அல்ல.."

"அவ்வாறெனில் அவர் விட்டுச் சென்ற ஆராய்ச்சி யாது..?"

"வேறென்னடி..? அனைத்தும் தமது மனையாட்டியின் கூந்தலின் நறுமணத்தைக் குறித்த ஆராய்ச்சிதான்.."

மாறவர்மன் புஜங்களைக் குலுக்கியபடி இலகுவாகச் சொல்லிய விதத்தில்..

"என்ன..?" என்று ஆச்சரியம் கொண்டாள் நறுமுகை..

"எதன் பொருட்டு இத்துணை ஆச்சரியமாம்..?"

"நாடாளும் வேந்தர்... தமது மனையாட்டியின் கூந்தலின் நறுமணத்தைக் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டாரா..?"

"அதிலென்ன தவறு..? அரசரின் பணிகளில் இதுவும் ஒன்று.."

"நன்று.. நன்று.."

"ஏன் இயம்ப மாட்டாய்..? ஆடவராய் பிறப்பெடுத் தவர்கள் அனைத்து விதமான ஆராய்ச்சிகளிலும் தெளிவு பெற்றிருத்தல் வேண்டும்.. இல்லையெனில்.."

"இல்லையெனில்..?"

"தமக்கு நாடுதான் முக்கியம்.. தமை ஆளும் நான் முக்கியமல்ல என்று மனையாட்டி விழி நீரை சொரிந்து வைப்பாள்.."

மாறவர்மன் வதனத்தை சோகமாக வைத்துக் கொண்டு உரைத்த விதத்தில் நர்மதா தேவிக்கு நகைப்பு வந்தது..

"உரைப்பாள்.. உரைப்பாள்.." என்று நகைத்தாள்..

மனம் விட்டு அவள் நகைத்த எழிலை மனமாரரசித்தான் மாறவர்மன்..

"மங்கலநாண் பூட்டிய மணாளர்களின் சிரமம் குறித்து தமக்கென்ன தெரியும் நறுமுகை..?"

"தெரியாதுதான்.. மணாளர்களின் சிரமம் கடுமையானதுதான்.. தமது மூதாதையரில் எவர் அந்த சிரமம் கொண்டாராம்..?"

"அவரது நாமம் செண்பகப் பாண்டியன் என்பதாகும்.."

"ஓ..! அவர்தான் தமது மனையாட்டியின் கூந்தலின் நறுமணம் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டவரோ..?"

"ஆம் கண்ணே..! ஓர் தினம் அதிகாலையில் அவர் மதுராநகரில் அரண்மனையில் துயில் கலைந்து எழுந்து வந்தாராம்.."

"அப்புறம்..?"

"தம் மனையாட்டியைக் காண அந்தப்புரம் [illegible]றாராம்.."

"கொடுத்து வைத்த மனையாட்டி.. விடியலைக் [illegible]தும் அவளைக் காண விரும்பும் மணாளனை [illegible]க்கும் பாக்கியம் பெற்றவள்.."

தமது தாயின் நினைவில் துயரத்துடன் உரைத்தாள் [illegible]தா தேவி.. அதை கண்டு கொண்ட மாறவர்மன் அவளது [illegible]தலை பரிவுடன் கோதியபடி..

"தாமும் கொடுத்து வைத்தவள்தானடி.." என்றான்..

"மெய்தான்.." அவனது கரத்தைப் பற்றி விழிகளில் [illegible]றிய பின்னர் அதில் சிறு முத்தம் பதித்தாள் நர்மதா [illegible]னி..

"அந்தப்புரம் சென்ற மன்னவரின் செவிகளில் அவரது [illegible] இசைத்த இனிமை மிகுந்த கானம் நுழைந்தது.."

"என்ன கானம் அது...? எனக்கும் இசைத்துக் [illegible] டுங்களேன்.."

"இசைத்துவிட்டால் போகிறது.. கேள்.."

மாறவர்மன் அந்த இசைப்பாடலை இசைத்துக் [illegible] டினான்..

"பொதிகை மலை உச்சியிலே..
புறப்படும் தென்றல்..!
ஆடை பூட்டி வைத்த மேனியிலும்
தவழ்ந்திடும் தென்றல்..!"

நர்மதா தேவியின் விழிகள் கனவுலகில் சஞ்சரித்தன.. அவளது மனக் கண்ணில் அவள் கூந்தல் விரித்து மதுரை மாநகரின் அரண்மனையின், நீராடும் மண்டபத்தில் நீராடும் காட்சி எழுந்தது..

தாமரை மலர்கள் மிதக்கும் நீராடும் மண்டபத்தின் செயற்கைக் குளத்தில் அவள் நீராட இறங்குகிறாள்.. அவளது இதழ்கள் செண்பகப் பாண்டியனின் பட்டத்து ராணி பாடிய பாடலை பாட ஆரம்பிக்கின்றன..

“பதி மதுரை வீதியிலே..
வலம் வரும் தென்றல்..
இந்தப் பாண்டியனார் பைங்கிளியைத்
தீண்டிடும் தென்றல்..
பொதிகைமலை உச்சியிலே..
புறப்படும் தென்றல்..”

அவள் பாடிய பாடலில் மாறவர்மனும் கடந்த கால சரித்திரத்தின் ஏடுகளுக்குள் உட்புகுந்தான்.. செண்பகப் பாண்டியன் இருந்த இடத்தில் அவனது குலத் தோன்றலான தம்மை இருத்திக் கொண்டு.. மாறவர்மன் சுந்தர பாண்டியனாக தமது பட்டத்து ராணி நர்மதா தேவியை நோக்கிப் பாடினான்.. பதிலுக்கு கூந்தலை நனைத்த வண்ணம் நர்மதாவும் பாடினாள்..

“கார் குழலை நீராட்டி..
கண் இரண்டைத் தாலாட்டி..

தேனிதழில் முத்தமிட்டு..
சிரித்திடும் தென்றல்..
வண்ணத் தேகமெங்கும் நீரெடுத்து..
தெளித்திடும் தென்றல்..”

அவனது இசைந்து ஒலித்த இசைப் பாடலில் மனம் குளிர்ந்தாள் நர்மதா தேவி.. அரண்மனையின் அந்தப் புரத்தில் நீராடும் மண்டபத்தின் அருகே அவர்கள் இருவரும் சல்லாபிப்பதைப் போலவே அவள் உணர்ந்தாள்...

மதுரை மாநகரின் பட்டத்து ராணியாக அவனது அரண்மனையின் உப்பரிகையில் அவள் கூந்தலை விரித்து உலர்த்துகிறாள்.. அவளை நாடி வரும் மாறவர்மன் அவள் விரித்து விட வீசியடிக்கும் கூந்தலின் கற்றை வதனத்தில் படிய சிலிர்த்துப் போகிறான்.. ஈரத்திவலைகளை அவனது வதனத்தில் படியவிட்டு வருடிக் கொடுக்கும் கூந்தலின் நறுமணத்தில் மயங்கிப் போகிறான்.. மனையாட்டியின் கூந்தலின் நறுமணத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விடுகிறான்.. அதில் அவனது காதல் மனையாட்டி மயங்கிப் போகிறாள்..

“வான் பறக்கும் கொடியினிலே..
மீன் பறக்கும் மதுரையிலே..
தான் பறந்து ஆட்சி செய்யும்..
தனிர் மணித் தென்றல்..

அது வான் பிறந்த போது..
வந்த வாலிபத் தென்றல்..”

அவர்கள் இருவரும் இசைத்த கீதத்தின் ஒலியை ஆழத்தில் அமிழ்த்தி மேலே எழுப்பிய புரவிகளின் கனத்த காலடியோசைகளை முதலில் செவிமடுத்தவள் நர்மதா தேவிதான்.. அவளது. வதனம் வெளிறியது..

“மன்னவரே..” அச்சத்துடன் அவள் பதறினாள்..

அவளது பதட்டத்தைக் கண்ணுற்ற மாறவர்மன் புருவங்களை வினவும் பாவனையில் உயர்த்திய போது..

“செவிமடுத்தீர்களா.. அந்த ஓசையை..?” என்று பீதியுடன் உரைத்தாள்..

அதன் பின்னர்தான் புரவிகளின் காலடியோசை சமீபிப்பதை செவி மடுத்தான் மாறவர்மன்.. அவனது வதனத்தில் நிலவிய ₁மயக்கம் சடுதியில் கலைய கடுமை கொண்ட வதனத்துடன் அவனது கரம் உடைவாளை உறுவியது..

நர்மதா தேவியை விட்டு அகன்று கொடி ஊஞ்சலை விட்டு அவன் தரையில் குதித்தான்.. பதட்டத்துடன் எழுந்து கொள்ள யத்தனித்த நர்மதா தேவியின் இடையினில் கரம் கொடுத்து அவன் தூக்கியபோது புரவிகளின் படை அவர்களைச் சுற்றி வளைத்து விட்டது..

அவர்களைக் கண்டதும் கரங்களில் ஏந்தியிருந்த வளை தரையில் விடாமல் இறுக்கிப் பிடித்த வண்ணம் அசையாமல் நின்று விட்டான் மாறவர்மன்..

'எமது தந்தை ஹொய்சால நாட்டின் படைவீரரகளை ...மத் தேடும் பணியில் ஏவி விட்டுள்ளாரா..?'

நர்மதா தேவி மாறவர்மனின் கழுத்தை மலர் ...ங்களைக் கொண்டு இறுக்கிக் பிணைத்த வண்ணம் ...றி வளைத்திருந்தவர்களை கூர்ந்து நோக்கினாள்..

வருகை புரிந்தவர்கள் ஹொய்சால நாட்டின் ...டைவீரர்கள் அல்ல என்பதில் அவளுக்கு சிறிதளவு ...மைதி உண்டானது..

'சோழ நாட்டின் படைவீரர்களை எமது மன்னர் ஒருவர் ...டும் தனித்து எதிர் கொள்ள வேண்டுமா..?'

மனம் கலங்கியவள் வெறுப்புடன் சோழ நாட்டின் ...டைவீரர்களை கனல் கக்க நோக்கிய போது.. படை ...ரர்களில் முன்னனியில் இருந்த இரு புரவி வீரர்கள் ...ரவிகளை விட்டுத் தரையில் குதித்து மாறவர்மனின் ...ருகே வந்தனர்..

இருவரில் ஒருவனின் விழிகளில் நர்மதாவைக் ...ண்டதும் மிதமிஞ்சிய வெறுப்பு தென்பட்டது.. மற்றவன் ...சத்துடன் நோக்கினான்..

'சோழ வீரர்களில் ஒருவனின் விழிகளில் இத்துனை ...சம் எவ்வாறு உண்டானது..?'

நர்மதாவுக்கு விழிகளைக் கட்டி கானகத்தில் ...ிட்டதைப் போல இருந்தது.. அத்தருணத்தில்தான் ...வள் அவ்வீரர்களின் உடை வாள்களில் பொறிக்கப்

பட்டிருந்த மீன் லச்சினையைக் கண்ணுற்றாள்.. அவளது அகத்திலிருந்த அச்சம் விலகி சுவாசம் சீரானது..

'இவர்கள் பாண்டியர்கள்..'

அவளது வதனத்தில் நிலவிய நிம்மதியில் பாசத்துடன் நோக்கிக் கொண்டிருந்த வீரன் புன்னகை புரிந்தான்..

"பாண்டிமா தேவியை எனக்கு அறிமுகம் செய்து வைக்க மாட்டாயா தோழனே..?"

அவனது உரையில் உரக்க நகைத்தான் மாறவர்மன்.. அத்தருணத்திலும் அவன் நர்மதாதேவியை இறக்கி விட முனையவில்லை.. அவனது கரங்கள் அவளது இடையை இறுக்கிப் பிணைத்த வண்ணமே இருந்தன..

"தற்போதுதான் நம் நாட்டைப் பற்றியும்.. எனது மூதாதையர்களின் ஆராய்ச்சியைப் பற்றியும் எமது தேவியிடம் அறிமுகம் செய்து கொண்டிருந்தேன்.. மற்ற அறிமுகங்களை ஒவ்வொன்றாக உரைக்க வேண்டும்.. தோழா..!"

மாறவர்மனின் விடையில் அறிமுகத்தை வேண்டியவனும் நகைக்க.. உடன் நின்றவன் கோபத்துடன் கர்ஜனை செய்தான்..

"போதும் இளவழுதி..! தமது தோழன் புரிந்திருக்கும் நற்செயலை எண்ணி மகிழ்ந்து போக வேண்டாம்.. நகைப்பை நிறுத்து.. பற்கள் சுளுக்கிக் கொள்ளப் போகின்றன.. நகைத்து விளையாடும் தருணமல்ல இத்தருணம்.."

அவனது சீற்றத்தில் அருவிக் கரையின் மரங்களில் வீற்றிருந்த பட்சிகள் அச்சம் கொண்டு சிறகுகளை படபடவென அடித்தபடி மரங்களை விட்டுப் பறந்தன.. அவற்றை ஏறிட்டு நோக்கிய மாறவர்மன் வதனம் சுளித்தான்..

"உக்கிரவர்மன் என்ற தமது நாமத்திற்கு ஏற்ப தாங்கள் உக்கிரம் கொண்டவராகவே உள்ளீர்கள் சிறிய தந்தையே..! இளவழுதி என்ன உரைத்து விட்டான் என தாம் அவனை இத்துனை கடினத்துடன் கடிந்து கொள்கிறீர்கள்..?"

'சிறிய தந்தையா..?'

நர்மதாதேவி பதட்டம் கொண்டாள்.. மாறவர்மனின் சிறிய தந்தையின் முன்னிலையில் மாறவர்மனின் கரங்களை விட்டு இறங்காமல் அவன் கழுத்தை பிணைத்தபடி அவள் இருப்பதா..?

விலகித் தரையில் குதிக்க யத்தனித்தவளை விடாமல் பிணைத்துக் கொண்டான் மாறவர்மன்.. அந்தக் காட்சியில் உக்கிரவர்மனின் விழிகளில் உக்கிரம் மிகுதியானது..

"உடைவாளைப் பிடிக்கும் கரங்கள் இடையைப் பிடித்து இன்புற்று விளையாடிக் கொண்டிருக்கின்றன.. தற்போது மட்டும் ஜடாவர்மன் இக்காட்சியை பார்க்க உயிர் தரித்திருக்க வேண்டும்.. பாராட்டுதல்களை அள்ளி வழங்கியிருப்பான்.."

ஜடாவர்மனின் நாமத்தைச் செவியுற்றதும் மாறவர்மனின் தேகத்தில் விறைப்புத் தோன்றியதை அவனது அழுந்தப் படிந்த கரங்களின் வாயிலாக உணர்ந்து கொண்ட நர்மதா தேவி திமிறி விடுபட்டு அவன் கரங்களில் இருந்து இறங்கி உக்கிரவர்மனை வணங்கினாள்.. அனல் பறக்கும் விழிகளுடன் இருந்த உக்கிரவர்மன் அவளது வந்தனத்தை அலட்சியப் படுத்தி விட்டு.. நர்மதா என்ற நங்கையொருத்தி அங்கே நின்று கொண்டிருப்பதை அறியாத பாவனையுடன் அவளது வதனம் நோக்காமல் மாறவர்மனிடமே உரையாட முற்பட்டான்.. மாறவர்மனும் விடை உரைத்தான்..

“எமது தமையனார் இருந்திருந்தால் எமது மனையாட்டியின் வந்தனத்தை ஏற்றுக் கொண்டு ஆசி வழங்கியிருப்பார் சிறியதந்தையே..! தம்மைப் போல எமது மனையாட்டியின் வந்தனத்தைப் புறக்கணித்திருக்க மாட்டார்..”

குற்றம் சாட்டும் பாவனையுடன் புருவங்கள் நெரிய மொழிந்தவனை சினத்துடன் நோக்கினார் உக்கிரவர்மன்..

“எனது உடலில் பாண்டியர்களின் குருதி பாய்ந்து கொண்டிருக்கிறது.. பாண்டியர்களின் குல வைரியான சோழனின் மருமான் ஆன ஹொய்சாள அரசனின் குமாரியின் வந்தனத்தை ஏற்றுக்கொள்ள எனது பாண்டிய குல குருதி அனுமதிக்கவில்லை மாறவர்மா..!”

நர்மதா தேவியின் வதனம் சிறுத்து விட்டது.. அந்த நொடிவரை மாறவர்மனின் மனையாட்டியாக.. பாண்டிய மகாராணியாக இருந்தவளின் மனம் தனிமை கொண்டது.. அவளை ஹொய்சாள நாட்டைச் சேர்ந்தவள் என்று இனம் பிரித்துச் சுட்டிக் காட்டி விலக்கி நிறுத்தி வைத்து விட்ட உக்கிரவர்மனின் உரையில் அவள் தனிமையுற்றாள்.. மாறவர்மனின் மனையாட்டியென்ற அடையாளத்தை உக்கிரவர்மன் அங்கீகரிக்காததில் பெரும் துயர் கொண்டாள்.. அருவிக்கரையின் கொடி இல்லத்தில் காலம் முழுவதும் வாழ்ந்து விட முடியாதென்ற மெய் கண் முன்னர் வருகை தந்ததில் திகில் கொண்டாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



18

தெளிவான வானத்திலே..
இடையூறாய் கரும் மேகம்..

'இம்புட்டு அறிவாளியா.. தெளிவா இருக்கிறவள எதுக்காக கடவுளே இப்படி ஆட்டிப் படைக்கிற...'

அனுராதாவின் மனதில் விசனம் பொங்கியது.. அவள் மனதில் துக்கம் எழுந்தது... யாமினியின் அழகையும்.. அறிவையும் நினைத்துப் பார்த்து பூரிப்புக் கொள்ள முடியாமல் கதிகலங்க வைக்கும் அவளது

நடவடிக்கைகளின் பிண்ணனி எதுவாக இருக்கக் கூடும் என்று அவள் குழம்பினாள்.

"ஸோ டாட்..! தப்பு உங்க மேலதான்.. அதனால அடக்கி வாசிங்க.."

"அது எனக்குப் பழக்கமான விசயம்தானே.. செஞ்சுட்டாப் போச்சு.."

தந்தையும், மகளும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்த போது அவர்கள் பேசியதை காதிலேயே வாங்கிக் கொள்ளாதவளைப் போல பாத்ரூமை விட்டு வெளியே வந்தாள் அனுராதா.. பிரதாப்பின் பக்கம் திரும்பாமல் மகளின் பக்கம் திரும்பி..

"இப்ப எதுக்காக இம்புட்டுச் சந்தோசம் கொண்டாடற..? உங்கம்மா பொறந்த வீட்டுக்குப் பொட்டியக் கட்டறதில உனக்கு இம்புட்டுச் சந்தோசமா..?" என்று அதட்டினாள்..

"ஐயோ அம்மா..!" யாமினி அலறிவிட்டாள்..

"என்னத்த அம்மா..?"

"மலையிறங்கிட்டிங்கன்னு நம்பிக்கையா இருக்கேம்மா.. அந்த நம்பிக்கையில மண்ணை அள்ளிக் கொட்டிரா தீங்கம்மா.. ப்ளீஸ்.. இன்னைக்கு இது போதுமே.."

"அப்ப.. மிச்சத்தை நாளைக்கு வைச்சுக்கலாம் கறியா..?"

"வேண்டாம்மா.. இதுவே ஒரு மாசத்துக்கு தாங்கும்ன்னு நினைக்கறேன்மா.. நாளைக்கும் கன்டினியூ

"ணினீங்கன்னா அப்பா பாவம் தாங்க மாட்டார்.. ணை அடிப்படையில அவரை மன்னிச்சு டிருங்கம்மா.. ப்ளீஸ்..."

"போதும்.. விட்டா இன்னைக்குப் பூராவும் ப்ளீஸ் டுவ.."

அனுராதா அறையை விட்டு வெளியே போகப் னாள்..

"அனு.." தீனமாக அழைத்து வைத்தார் பிரதாப்..

அனுராதாவின் துணிகளை அலமாரியில் அடுக்கி த்திருந்த யாமினி.. அறையை விட்டு வெளியேறி டாள்..

'இங்கிதம் தெரிந்த மகள்..' பிரதாப்பின் மனம் னைக்கு நன்றி சொன்னது..

அனுராதா பதில் சொல்லாமல் அவரை யாரோ.. ரோ.. என்ற பார்வையை பார்த்து வைத்தாள்.. தாப்புக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல ருந்தது..

"என்னடி இப்படிப் பாக்கிற..?"

"எப்படிப் பாக்கறேன்..?"

"தெருவில போகிறவனைப் பாக்கிறதைப் போல க்கற..?"

"அவங்ககூட உங்களை விட மரியாதை ரிஞ்சவங்களா இருப்பாங்க.. நீங்க அதுக்கும் கீழே.."

"ஒரு மனுசனுக்கு டங் ஸ்லிப்பாகிருச்சுன்னா அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்கனுமா அனு..?"

"வேற என்னத்தைச் செய்கிறது..? பேய்க்கு வாழ்க்கைப் பட்டுட்டேன்.. புளிய மரத்தில தொங்கித்தான ஆகனும்..?"

"என்னடி இப்படிப் பேசற..?"

"வேற எப்படிப் பேசச் சொல்கிறீங்க..?"

"தெரியாம பேசிட்டேண்டி.. மன்னிக்கக் கூடாதா..?"

"மன்னிக்கிறதைப் போல நீங்க பேசலை.. மனசில இருந்தது வாக்கில வந்துருச்சு.. இதுதெரியாம இத்தனை நாளா.. என் புருசனைப் போல உண்டுமான்னு சந்தோசம் கொண்டாடிக்கிட்டு கூமுட்டை போல இருந்திருக்கேன்.."

"ஏண்டி நீ வேற.. என் மனசில என்ன இருந்துச்சு.."

"அதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால வண்டி வண்டியாக் கொட்டிக் கவிழ்த்தீங்களே.."

"யதார்த்தமா வாய் விட்டுட்டா.. என்மேல குத்தம் சொல்வியா..?"

"யதார்த்தமா..? நீங்களா..? ஹ..! உங்களுக்கு அதுக்கும் ஏணி வைச்சாக்கூட எட்டாது.."

அனுராதாவின் வெறுப்பில் பிரதாப் மனம் அதிர்ந்தார்.. உண்மையாகவே அவரது மனைவி அவரை தவறாக

நினைக்கிறாள் என்பது அப்போதுதான் அவரது அறிவுக்கு உறைத்தது.. அதுவரை அவளது கோபத்தை இயல்பான கோபம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர் அவளது கைகளை வலுக்கட்டாயமாக பற்றி இறுக்கிக் கொண்டார்.. அவளது விழிகளுக்குள் ஆழ்ந்து பார்த்தவரின் குரல் கரகரத்தது..

"என் முகத்தைப் பார்த்துச் சொல்லு அனு... நான் உன்னைவிட வேறொரு பெண்ணை உசத்தியா நினைப்பேனா..? எனக்கு நீதாண்டி உலகம்.. நீ மட்டும் தான் ரதி.. போதாத காலத்தில பேசத் தெரியாம பேசித் தொலைச்சிட்டேன்.. மத்தபடி என் மனசில நீ மட்டும் தாண்டி.. உனக்கு இணை யாருடி..? மடத்தனமாக பேசிட்ட உன்புருசனை மன்னிக்க மாட்டியா அனு.."

அனுராதாவின் மனம் இளகி விட்டது... இருந்தும் அவளது இளகலை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கைகளை உருவிக் கொண்டு போய் விட்டாள்... மறைத்தாலும் வெளிப்பட்டு விடும் அவளது மனதை பிரதாப் கண்டு கொண்டார்.. அவரது முகம் மலர்ந்தது...



19

பகைவனின் புதல்வியென்று... மனையாட்டியை மறக்கத் துணிவாயோ..?

நர்மதா தேவியின் வதனத்தில் பிரதிபலித்த கலவரத்தில் மாறவர்மன் சினம் கொண்டான்... உக்கிரவர்மனை உக்கிரமாக நோக்கினான்..

"இவளை ஹொய்சாள அரசிளங்குமாரியென்று அடையாளப்படுத்துவதை எம்மால் அனுமதிக்க இயலாது தந்தையே..!"

"வேறு எவ்விதம் அடையாளப் படுத்துவது..? இவள் ஹொய்சாள அரசனின் புதல்வியாவாள்.. அவ்விதம்தானே இவளை அடையாளப்படுத்த இயலும்..?"

"மணம் புரிந்த மங்கையர்களின் அடையாளம் அவர்களை மணம் புரிந்த மணாளர்களின் அடையாளமாக மாறி விடுவதுதான் நமது தமிழர் பண்பாடு.. சங்கம் வளர்த்த தமிழ் மதுரை மாநகரை தலைநகராகக் கொண்ட பாண்டியர்களின் வம்சாவளியினரான தமக்கு இது தெரியாதா தந்தையே..? தாம் இதை அறிய மாட்டீர்களா..? அல்லது அறிய மறந்தீர்களா..?"

"தமிழ் சங்கத்தைப் பற்றி ஹொய்சாள அரசகுமாரிக்கு மாலை சூட்டியிருக்கும் நீ உரைக்கிறாயா..?"

"உரைக்கக் கூடாதா..? யாம் அந்த மண்ணில் பிறந்தவன்.."

"அந்த மண்ணைக் காக்க கடமைப்பட்டவன்.. அடிமையுற்றிருக்கும் தாய் மண்ணை விடுவிக்கும் எண்ணமில்லாமல்.. அடிமை கொண்டவனின் உறவினனின் தங்கையோடு உறவு கொண்டாடிக் கொண்டுள்ளாயே.. பிறந்த மண்ணின் பெருமையைப் பற்றி நீ பேசுதல் தகாது மாறவர்மா..!"

உக்கிரமாக சென்று கொண்டிருந்த சொற்போரின் இடையினிலே குறுக்கிட்டான் இளவழுதி..!

"மன்னர் பெருமானே..! மாறவர்மன் காதல் கொண்டதில் தவறேதும் இல்லையே.. காதல்.. வைரியின் தங்கையென்று இனம் பிரித்து நிறுத்தாது அல்லவா..?"

"தமது தோழனின் தரப்பில் உள்ள நியாயத்தை உரைக்க யத்தனிக்கிறாய் இளவழுதி..! இதன் பின்னால் நேரப் போகும் நெருக்கடிகளை காண மறுக்கிறாய்.. இத்தனை நாழிகையில் இந்தப் பெண்ணை மாறவர்மன் மணந்து கவர்ந்து வந்து விட்ட செய்தி ஹொய்சாள மன்னனின் செவிகளை எட்டியிருக்கும்.. நமது குல வைரியோடு அவனும் இணைந்து விட்டால்.. நமது நிலைக்கை அடைவது கடினமாகி விடாதா..?"

உக்கிரவர்மனின் உக்கிரமான வினாவிற்கு விடையளிக்க இயலாமல் மௌனத்தை அரணாகக் கொண்டான் இளவழுதி..! நர்மதா தேவியின் வதனத்தில்

குற்றம் புரிந்து விட்ட உணர்வு வருகை தந்திருந்தது... இதுபோன்ற கோணத்தில் எண்ணிப் பார்த்திராதவள் அவளுடைய மாறவர்மனின் போராட்டத்திற்கு அவளே தடை சுவராக மறித்து நின்று விட்டாளோ என்று கலங்கிப் போனாள்..

"தமது தந்தை உரைப்பதிலும் நியாயம் உள்ளது அரசே..!"

தீனமான குரலில் பேச முயன்றவளிடம் சீறினான் உக்கிரவர்மன்..

"இது வளர்த்த தந்தைக்கும்.. வளர்ப்பு மகனுக்கும் இடையினில் நிகழும் வாதம்..! நேற்றைய தினம் தான் இவன் வாழ்வில் நீ வருகை புரிந்திருக்கிறாய் என்பதை நினைவில் நிறுத்தி.. எனக்கும்... என் புதல்வனுக்கு இடையினில் வருகை புரியாமல் விலகி நில் பெண்ணே..!"

"எதன் பொருட்டு அவள் விலகி நிற்க வேண்டும்..?" தெளிவுடன் வந்தது மாறவர்மனின் குரல்..

"மாறவர்மா..!" உக்கிரவர்மன் கர்ஜனை செய்தான்..

"போதும் தந்தையே..! அருவிக்கரையிலிருந்த அனைத்துப் பட்ஷிகளையும் தமது கர்ஜனையின் மூலம் விரட்டியடித்து விட்டீர்கள்.. இனியும் எதன் பொருட்டு கர்ஜனை புரிகிறிர்கள்..? இந்த வனத்தில் வசிக்கும் விலங்கினங்களையும் துரத்தியடித்து விட வேண்டும் என்பது தங்களின் உசிதமா..?"

மாறவர்மனின் வினவுதலில் இளவழுதி உரக்க நகைத்தான்.. உக்கிரவர்மனின் வதனத்திலும் இறுக்கம் தளர்ந்து நகைப்பு எட்டிப் பார்த்திடவா என்று வினவி வைத்தது..

"நகைச்சுவையாக உரையாடி மனம் மகிழும் நிலையில் தற்போது நாம் இல்லை மாறவர்மா.."

"அறிவேன் தந்தையே..! அதைப் பற்றி தாராளமாக நாம் அனைவரும் ஒன்று கூடி உரையாடலாம்.. விவாதிக்கலாம்.. போராட்ட களத்தில் இருந்து இந்த மாறவர்மன் பின்வாங்கவில்லை.. காஞ்சியை பார்வையிடச் சென்றவன் வழியில் கடல் மல்லையில் இவளைக் கண்டேன்.. எமது நாமம் கேட்டே என்மீது அளவற்ற காதல் கொண்டிருந்தவளின் மீது காதல் கொண்டேன்.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் சன்னதியில் மாலை சூட்டி.. மங்கல நாண் பூட்டி எமது மனையாட்டியாக ஆக்கிக் கொண்டேன்.. பாண்டிமா தேவியுடன் சோழ வீரர்களிடமிருந்தும், ஹொய்சால வீரர்களிடமிருந்தும் தப்பித்து அருவிக்கரையின் கொடி இல்லத்திற்கு வருகை புரிந்தேன்.. பாண்டியர்களைத் தவிர வேறு எவரும் அறிய முடியாத எனது இருப்பிடமான இந்த அருவிக்கரையில் எனது மனையாட்டியுடனான எனது வாழ்வைத் தொடங்கினேன்.. இதில் தாங்கள் குற்றம் காண வதுமில்லை தந்தையே..!"

உக்கிரவர்மன் நெடுமூச்செரிந்தான்.. விளக்கம் உரைத்த மாறவர்மனை வெறித்து நோக்கினான்.. அவனது வதனத்தின் ஒவ்வாமை மாறவே இல்லை..

“பொற்காசுகளுக்கு இருபக்கம் உண்டு மகனே..! தனது பக்கம் தமக்கு நியாயமாக இருக்கலாம்.. மற்றொரு பக்கம்.. தமது இந்த மணத்தால் பாண்டிய நாடு புதிதாக ஹொய்சாள நாட்டின் பகைமையையும் ஈட்டியுள்ளதை இயம்புகிறதே..”

“யாம் இவ்ளை மணக்காமல் இருந்தால் மட்டும் ஹொய்சாள அரசன் குலோத்துங்க சோழனுக்கு உதவிக்கரம் நீட்டாமல் இருப்பானா தந்தையே..? மறந்து விட்டீரா..? குலோத்துங்கன் ஹொய்சாள அரசனின் மாமன்..”

மாறவர்மனின் நினைவூட்டலில் வெறுப்புடன் கொட்டிக் கொண்டிருக்கும் அருவியை சற்று நோக்கினான் உக்கிரவர்மன்..

மாறவர்மனின் விழிகளும்.. இளவழுதியின் விழிகளும் நயன பாஷையில் உரையாடிக் கொண்டன.. இளவழுதி சன்னமான குரலில்..

“மன்னரே..!” என்று அழைத்தான்..

“உம்..” என்று கர்ஜித்தான் உக்கிரவர்மன்..

“மாறவர்மனின் மீது குற்றம் கண்டு ஆகப் போவது யாது..? நடந்த நிகழ்வு நடந்து முடிந்து விட்டது..

மாறவர்மனின் மனையாட்டி ஹொய்சாள நாட்டின் அரசிளங்குமாரியென்பதை இனி மாற்றியமைக்க இயலாது.. நமது மாறவர்மனின் மங்கலநாணை ஏற்று பாண்டியர்களின் மகாராணியாக வருகை புரிந்திருக்கும் பாண்டிமாதேவியை நமது நாட்டின் அரசியாக இனம் காணுவோம்.. ஹொய்சாள நாட்டின் அரசிளங்குமாரி இவர் என்பதை மறப்போம்.. இதுவே உசிதமானது.."

இளவழுதியின் உரையில் உக்கிரவர்மனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. அவன் அதிருப்தியுடன் மாறவர்மனை நோக்கினான்..

"உனக்கு மணம் புரிய வேறு அரசிளங்குமாரிகளே கிட்டவில்லையா மாறவர்மா..? மன்னர்கள் மணம் புரிவது அரசியல் நோக்கத்துடன் இருக்க வேண்டும்.. அங்கே சுயவிருப்பத்தை முன்னிலைப் படுத்தக் கூடாது.. உனது மனையாட்டியாக வருகை தரும் அரசகுமாரியின் பிறந்த நாடு.. அவர்களது மருமானான உன்னைக் காக்கும் கடமையுடன் யுத்த களத்திற்கு உன் சார்பாக போரிட வருகை புரிய வேண்டும்.. சிந்தித்துப் பார்.. வரும் தினங்களில் நாம் சோழர்களை எதிர்த்து புரியப் போகும் யுத்தத்தில் உன் சார்பாக போரிட ஹொய்சாள அரசன் வருகை புரிந்து விடுவானா..?"

மாட்டான் என்பதில் நர்மதா தேவி மன வேதனை கொண்டாள்..

‘எப்படி வருகை புரிவார்..? எமது தாய் என்ன குலோத்துங்க சோழரின் புதல்வியா..? எம் தந்தையின் பட்ட மகிஷியா..? அவரது பலராணிகளில் ஒரு ராணியின் புதல்வியான எனை மணந்த மருமானுக்கு ஆதரவாக குலோத்துங்க சோழனை எவ்விதம் அவர் எதிர்ப்பார்..?’

கன்றி விட்ட நர்மதா தேவியின் வதனத்தை இரக்கத்துடன் நோக்கினான் மாறவர்மன்.. அவனது வதனத்தில் கடினம் வந்தது..

“மாமன்னாரின் ஆதரவில் எமது தாய்த்திருநாட்டை மீட்க வேண்டிய கோழையல்ல இந்த மாறவர்மன்... எமது புஜப்பல பராக்கிரமத்தில் எமது தாய்மண்ணை நான் மீட்பேன்..”

“மாறவர்மா..!”

“இவள் என் மனையாட்டி.. எமை மட்டுமே நம்பி எனது மங்கல நாணுக்கு கழுத்தை நீட்டியவள்.. நாடு, நகரம், மாளிகைவாசம் என்ற அனைத்தையும் துறந்து.. இந்த அருவிக்கரையில் என்னுடன் வசிக்க மனமொப்பி உடன் வந்தவள்.. எனது உயிருக்கும் மேலானவள்..! இவளை குறைவாக மனம் புண்படும் விதத்தில் தாங்கள் இயம்பும் மொழிகளை நான் அனுமதிக்க மாட்டேன்...”

“எமக்கு மட்டும் தமது மனையாட்டியின் மனம் புண்பட உரையாட வேண்டும் என்ற நோர்த்திக்கடன் உள்ளதா..?”

வளர்த்தவனும்.. புதல்வனும் வழக்காடிக் கொண்டிருக்கையில் இடையில் மொழிந்தாள் நர்மதா தேவி.. அவளது மெல்லிய குரலில் மாறவர்மன் ஈர்க்கப்பட.. இளவழுதி மென்மையாக.. உக்கிரவர்மன் வேண்டா வெறுப்பாக அவள் உரைப்பதை செவி மடுத்தான்..

"யாம் எமது மணாளருக்கு உதவ இயலாத நிலையில் இருப்பவளாக இருக்கலாம்.. என் பொருட்டு எனது தந்தை பாண்டிய நாட்டிற்கு ஆதரவாக படைக்களத்தில் இறங்காதவராக இருக்கலாம்.. ஆயினும் ஓர் உறுதியை நானளிக்கிறேன்.. ஏதேனும் ஓர் வகையில் எமக்கு மாலை சூட்டியவரை நான் காப்பேன்.. அவருக்காக எச்செயலையும் புரிவேன்.. இது இந்த அருவிக்கரையின் இயற்கையை முன்னிறுத்தி நானளிக்கும் வாக்காகும்.. இது சத்தியம்..!"

உணர்ச்சி ததும்ப அவள் உரைத்ததில் நெகிழ்ந்து போன மாறவர்மன் மனையாட்டியை அதட்டினான்..

"போதும் நறுமுகை..! இதற்கு மேல் ஏதும் உரைக்க வேண்டாம்.. கணக்கீடுடன் புரிவது காதல் அல்ல.. பலம் கூட்ட மங்கல நாண் பூட்டுவது மாறவர்மனுக்கு அழகல்ல.. தாம் எனது தேவி..! இதை மாற்ற எவராலும் இயலாது.."

மாறவர்மனின் மறைமுக உரையில் வதனம் கருத்தான் உக்கிரவர்மன்..

"மணமான ஓர்தினத்திலேயே உமை வளர்த்த உனது சிறியதந்தை எவரோ என மாறி விட்டேனா மாறவர்மா..? நன்று..! வாலிபப்பருவம் அடைந்தவுடன் புதல்வர்கள் பெற்றவர்களை விட்டுப் பிரிந்து நிற்பார்கள் என்று பெரியவர் கூறும் கூற்று மெய்யாகி விட்டது.."

"எவரோ என்று தங்களை நான் குறிப்பிடவில்லையே தந்தையே.."

"வெளிப்படையாக குறிப்பிடவில்லை.. மறை முகமாக குறிப்பிட்டாய்.."

"அது தங்களின் கற்பனை.."

"கற்பனை புரியும் அகவையைத் தாண்டி விட்டேன் நான்.. அந்த அகவையில் உள்ளது நீதான்.."

"ஆகட்டும்.. அது ஒன்றும் பெருங்குற்ற மில்லையே.."

"பரம வைரியுடன் உரையாடுவதைப் போல உரையாடுகிறாய்.."

"தாங்கள் மட்டும் புதிதாக மணம் புரிந்துள்ள புதல்வனிடம் உரையாடுவதைப் போலவா உரையாடு கிறீர்கள்..? தந்தை எவ்வழியோ புதல்வனும் அவ்வழியில் தானே செல்வான்..?"

"இந்த வாக்குவாதத்திற்கு முடிவிருக்காது..."

உக்கிரவர்மன் சலிப்புடன் நதி நீரை நாடிச் சென்று விட்டான்.. இளவழுதியின் கண் அசைவில் மற்ற புரவி

வீரர்களும் தரையினில் குதித்து நதிநீரை அணுகினார்கள்.. நீராடி.. புரவிகளையும் நீராட விட்டு.. கரையில் இருந்த புல்லில் மேய விட்ட பின்னர்.. மரங்களின் நிழலில் சயனித்து சிரமப் பரிகாரத்தை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.. அவர்களில் சிலர் கரையோர கற்களில் சிலவற்றை ஒன்று கூட்டி.. கொடி இல்லத்திலிருந்த பெரிய கலயங்களில் நதிநீரை நிரப்பி.. நெருப்பு மூட்டி.. சமையல் செய்ய முற்பட்டனர்..

தனித்து அமர்ந்திருந்த உக்கிரவர்மனின் முதுகுப் புறத்தைக் கண்ணுற்ற மாறவர்மன் நெடு மூச்செரிந்தான்.. அவனது தோளில் கரம் வைத்து தட்டிக் கொடுத்தான் இளவழுதி..!

"எமது வதனம் நோக்க மாட்டாராம்.. எதன் பொருட்டு இத்துனை கோபம் இளவழுதி..? எமது மணத்தை முடிவு செய்யும் அதிகாரம் எமக்கு இல்லையா..?"

"உண்டு தோழனே..! இல்லையென்று எவர் உரைப்பார்..?"

"இதை உரக்க உரைத்து விடாதே.. சிறிய தந்தை செவியுற்றால் எவர் உரைப்பாரென்று எனைத்தானே உரைத்தாயென்று யுத்தத்திற்கு வந்து விடுவார்.."

மாறவர்மனின் எச்சரிக்கையில் வாய் விட்டு நகைத்தான் இளவழுதி.. அந்த இறுக்கமான சூழலில் அவனது நகைப்பொலியில் இதமாக உணர்ந்தாள் நர்மதா

தேவி..! மாறவர்மனின் வளமையான எதிர்காலத்தை மாற்றி விட்டதைப் போன்ற குற்ற உணர்விற்கு ஆட்பட்டிருந்தவளுக்கு இளவழுதியின் இலகுவான பேச்சும்.. நகைப்பும்.. கலவரத்தைக் குறைத்து அமைதிப் படுத்தின..

அருவிக் கரையில் சலசலப்பு ஒலித்தது.. பெரிய.. பெரிய கலயங்களில் உணவு தயாராகிக் கொண்டிருந்தது.. புரவிகள் புல் மேய.. மரங்களின் அடியினில் சிரமப் பரிகாரம் செய்து கொண்டிருந்தவர்கள் உற்சாகமாக உரத்த குரலில் கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள்..

அது நாழிகை வரை.. அவளுக்கும்.. மாறவர்மனுக்கும் மட்டும் சொந்தமாக இருந்த அந்த அருவிக்கரை பொது மயமாகிப் போனதில் தனிமைச் சங்கிலி அறுபடுவதை உணர்ந்தாள் நர்மதா..

மாறவர்மன் அவளருகில்தான் இருந்தான்.. இருந்தும் அவனுக்கும் அவளுக்கும் இடையில் பல காத தூரம் உள்ளதைப் போல மலைத்தாள் அந்தப் பேதை..!

அக்கம்.. பக்கம்.. எவருமில்லாத பூலோகத்தில் அவளுடைய காதலனுடன் உலகில் உள்ள அனைத்து இன்பங்களையும் துய்த்து களித்திருந்தவளின் கண் முன்னால்.. அந்த அழகான தனிமை பறிக்கப்பட்டு கலைக்கப் பட்டு விட்டது..

சப்தங்கள் இல்லாத அந்த அருவிக் கரையில் சந்தடிகள் நிரம்பியிருந்தன.. நாமம் தெரியாத பட்சிகளின்

காணம் மறைந்தேகி விட்டன.. படைவீரர்களின் பேச்சுக் குரல்கள் கானகத்தை நிரப்பியிருந்தன..

மாறவர்மனை நோக்கினாள்.. அவன் வெகு தீவிரமாக இளவழுதியுடன் விவாதித்துக் கொண்டிருந்தான்.. அவளுக்கான அவனது பிரத்யேகப் பார்வைக்காக அவள் மனம் ஏங்கியது..

சில நாழிகைக்குள் அவளது தேனிலவு முடிவு பெற்று விடும் என்று அவள் எண்ணியும் பார்த்ததில்லையே.. எவ்வாறு இது நிகழ்ந்தது..?

அவளுக்கு அழ வேண்டும் போல இருந்தது.. மனம் விட்டு அழ வேண்டும்.. மறுபடியும் திரும்பிச் சென்று விட இயலாத தாயின் மாளிகையை நினைத்து அழ வேண்டும்.. அம்மா என்று மடி புக முடியாத தன் சூழலை நினைத்து அழ வேண்டும்..

துயரத்துடன் விலகி தன்னந்தனியளாக நதிக் கரையில் அமர்ந்திருந்தவளைத் திரும்பிப் பார்த்த இளவழுதி..

"பாவம்.." என்று பச்சாதபப் பட்டான்..

மாறவர்மனும் நர்மதாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனது வதனம் துயரத்தில் தோய்ந்திருந்தாலும் அதையும் மீறிய கடினம் வதனத்தில் விரவியிருந்தது..

"ஆம்.." சிரத்தை அசைத்தான்..

"நீ ஓடிக் கொண்டிருப்பவன் மாறவர்மா... இளைப்பாற ஓர் இடத்தில் நிற்க இயலாதவன்... உன் ஓட்டத்திலே இந்த அறியாப் பெண்ணையும் ஏன் அழைத்தாய்..?"

"நான் அழைக்கவில்லை இளவழுதி.. அவள் தான் என்மீது தன் மனதை வைத்திருந்தாள்.. எனது காதலையும்.. மங்கல நாணையும் யாசித்தாள்.. அளிக்க இயலாது என்று மறுக்க என்னால் இயலவில்லை.."

"புரிகிறது.. ஆயினும்.. இவள் பிரிவாற்றாமையில் வாடப் போகிறாளே.. உனது பிரிவை தாங்கிக் கொள்ளும் வலிமை இவளது இதயத்திற்கு இருக்குமா..?"

இருக்காது என்பதனை நன்கு அறிவான் மாறவர்மன்.. வேறு மார்க்கமேதும் இல்லையே.. அவனை அவள் பிரிந்துதானே ஆகவேண்டும்..? போர் புரியும் களத்தில் உள்ளவன் இல்லறத்தை எண்ணவும் இயலாதே..

"எமது நிலை அறிந்தவள்தான்.. யுத்தம் புரிய அவளைப் பிரிந்து செல்லும் நிலை உண்டாகும் என்பதை அறிந்திருக்க மாட்டாள்.. எதையும் சிந்திக்காமல்.. அனைத்தையும் துறந்து.. அனைத்தும் நானாக என்னுடன் வருகை தந்து விட்டவள்.. இவளை இமைக்குள் வைத்துக் காக்க வேண்டும்.. என் செய்வேன் நான்..?"

மாறவர்மனின் மனக் கலக்கத்தில் இளவழுதி மனம் நெகிழ்ந்தான்..

"கலங்காதே தோழா..!" மாறவர்மனின் தோள் பற்றி ஆறுதல் மொழிகளை உரைத்தான்..

"அவள் மலரினும் மென்மையானவள் இளவழுதி..! அரண்மனை வாசத்தைத் துறந்து என்னுடன் இந்த அருவிக் கரையின் கொடிஇல்லத்தில் வாழ்வதை இன்பமாகக் கருதுபவள்.."

"உமது வேதனையை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.. இக்கொடி இல்லத்திலேயே வசித்து விட தமது மனமும் விரும்புகிறதல்லவா..?" இதமான இளவழுதியின் விசாரணாவிற்கு..

"இல்லை.." என்று விடையளித்தான் மாறவர்மன்..

"நினைத்தேன்.." நகைத்தான் இளவழுதி..

"தன்னலமாக சிந்திக்க என்னால் இயலாது தான்பனே..! பாண்டிய நாட்டை மீட்பேன்.. எரிந்து விட்ட சோழனாடைய கால பாண்டியர்களின் அரசவைக்கு உயிர் மீண்டுகொடுப்பேன் என்ற நம்பிக்கையோடு உயிர் துறந்த எமது தகப்பனாமயன் ஜடாவர்மரின் சொப்பனத்தை நிறைவேற்றுவதே எமது முதலாது தலையாய பணி.. அதை விடுத்து அருவிக்கரையில் குடிசை அமைத்து மணந்த மனையாட்டியுடன் சுகித்திருக்கும் சராசரி மனிதனல்ல இந்த மாறவர்மன்.."

"இதை தமது மனையாட்டியிடம் எவ்வாறு தெரிவிப்பாய்..?"

"உரைத்துத்தானே தீர வேண்டும்..? அதற்கு முன்னர் என்னவோ சககிழத்தி சண்டையிட்டிருப்பதைப் போல

வதனம் திருப்பி.. முதுகு காட்டி அமர்ந்திருக்கும் எனது சிறிய தந்தையின் சினத்தைத் தணித்தாக வேண்டுமே..”

“நீ தனித்துக் சென்றாலே அவர் சினம் தணிந்து விடுமே..”

“அதைக் கூறு..? இவர் என்ன எனது சிறிய தந்தையா..? அல்லது.. முதல் மனையாட்டியா..? நர்மதாவிடம் சககிழத்தியைப் போல போராடுகிறாரே..”

“ஹா.. ஹா.. ஹா..”

“எமது நிலைமை.. தமக்கு நகைப்பைத் தருகின்றதா..?”

“இது உரிமைப் போராட்டம் மாறவர்மா..! உன் மீது தமக்கிருக்கும் உரிமை குறைந்து விடுமோ என்று உனது சிறிய தந்தை அச்சம் கொள்கிறார்.. பொதுவாக இவ்வகையான உரிமை உணர்வு மாமியாருக்கும்.. மருமகளுக்கும் இடையினில்தான் உண்டாகும்.. இங்கே தலைகீழாக இடம் மாறி சிறிய மாமனாருக்கும்.. மருமகளுக்கும் இடையே உரிமைப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது..”

இளவழுதி விவரித்த விதத்தில் மாறவர்மனின் வதனம் கடினத்தன்மையிலிருந்து விடுபட்டு நகைப்பைத் தழுவியது... அவனும் இளவழுதியும் இணைந்து நகைப்பதை சற்றுத் தொலைவிலிருந்து செவி மடுத்த நர்மதாவின் மனதில் பொறாமை துளிர்த்தது..

'நண்பனுடன் இணைந்து நகைக்கத் தெரிந்த மனுக்கு நறுமுகை என்று நாமமிட்டு அழைக்கும் னையாட்டியிடமும் சிறிதளவு பல் வரிசையைக் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் வரவில்லை..?' அவள் விழிகளில் கண்ணீர் அரும்பியது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



19

விதிவகுத்த வழியினிலே..
பயணம் செய்யும் பாவை இவள்..

அது எப்படித்தான் அவ்வளவு பெரிய சண்டை டந்தும் எதுவுமே நடக்காததைப் போல அனுராதாவால் யல்பாக இருக்க முடிகின்றதோ என்று இருந்தது பிரதாப்புக்கு..

அவர் அறையை விட்டு ஹாலுக்கு வந்த போது... அனுராதா சமையலறையில் இரவு டிபனுக்கான வேலைகளை ஆரம்பித்திருந்தாள்.. இங்கும் அங்கும் நடமாடிக் கொண்டிருந்தவளின் இயல்பான தோற்றத்தில் இவளா சற்று முன்னர் பிறந்த வீட்டிற்குக் செல்லப் பெட்டியைத் தூக்கியவள் என்று ஆச்சரியம் அடைந்தார் அவர்..

அதுபோன்ற ஆச்சரியங்களை அள்ளி வழங்குவதில் அனுராதாவிற்கு நிகர் அவளேதான்..

மனைவியைக் குறித்த புன்னகையுடன் மகளின் பக்கத்தில் உட்கார்ந்தவர்.. ஜன்னல் பக்கம் பார்த்து விட்டு புருவங்களைச் சுருக்கினார்..

"இது என்னம்மா.. இந்த நேரத்திலேயே கும்மிருட்டா இருக்குது.. அதுக்குள்ளேயா இருட்டிருச்சு..?"

யாமினி ஜன்னல் பக்கம் பார்த்து விட்டு.. தோளைக் குலுக்கினாள்..

"மழையிருட்டுப்பா..; இடி இடிச்சு மின்னல் வெட்டறதைக் கவனிக்கலையா..?"

"எங்கேம்மா..? உங்க அம்மா இடி இடிச்சு மின்னல் வெட்டி கொட்டற மழையாய் கொந்தளிச்சுக்கிட்டு இருந்தாளே.. அவளைக் கவனிப்பேனா..? மழையைக் கவனிப்பேனா..?"

"கஷ்டடம்தான்.."

"யாருக்கும்மா.."

"உங்களுக்குன்னு சொல்ல மாட்டேன்ப்பா.."

யாமினியின் கறாரில் அவருக்கு சிரிப்பு வந்தது..

"சொல்லாட்டிப் போ.." என்றபடி எழுந்து வாசல் பக்கமாக சென்றார்..

"எங்கே போறிங்கப்பா..?" யாமினி குரல் கொடுத்தாள்..

"வாசல் கேட்டை பூட்டிட்டு வந்திர்ரேன்ம்மா.." பிரதாப்பும் பதில் குரல் கொடுத்தார்..

"இன்னும் யது வரலை.." அனுராதா அவள் பங்குக்கு சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்..

"தெரியுது... அவன் வர்றப்ப கேட்டைத் திறந்து விட்டுக்கலாம்.."

அவளுக்கு ஓர் குரலைக் கொடுத்து விட்டு வாசல் கேட்டைப் பூட்டப் போனார் பிரதாப்.. ஜன்னலில் தெரிந்த மின்னல் கீற்றைக் கண்ட யாமினி ஜன்னல் பக்கமாக போனாள்.. தோட்டத்து ஊஞ்சலில் காலையில் அவள் விட்டுச் சென்ற கடிதம் மின்னல் ஒளியில் படபடத்தது..

'என்ன அது..?..!'

அவள் ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது.. அனுராதா வந்து விட்டாள்..

"மின்னல் வெட்டறது தெரியலையா..? இப்பவும் வானத்த உத்து உத்துப் பாக்கனுமா..?" என்று மகளிடம் ஓர் அதட்டலைப் போட்டாள்..

"இல்லேம்மா.." என்ற மகள்..

"என்னத்த.. நொல்லம்மா..?" என்ற தாயின் கோபத்தில் அரண்டு போய் ஜன்னலை விட்டு ஓடி வந்து விட்டாள்..

கடிதம் ஏமாற்றத்துடன் காற்றுக்கும் அசையாமல் காத்துக் கிடந்தது.. பிரதாப் வாசல் கேட்டை மூடிவிட்டு உள்ளே வந்து கதவைச் சாத்தி தாழிட்டார்..

ஹாலில் மகளுடன் உட்கார்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த மனைவியிடம்..

"இது என்னடி அது புதுசா இருக்கு..?" என்றார்..

"எதைச் சொல்கிறிங்க..? நம்ம தெருவில புதுசா குடிவந்திருக்கிறவங்க வீட்டுப் பொண்ணைச் சொல் கிறீங்களா..?"

யாமினி வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பிக்க..

"ஏண்டி..?" என்று பரிதாபமாக மனைவியிடம் நியாயம் கேட்டார் பிரதாப்..

"இப்ப என்ன அலுவலுக்கு பச்சப் புள்ள போல முகத்தை வைச்சுக்கறிங்க..?" அனுராதா எரிச்சல் பட்டாள்..

"எங்கேப்பா.. உங்க முகத்தைக் காட்டுங்க பார்க்கலாம்.."

யாமினி பிரதாப்பின் முகத்தை உன்னிப்பாக பார்த்து விட்டு..

"இல்லேம்மா.. பச்சைக் குழந்தையோட முகம் வேற மாதிரி இருக்கும்.." என்று அபிப்ராயம் தெரிவித்தாள்..

'இதுக என்ன.. என்னை வைச்சு காமெடி பண்ணுதுகளா..?' அழாக்குறையாக மனைவியைப் பார்த்த பிரதாப்..

"இடி இடிக்குது.. மின்னல் வெட்டுது.. ஊதக் காத்து அடிக்குது.. ஆனா மழைமட்டும் வரமே மாட்டேங்குதுன்னு சொல்ல வந்தா இப்படியாடி படுத்தி வைப்ப..?" என்று நியாயம் கேட்டார்..

அனுராதா அலட்டிக் கொள்ளாமல் அவரை பார்த்து வைத்தாள்..



20

எவரிட்ட சாபம் இது..?
என்னுயிரை பிரிய நேர்வது..

நதி நீரில் பிரதிபலித்த தனது வதனத்தையே இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்த நர்மதாவின் இமைகளை கண்ணீர் நனைத்துக் கன்னங்களில் இறங்கியது..

'என்ன வரமடி பெற்றுப் பிறந்தாய்..?'

வெறுப்புடன் தனது பிம்பத்திடம் வினவினாள்.. இனிமை நிரம்பிய சொப்பனம் கலைந்ததில் துயரம் அவள் மனதை நிறைத்தது..

'என்னவென்று எண்ணினேன்..? இந்தக் கானகத்திலேயே வாழ்ந்து முடித்து விடலாம் என்று எண்ணினேனா..? பாண்டியர்களின் ராணியென்றால்.. என்னவர் அரசாள தேசம் வேண்டாமா..? அதை மீட்க அவர் போராட வேண்டாமா..?'

தன்னைத்தானே கடிந்து கொண்டவளின் பார்வையில் உக்கிரவர்மனை மாறவர்மன் அணுகிக் கொண்டிருந்த காட்சி பட்டது..

ஏனோ.. நர்மதாவின் மனம் பதைத்தது..

'என்னவரின் சிறிய தந்தை கட்டாயம் எங்களைப் பிரித்து நிறுத்தி விடுவார்..' அவள் மிரட்சி கொண்டாள்..

அதற்கேற்ப உக்கிரவர்மனுடன் ஆழ்ந்த.. நீண்ட.. நெடும் விவாதத்தில் ஈடுபட்டிருந்தான் மாறவர்மன்.. மணித்துளிகள் நகர்ந்தன.. நடுங்கும் தளிர் விரல்களைச் சமனப்படுத்த முயன்றபடி நர்மதாதேவி காத்திருந்தாள்.. முடியுமா என அவள் ஏங்கிய விவாதம் முடிவுற்றது.. உக்கிரவர்மனின் அருகாமையிலிருந்து எழுந்த மாறவர்மன் அவளைத் தேடி வராமல்.. மரங்களின் அடியில் சிரமப் பரிகாரம் செய்து கொண்டிருந்த வீரர்களை நாடிச் சென்றதில் நர்மதாவின் மனம் அதிர்ந்தது..

'அவ்வளவுதானா..? என்மீதான மாறவர்மனின் காதல் பனித்துளிபோல மறைந்து போய் விட்டதா..? கடமை எதிர்வந்து நின்று அழைத்ததும் காதலை மறந்து விட்டானா..? எனக்கென்று அவன் மனதில் துளியளவு கூட இடமிருந்ததில்லையா..?'

விக்கித்துப் போன நர்மதாவிற்கு உலகமே இருள் மயமாகிவிட்டதைப் போல தோன்றியது.. அவளைச் சுற்றி அவனி சுழன்றதில் வேதனை கொண்ட சிரத்தைப் பிடித்தபடி அவள் இமைமூடி அமர்ந்து விட்டாள்..

எத்துணை நாழிகை அமர்ந்திருந்தாளோ.. அவளின் மலரினும் மெல்லிய தேகத்தின் தோள்களில் வலிமையான இருகரங்கள் அழுந்திப் பதிந்தன..

பரிச்சயமான அந்த ஸ்பரிசத்தில் அவள் ஆனந்தத்துடன் நிமிர்ந்தாள்..

அவளையே ஆழ்ந்து பார்த்தபடி அருகில் அமர்ந்தான் மாறவர்மன்.. கலங்கியிருந்த அவளது வதனத்தை உற்று நோக்கினான்.. கலைந்திருந்த அவளின் கேசத்தைக் கோதி சீர் படுத்தினான்.. மென்மையாக வினவினான்..

"எமது நிலையை தாம் அறியாதவளா..? எதன் பொருட்டு இவ்வேதனை நறுமுகை..?"

விடையளிக்காமல் விம்மினாள் நர்மதாதேவி..

"கூடாது.." கண்டிப்புடன் உரைத்தான் மாறவர்மன்..

"எமை விட்டுப் பிரிவீரோ..?"

"தேகம்தான் தமை விட்டுப் பிரியும்.. என் இதயம் எப்போதும் தம்முடனே இருக்கும்.."

மாறவர்மனின் வார்த்தைகளில்..

"மன்னவரே..!" என்று தேம்பி அவன் மார்பில் சாய்ந்தாள் நர்மதா..

அவளைத் தாங்கிக் கொண்ட மாறவர்மனுக்கும் துயரமாகத்தான் இருந்தது.. ஆயினும்.. தனது துயர் துடைக்க விழைந்து அவன் நர்மதாவுடன் இருந்து விட்டால்.. அவனது நாட்டின் துயரை எவர் துடைப்பார்..?

மனதை பாறையாக்கிக் கொண்டு பேசலானான் அவன்..

"இனியவளே..! தேசத்தை மீட்கும் கடமை என்னைப் பிணைத்துள்ளது.. நான் போர் புரிய சென்றாக வேண்டும்.. சோழர்கள் எரித்த பாண்டியர்களின் பண்டைய கால அரசவையை உருவாக்கியாக வேண்டும்.. எமது தமையன் ஜடாவர்மன் குலசேகரனின் இதயத்தை அறுத்த துயரைத் துடைத்தாக வேண்டும்.. ஏங்கி.. ஏங்கி.. என் தமையன் உயிர் விட்டதற்கான பழியை நான் எடுத்தாக வேண்டும்.. விடை கொடு கண்ணே..!"

எவ்வாறு அவள் விடையளிப்பாள்..?

மாலையிட்டு.. மங்கல நாண் பூட்டிய மணாளன்.. ஓர்தினம் மட்டுமே அவளுடன் உறவாடி வாழ்ந்திருக்கிறான்..

மறுதினமே அவனை விட்டுப் பிரிந்து விடை கொடுத்து வழியனுப்ப வேண்டுமென்றால்.. அந்தப் பேதையின் இதயம் தாங்குமா..?

"நானும் தங்களுடன் வருகிறேன்.."

"எங்கே..?"

"போர்க்களத்திற்கு.."

"இது சகலவிதமான யுத்தங்களையும் உள்ளடக்கிய யுத்தம் நறுமுகை.. கடல்மல்லையில் எனது நிலையைக் கண்டாயல்லவா..? சில தருணங்களில் வெளிப்படுவோம்..

சில தருணங்களில் மறைந்துறைவோம்.. கால் போன போக்கில் மார்க்கத்தை வகுக்காமல் பயணிப்போம்.. இலக்கு ஒன்றே எங்களின் சிந்தையாக இருக்கும்.. அதை அடையும் வரை.. பசி, துயில் மறந்து.. கிட்டியதை உண்டு.. கிடைத்த இடத்தில் இளைப்பாறி ஓடுவோம்.. அந்தப் பயணத்தில் உன்னால் என்னுடன் இணைந்து வர இயலாது நறுமுகை..!"

"ஏன் இயலாது..? பஞ்சணையும் வேண்டேன்.. பால், பழமும் வேண்டேன்.. தங்களின் அருகாமை மட்டுமே கிட்டினால் போதும்.. என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.. அயோத்தியைத் துறந்து ராமர் கானகம் சென்றபோது சீதையையும் உடன் அழைத்துச் செல்ல வில்லையா..?"

நர்மதா தேவி விடாப்பிடியாக விவாதித்துக் கொண்டிருந்தபோது..

"மிக்க நன்று புதல்வனே..!" என்ற குரல் ஒலித்தது..

குரலுக்கு உடைமைக்காரன் உக்கிரவர்மன் என்பதில் நர்மதாதேவி சிரம் கவிழ்ந்து பேசா மடந்தையானாள்.. அவன் அவர்களை சமீபித்து மாறவர்மனைப் பார்த்து..

"நீ ராமன்.. இவள் சீதை.. இதோ இருக்கிறானே.. உன் ஆருயிர் தோழன் இளவழுதி.. இவனை இலட்சுமணனாக உடன் அழைத்துக் கொள்.. ஆரண்ய வாசத்தில் இவளைக் கவர இராவணன் வருவான்..

அவனுடன் போராடுவதில் காலத்தைக் கழி.. உனது விதி இதுவென்றால் எவரால் அதைத் தடுக்க இயலும்..?" என்று கிண்டலுடன் கூறினான்..

"என் மீதுள்ள அபிமானத்தில் இவள் உரைப்பதை கேலி பேச வேண்டாம் தந்தையே..! இவள் அறியாமை மிக்கவள்.." எரிச்சலுடன் கூறினான் மாறவர்மன்..

"அதுதான் உள்ளங்கரத்தின் நெல்லிக்கனியைப் போலத் தெள்ளத் தெளிவாக தெரிகின்றதே.. போராடச் செல்லும் போது இவளையும் முதுகில் கட்டிச் சுமந்து செல்ல வேண்டுமாம்.. நீ போர் புரிவதில் கவனத்தைச் செழுத்துவாயா..? இல்லை.. இவளைக் காவல் புரிவதில் கவனத்தைச் செழுத்துவாயா..?"

உக்கிரவர்மனின் உக்கிரமான வினாவில் அர்த்தம் பொதிந்திருந்ததை உணர்ந்திருந்த மாறவர்மனால் அவனது உரையை மறுத்துப் பேச இயலவில்லை.. அவன் சங்கடமுற்றான்.. நர்மதாவை நோக்கினான்..

"அங்கே ஏன் பார்வையிடுகிறாய்..? என்னைப் பார்.. உன்னை நேசிப்பவள்.. உனது லட்சியத்தையும் நேசிக்க வேண்டாமா..? உதவிக்கரம்தான் நீட்ட இயலாது.. இடையூறாக நிற்காமல் விலகி நின்றாவது தொலைக் கலாமே.." வெறுப்புடன் உரைத்தான் உக்கிரவர்மன்..

"தந்தையே..!" உரத்த குரலில் அதட்டினான் மாறவர்மன்..

"ஹ..!" ஒற்றை எழுத்தில் மாறவர்மனின் சினத்தை அலட்சியப் படுத்தினான் உக்கிரவர்மன்..

"இல்லாத எதையும் நான் உரைக்கவில்லை அப்பனே..! இவள் ஹொய்சாள அரசனின் புதல்விதானே.. இவளது தந்தையை உனக்கான உதவி கேட்டு அணுகச் சொல் பார்க்கலாம்.."

உக்கிரவர்மன் விடுத்த சவாலுக்கு.. இதோ புறப்படுகிறேன்.. எனது தந்தையின் உதவியை பெற்று வருகிறேன் என்று அறைகூவல் விடுக்க இயலாமல் துயரத்துடன் மௌனித்தாள் நர்மதா..

எவ்விதம் கேட்பாள்..? அவளா.. குலோத்துங்க சோழனின் மகளா என்ற வினா முன்னே நின்றால் ஹொய்சாள அரசன் குலோத்துங்க சோழனின் பக்கம் தானே சாய்வான்..

அவளுக்கென்று அவளது தந்தையிடம் என்ன உரிமை இருக்கின்றது..? அவனுடைய புதல்வி அவள் என்ற நாமத்தைத் தவிர..

"இயலாது அல்லவா..?"

அவளைக் கண்ணுற்றபடியே வெறுப்பை உமிழ்ந்தான் உக்கிரவர்மன்..

"நான் வேறு சில மன்னர்களின் புதல்விகளை உனக்கென்று நிச்சயம் செய்திருந்தேன் மாறவர்மா.. அவர்களை நீ மணந்திருந்தால்.. அவர்களின் தந்தை

தேசத்தின் உதவிக்கரம் உனக்காக நீண்டிருக்கும்.. தற்போது ஒன்றும் கேடு நேர்ந்து விடவில்லை.. அவர்களையும் மணம் புரிந்து கொள்.." வெகு இலகுவாக உக்கிரவர்மன் பேசிக் கொண்டே போக..

'என்னது..?!!..' என்ற அதிர்ச்சியை விழிகளில் தேக்கி உறைந்து நின்றாள் நர்மதா..

அவளுக்குப் பின்னரும் மாறவர்மனுக்கு மனையாட்டிகள் வருவார்களா..? அவ்வாறெனில் அவளும் அவளுடைய தாய் தரங்கிணியைப் போல பல ராணிகளில் ஒரு ராணியாக வாழ வேண்டுமா..? மாறவர்மன் அவளுக்கே.. அவளுக்கானவன் என்ற உரிமையுணர்வு அற்றுப் போகுமா..?

அவளது விழிகளில் தெரிந்த வலியில் சிரத்தைப் பிடித்துக் கொண்டான் மாறவர்மன்..

"துயரம் புரியாதீர்கள் தந்தையே..!" என எரிச்சல் பட்டான்..

"இதிலென்ன துயரம் உள்ளது மாறவர்மா..? இதுதானே அரச குலத்தின் மரபு..?"

"அந்த மரபைக் கொண்டு சென்று உடைப்பில் கிடத்துங்கள்.."

"கூடவே என்னையும் கிடத்தி விடுகிறாயா மகனே..?"

"இம்சையைக் கிளப்ப யத்தனிக்க வேண்டாம் தந்தையே.."

"இம்சையப் பற்றி நீ உரைக்கக் கூடாது.. பல ராணிகளை மணப்பதில் உனக்கென்ன பிரச்னை..?"

"நான் நறுமுகைக்கு வாக்களித்துள்ளேன்.."

"இதுவேறா..? என்னவென்று வாக்களித்துத் தொலைத்தாய்..?"

"ராமரைப் போல நானும் ஏகபத்தினி விரதனாக இருப்பேன் என்று வாக்களித்துள்ளேன்.."

"விளங்கி விட்டது.. எதுவரை அவ்விரதத்தை கடைபிடிப்பாய்..?"

"அவளின் இறுதிவரை.."

"மெத்த மகிழ்ச்சி.. உனக்காக உதவிக்கரமும் நீட்டாமல்.. உனக்கான உதவிக் கரங்கள் நீளும் வாய்ப்புக் களையும் தடைகல்லாக மூடி விட்டு உன்னைத் தனித்துப் போராட விட வருகை தந்திருக்கிறாள் இந்த மகராசி..!"

"தந்தையே.."

"அலறாதே.. அம்மா மகராசி..!"

மாறவர்மனை அடக்கிவிட்டு நர்மதாதேவியின் பக்கமாகத் திரும்பி உக்கிரவர்மன் அழைத்ததில்..

"எம்மையா விளித்தீர்கள்..?" என்று குழப்பத்துடன் வினவினாள் நர்மதாதேவி..

"ஆம் தாயே ஆம்..! வேறு மகராசி எவரேனும் இங்கு உள்ளனரா..?" வதனம் சுளித்தான் உக்கிரவர்மன்..

"இல்லை.." தயக்கத்துடன் கூறினாள் நர்மதா..

"அவ்வாறெனில் தாம்தான் மகராசியென்பதை அறிந்து கொள்.. எமது மாறவர்மனின் வாழ்வினிலே வந்தாளே மகராசியென்று தாம்தானே வருகை புரிந்துள்ளாய்..?"

என்னவோ நர்மதா கொலைக்குற்றம் புரிந்து விட்டவளைப் போல உக்கிரவர்மன் உக்கிரம் காட்டிய வேகத்தில் நர்மதாவிற்கு அழுகையே வந்து விட்டது.. அஞ்சி நடுங்கியவளைக் கண்ட மாறவர்மன்..

"த்ச்சு.." என்று அதிருப்தி ஒலியை எழுப்பினான்..

"எதன் பொருட்டு பல்லியைப் போல் சப்தம் எழுப்புகிறாய் மகனே..!"

"எமது தலைவிதியை எண்ணித்தான் பல்லியைப் போல சப்தம் எழுப்புகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.. தற்போது என்ன பணிக்காக இவளை மிரட்டிக் கொண்டுள்ளீர்கள் என்பதனை நான் அறியலாமா..?"

"அதற்கென்ன அப்பனே..! தாராளமாக அறிந்து கொள்.. உனக்கு இல்லாததா..?"

"உங்களது பெருந்தன்மையை கொண்டு சென்று உடப்பில் கிடத்துங்கள்.."

"ஆக.. தம்மை கரம் பிடித்திருக்கும் மகராசியின் மனதை குளிர்விக்க தாம் அனைத்தையும் உடப்பில் கிடத்தும்படி உத்தரவிடுவீர்கள்..?"

"தந்தையே..!"

"தந்தைதான்.. தமது சிறிய தந்தைதான்.. தாம் மணம் புரிந்து அழைத்து வந்திருக்கும் மகராசியிடம் சில வார்த்தைகளை நான் கூறியாக வேண்டும்.. அதுவரை தமது திருவாயை மூடிக் கொண்டிருப்பதே உசிதமானது.."

"யாது கூறப் போகிறீர்கள்..?"

"அதோ.. அந்த அருவிக் கரையில் படர்ந்திருக்கும் சுரைக் கொடியில் காய்த்திருக்கும் சுரைக்காய்க்கு சிறிதளவும் உப்புப் பற்றாது என்று உரைக்கப் போகிறேன்.. உரைக்கலாமல்லவா..?"

உக்கிரவர்மனின் வினாவில் மாறவர்மன் இமைக்காமல் தனது சிறிய தந்தையை நோக்கினான்.. இளவழுதி அவன் புஜங்களைப் பற்றி..

"மாறா..! அவர் யார்..? உனது சிறிய தந்தை தானே.. உனது நலனில் அவருக்கு இல்லாத அக்கறை வேறு எவருக்கு இருக்கப் போகிறது..? உனது மனையாட்டியிடம் இரண்டொரு வார்த்தைகளை கூற வேண்டுமென்று அவர் எண்ணினால் கூறிவிட்டுப் போகட்டுமே.. இதற்கா தடை கூறுவது..?" என்று கடிந்து கொண்டான்..

"எமது நலனில் தந்தைக்கு உள்ள அக்கறையைப் பற்றி நன்கு அறிவேன் இளவழுதி.. ஆயினும்.. நறுமுகையிடம் இவர் அக்கறை காட்டுவார் என கிஞ்சித்தும் நம்ப மாட்டேன்.. கண்டாயல்லவா.. என்னவோ.. குல

வைரியை மிரட்டுவதைப் போல அல்லவா இவளை மிரட்டிக் கொண்டுள்ளார்..? அத்தகைய தவறாக என்ன குற்றத்தை இவள் புரிந்தாள் என்று இவர் சுடுசொற்களால் இவள் யனதை காயப் படுத்துகிறார்...?"

தோழனின் சினத்தில் உள்ள நியாயத்தில் இளவழுதி மௌனம் கொண்டான்.. உக்கிரவர்மனோ.. அதற்கும் நர்மதா தேவிதான் காரணம் என்பதைப் போல அவளை உறுத்துப் பார்த்த வண்ணம் இருந்தான்..

"தமது தந்தை எமக்கும் தந்தை போன்றவர் அரசே..! அவரின் வார்த்தைகளை செவி மடுக்கும் கடமையில் நான் உள்ளேன்.. அவர் கூற நினைத்த வார்த்தைகளைக் கூறட்டும்.. தடையேதும் தாங்கள் உரைக்க வேண்டாம்.." மெல்லிய குரலில் கூறினாள் நர்மதாதேவி..

"நீ அறிய மாட்டாய் நறுமுகை.. இவர் வேண்டும் என்றே உனது மனம் புண்படும் வகையில் உரையாடி வைப்பார்.." மாறவர்மன் மறுத்துப் பேச முனைந்தான்..

"தயவு செய்து என் பொருட்டு தாங்கள் மௌனம் காக்க வேண்டும்.."

இருவிழிகளிலும் தாரை தாரையாக கண்ணீர் வழிய கரங்களைக் குவித்துத் தீனமான குரலில் நர்மதா தேவி வேண்டிக் கொண்ட போது மாறவர்மனால் ஏதும் பேச இயலாமல் போனது..

"தாங்கள் கூற நினைத்ததை கூறலாம்.. செவி மடுக்க யாம் சித்தமாக உள்ளோம்.."

சிரம் கவிழ்ந்த வண்ணம் உரைத்தவளிடம் உக்கிர வர்மனால் உக்கிரம் காட்ட இயல வில்லை.. அதே தருணத்தில் அவளிடம் வாஞ்சையாக உரையாடவும் அவனுக்கு மனம் வரவில்லை..

"தமது காதல் மாறவர்மனுக்கு வேலியிட்டிருக்கிறது."

"அது மலர்வேலி.."

"மலர்வேலியாக இருந்தாலும்.. மலையை விட அதிக திண்மை கொண்டது.. நீ அந்த வேலியை உடைத்தெறிய வேண்டும்.."

"உடைத்தால் உடைபட்டு விடுமளவிற்கு வலிமை குன்றியதல்ல அவ்வேலி.."

"அதன் வலிமையினால் உன் காதலனை.. உனக்கு ங்கலநாண் பூட்டிய மணாளனை வலிமை குன்றியவனாக ாக்கி விடாதே.."

"ஓர் தினமும் அச்செயலை நான் புரிய மாட்டேன்.."

"மெய் அதுவாக இருந்தால்.. மாறவர்மனின் னையாட்டியாக அவனுக்கு வீர திலகமிட்டு விடை கொடு.. அவனுடன் வருகை தருவேனென்று அடம் பிடிக்காதே.. பிடிவாதம் கூடாது.. உனது பிடிவாதத்தால் அவன் தேசத்தை மீட்க வேண்டிய கடமையில் தடுமாறி விடுவான்.. உனது காதல் அவனுக்கு சுமையாக இருந்து

விடக் கூடாது.. மன்னர்களின் மனையாட்டியாக வரும் பெண்களுக்கு தியாக உள்ளம் இருத்தல் வேண்டும்.. அந்த தியாக தீபத்தை உன் உள்ளத்தில் ஏற்று.. மாறவர்மனை உனது காதலில் இருந்து விடுவித்து.. கடமை புரிய போர்க்களத்திற்கு அனுப்பி வை..”

உக்கிரவர்மனின் சொற்கள் உக்கிரத்தை தாங்கி வந்தாலும் கூடவே மெய்யையும் தாங்கி வந்தன.. மாறவர்மனின் போராட்டத்திற்கு தனது காதல் இடையூறை விளைவிக்கக் கூடும் என்ற உண்மை நர்மதாதேவியின் மனதில் படிந்தது.. சினம் கொண்டு பேசினாலும் உக்கிரவர்மன் உண்மையையே பேசுகிறான் என்பதை அவளின் அறிவு உரைத்தது..

நர்மதாதேவி மாறவர்மனின் வதனத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் தெரிந்த ஓரு கோடி உணர்வலைகளில் தடுமாறிப் போனான் மாறவர்மன்..

“நறுமுகை..”

உணர்ச்சி பொங்க அவன் அழைத்துக் கொண்டிருந்த போது.. நர்மதாதேவி உக்கிரவர்மனை நேர் கொண்ட பார்வையுடன் பார்த்து..

“ஆகட்டும்..” என்றாள்..

உக்கிரவர்மனின் புருவங்கள் உயர்ந்தன.. இத்துணை எளிதாக அவள் மாறவர்மனுக்கு விடை கொடுத்து வழியனுப்பி வைக்க சம்மதம் அளித்து விடுவாள் என்று எண்ணியிராத உக்கிரவர்மன் திகைப்படைந்தான்..

"அவ்விதமே விடைகொடுத்து வழியனுப்பி வைக்கிறேன்.. என் காதல் என் மணாளரின் போராட்டத்தை தடை செய்யாது.. தாங்கள் விரும்பியபடி தங்களின் புதல்வரை அழைத்துக் கொண்டு செல்லலாம்.."

அரசகுல மங்கையருக்குரிய கம்பீரத்தோடு கூறினாள் நர்மதா தேவி.. கூடவே

"வெற்றித்திலகமிட்டு வழியனுப்பி வைக்க வேண்டும் அல்லவா..? ஆரத்தித் தட்டை ஆயத்தப் படுத்துகிறேன்.." என்றபடி கொடி இல்லத்தை நோக்கி நடக்க முற்பட்டாள்..

உக்கிரவர்மனும் இளவழுதியும் ஒருவர் வதனத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள..

"நில்.. நறுமுகை.." என்றான் மாறவர்மன்..

அவள் நின்றாள்.. அவன் வதனத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை.. அவ்வாறு அவன் வதனத்தைக் காண நேரிட்டால்.. எங்கே.. அவளின் திட சித்தம்.. கூறாமல் விடைபெற்று விரைந்தேகி விடுமோ என்று அவள் அஞ்சுவதை மாறவர்மன் புரிந்து கொண்டான்..

அவன் மனம் இளக்கம் கொண்டது..

"எங்கே செல்கிறாய்..?" இதமாக வினவினான்..

"தங்களுக்கு வீரத்திலகமிட்டு வெற்றிக்கான ஆரத்தி எடுத்து வழியனுப்புவதற்காக ஆரத்தியை ஆயத்தப்

படுத்தச் செல்கிறேன்..” அவன் வதனம் பார்க்காமல் மறுமொழி பகன்றாள் நர்மதாதேவி..

“தற்போது அதற்கான தேவை என்ன..?”

“தங்களுக்கு விடை கொடுக்க வேண்டாமா..?”

“எனக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு தாம் எங்கு வசிப்பாய்..?”

“இந்த கொடி இல்லத்தில்தான்..”

அவளது உடனடி உரையில் இளவழுதி இரக்கம் கொண்டான்.. உக்கிரவர்மனின் உக்கிரம் கூட சிறிதளவு தணியவா என்று வினவி வைத்தது.. மாறவர்மனைப் பற்றிக் கூறவே வேண்டாம்.. மனம் நைந்து விட்டான் அவன்..

“தனித்து வசிப்பரயா..?” மனம் வலிக்க வினவினான்..

“அல்ல அரசே..! இங்கு அருவி உள்ளது.. அதன் நதிநீர் உள்ளது.. அருவிக்கரையில் கனியளிக்கும் மரங்கள் உள்ளன.. தங்களுடன் நான் வாழ்ந்த வாழ்வின் நினைவுகள் உள்ளன.. இவை அனைத்தும் என்னுடன் இருக்கும் போது.. தனிமை எவ்வாறு அருகில் வரும்..?”

“போதும் நறுமுகை..”

அருகில் உக்கிரவர்மனும்.. இளவழுதியும் நிற்கின்றனர் என்பதைப் பொருட் படுத்தாமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் மாறவர்மன்..

தளிர் கொடியாய் அவளது தேகம் நடுங்கிக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.. அவளது கூந்தலில் வதனம் புதைத்தவன்..

"மங்கல நாண் பூட்டிய மனையாட்டியை கானகத்தின் உச்சத்தில் உள்ள அருவிக்கரையின் கொடி இல்லத்தில் தனித்து விடுமளவிற்கு மாறவர்மனை இதயமற்ற ராட்சசன் என்று நீ எண்ணி விட்டாயா கண்ணே..?" என்று வினவினான்..

"அல்ல அரசே..! எமது தாய், தந்தையின் அனுமதியுடன் தங்களை மணம் புரிந்திருந்தால்.. வெற்றியுடன் தாங்கள் திரும்பி வரும் வரைக்கும் தாயின் அரண்மனையில் காத்திருந்திருப்பேன்.. அவ்வாறன்றி.. அவர்களின் அனுமதியை நாடாமல் தங்களுடன் வந்து விட்டேன்.. தமது இருப்பிடமாக தாங்கள் உணர்த்திய கொடி இல்லம்தானே.. எனது இல்லம்..? ஆதலால்தான்.. தாம் வரும் வரைக்கும் இங்கே காத்திருப்பேன் என்று உரைத்தேன்.. கானகத்தை எண்ணி எனக்கு அச்சமில்லை.. என்னைப் பற்றிய கவலைகள் இன்றி தாம் சென்று வாருங்கள்.."

"மண்டூகமே..!"

உரிமை கொண்ட அவனின் அதட்டலில் உவகை கொண்ட நர்மதாவின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது..

"எமக்கென்று நாடு உண்டு.. மக்கள் உண்டு.. உறவும் உண்டு.. நாடு வேண்டுமானால் மாற்றாரிடம்

அடிமைப் பட்டிருக்கலாம்.. எனது உறவுகளும், மக்களும் அடிமைப்படவில்லை.., எமக்காக எச்செயலையும் புரியும் மன உறுதியுடன் உள்ளார்கள்.. ஆதலினால்.. எமைப் பிரிந்து தாம் கானகத்தில் தனித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.. புறப்படு..”

“எங்கே..?”

“எம் சிறிய தந்தையின் மாளிகைக்கு..”

‘உக்கிரவர்மனின் அரண்மனைக்கா..?’

நர்மதாவின் பீதி நிரம்பிய விழிகளைக் கண்ட மாறவர்மன்..

‘எப்படி மிரட்சி கொள்ள வைத்திருக்கிறார்..!..’ என்று உக்கிரவர்மனின் மீது சினம் கொண்டான்.. அந்த சினத்தோடு உக்கிரவர்மனை முறைத்தபடி..

“கவலை கொள்ள வேண்டாம்.. எமது சிறிய தந்தை மாளிகையில் தங்க மாட்டார்.. என்னுடன் போர்க்களத்திற்கு வந்து விடுவார்..” என்றான்..

அவனது வார்த்தைகளில் நிம்மதி கொண்ட நர்மதாவின் வதனத்தைக் காணும்படி உக்கிரவர்மனிடம் சமிக்ஞை செய்தான்... உக்கிரவர்மனுக்கு இன்னமும் அதிகமாக உக்கிரம் ஏறிவிட அவன் நகர்ந்து விட்டான்..

சிரமப் பரிகாரத்தை முடித்துக் கொண்ட வீரர்களுடன்.. அருவிக் கரையில் அணி வகுத்து அமர்ந்து சமைக்கப் பட்ட உணவு வகைகளை உண்டான் மாறவர்மன்.. நர்மதா தேவியையும் உண்ண வைத்தான்.. கொடி இல்லத்தில் இருந்த பெட்டகங்கள் குதிரைகளில்

ஏற்றப்பட்டன.. அருவிக் கரையை பிரியும் ஏக்கத்தோடு நின்றிருந்த நர்மதா தேவியின் இடையினில் கரம் கொடுத்துத் தூக்கி தனது புரவியில் அமர வைத்துக் கொண்டான் மாறவர்மன்.. அவனது உரிமை கலந்த அக்கறையில் நர்மதாதேவி துன்பம் கலந்த இன்பம் கொண்டாள்..

புரவிகள் பறந்தன.. கானகத்தை விட்டு வெளியேறி வெகு துரிதமாக ராஜபாட்டையில் விரைந்தன.. வழியினில் தென்பட்ட நகரத்தில் சற்று நாழிகை நின்றன.. மாறவர்மன் தனது மனையாட்டியை பிரிந்து செல்லும் பொழுது நெருங்கி யிட்டதை உணர்ந்தான்..

நகரத்தின் மையத்திலிருந்த உக்கிரவர்ம்மனின் ாளிகையில் மாறவர்மனுக்கும், நர்மதா தேவிக்கும் ஆரத்தியுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.. நர்மதா தேவியின் வயதை ஒட்டிய ஒருபெண் உரிமையுடன் ாறவர்மனின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்..

"இவள்தான் எனது தங்கை மேகலை.." என்று நர்மதா தேவிக்கு அந்த மங்கையை அறிமுகம் செய்து வைத்தான் ாறவர்மன்..

ஒட்டாத பார்வை பார்க்கும் அவளிடம் எவ்வாறு ஒட்டி ஙறவாடுவது என்ற மலைப்புடன் சிரத்தை அசைத்தாள் நர்மதா..

"இளவழுதியை மணம் புரிய காத்திருப்பவளும் ஙூடா.." மாறவர்மனின் உரத்த நகைப்பில் அவளின் ஒட்டாத ாார்வை விலகியது..

"கேலி புரிய வேண்டாம் அண்ணா.." என்று சிணுங்கினாள் மேகலை..

மாறவர்மன் புறப்பட ஆயத்தமாவதை உணர்ந்த நர்மதாதேவியின் மனம் பதறியது.. மாறவர்மனுடன் அவள் தனித்துப் பேச வகை செய்து மேகலை வெளியே சென்று விட்டாள்..

"கலங்காதே கண்ணே.." நர்மதாவின் கண்ணீர் துளிகளை துடைத்து விட்டான் மாறவர்மன்..

"சென்று வாருங்கள்.. நம் நாட்டை வென்று வாருங்கள்.." கண்ணீருடன் விடை கொடுத்தாள் நர்மதா தேவி..

"உன்னுடன் வாழ்ந்த ஓர் தினம் எனக்கு போராடுவதற்கான உயிர்ப்பைக் கொடுக்கும் தேவி..! என் நாட்டை மீட்டு வருவேன்.. உன்னை எனது பட்டத்து ராணியாக்கி அரியணை ஏறுவேன்.."

"தம் மனமென்னும் அரியணை கிட்டினால் போதும்.. வேறேதும் எனக்கு வேண்டாம்.. எம் நினைவு தம் மனதிலிருத்தல் வேண்டும்.."

நர்மதா தேவியின் விழி நீருக்கு இடையே மாறவர்மன்.. விடைபெற்று புரவியில் ஏறி விரைந்து விட்டான்.. புள்ளியாகி கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டவனைக் காணும் நாள் என்று வரும் என்று மனம் பதைத்தாள் நர்மதா..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



20

காலம் காலமாய் உன்னடி தேடும்..
காதல் உணர்வுகள் என்றுனைச் சேரும்..?

"உங்களுக்கு அந்தக்குறை வேற இருக்கா..?"

ஒரு மாதிரியான குரலில் அனுராதா கேட்டு வைத்ததும் 'திக்'கென்று ஆகி விட்டது பிரதாப்புக்கு..

'இதில் என்ன பொடி வைச்சிருக்காளோ..?'

மனிதர் பாவம் அரண்டு போனார்.. மாலையிலிருந்து அனுராதாவுடன் நடத்திய துவந்த யுத்தம் முடிவு பெற்று விட்டதா.. இல்லை.. இக்கன்னா போட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கிறதா என்று பயந்து விட்டார்..

"ஏண்டி.. நல்லாத்தான போய்க்கிட்டு இருக்கு..?"

"கிரிக்கெட்டையா சொல்கிறிங்க..? அதுக்கென்ன.. நாம ஜெயிக்கலைன்னாலும்.. மத்த மகராசன்கள் ஜெயிக்கிறாங்களே.. நல்லாத்தான் போய்க்கிட்டு இருக்கு.."

அனுராதா டிவியைப் பார்த்தபடி சொல்ல வெறுத்துப் போய் விட்டார் பிரதாப்.. இப்படியா ஒருத்தி எத்தைத் தின்னா பித்தம் தெளியும்ன்னு அவரை கதறடிப்பாள்..?

"நான் கிரிக்கெட்ட சொல்லலை.."

"அதைப் பத்தி தெரிஞ்சாத்தான் சொல்வீங்க.."

"இப்ப எனக்கு ஒரு விசயம் தெளிவா தெரிஞ்சாகனும்.."

"தெளிவுக்கும் உங்களுக்கும்தான் ரொம்ப துரமாச்சே..."

"வேணாண்டி அனு.. விட்டிரு.. தாங்க மாட்டேன்.."

பிரதாப்பின் கெஞ்சலில் போனால் போகிறதென்று பேச்சை நிறுத்திய அனுராதா டிவியை விட்டு விட்டு சுவர்கடிகாரத்தை பார்த்து வைத்தாள்.. அதைப் பார்க்காத பிரதாப்..

"நான் என்னத்தடி குறை பட்டேன்..?" என்று ஆதங்கப்பட்டார்..

"பின்னே..? யது இன்னும் வேலை முடிஞ்சு வீட்டுக்குத் திரும்பல.. அவன் வாரவரைக்கும் மழை வந்திரக் கூடாது சாமின்னு நான் ஊரில இருக்கிற அத்தனை கடவுள்கிட்டயும் வேண்டிக்கிட்டு இருக்கேன்.. நீங்க என்னடான்னா மழை வரலையேன்னு வருத்தப் படறிங்க.. அப்ப உங்க மனசில என் மகனை நனைக்க மழை வரலையேங்கிற குறை இருக்குன்னுதான அர்த்தம்..?"

"அடிப்பாவி..! நீ இந்த ஆங்கிளில யோசிக்கிறயா..?"

"எல்லா அம்மாக்களும் பிள்ளைகளைப் பத்தின ஆங்கிளிலதான் யோசிப்பாங்க.. அப்பாக்கள்தான் அடுத்து வீட்டு ஆண்டியோட நினைப்பைக் கேட்டு அந்த ஆங்கிளில யோசிச்சுப் பார்ப்பாங்க.."

"அப்பாவும், அம்மாவும் சரி.. என்ன அலுவலுக்காக அடுத்த வீட்டு ஆண்ட்டியோட ஆங்கிளப் பத்திப் பேசற..?"

"ஹலோ..! அடுத்த வீட்டு ஆண்டியோட நினப்பக் கேட்டு அந்த ஆங்கிளில யோசிப்பாங்கன்னுதான் இங்கே சொன்னோம்.. டைரக்டா அடுத்த வீட்டு ஆண்டிக்கு தோதா ஆங்கிள் வைக்கச் சொல்லலை.."

அனுராதா மடக்கியதில்..

"நீ இருக்கியே.." என்று வெற்றிகரமாக ஜகா வாங்கினார் பிரதாப்..

"அம்ம்து.." என்றபடி செல்போனை எடுத்து அனுராதா யது நந்தனுக்கு போன் போட்டாள்..

"எங்கடா இருக்க..? என்ன..? வந்துக்கிட்டு இருக்கியா..? மழை வரும் போல இருக்கேடா.. என்ன..? வந்தா வரட்டுமா..? ஊருக்கு நல்லதா..? உனக்கு நல்லதான்னு பாருடா.. மழையில நனைஞ்சா உனக்கு காய்ச்சல் வந்து தொலைக்குமே.. என்னது..? முதல்ல நான் போனை வைச்சுத் தொலைக்கவா..? ஏண்டா..? ஈ.சி.ஆர் ரோட்டில வண்டி ஓட்டிக்கிட்டு வர்றவன் கிட்ட செல்போனில கூப்பிட்டு தொணதொணக்கக் கூடாதா..? நேரம்டா.. உன்னைப் பத்திக் கவலைப் பட்டு மனசு கேக்காம போனை போட்டேன் பாரு.. என்னைச் சொல்லனும்.. என்னது..? இப்ப நான் போனை வைக்கலைன்னா நீ போனைத் தூக்கிப் போட்டிருவியா..? டே.. டேய்..! காஸ்ட்லி போன்டா.. இப்பத்தான்

வாங்கியிருக்க.. ஒரு மாச சம்பளத்தை ஒட்டு மொத்தமா சாப்பிட்ட போனுடா.. என்மேல இருக்கிற கோபத்தில விட்டு விளாசித் தொலைச்சிராதே.. நான் போனை வைச்சிடறேன்..”

அனுராதா போனை அனைத்து விட்டு நிமிர்ந்தாள்..

“வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு..” என்றார் பிரதாப்..

“என்னது..?” அனுராதா புருவங்களை நெரித்தாள்..

“சினிமாப் பேரைச் சொன்னேன்டி..” சமாளித்தார் பிரதாப்..

“அது வல்லவனுக்கு வல்லவன்..! ஐயா சாடை பேசறிங்களாக்கும்.. யாருகிட்ட..?” அனுராதா கழுத்தை வெட்டிய வெட்டில் அவருக்கு கழுத்து சுளுக்கி விடுமோ என்று பயந்து போனார் பிரதாப்..

சுளுக்குகிற கழுத்தா அனுராதாவின் கழுத்து..?



21

உன்னுடமை நானென்று.. உன் அடிமில் வீழ்ந்து விட்டேன்..

“விண்ணுக்கும்.. மண்ணுக்கும் எட்டாத தூரமென்று எத்துணை தரம்தான் உரைப்பது..?”

மேகலையின் நிஷ்டூர மொழியில் மனம் வலிக்க மௌனமாக இருந்தாள் நர்மதா தேவி..

இதுபோன்ற மேகலையின் மொழிகள் அவளுக்குப் புதிதல்ல.. அடிக்கடி இவ்வார்த்தைகளை மேகலை உதிர்க்க எதிர் உரையை உரைக்காமல் கேட்டுக் கொள்வாள் நர்மதாதேவி..

"தினங்கள் ஓடி விட்டன.. எனது தமையன் பாண்டிய நாட்டை மீட்டு விட்டார்.. காஞ்சியை கைப் பற்றி விட்டார்.. இருந்தும் பயன் என்ன..? மீட்ட நாட்டை எங்கள் சமிருந்து பறித்து விட முற்படும் சோழர்கள் உனது தந்தையின் உதவியை நாடியுள்ளார்களாமே.. எமது தமையன பணடைய பாண்டிய நாடடின அரசவையை ருவாக்கி விட்டாலும் மனநிம்மதியுடன் அரியணையில் ர்தினம் கூட அமர இயலவில்லையே.." வெறுப்புடன் சினாள் மேகலை..

அன்று கண்ட மாறவர்மனை மறுபடியும் ண இயலாமல் மாற்றாரின் மாளிகையில் வேண்டாத ிருந்தினராக வசித்துக் கொண்டிருக்கும் நர்மதா தேவியின் ணம் தன் காதலனைக் காணத் துடித்தது..

"எம் தமையனின் தோழனோ.. தாம்பூலம் மாற்றி.. ன்னார்க்கு இன்னார்தான் என்று நிச்சயித்தவளை ணம் முடிக்க வருகை தராமல் வாள்முனைக்கு லையிட்டவரைப் போல என் தமையனின் பின்னே ஓடிக் ொண்டிருக்கிறார்.." மேகலை புலம்பினாள்..

"இளம்வழுதி அண்ணாவுக்கு செய்தி அனுப்பலாமே.."

"அனுப்பி என்ன பயன்..? நாட்டில் அமைதி நிலவிய பின்னர்தான் மண மாலையை சூட்ட இயலும் என்று லிகிதம் வரைந்து புறாவின் காலில் பிணைத்து அனுப்பி வைப்பார்.. என்னவோ.. இவரின் புஜங்களில்தான் பாண்டிய நாடே நின்று கொண்டிருப்பதைப் போன்ற கர்மசிரத்தை.. மற்றவர்கள் இவ்விதம்தான் எண்ணுகின்றனரா..?"

அவள் மறைமுகமாக மாறவர்மனைக் குறிப்பிடு கிறாள் என்பதைப் புரிந்தும் புரியாதவளைப் போல மனம் துடிக்க.. வேறு திக்கில் நோக்கினாள் நர்மதா தேவி..

அங்கே ஓர் புரவிவீரன் விரைந்து வந்து கொண்டிருந்தான்..

'எவராக இருக்கும்..'

மாறவர்மனிடமிருந்து செய்தி வரக்கூடுமோ என்று அவளது மனம் ஏங்கியது.. அன்றைய தினம் வரை அவனிடமிருந்து அவளுக்கு தனிப்பட்ட லிகிதம் ஏதும் வந்திடவில்லை.. பொதுவான லிகிதத்தை மேகலைதான் வாசிப்பாள்.. வாசித்த லிகிதத்தை அவள் அறைக்கு எடுத்துச் சென்று விடுவாள்..

'அவர் உரைத்ததையாவது காணலாமே..'

இயலாமையில் நர்மதாவின் மனம் துடிக்கும்.. அதை அறிந்தும் அறியாதவளைப் போல அலட்சியப் படுத்தி விடுவாள் மேகலை..

"காஞ்சியைக் கைப்பற்ற சென்றவர் கடல் மல்லையில் சந்தித்த பெண்ணை மறுதினமே மணம் முடித்து.. மங்கல நாண் பூட்டி.. அருவிக்கரைக்கு அழைத்துச் சென்று விட்டார்.. என்னவருக்கு அந்தச் சாதுர்யமெல்லாம் கரம் கூடி வருகை தந்து தொலைக்காது.. எனக்கென்று இப்படி ஓர் காதலர் வாய்த்திருக்கிறார்."

மேகலையின் பெருமூச்சில்.. அவ்வாறு மாலையிட்ட மணாளருடன் ஓர்தினம்தான் கூடி வாழ்ந்தேன்.. என்று உரைக்க இயலாமல் மனதுக்குள் மறுகுவாள் நர்மதா தேவி..

பிரிந்திருந்த அந்த தினங்களில் அவள் மாறவர்மனை நினையாத தினம் இல்லை..

"ஹொய்சாள நாட்டின் அரசனை எதிர்கொள்ள வலுவான அரசனின் துணை தேவை.. எங்கே..? எமது கணவன்தான் அத்தகைய மன்னர்களின் புதல்விகளை மணம் புரிய மறுத்துரைக்கிறாரே.."

மேகலையின் குத்தல் மொழியில் நர்மதா தேவியின் மனம் புளகாங்கிதம் கொண்டது..

'அவன் என்னவன்.. எனக்கு மட்டும் உடைமை யானவன்..'

நினைத்தாலே மனம் இனிக்கும் என்பது இதுதானோ..?

சமீபித்து விட்ட புரவி வீரனை அப்போதுதான் கண்ணுற்ற மேகலை பரபரப்புடன்..

"தமையனிடமிருந்து செய்தி வந்திருக்கிறது.." என்றாள்..

அவளைப் போல வெளிப்படையாக பரபரப்பைக் காட்ட இயலாமல் மனதை அடக்க முயன்றபடி மாறவர்மனின் செய்தியை செவி மடுக்கக் காத்திருந்தாள் நர்மதாதேவி..

புரவியிலிருந்து குதித்த வீரன் மேகலைக்கும்.. நர்மதா தேவிக்கும் சிரம் தாழ்த்தி வந்தனம் தெரிவித்தான்.

"இளவரசி வாழ்க..! பாண்டிமாதேவி வாழ்க..!"

"நாங்கள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே வருகை புரிந்த விவரத்தைக் கூறு.."

"அரசர் செய்தி அனுப்பியுள்ளார்.."

"அதை உரைக்காமல் அடைமொழிகளை உரைத்து காலவிரயம் செய்கின்றாயே.. லிகிதத்தைக் கொடு.."

நர்மதாதேவியை பாண்டிமாதேவி என்று அந்த புரவிவீரன் வந்தனம் செய்ததில் கடுப்புற்ற மேகலையிடம் மாறவர்மன் வரைந்து அனுப்பி வைத்திருந்த நிருபத்தை நீட்டினான் வீரன்..

விரித்து வாசித்தவளின் வதனம் மலர்ந்தது..

"அம்மா.. கேட்டாயா சேதியை.."

துள்ளலுடன் அவள் தாயைத் தேடி ஓடி விட மாறவர்மன் அனுப்பி வைத்திருக்கும் செய்தி யாதென்று

அறியாமல் ஏங்கி நின்ற நர்மதா தேவியை இரக்கத்துடன் பார்த்தான் அந்த வீரன்..

'நான் பாண்டிய நாட்டின் மகாராணியாம்..'

அந்த வீரனின் காருண்யப் பார்வையில் மனம் நைந்து போனாள் நர்மதா தேவி..

அவளால் என்ன செய்ய இயலும்..? போராடி தனது நாய்நாட்டை மீட்டிருக்கிறான் அவளது காதல் கணவன்.. அந்தப் போராட்டத்தை ஒன்றும் இல்லாததாக மாற்றிவிட நர்மதாவின் தந்தையான ஹொய்சாள அரசன் படையுடன் புறப்பட்டிருக்கிறார்.. இப்பேற்பட்ட சூழலில் எதிரியின் தலைவிக்கு என்ன மரியாதை கிட்டி விடும்..?

"மன்னர் பொன் அமராவதிக் கரையில் முகாமிட்டுள்ளார் மகாராணி.. சிதம்பரம் கோவிலில் துலாபாரம் காணிக்கை செழுத்துவதாக வேண்டியுள்ளாராம்.. அந்த வேண்டுதலை நிறைவேற்றும்போது தாங்கள் அருகிலிருக்க வேண்டும் என்பதால் தங்களை புறப்பட்டு வரும்படி லிகிதம் அனுப்பியுள்ளார் பாண்டிமாதேவி.. அத்துடன்.."

"அத்துடன்..?"

"இளவரசியாருக்கும்.. படைத் தலைவருக்கும்.. காஞ்சியிலே மணவிழா நடத்த உத்தேசித்துள்ளார் மகாராணி.."

நர்மதாதேவியின் வதனம் விகசித்தது.. அவள் நன்றியுணர்வுடன் தனது கழுத்தில் கிடந்த பொன் ஆபரணம் ஒன்றைக் கழற்றி புரவி வீரனிடம் அளித்தாள்..

"மகாராணி..?" அவன் தயங்கினான்..

"பெற்றுக் கொள் வீரனே..! நீண்டதினங்களின் காத்திருப்புக்கு பின்னர் எனது மணாளரின் வதனம் பார்க்கும் பேறு கிட்டியிருப்பதை உரைத்திருக்கிறாய்... என் மனம் மகிழ்வு கொண்டுள்ளது.. எனது பரிசை எடுத்துச் செல்.."

புரவி வீரன் சிரம் தாழ்த்தியபடியே பின் வாங்கி புரவியில் ஏறி விரைந்தான்.. நர்மதா தேவி மாளிகைக்குள் சென்றாள்..

"யாரங்கே.. பெட்டகங்களை ஆயத்தப் படுத்துங்கள்.. ஆடைகளை அழகுற அடுக்குங்கள். ஆபரணங்களை பேழைகளில் பத்திரப் படுத்துங்கள்.. வெகு விரைவில் பயணப் பட்டாக வேண்டும்.."

மேகலையின் குரலில் தொனித்த உற்சாகத்தில் பங்குபெற நர்மதா தேவியின் மனம் விழைந்தது.. அது இயலாத ஒன்று என்பதில் நீலவேணியின் வதனம் நோக்கினாள்..

"வா.. மகளே.." வாய் நிறைய புன்னகையுடன் அவள் அழைத்தாள்..

உக்கிரிவர்மனுக்கு மனையாட்டியாகவும்.. மேகலைக்கு அன்னையாகவும் இருப்பவளிடம் எவ்வாறு இத்தகைய தோழமை உணர்வும்.. அன்பும்.. பாசமும்.. காருண்யமும் குடி கொண்டன என்ற வியப்புடன் அவள் அருகில் சென்றாள் நர்மதாதேவி..

"உன் காத்திருப்புக்கு பலன் கிட்டி விட்டது நறுமுகை.. மாறவர்மன் உன்னை அழைத்திருக்கிறான்.."

"எனது திருமண விழாவை நிகழ்த்த தமையன் உத்தேசித்துள்ளதை மறந்து விட்டாயா அம்மா..? அதன் பொருட்டே தமையன் மற்றவர்களையும் அழைத்திருக்க வேண்டும்.."

மேகலையின் உதாசீனத்தில்..

'நான் மற்றவளா..?' என்று நர்மதாவின் மனம் வேதனை கொண்டது..

"விட்டு விடு மகளே..!"

நீலவேணியின் தேற்றுதலில் நைந்த புன்முறு வலைப் பூத்தவள் தனது ஆடை ஆபரணங்களை சேகரித்து வைக்கச் சென்றாள்..

சற்றுப் பொழுதில் முன்னும்.. பின்னும்.. படைவீரர்கள் புடைசூழ.. அந்த ரதங்கள் மாளிகையின் வாயிலில் இருந்து கிளம்பின.. மேகலையும் நீல வேணியும் ஒரு ரதத்தில் அமர்ந்திருக்க.. நர்மதா தேவியும் தோழியும் மற்றொரு ரதத்தில் இருந்தார்கள்..

நீண்ட நெடும் பயணத்தின் முடிவில் பொன் அமராவதிக்கரையில் முகாமிட்டிருந்த மாறவர்மனிடம் சென்று சேர்ந்தார்கள்..

மனமெல்லாம் உருக.. மாறவர்மனைத் துழாவிய நர்மதாவுக்கு அவன் சிதம்பரம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் சேதி கிட்டியது..

"தங்களையும் ஆயத்தமாகும்படி மன்னர் உத்தர விட்டார் மகாராணி.." சேடிப் பெண் தெரிவித்தாள்..

உக்கிரவர்மனின் மாளிகையைப் போல் அல்லாமல் அங்கே நர்மதா தேவிக்கு மகாராணிக்குரிய அனைத்து மரியாதைகளும் கிட்டின.. அவளை முன்னிறுத்தி கிட்டிய முதல் மரியாதைகளில் மேகலை வெகுண்டாள்..

"இது மாறவர்மன் இருக்கும் இடம்.."

நீலவேணியின் பொருள் பொதிந்த புன்னகையில் பொறுத்துப் போக வேண்டிய சூழலை உணர்ந்தாள் மேகலை..

மாறவர்மனின் மகாராணியாக சிதம்பரம் கோவிலுக்குச் சென்றவளை எதிர் கொண்டழைத்துக் கொண்டான் மாறவர்மன்..

"அரசே..!"

நீரில் ததும்பிய விழிகளுடன் பேச இயலாமல் அவள் தவித்தாள்.. அவள் விழிகளை ஊடுறுவிப் பார்த்தபடி அவளது கரத்தை இறுக்கிப் பற்றிக் கொண்டு கோவிலுக்குள் அழைத்துச் சென்றான் அவன்..

இறுக்கிப் பிணைந்த கரங்கள் ஆயிரம் சேதிகளை பரிமாறிக் கொண்டன.. மனையாட்டியாக அவளை அருகில் நிறுத்தி.. மன்னனாக அவன் சிதம்பரம் நடராஜரின் சன்னதியில் துலாபாரம் காணிக்கை செழுத்தினான்..

அவனுடைய அரசியாக இணைந்து நடந்த நர்மதாவின் மனது பெருமிதத்தில் மூழ்கியது.. அன்றே

அவர்கள் காஞ்சிக்குப் பயணமானார்கள்.. அங்கே ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் மாறவர்மனின் மகாராணியாக நின்று ஈசனை வேண்டிக் கொண்டாள் நர்மதாதேவி..

இளம் வழுதிக்கும் மேகலைக்கும் திருமணவிழா நடைபெற்றது.. மணவிழாவில் மன்னர் மாறவர்மனின் மகாராணியாக பவனி வந்தாள் நர்மதாதேவி..

இளம்வழுதியும்.. மேகலையும்.. உக்கிரவர்மனின் மாளிகைக்குப் பயணப்பட்டு விட.. மாறவர்மனுடன் காஞ்சியில் தேங்கினாள் நர்மதாதேவி.. மறுத்துரைக்க முற்பட்ட உக்கிரவர்மன் மனதில் எதைச் சிந்தித்தானோ.. நர்மதா தேவியின் இருப்பை ஆட்சேபிக்காமல் வாளாவிருந்து விட்டான்..

நீண்டதினங்களுக்குப் பின்னர் ஒன்று சேர்ந்த வேகமும்.. தாபமும்.. சதிபதிகளிடம் இருந்ததில் அவர்கள் துயிலைத் துறந்து இரவு முழுவதும் கூடிக் களித்தார்கள்.. பிரிந்திருந்த நாள்களை பேசித் தீர்த்துக் கொண்டார்கள்..

விடியலின் அருகாமையில் மாற்வர்மனின் மார்பில் வதனம் புதைத்து நர்மதா தேவி இமை செறுக துயில் கொள்ள யத்தனித்த பொழுதில் மாறவர்மனைத் தேடி அந்தச் சேதி வந்து சேர்ந்தது..

"காஞ்சியை ஹொய்சாள நாட்டு மன்னர் படைகளுடன் முற்றுகையிட்டு விட்டார் அரசே.."

மாறவர்மன் துரிதமாக எழுந்து போர் முனைக்கு விரைந்தான்.. நர்மதா தேவி அசைவற்று நின்று விட்டாள்.

'இவர் எனது மணாளர் என்ற எண்ணம் தமது மனதில் கிஞ்சித்தும் துளிர்க்கவில்லையா தந்தையே..? சோழர்குலம் மட்டுமே தங்களுக்கு பந்தமா..? தரங்கிணியின் மணி வயிற்றில் உதித்த இந்த நர்மதா தேவி தங்களுக்கு பந்தமில்லையா..?'

அசைவற்று நின்றவள் ஓர் முடிவுடன் மாறவர்மனின் உடைகளை அணிந்து.. ஆண்மகனைப் போல மாறுவேடம் பூண்டாள்.. அங்கிருந்த புரவிகளில் ஒன்றில் ஏறியவள் போர்க்களத்தை நோக்கி விரைந்தாள்..

அவளுக்குத் தெரியும்.. குலோத்துங்கன் வயதானவன்.. நாற்பதாண்டு காலம் ஆட்சி செய்த முதுமை கொண்டவன்.. ஹொய்சாள மன்னன் அப்படியல்ல.. ஆரோக்கியமான தேகமும்.. வேகமும் கொண்டவன்..

அவனுடன் போராடி வெல்வது என்பது கடினமான ஒன்று..

மாறவர்மன் வீரம் மிக்கவன்.. ஹொய்சாள அரசனை வெல்லும் வல்லமை கொண்டவன்.. ஆயினும் மாறவர்மனின் படைபலத்தை விட சோழர் படையுடன் இணைந்த ஹொய்சாள மன்னனின் படை பலம் மிகுதியானது..

நர்மதா தேவி போர்க்களத்திற்குச் சென்ற போது ஹொய்சாள அரசனின் கரம் ஓங்கியிருந்தது.. மாறவர்மனை

சிறை பிடிக்கும் நோக்கத்தோடு அவன் அருகில் வரும் போது.. மாறவர்மனுக்கும்.. ஹொய்சாள மன்னனுக்கும் இடையில் நர்மதாவின் புரவி புகுந்தது..

"என்னை வென்ற பின்னர் எனது மன்னரை அணுகுவாய்.."

நர்மதா கரகரத்த குரலில் அறைகூவல் விடுத்தாள்.. ஹொய்சாள அரசன் வல்லாள தேவன் ஆக்ரோசத்துடன் நர்மதாவை நோக்கிச் சீறிப் பாய்ந்தான்.. நர்மதாவின் புரவி.. போர்க்களத்தில் இருந்து விலகி ஓடியது.. ஹொய்சாள அரசன் அவளைப் பின் தொடர்ந்த தருணத்தை மாறவர்மன் பயன்படுத்திக் கொண்டான்..

மன்னரில்லாத படைகளை முறியடிப்பது அவனுக்கு எளிதானதாக இருந்தது.. ஹொய்சாள அரசனை திசை திருப்பி அழைத்துச் சென்ற புரவி வீரன் எவர் என்ற சிந்தனையே அவன் மனதை ஆக்ரமித்திருந்தது..

ஆணுடையில் இருந்த நர்மதா தேவியைத் துரத்திச் சென்ற ஹொய்சாள அரசன் வீசிய வாள் நர்மதாவின் வயிற்றில் குறி பார்த்து ஊடுறுவியது..

"தந்தையே.."

நர்மதா அலறியபடி மண்ணில் சரிய.. ஹொய்சாள மன்னன் துணுக்குற்று புரவியை விட்டுக் குதித்து குருதி வெள்ளத்தில் மிதந்தவளை அணுகினான்.. அவளது வதனம் நோக்கியவனின் விழிகள் அதிர்ச்சியை பிரதிபலித்தன..

"நர்மதா..?"

"ஆம்.. நான் நர்மதா தேவி என்னும் நாமம் கொண்டவள்தான்.. ஹொய்சாள அரசரின் புதல்வி என்று அறியப்பட்டவள்தான்.. எனது வதனம் தங்களுக்கு நினைவில் உள்ளதா தந்தையே..?"

"மகளே..!"

வல்லாள தேவன் மண்டியிட்டு அமர்ந்து நர்மதாவை மடியில் ஏந்திக் கொண்டான்..

"தமது மாமனுக்கு கடமையாற்ற எனது மணாளருடன் போர் புரிய வந்துள்ளீர்களே.. தாம் எனது மணவாளருக்கு மாமன் ஆவிர்கள்.. அதற்குரிய கடமையை ஆற்றி விட்டீர்களா..?"

"மகளே..!"

"பட்ட மகிஷியின் பிள்ளைகள்தான் தமக்கு உறவு.. மற்ற ராணிகளின் பிள்ளைகள் தமது செல்வங்களை ஆண்டால் போதும் என்று விலக்கி வைத்தீர்களே.. யாமும் தங்களது குருதியில் உதித்தவள்தான் என்ற எண்ணம் ஏன் தமது சிந்தையில் தோன்றவில்லை..?"

"நர்மதா..!"

"தந்தையே..! மாறவர்மன் என்னை மட்டுமே என் இறுதிவரை மனையாட்டியாக எண்ணுவேன் என்ற வாக்கை எமக்களித்தார்... பல ராணிகளுள் ஒரு ராணியாக இல்லாமல் அவரது மகாராணியாக எனை

வாழ வைத்தார்.. என் பொருட்டு அவரை விட்டு விலகிச் செல்லுங்கள்..”

“தம்மை இந்நிலையில் விட்டு விட்டுச் செல்வதா..?”

“இறுதி மணித்துளிகளில் இருக்கிறேன் தந்தையே..! என்னவரை என்னருகே வர விட்டு விலகிச் செல்லுங்கள்.. எமது தாய் தங்களுடைய ராணியாக வாழ்ந்தாலும் தாம் ஒருவள் மட்டுமே தங்களின் ராணியென்று வாழவில்லை.. அத்தகைய உயரிய கௌவத்தை மாறவர்மர் எமக்களித்தார்.. கரம் ஏந்தி யாசிக்கிறேன்.. எமக்காக அவருடன் போர் புரியாமல் நீங்கிச் செல்லுங்கள்..”

புரவிகளின் குளம்படியோசையில் ஹொய்சால அரசன் தனது புதல்வியை மண்ணில் கிடத்தினான்.. புரவியில் தாவி ஏறியவன்..

“சென்று வருகிறேன் மகளே..! வரும் காலத்தில் உனது மணாளருடன் போர் புரிய நேர்ந்தாலும் அவரது இன்னுயிருக்கு எவ்விதமான இன்னலும் விளைவிக்க மாட்டேன் என்ற வாக்குறுதியை உனக்கு அளிக்கிறேன்..” என்று கூறிவிட்டு புரவியில் பறந்து விட்டான்..

வயிற்றில் பாய்ச்சப் பட்டிருந்த வாளை இறுக்கிப் பிடித்தபடி வேதனையுடன் விழி திறந்து நோக்கினாள் நர்மதா.. அவளைச் சுற்றி நின்ற புரவிகளில் மாறவர்மனும் உக்கிரவர்மனும் இருந்தனர்..

“நறுமுகை..”

மாறவர்மன் தரைக்குத் தாவினான்.. தனது உயிரில் கலந்த காதலியை கரங்களில் ஏந்தி பரிதவித்தான்..

"தந்தையே..! வைத்தியரை வரவழையுங்கள்.."

"வேண்டாம்.. அதில் பலனேதும் இருக்காது.."

நர்மதா தடுத்து விட்டாள்.. அவளருகில் மண்டியிட்டு அமர்ந்த உக்கிரவர்மனை வேதனை முறுவலுடன் நோக்கினாள்..

"எமது கடமையை ஆற்றி விட்டேன் தந்தையே.. எமது தந்தையான ஹொய்சாள அரசரிடம் வாக்குக் கேட்டேன்.. அவரும் வாக்களித்து விட்டு விலகிச் சென்றிருக்கிறார்.. இந்தப் போரை அவர் தொடர மாட்டார்.. வரும் காலத்தில் போர் தொடுத்தாலும் என் மணாளரின் இன்னுயிருக்கு தீங்கிழைக்க மாட்டார்.. தமது புதல்வரை மணந்து கொண்ட மனையாட்டியாக நான் எனது பிறந்த நாட்டிலிருந்து சிறிதளவில் பாதுகாப்பைப் பெற்றுத் தந்து விட்டேன் தந்தையே.."

உக்கிரவர்மன் விசனம் கொண்டான்.. உயிர் பிரியும் தருணத்திலிருந்த நர்மதாவின் மெல்லிய குரலில் வெளிவந்த வார்த்தைகள் அவனை வாள் கொண்டு அறுத்தன..

"மன்னித்து விடு மகளே.." என்றான்..

சிரம் அசைத்து மறுத்தாள் நர்மதா தேவி..

"மன்னிப்பை நான்தான் தங்களிடம் யாசிக்க வேண்டும்.. இடையூறாக இருந்தவள் இறுதி மணித்

துளிகளில் இருக்கிறேன்.. என் இறுதிவரை என்னைத் தவிர்த்து வேறொரு மங்கையை மனையாட்டியாக மணம் புரிய மாட்டேன் என்று எமக்கு தமது புதல்வர் கொடுத்திருக்கும் வாக்கு.. என் இறுதியோடு முடிவடைந்து விடும்.. எனது மறைவுக்குப் பின்னர் தமது மனம் போல எமது மணாளரை பாதுகாத்து வலிமையுறச் செய்யும் மன்னரின் புதல்வியை மணம் புரிந்து வைக்கலாம்.. அதற்கு தடையேதும் இல்லை தந்தையே..!"

"வார்த்தைகளால் என்னை வதைக்காதே மகளே.. நான் பாவி.. தம்மிடம் கடுமையாக நடந்து கொண்டேன்.."

"அல்ல தந்தையே..! தங்களின் மனம் முழுவதும் எனது காதலரின் எதிர்கால நலன் மட்டுமே இருந்தது.. அவரைக் காக்க தாம் உள்ளீர்கள் என்ற நிம்மதியுடன் நான் விழி மூடுகிறேன்.."

நர்மதாதேவியின் சுவாசம் திணறியது.. மாறவர்மன் பதட்டம் கொண்டான்..

"என்னை விட்டுச் சென்று விடாதே நறுமுகை.."

அவனது கரம் பற்றி விழிகளில் ஒற்றிக் கொண்ட நர்மதா வேதனையுடன் நகைத்தாள்..

"பாதி வழி சென்று விட்டவளை மீண்டு வர அழைக்க இயலாது அரசே..! ஓர்தினமாக இருந்தாலும்.. இந்த யுகம் முழுவதும் தங்களுடன் சேர்ந்து வாழ்ந்த நிறைவை அளித்தீர்கள்.. கடல் மல்லையில் தம்மைக்

கண்டவுடன் காதல் கொண்டேன்.. எமது காதலை ஏற்று என்னை ரட்சித்தீர்கள்.. ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் மாலைசூட்டி.. மங்கல நாணையும் பூட்டும் வரம் கேட்டேன்.. கேட்ட வரத்தை அளித்து.. ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் மங்கல நாணைப் பூட்டி எம்மை மனையாட்டி யாக்கிக் கொண்டீர்கள்.. என் இறுதிவரை எனக்கு மட்டுமே தாம் மணாளராக இருக்க வேண்டும் என்ற வரத்தையும் கேட்டேன்.. அதனையும் அளித்து இமயத்தின் உச்சியில் என்னை வீற்றிருக்க வைத்தீர்கள்.. அனைத்துக்கும் எனது வந்தனம்.. சென்று வருகிறேன்.. விடை அளியுங்கள்..”

“இயலாது நறுமுகை..”

“இயல வேண்டும் மன்னவரே.. தங்களின் வாழ்க்கை தமக்காக காத்திருக்கிறது.. இந்த பேதைக்கு அவனியில் உள்ள அனைத்து இன்பங்களையும் அளித்து விட்டீர்கள்.. நிறைவான வாழ்வை தம்முடன் நான் வாழ்ந்து விட்டேன்.. இனிவரும் பிறவியிலாவது தம்முடன் இறுதிவரை வாழ்ந்திருக்கும் வரம் கிட்ட என்னை வாழ்த்தி விடை அளியுங்கள்..”

“இயலாது நறுமுகை..! நான் உனக்கு விடை கொடுக்க மாட்டேன்.. என் அனுமதியின்றி உன்னுயிர் உன்னைப் பிரிதல் கூடாது..”

மாறவர்மன் ஆக்ஞை பிறப்பித்தான்.. சென்று கொண்டிருந்த உயிரை இழுத்துப் பிடித்தபடி தன்னவனான அந்தச்தென்னவனை ஏறிட்டுப் பார்த்த பாண்டியனாரின்

பைங்கிளியின் அகம் மகிழ்ந்தது.. அவளது பிரிவை ஏற்றுக் கொள்ள மறுக்கும் மன்னவனை கரம் பிடித்து அவனுடன் மனமாற வாழ்ந்து விட்ட பெருமிதத்தில் அவளது உள்ளம் பூரித்தது.. அவளது நடுங்கிய கரங்களை கண்ணுற்ற உக்கிரவர்மன் துயர் கொண்டான்.. குற்ற உணர்வில் அவன் மனம் கனத்தது..

"நான் பாவி மகளே..!"

நர்மதா தேவியின் முன்பு மண்டியிட்டான்.. அவனது சினம் கொண்டு சிவக்கும் கண்களில் துயரத்தின் சிவப்பு பூசியிருந்தது..

"தாம் வாழ்கின்ற வாழ்வில் இடர் சேர்த்து விட்டேன்.."

"அல்ல தந்தையே..!"

நர்மதாதேவி கனிவுடன் அவனுக்கு ஆறுதல் மொழியை பகன்றாள்..

"தாம் எனக்கு அநீதி இழைக்கவில்லை.. நமது பாண்டிய தேசத்திற்கான நீதியின் புறமாக தாங்கள் நின்றீர்கள்... அவ்வளவேதான்... எமது மன்னவரை கடமையாற்ற அறிவுறுத்தி.. அழைத்து வந்தீர்கள்.. இது எவ்வாறு என் வாழ்வில் இடர் சேர்ப்பதாகும்..? தாம் மனம் நோக வேண்டாம்.. எத்தருணத்திலும் எம் அகத்தில் தங்கள் மீதான சினம் எழுந்ததில்லை.. தமக்கு தமது புதல்வனின் மீதும்.. தேசத்தின் மீதும் உள்ள பாசத்தை எண்ணி நெகிழ்ந்திருக்கிறேன்.. ஒரு போதும் தாம் எமக்கு அநீதி இழைத்து விட்டதாக எண்ணியதில்லை.."

நர்மதா தேவியின் தீனமான உரையில்..

"செவி மடுத்தீரா..?" என்று சினம் கொண்டான் மாறவர்மன்..

"மாறா..!" உக்கிரவர்மனின் நாத்தழுதழுத்தது..

"இவளது நாமத்தைச் செவி மடுக்கக்கூட தமக்கு விருப்பமிருக்காது.. இவளது வரவால் எனக்கான பகைமை அதிகரித்து விட்டதாக இவளின் மனம் புண்படும்படி உரைத்தீர்கள்.. எனக்கான உதவிக்கரங்களை இவள்தான் எம்ஙகு சங்கிளி கொண்டு பிணைத்து வைத்துள்ளாள்.. என்று குற்றம் சுமத்தினீர்கள்.. இதோ.. அந்தப் பகைமையை இவள் விலகி ஓடச் செய்திருக்கிறாள்.. எனக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்து மரணத்தின் வாசலில் நின்று உரையாற்றிக் கொண்டிருக்கிறாள்.. இவள் உரைக்கும் மொழிகளை செவி மடுத்தீர்கள் அல்லவா.. இவளின் கடந்த காலத்தை தங்களால் திருப்பி அளித்து விட இயலுமா..?"

"புதல்வனே..!"

"சிறிதளவு தயை காட்டியிருந்தால் எனது நறுமுகையை போருக்கு இடையே சில முறை சந்தித்துப் பிரிந்திருப்பேன்.. தன்னலம்மிக்கவன் என்று என்னைப் பழித்துப் பழித்தே என்னவளுக்கென ஒரு தனிப்பட்ட லிகிதம் வரையக்கூட தயக்கம் கொள்ள செய்து வீட்டீர்கள்.. ஒவ்வொரு தருணத்திலும் மேகலைக்கு லிகிதம் வரைந்து அனுப்பும் போதும்

நறுமுகைக்கென தனி லிகிதம் வரைய மனம் துடிக்கும்.. தங்களின் சினத்தைத் தவிர்க்க.. எனது காதலின் வெளிப்பாடை கட்டுக்குள் வைத்தேன்.. தற்போது தாங்கள் வேண்டிய வெற்றியை ஈட்டி விட்டேன்.. என் காதலின் வெற்றியான எனது நறுமுகையின் உயிரை தம்மால் நிறுத்தி விட இயலுமா..?"

மாறவர்மனின் வினாக்கள் ஒவ்வொன்றும் கூரிய அம்புகளாக உக்கிரவர்மனின் இதயத்தில் பாய்ந்தன..

"யாம் குற்றம் இழைத்து விட்டோம்.." உக்கிரவர்மன் பரிதவித்தான்..

"என் மீது ஆணை.." என்றாள் நர்மதா தேவி..

"நறுமுகை..?" மாறவர்மனின் விழிகள் கலங்கின..

"சொல்லடி.. தமது ஆணை யாது..? எதுவாக இருப்பினும் அதை நான் நிறைவேற்றுவேன்.. ஆணையிடு கண்ணே..! அதை விடுத்து தம்மீது ஆணையென இயம்பலாமா..? தாம் கேட்டு நான் மறுத்ததாக ஒன்றைக் கூறு பார்க்கலாம்.."

"அல்ல அரசே..!" மனநிறைவுடன் சிரத்தை அசைத்தாள் நறுமுகை..

"யாம் யாசித்த அனைத்தையும் தாம் வழங்கி விட்டீர்கள்.. தங்களைக் காணாமலே காதல் கொண்டேன்.. தமது புகழை எமது சுவாசமாகக் கொண்டு அனைத்தும் தமதாக வாழ்ந்தேன்.. தங்களை எதிரில் கண்டதும் எமது உள்ளத்தை உரைத்து தங்களின் காதலை

வேண்டினேன்.. தாய்திருநாட்டை மீட்க வேண்டிய போராட்டத்தின் ஓட்டத்திலிருந்த போதும் தாங்கள் என்மீது கருணை காட்டினீர்கள்.. எமது காதலை ஏற்றுக் கொண்டீர்கள்.."

"அன்பே..!"

"அத்துடன் தம்மை விடுவிக்காமல் தங்களின் மங்கலநாணை வேண்டினேன்.. அதையும் காஞ்சியில் ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் தாம் எமது கழுத்தில் அணிவிக்க வேண்டும் என்ற வரத்தை யாசித்தேன்.. பகைவரின் மத்தியில் துணிவுடன் எமது யாசிப்பை செவிமடுத்து ஏகாம்பரேஸ்வரரின் சன்னதியில் எனகு மாலைசூடி.. மங்கலநாண பூடி.. தமது மனையாட்டியாக ஆக்கிக் கொண்டீர்கள்.. எந்தக் காஞ்சி மாநகரம் தம்மையும்.. எம்மையும் சதிபதிகளாக மாற்றியதோ.. அந்த காஞ்சிமாநகரத்தின் மன்னனாக தாம் மாற வேண்டும்.. தங்களின் ராணியாக உரிமையுடன் இந்நிலத்தில் நிற்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தேன்.. இதோ.. இந்த காஞ்சி மாநகரம் தற்போது உங்கள் வசத்தில் உள்ளது.. தாம் இந்நகரின் மன்னனாக வலம் வருகிறீர்கள்.. தங்களின் ராணியாக எமது சொப்பனங்களை நனவாக்கிய புனிதம் மிக்க இந்த மண்ணின் மீது நானும் உலா வந்து விட்டேன்.. இதைவிட வேறென்ன பேறு எனக்கு வேண்டும்..? போதும் மன்னவரே..! பல யுகங்களுக்கான வாழ்வை ஒரே தினத்துக்குள் தம்முடன் வாழ்ந்து முடித்து

விட்டேன்.. இதைத் தவிர்த்த வேறெதுவும் எமக்குத் தேவையில்லை.. இந்த ஆணை வேறு விதமானது.."

"என்னவென்று சொல்லடி.."

"இனிவரும் காலத்தில் ஒரு போதும் என்பொருட்டு தங்களின் சிறிய தந்தையிடம் தாம் கடினமான மொழிகளை பேசுதல் கூடாது.."

"நறுமுகை..! எனதன்பே..! எத்துணை இளகிய மனமடி உனக்கு..! தம்மைக் கண்டாலே வெறுப்பை உமிழ்ந்த எனது சிறிய தந்தையிடம் கருணை காட்டுகிறாயா..?"

"யாம் கருணை காட்டுமளவிற்கு அவர் அடாத செயல் ஏதும் புரிந்து விடவில்லை.. அவரைவிட யாம் எவ்விதத்திலும் பெரியவள் அல்ல.. எவர்மீது எவர் கருணை காட்டுவது..? அவர் இமயம் போல உயர்ந்த மனிதர் அரசே..! என்பொருட்டு அவரிடம் தாம் கடுமை காட்டுவதை தவிர்த்தல் வேண்டும்.. இது என்மீது ஆணையிட்டு நான் யாசிக்கும் வரமாகும்.."

"அவ்விதம் ஆகட்டும்.."

நறுமுகையின் தளிர் விரல்களைப் பற்றித் தமது விழிகளில் ஒற்றிக் கொண்டான் மாறவர்மன்.. அனுமதி வேண்டினால் அவன் அனுமதி அளிக்கவே மாட்டான் என்பதினாலோ என்னவோ.. அவனது வாக்குறுதியை செவி மடுத்த புன்னகையுடன் நர்மதாதேவி இன்னுயிர் அவளை விட்டுப் பிரிந்து விட்டது..

"என் பிரியத்துக்குரியவளே..!"

மாறவர்மனின் கதறல் ஒலி காஞ்சி மாநகரின் நாற்திசைகளிலும் எதிரொலித்தது.. நர்மதாதேவியின் உடலை விட்டுப் பிரிய மனமில்லாமல் அழுது புலம்பிய வனைத் தேற்றி அவளுக்கான ஈமக்கிரியைகளை செய்ய வைத்தான் உக்கிரவர்மன்..

சிதையின் அனலில் நர்மதாவின் தேகம் கரைந்துவிட அவளது ஆன்மாவை நினைத்து மனதுக்குள் குமுறியபடி மண்ணில் தனது போராட்டத்தைத் தொடர்ந்தான் மாறவர்மன்..

அவனை விழிகளால் காணாமலே காதலித்து அவனைக் கண்டவுடன் அனைத்தையும் துறந்து அவனே சகலமும் என அவனுடன் வருகை தந்து ஓர்தினம் மட்டும் அவனுடன் அவள் கூடி வாழ்ந்த அருவிக்கரையை ஓர்தினத்தில் அவன் நாடிச் சென்றான்..

அதே அருவி..! பாலின் வெண்மையையும்.. கடல் அலைகளின் நுரையையும் தன்னகத்தே கொண்டு.. மலை முகட்டிலிருந்து அருவியாய் ஆர்ப்பரித்து வீழ்ந்து.. நதியாய் பெருக்கெடுத்து ஓடும் இயற்கையின் அம்சம்..! அந்த அருவிக் கரையின் கொடி இல்லத்தைப் பார்வை இட்டான் மாறவர்மன்.. அவனுக்குள் துக்கம் பெருக்கெடுத்தது..

"நாடு.. நகரம் இல்லாத மன்னனுடன்.. நாட்டையும், நகர வாழ்வையும் துறந்து வருகை புரிந்து.. இந்த கொடி இல்லத்தில் கூடி வாழ்ந்தாயே.. இன்று நாடும்.. நகரமும்

என்னிடம் உள்ளன நறுமுகை..! நீ மட்டும் ஏனடி என்னுடன் இல்லை..? ஏன் எனைவிட்டுப் பிரிந்து வானுலகம் ஏகினாய் நறுமுகை..?"

விழிகள் சிவக்கக் கேட்டவனின் கருத்தை அந்தக் கொடி இல்லத்தின் தூய்மை கவர்ந்தது.

"மனிதரில்லாத இந்த இல்லத்தை தூய்மைப் படுத்தியது எவர்..?"

அவன் உரக்க வினவினான்.. இடையிலிருந்த உடைவாளை உருவினான்.. கொடி இல்லத்தை விட்டு விரைந்து வெளிப்பட்டு அங்கும் இங்கும் பார்வையால் துழாவினான்..

"நானும், என்னைச் சேர்ந்தவர்களும் மட்டுமே அறிந்த இந்த மறைவிடத்தை கண்டறிந்தது எவர்..?" கூவினான்..

அவனது கூவல் மலைச் சாரல்களின் எட்டுத் திக்கும் எதிரொலித்தது.. விடை கிடைக்கவில்லை.. சுற்றுப் புறங்களில் தேடியவனின் விழிகளில் மரங்களில் பிணைக்கப்பட்ட கொடி ஊஞ்சல் தென்பட்டது.. அன்று தான் பிணைக்கப்பட்ட கொடிகளைப் போல பசுமை கொண்டிருந்த கொடி ஊஞ்சலைக் கண்டதும்.. எவரோ ஒருவர் அங்கிருக்க வேண்டும் என்ற அவனது சந்தேகம் ஊர்ஜிதமானது..

"இங்கிருப்பது எவர்..? எமது இருப்பிடத்தில் அனுமதியின்றி பிரவேசித்தது எவராக இருப்பினும் அவரது உயிர் அவருக்குச் சொந்தமில்லை என்பதை அறிவாராக.." முழக்கமிட்டான்..

மாறவர்மனின் முழக்கத்திற்கு பதில் முழக்கம் வரவில்லை.. மாறாக கலகலவென்று நகைக்கும் பெண்ணின் நகைப்பொலி அவன் செவியினில் விழுந்தது.

"பெண்ணா..?" அவன் திகைத்தான்..

"இந்தக் கானகத்தில் தனித்து உலவும் பெண் எவர்..?" ஆச்சரியத்துடன் வினவினான்..

அவனது வினாவிற்கு விடையாக..

"ஜல்.. ஜல்.. ஜல்.." என்ற கொழுசொலி மட்டுமே அவன் செவியினில் விழுந்தது..

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கொடி ஊஞ்சல் தானாக ஆடியது.. மாறவர்மனின் விழிகள் அகன்றன..

"எமது உயிர் எமக்குச் சொந்தமில்லை என்பதை யாரும் அறிவோம் அர்சே..! அது தமக்குச் சொந்தமான தல்லவா..? என்று தமது நாமத்தை செவிமடுத்து.. தங்களின் திருவுருவைக் காணாமலே காதல் கொண்டேனே.. அன்றே எமது தேகம், அகம், உயிர் அனைத்தையும் தங்களுக்கென்று அர்ப்பணம் செய்து விட்டேனே.." என்ற பெண்குரல் ஒலித்தது..

"நறுமுகை..!"

அதிர்வுடன் கூடிய ஆனந்தம் எவ்விதமாக இருக்கக் கூடும் என்பதை அத்தருணத்தில்தான் அறிந்தான் மாறவர்மன்..

"யாமேதான்.."

வெண்ணிற புகைவடிவில் கொடி ஊஞ்சலில் சயனித்திருந்த நர்மதா எழுந்து வந்தாள்.. அருகில் நெருங்கியவளை அதிர்வுடன் அணுகினான் மாறவர்மன்.. அவனது தேகத்தின் திசுக்களில் பரபரப்பு விரவியிருந்தது.

"தாமேதானா நறுமுகை..? எவ்விதத்தில் இது சாத்திய மானது..?"

"தம்மீது நான் கொண்டுள்ள காதலால் சாத்திய மானது.. அன்பே..! தாமும், யாமும் கூடி வாழ்ந்த இந்தக் கொடி இல்லத்தை விட்டுப் பிரிந்து விண்ணுலகிற்கு ஏக என்னால் இயலவில்லை.. தாம் அறிந்த இவ்விடத்தை எமையன்றி வேறு எவரறிவார்..?"

"வியப்பிலும் வியப்பு இது.."

"காதலில் எதுவுமே வியப்பில்லை.. என்றேனும் ஓர்தினத்தில் நாம் கூடி வாழ்ந்த இவ்விடத்தைக் காண் பதற்காக தாங்கள் வருகை புரிவீர்கள் என்பதை நான் அறிவேன்.. அத்தினத்திற்காக நான் காத்திருந்தேன்.. தங்களின் இல்லத்தை தூய்மைப் படுத்தி.. தினந்தோறும்.. புதுக் கொடிகளால் ஊஞ்சல் கட்டி... தமது வரவை எதிர்பார்த்திருந்தேன்.. இன்றைய தினம்தான் எனக்கான சுபதினமாக அமைந்துள்ளது.."

"அன்பே..!"

மாறவர்மனின் இறுக்கமான ஆலிங்கனத்தில பிணைபட்டு நின்றவளின் புகை வடிவ தேகத்திலும்

வெண்ணையின் குழைவைக் கொண்ட அவளின் ஸ்பரிசத்தை உணர்ந்தான் மாறவர்மன்..

"எனக்காக காத்திருந்தாயா..?"

"ஆம்.."

"தற்போது என் வாழ்வில் வேறு சில மனையாட்டிகள் வருகை புரிந்துள்ளனரே.."

"எனது இறுதிவரை எமை மட்டுமே மனையாட்டியாக தாம் வரித்தீரே.."

"இந்த மணங்களினால் தமக்கு என்மீது சினம் உண்டாக வில்லையா..?"

"இல்லை.."

"ஏன்..?"

"நான் மனித உருவை விடுத்து ஆவி உருவிற்கு மறிவிட்டேன்.. தங்களுடன் அரியணையில் ஏறி பட்டத்து மகிஷியாக அருகில் அமர என்னால் இயலுமா..?"

"என் கண்ணே..! எனது பட்டத்து ராணியாகும் பாக்கியத்தை உனக்கு அளிக்காமல் போய் விட்டேனே.."

"தமது இதயத்தில் ராணியாக என்றென்றும் வீற்றிருக்கும் பாக்கியத்தை தாம் அளித்துள்ளீர்களே.. இதை விடவா அரியணை உயர்ந்தது..? என் மன்னவனே..! தமைச் சுற்றி ராணிகள் பலர் இருந்தும் எதன் பொருட்டு இம்மலையேறி அருவிக் கரையின் கொடி இல்லத்தை பார்வையிட வருகை புரிந்தீர்கள்..?"

"என்னவளே..! இவ்விடம் தமது நினைவுகளைச் சுமந்த இடம்.. இவ்விடத்திற்கு வருகை புரிந்தால் தம்முடன் இருப்பதைப் போன்ற உணர்வு எனக்குக் கிட்டக் கூடும் என்பதினாலேயே இங்கு வருகை புரிந்தேன்.."

"அரசே..!"

நர்மதா தேவியின் புகை வடிவம் அவனைத் தழுவி மார்பில் சாய்ந்தது.. அவளது தேகத்தின் ஸ்பரிசத்தை தனது தேகத்தில் உணர்ந்த மாறவர்மனின் கரங்கள் அவளது புகை வடிவத்தைப் பிணைத்துக் கொண்டன.:

"எனது தாய் உயிருடன் இருக்கிறாள்.. எமைப் பிரிந்த துயரத்தில் வாடுகிறாள்.. எம் தாய்க்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு எமது தந்தை எம் தாயைத் தேடி வருகை புரியவே இல்லை.. தனித்துத் துயரில் வாடும் தாய்க்கு மகளாக பிறப்பெடுத்திருக்கும் என்னைத் தேடி.. எனது இறப்பிற்குப் பின்னாளும் இந்தக் கானகத்திற்கு வருகை புரிந்துள்ளீர்களே.. இந்தப் பேறு உமது ராணிகளில் எவருக்கும் கிட்டப் போவதில்லை.. இந்தச் செருக்கே எனக்குப் போதுமானது.. தங்களின் நாடு, நகரங்களை தங்களின் ராணிகள் ஆளட்டும்.. அரியணையில் தமது பட்டத்து ராணியாக அவர்களில் எவர் வேண்டுமானாலும் அமர்ந்து கொள்ளட்டும்.. இறப்பிற்கு பின்னரும் எனது நினைவுகளைச் சுமக்கும் தமது இதயம் மட்டும் எனக்குச் சொந்தமாக இருந்தால் போதும்.. இதைத்தவிர்த்த வேறு எதையும் தங்களின் நறுமுகை வேண்ட மாட்டாள்.."

"என் மனதுக்கினியவளே..!"

மாறவர்மன் அவளைப் பிரிந்திருந்த துயர் தீர அவளை ஆரத்தழுவிக் கொண்டான்.. அவளுடன் கூடினான்.. இரு தினங்கள் அருவிக் கரையில் கழித்து விட்டு அவளிடம் விடைபெற்று புறப்பட ஆயத்தமானான்..

"எத்தினத்தில் யாம் வருகை புரிந்தாலும் எனக்காக இவ்விடத்திற்கு வருகை புரிவாயா நறுமுகை..?"

"இவ்விடமே எமது வசிப்பிடமாகும்.. தமக்காக நான் காத்திருப்பேன் அரசே..!"

"எதுவரை..?"

"தம் இறுதி வரை.."

"அதன் பின்னர்..?"

"அடுத்த பிறவிக்குச் செல்ல நாம் இருவருமே ஆயத்தமாவோம்.."

மாறவர்மன் அமைதி கொண்டான்.. அருவிக் கரையை விட்டுத் திரும்பினான்.. தமது கடமைகளைத் தொடர்ந்தான்.. இளைப்பாற மனம் சோரும் போதும்.. இடர் வந்து அவனை இன்னல் படுத்தும் போதும் தாயின் மடியாக நர்மதாவின் மடியைத் தேடி அருவிக் கரையின் கொடி இல்லத்திற்கு சென்றான்.. காத்திருந்த அவனது காதலி.. ஆவி வடிவத்தில் அவனை ஆலிங்கனம் செய்து மடி தாங்கி அவனை அமைதிப் படுத்தினாள்..

அவனைக் காணாமல் காதலித்து.. கண்டவுடன் மணம் புரிந்து.. ஓர்தினம் கூடி வாழ்ந்து.. அவனுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்து.. விண்ணுலகிற்குச் செல்லாமல் மண்ணுலகில்... அருவிக் கரையின் கொடி இல்லத்தில் அவனுக்காக காத்திருக்கும் நர்மதா... மாறவர்மனின் இறுதிவரை அவனுக்குத் துணையிருப்பாள்.

இத்துடன் 'கடல் கடந்த வணிகம்..' நிறைவுற்றது.. அடுத்து நான்காம் ஸ்வரமான 'மனம் கண்ட வைரம்' இசைக்க வந்து கொண்டிருக்கிறேன்.

விடை கொடுங்கள் பாண்டியர்களுக்கு.. சேரர்கள் காஞ்சிக்குள் வருகை புரிய ஆயத்தமாக காத்திருக் கிறார்கள்..

<u>பின்னுரை :</u>

ஒவ்வொரு காலகட்டத்திற்கான வரலாற்றை உரைக்கும் கதைக் களமாக காஞ்சியை நான் தேர்வு செய்தேன்.. காஞ்சி மாநகரம் பல்லவர்களின் தலை நகரமாக இருந்து.. சோழர்களின் வசத்திற்குச் சென்று.. பாண்டியர்களின் கரங்களுக்கு மாறிய கதையை சொல்லி முடித்து விட்டேன்.. அடுத்து காஞ்சியை வசப்படுத்த சேரர்கள் வரப் போகிறார்கள்..

பல்லவர்களின் அடையாளமாக சிற்பத்தையும்.. சோழர்களின் அடையாளமாக அவர்களின் சாம்ராஜ்ய விஸ்தரிபையும் கூறிய எனக்கு பாண்டியர்களின்

அடையாளமாக கடல் கடந்த வணிகத்தைத்தான் சுட்டிக் காட்ட முடிந்தது..

அடுத்து வரும் சேரர்களின் அடையாளமாக வைரத்தை சுட்டிக் காட்டப் போகிறேன்.. ஏன்.. எதற்கு..? என்ற கேள்விகளுக்கான பதிலை..

'மனம் கண்ட வைரம்..'

கூற வருகிறது.. பாண்டியர்களுடன் நானும் விடை பெறுகிறேன்.. சேரர்களுடன் உங்களைச் சந்திக்க நான்காவது ஸ்வரத்தை இசைத்து வெகு விரைவில் திரும்பி வருகிறேன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



21

சேர வேண்டிய கைகளிலே..
சேர்ந்து விடும் காலம் வரும்..

அது என்ன மாயமோ.. மந்திரமோ.. அனுராதாவின் கழுத்து மட்டும் அவள் என்ன வெட்டு வெட்டினாலும் ஈடு கொடுத்து நொடித்துத் திரும்பும்.. சுளுக்குக்கும் அவள் கழுத்துக்கும் எட்டாத தூரம்..

'இதுக்குன்னு டிரெயினிங் எடுத்திருப்பாளோ..'

பிரதாப் தன் கடையில் இருக்கும் கலை நுணுக்கம் கொண்ட சிற்பங்களை நினைத்து வியந்து போவதைவி

அதிகமாக அனுராதாவின் கழுத்து வெட்டில் வியந்து போவார்..

"என்ன..? அப்படிப் பாக்கறிங்க..?"

அன்றும் அதுபோல வியந்து போனவரை ஓர் அதட்டல் போட்டு நனவுலகிற்கு இழுத்து வந்தாள் அனுராதா..

"அது ஒன்னுமில்லைடி அனு.."

"ஒன்னும் இல்லாததுக்கா இந்தப் பார்வை..? இதுக்கே இப்படின்னா.. ஏதாச்சும் இருந்தா எப்படியோ..?"

"அதை ஏதாச்சும் வரும் போது பாத்துக்கலாம்.. ஏண்டி.. ஈ.சி.ஆர் ரோட்டில வண்டியோட்டறதும்.. சர்க்கஸில வண்டி ஓட்டறதும் ஒன்னு.. ஹெவி டிராபிக்கில சிங்கிள் ரோடை டபுள் ரோடாக்கூட மாத்தாம அரதப்பழசா மெயின்டெயின் பண்ணிக் கிட்டு இருக்காங்க.. அட்லீஸ்ட், ரோட்டுக்கு ஊடே டிவைடரையாவது போட்டு வைக்கலாம்... அதுக்கும் பஞ்சம்... பாண்டிச்சேரிக்கும்.. சென்னைக்கும் இடையில நிக்காம வண்டிக ஓடிக்கிட்டு இருக்கு.. ஊரெல்லாம் 'ஃபோர் வே'யா மாறிக்கிட்டு வர்றப்ப.. தி கிரேட் ஈ.சி.ஆர் ரோட்ட 'சிங்கிள் வே'வா வைத்திருக்கிற பெருமை நம்ம ஆளுகளுக்கு மட்டும் தான் கிடைக்கும்.. இந்த லட்சணத்தில வண்டியோட்டறவன்

கிட்ட செல்போனில பேசி வைக்கறியே.. உன்னை என்னன்னு சொல்றது..?"

"அனுன்னு சொல்றது.."

"நீ புத்திசாலின்னு நினைச்சேன் அனு.."

"நீங்க நினைக்கலேன்னாலும் நான் புத்திசாலிதான்.."

"உங்கிட்ட பேசி ஜெயிக்க முடியுமாடி..?"

"தெரியுதில்ல..? அதுக்கப்புறமும் எதுக்காக இந்த வேண்டாத வேலை..?"

மகனிடம் வாங்கிய வாங்கலை எல்லாம் பிரதாப்பிடம் அவள் இறக்கி வைத்துக் கொண்டிருந்த போது வாசலில் பைக் உறுமும் சப்தம் கேட்டது..

"யதுவா இருக்குமோ.."

அனுராதா சொல்லிக் கொண்டிருந்த போதே அவளின் செல்போன் அலற ஆரம்பித்து விட்டது..

"ஈஸிஆர்ல வண்டியோட்டறப்ப போன் பண்ணுங்க.. வீட்டு வாசல்ல வந்து நிக்கறவனுக்கு கேட்டை மூடி வையுங்க.."

"கேட்டு.. மூடியிருக்கா..? யாரு மூடினது..?"

"என்னக் கேட்டா..? வந்து பூட்டைத் திறந்து விடுங்கம்மா.. மழை வரப் போகுது.."

"இருடா வர்றேன்.."

அனுராதா சொல்லிக் கொண்டிருந்த போதே யாமினி எழுந்து வாசல் கேட்டின் சாவியை எடுத்துக் கொண்டு கேட்டைத் திறக்கப் போய் விட்டாள்..

“சமத்து..” அனுராதா மெச்சிப் போனாள்..

“அவ இல்லாதப்ப சொல்றத அவ இருக்கிறப்ப சொல்லக் கூடாதா..?” பிரதாப் அங்கலாய்த்தார்..

“வேலையைப் பாருங்க..”

யதுநந்தனுக்கான சூடான காபி, டிபனை எடுத்து வைக்க அனுராதா சமையலறைக்குள் போய் விட்டாள்..

பிரதாப் டிவியில் ஆழ்ந்திருக்க.. யாமினி வாசல் படியை விட்டு இறங்கி கேட்டை நோக்கிப் போய் கொண்டிருந்தாள்..

ஊஞ்சலில் இருந்த கடிதம் அசைந்தது.. அது நேரம் வரை.. அம்மிக் கல்லையும் பறக்க வைக்கும் ஆடிக் காற்றாக அடித்த ஊதக் காற்றில் கல்லுக் குண்டைப் போல அசையாமல் வீற்றிருந்த கடிதம் காற்றில் எழும்பி பறந்தது..

“ஏன் இவ்வளவு நேரம்..?”

கேட்டின் பூட்டைத் திறந்தபடி கேட்டாள் யாமினி..

“வேலை இருந்துச்சு.. அப்பாவந்தாச்சா..?”

“வந்தாச்சு..”

யதுநந்தனின் பைக் உள்ளே பாய்ந்தது.. யாமினி கேட்டைப் பூட்டுப் போட்டு பூட்டி விட்டு.. வீட்டை

நோக்கி நடந்தாள்.. வானத்தில் மின்னல் வெட்டியது.. காற்றில் பறந்து வந்த கடிதம் அவள் முன்னால் தரையில் விழுந்தது.. மின்னலின் வெளிச்சக் கீற்றில் கடிதத்தை எடுத்தவள்..

'இது காலையில் வந்த கொரியரில்ல..?' என்று யோசித்தாள்..

யோசனையுடன் அவள் யது நந்தனை பின் பற்றி வீட்டுக்குள் காலடி வைத்த மறுநொடியில் வானம் கிழிந்து விட்டதைப் போல இடி மின்னலுடன் மழை கொட்டோ கொட்டென்று கொட்ட ஆரம்பித்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'

நான்காம் ஸ்வாத்தில் தொடர்ந்து வரும்..